Registered as a Newspaper at G.P.O.
விலை 10.00
பக்கங்கள்: 32
THAMILTHANTHI தமிழ்த்தந்தி
# தமிழ்த்தந்தி
உண்மையாய்.. உரிமையாய்.. உணர்வாய்..
www.facebook.com/thamilthanthi
Follow@thamilthanthi

★ விளம்பரங்கள்
★ வாழ்த்துகள்
மற்றும் இதர வணிக தொடர்பாடலுக்கு:
Tel: 0114 - 369411
Fax: 0114 - 641294
e-mail: thamilthanthi@gmail.com

தமிழ் 07 தந்தி 05 ஞாயிற்றுக்கிழமை 30.12.2018 Sunday 30th December 2018 e-mail: thamilthanthi@gmail.com www.thamilthanthi.com

# மாற்றுத் தலைமையா? மாட்டுத் தலைமையா? அதை மக்கள் தீர்மானிக்கட்டும்



வடக்கு புனர்வாழ்வு அமைச்சில் பிரதமருடன் இணைந்து கூட்டமைப்பும் செயற்படும்

தமிழ் தேசிய கூட்டமைப்பு – ஐக்கிய தேசிய கட்சியின் கூட்டு வெளியில் வந்தது

இடைக்கால அறிக்கை 2016ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் தயாராகியிருந்த வேளையிலே அது வெளிவராமல் பல மாதங்கள் பிற்போடப்பட்டு 2017ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 23ஆம் திகதிதான் வெளிவந்தது. அந்தத் தடங்கலுக்குப் பிரதான காரணம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி. இறுதி வரைபைக் கொண்டுவருவதிலும் நீண்ட தாமதம் ஏற்பட்டிருந்தது.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப்பேச்சாளர் எம்.ஏ சுமந்திரன் யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

முழுமையான அரசியலமைப்பின் வரைபு பகிரங்கப்படுத்தப்படுவதாக இருந்தபோதுதான் இன்னொரு விதமான ஆட்சி மாற்றம் திடீரென்று ஒக்டோபர் 26ஆம் திகதி நிகழ்ந்தது. மஹிந்த ராஜபக்ஸ தரப்பிலிருந்து பலர் இதுவரைக்கும் சொல்லியிருக்கிற ஒரு கருத்து என்னவென்றால், சமஷ்டி அடிப்படையிலான நாட்டைப் பிரிக்கக்கூடிய ஒரு அரசியலமைப்பு வருவதாக இருந்தது. அதைத்தடுப்பதற்காகத்தான் ஜனாதிபதி இந்த அதிரடி செயற்பாட்டை செய்தார் என்று சொல்லியிருக்கிறார்கள். பாராளுமன்ற உறுப்பினர்களை இலஞ்சம் கொடுத்து வாங்குகிற செயற்பாடு ஒன்று நடைபெற்றது. அப்படி நடைபெற்றது என்பதை நான் சொல்லவில்லை, ஜனாதிபதியே சொல்லியிருக்கிறார். அதற்கான விலைகளையும் சொல்லியிருக்கிறார். ஐக்கிய தேசியக் கட்சியைப் பாதுகாப்பதற்காக நாங்கள் நீதிமன்றம்

02 ஆம் பக்கம் பார்க்க

## வடக்கில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களின் முழுமையான விபரங்கள் வெளிவந்தது

வடக்கின் 5 மாவட்டங்களிலும் ஏற்பட்டுள்ள வெள்ளத்தால், 38,739 குடும்பங்களை சேர்ந்த 119,962 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ நிலையம் அறிவித்துள்ளது.

குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, 1, 528 குடும்பங்களைச் சேர்ந்த 4,906 பேர் இடம்பெயர்ந்து 19 இடைத்தங்கல் முகாம்களில் தொடர்ந்து தங்கவைக்கப்பட்டுள்ளதுடன், கிளிநொச்சி மாவட்டத்திலேயே 74,730 பேர் அதிகளவாகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவில் 2,322 குடும்பங்களைச் சேர்ந்த 7,286 பேர் வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர். அப்பிரதேசத்தில் 542 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவில் 5,285 குடும்பங்களைச் சேர்ந்த 16,860 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 1, 265 குடும்பங்களைச் சேர்ந்த 807 பேர் 3 தற்காலிக முகாம்களில் தொடர்ந்தும் தங்கவைக்கப்பட்டுள்ளனர். அப்பிரதேசத்தில் 82 வீடுகள் முழுமையாகவும் 1, 681 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.



துணுக்காய் பிரதேச செயலாளர்

02 ஆம் பக்கம் பார்க்க




## கூட்டமைப்பின் துரோகத்தனத்தால் எங்களுக்கு இன்றும் தீர்வில்லை!

**தமிழர் தாயகத்தில் கையளிக்கப்பட்டு கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடிக் கண்டறியும் குடும்பங்களின் சங்க இணைப்பாளர் ராஜ்குமார்**

இன்று 678 ஆவது நாளாக எமது சுழற்சிசுறையான உணவு தவிர்ப்புப் போராட்டம் நடைபெற்று வருகின்றது. இந்த சூழலில் எதிர்வரும் ஜனவரி 9ஆம் திகதி பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தி எங்களின் போராட்டத்தை திசைதிருப்பும் ஒரு முயற்சியும் நடைபெறவுள்ளது.

இவ்வாறு தமிழர் தாயகத்தில் கையளிக்கப்பட்டு கடத்தப்பட்டு காணாமல்

02 ஆம் பக்கம் பார்க்க



கோப்புப்படம்

## மொரிஷியஸில் புலிகளின் நினைவுத்தூபி

மொரிஷியஸ் அரசாங்கம் தமிழீழ விடுதலைப்புலி ஆதரவு புலம்பெயர் சமூகத்திற்கு நிதி உதவி வழங்கி வருவதாகவும் சுவிட்சர்லாந்தில் அமைந்துள்ள மொரிஷியஸ் தூதரகத்தின் ஊடாக இவ்வாறு புலி ஆதரவு தரப்பிற்கு மொரிஷியஸ் அரசாங்கம் நிதி

02 ஆம் பக்கம் பார்க்க

## தெற்கிலிருந்து வடக்கிற்கு நல்லிணக்க தொடரூந்து

வடக்கில் இடம்பெற்ற வெள்ள அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக எதிர்வரும் ஆண்டு முதலாம் நாள் விசேட தொடரூந்து ஒன்று 'நல்லிணக்க தொடரூந்து' என்ற பெயரில் நிவாரணப் பொருட்களை எடுத்துக்கொண்டு செல்லப்படவுள்ளதாக

02 ஆம் பக்கம் பார்க்க

## அட்டனில் 24 தொழிலாளர் குடியிருப்புகள் முற்றாகத் தீக்கிரை



**க.கிஷாந்தன்**

அட்டன் - போடைஸ் 30 ஏக்கர் தோட்டத்தில் நேற்றுக் காலை 6.15 மணியளவில் ஏற்பட்ட தீ விபத்தில் 24 தொழிலாளர் குடியிருப்புகள் முற்றாக தீக்கிரையாகியுள்ளன.

அதுமட்டுமன்றி குறித்த தீ விபத்து காரணமாக லயன் தொகுதியில் அமைந்திருந்த 24 வீடுகள் சேதமடைந்ததுடன் இந்த வீடுகளில் குடியிருந்த 19 குடும்பங்களை சேர்ந்த 108 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் ஆண்கள் 28 பேரும், பெண்கள் 35

02 ஆம் பக்கம் பார்க்க

## 35 ஆயிரம் ஆசிரியர்களுக்கான வெற்றிடம் நிலவுகின்றது

சுமார் 35,000 ஆசிரியர்களுக்கான வெற்றிடம் நிலவுவதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

விஞ்ஞானம், கணிதம், உள்ளிட்ட பாடங்களுக்கான ஆசிரியர்களுக்கே, இவ்வாறு வெற்றிடம் நிலவுவதாக அமைச்சின் மேலதிக செயலாளர் எம்.எம். ரத்னாயக்க குறிப்பிட்டுள்ளார். ஆங்கிலம் உள்ளிட்ட சில பாடங்களுக்கு மேலதிகமாக ஆசிரியர்கள்

02 ஆம் பக்கம் பார்க்க

## பிலிப்பைன்ஸில் 7.0 ரிக்டர் அளவில் நிலநடுக்கம்; சுனாமி எச்சரிக்கை

பிலிப்பைன்ஸ் நாட்டின் தெற்கு பகுதியில் உள்ள மிண்டானோ தீவில் நேற்றுக் காலை சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

இது ரிக்டர் அளவு கோலில் 7.0 அலகாக பதிவாகியிருந்ததாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் முதலில் தெரிவித்தது. அதன் பின்னர் 6.9 ரிக்டர் என தெரிவிக்கப்பட்டது.

ஜெனரல் சான்டோஸ் நகரின் கிழக்கில் 193 கிமீ தொலைவில் பூமிக்கடியில் 59 கிமீ ஆழத்தில் இந்த நிலநடுக்கம் உருவாகி உள்ளது.

02 ஆம் பக்கம் பார்க்க

## இன்றும் மழை பெய்யும்

கிழக்கு மாகாணத்திலும் மாத்தளை மாவட்டத்திலும் சிறிதளவான மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

இரத்தினபுரி, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களில் சில இடங்களில் பி.ப. 2.00 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

02 ஆம் பக்கம் பார்க்க

## பொலிஸ் திணைக்களம் தொடர்ந்தும் ஜனாதிபதியின் கீழ்

இலங்கை ஒளிபரப்பு கூட்டுத்தாபனம், சுயாதீன தொலைக்காட்சி சேவை, லேக்ஹவுஸ் நிறுவனம் மற்றும் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் ஆகிய அரச ஊடகங்கள் நிதி மற்றும் வெகுஜன ஊடக அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

அத்துடன் பொலிஸ் திணைக்களம் தொடர்ந்தும் ஜனாதிபதியிடம் உள்ள பாதுகாப்பு அமைச்சின் கீழ் இருக்கும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, புதிய அமைச்சரவையின் அமைச்சர்களின் பணிகள், அவர்களுக்கான திணைக்களங்களை உறுதி செய்யும் விசேட

02 ஆம் பக்கம் பார்க்க

# சுற்றுநிருபத்தை மீறிச் செயப்படுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை



வவுச்சர்கள் மூலம் சீருடை துணிகளை கொள்வனவு செய்யும் மாணவர்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் செயற்படுமாறு அமைச்சர் அக்கில விராஜ் காரியவசம் உரிய தரப்புக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பான சுற்றுநிருபம் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

சில அதிகாரிகளும் பாடசாலை அதிபர்களுக்கும் தமக்கு நெருக்கமான நிறுவனங்களிடம் இருந்து வவுச்சர்கள் மூலம் பாடசாலை சீருடையை கொள்வனவு செய்யுமாறு மாணவர்களுக்கும் அழுத்தம் பிரயோகிப்பதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இவ்வாற அழுத்தம் பிரயோகிப்பவர்களுக்கு எதிராகவும் சுற்றுநிருபத்தை மீறிச் செயப்படுபவர்கள் மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் அக்கில விராஜ் காரியவசம் வலியுறுத்தியுள்ளார்.

கொள்வனவு செய்யும் மாணவர்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் செயற்படுமாறு அமைச்சர் அக்கில விராஜ் காரியவசம் உரிய தரப்புக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

## கிளிநொச்சியில் விளையாடிக்கொண்டிருந்த 12 வயது சிறுவன் வாய்க்காலில் விழுந்து உயிரிழப்பு



கிளிநொச்சியில் விளையாடிக்கொண்டிருந்த 12 வயது சிறுவன் வாய்க்காலில் விழுந்து உயிரிழந்த சம்பவம் பதிவாகியுள்ளது. கிளிநாச்சி ஆனந்தபுரம் பகுதியை சேர்ந்த குறித்த சிறுவன் அவரது அம்மம்மாவின் வீட்டுக்கு சென்று அங்கு நண்பர்களுடன் விளையாடிக்கொண்டிருந்துள்ளார்.

அப்பகுதியில் வெள்ளத்தினால் நிறைந்திருந்த வாய்க்கால் ஒன்றில் விழுந்து உயிரிழந்துள்ளார்.

குறித்த சிறுவனின் சடலம் கிளிநொச்சி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், விசாரணைகள் இடம்பெற்றுள்ளன.

மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிசார் முன்னெடுத்து வருகின்றனர். சம்பவத்தில் ஆனந்தபுரம் கிழக்கு பகுதியை சேர்ந்த செல்வவினோதரன் அன்புரதன் என்ற சிறுனே உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கின்றனர்.

## பொலிஸ்...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பணிப்புரைக்கு அமைய, 2103 / 33 என்ற இலக்கத்தின் கீழ் வர்த்தமானி வெளியாகியுள்ளது.

இந்நிலையிலேயே ஊடகத்துறை சார்ந்த அரச நிறுவனங்கள் ஜனாதிபதி தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

ஜனாதிபதியினால் பாதுகாப்பு அமைச்சு உட்பட 21 நிறுவனங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

அரச அச்சக திணைக்களம், பொலிஸ் திணைக்களம், தேசிய ஊடக மத்திய நிலையம், தேசிய மருந்துகள் கட்டுப்பாட்டு சபை ஆகியவைகள் அதற்குள் உள்ளடங்குகின்றது.

ஜனாதிபதியின் கீழ் செயற்படும் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சுகளுக்கும் 21 நிறுவனங்கள் சேர்க்கப்பட்டுள்ளது.

பிரதமர் ரணில் விக்ரமசிங்கவினால் நிர்வகிக்கப்படுகின்ற தேசிய கொள்கை, பொருளாதார விவகாரங்கள், மீள்குடியேற்றம் மற்றும் மறுவாழ்வு, வட மாகாண அபிவிருத்தி, தொழில்சார் பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சிற்கு 24 நிறுவனங்கள் சேர்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 35 ஆயிரம்...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

உள்ளபோதிலும், சில பாடசாலைகளில் ஆசிரியர்களுக்கான வெற்றிடம் நிலவுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனால், மேலதிகமாக உள்ள ஆசிரியர்களை, ஆசிரியர் வெற்றிடங்கள் நிலவும் பாடசாலைகளுக்கு நியமிப்பதற்கான நடவடிக்கைகள் முனனெடுக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

ஆசிரியர் வெற்றிடம் நிலவும் பாடசாலைகளுக்கு செல்லும் ஆசிரியர்களுக்கு விசேட கொடுப்பனவும் வழங்கப்படவுள்ளதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

## இன்றும்...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

நாட்டின் ஏனைய பிரதேசங்களில் பிரதானமாக சீரான வானிலை நிலவும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மத்திய, சப்ரகமுவ மற்றும் மேல் மாகாணங்களில் சில இடங்களில் காலை வேளையில் பனிமூட்டமான நிலை எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்

கிழக்கு கடற்பரப்புகளில் சிறிதளவான மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

கொழும்பிலிருந்து காலி ஊடாக மாத்தறை வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் சில இடங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது வடகிழக்கு திசையிலிருந்து வீசக்கூடுவதுடன் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 25-35 கிலோ மீற்றர் வரை காணப்படும்.

மாத்தறையிலிருந்து ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளிலும் மற்றும் மன்னாரிலிருந்து புத்தளம் ஊடாக கொழும்பு வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளிலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40-50 கிலோ மீற்றர் வரை அதிகரித்து வீசக்கூடும்.

இடியுடன் கூடிய மழை பெய்யும் நேரங்களில் கடற்பகுதிகளில் அவ்வப்போது பலமான காற்று வீசுவதுடன் அக் கடற்பிரதேசங்கள் கொந்தளிப்பாகவும் காணப்படும்.

## தெற்கிலிருந்து...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு உதவிசெய்பவர்கள் கீழ் குறிப்பிட்ட தொடருந்து நிலையங்களுக்கு நிவாரணப் பொருட்களை கொடுத்து உதவலாம் என கூறப்பட்டுள்ளது.

மருதானை, ராகம, கம்பஹா, மீரிகம, பொல்காவெல, குருநாகல், கனேவத்தை, மகோ, கல்கமுவ, அநுராதபுரம், வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய தொடருந்து நிலையங்களில் இந்த உதவிப் பொருட்கள் மக்களிடமிருந்து பெறப்படும்.

கொடுக்க கூடிய பொருட்களாக, உலர்உணவுப் பொருட்கள், குடிநீர் போத்தல்கள், பாடசாலை உபகரணங்கள், புதிய ஆடைகள், மருந்துப்பொருட்கள்.

யாழ்ப்பாணத்திலிருந்து யாழ்தேவி ரயிலில் பொருட்கள் 1 ஆம் திகதி காலை 9.35 மணிக்கு கிளிநொச்சிக்கு பயணமாகவுள்ளது.

## பிலிப்பைன்ஸில்...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

இதன் காரணமாக அப்பகுதியில் உள்ள கட்டிடங்கள் கடுமையாக குலுங்கின. நிலநடுக்கத்தினால் ஏற்பட்ட சேதம் தொடர்பான தகவல் எதுவும் வெளியாகவில்லை.

நிலநடுக்கத்தைத் தொடர்ந்து அதனை ஒட்டியுள்ள பசிபிக் கடற்பகுதியில் சுனாமி அலைகள் உருவாக வாய்ப்பு உள்ளதாக பசிபிக் சுனாமி எச்சரிக்கை மையம் தெரிவித்துள்ளது.

குறிப்பாக நிலநடுக்க பகுதியில் இருந்து 300 கிமீ தொலைவிற்கு பிலிப்பைன்ஸ் மற்றும் இந்தோனேசிய கடற்பகுதியில் சுனாமி உருவாக வாய்ப்பு உள்ளதாக கூறியுள்ளது. ஆனால், அதனை ஒட்டியுள்ள அமெரிக்காவின் ஹவாய் மாநிலத்தில் சுனாமி அச்சுறுத்தல் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மொரிஷியஸில்...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

உதவி வழங்கி வருவதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

உயிரிழந்த விடுதலைப்புலிகளின் தலைவர்களை நினைவு கூருவதற்காக நினைவுத்தூபி ஒன்றை அமைப்பதற்கு மொரிஷியஸ் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சுவிட்சர்லாந்துக்கான மொரிஷியஸ் தூதுவருக்கும் புலம்பெயர் விடுதலைப்புலி தலைவர் ஒருவருக்கும் இடையில் மனித உரிமைப் பேரவையில் சந்திப்பு நடத்தப்பட்டமை குறித்த தகவல்கள் வெளியாகியுள்ளதாகவும் அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வடக்கில்...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

பிரிவில் 331 குடும்பங்களைச் சேர்ந்த 1004 பேர் வெள்ள இடரால் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன், 7 தொழில் முயற்சிகள் அழிவடைந்துள்ளன.

கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவில் 1,719 குடும்பங்களைச் சேர்ந்த 5,483 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அப்பிரதேசத்தில் 4 வீடுகள் முழுமையாகவும் 73 வீடுகள் பகுதி அளவிலும் சேதமடைந்துள்ளன. மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவில் 439 குடும்பங்களைச் சேர்ந்த 1,271 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வெலி ஓயா பிரதேச செயலக பிரிவில் 8 குடும்பங்களைச் சேர்ந்த 19 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒரு வீடு பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலக பிரிவில் 11,326 குடும்பங்களைச் சேர்ந்த 35,202 பேர் வெள்ள இடரால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 791 குடும்பங்களைச் சேர்ந்த 2,508 பேர் 6 இடைத்தங்கல் முகாங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அப்பிரதேசத்தில் வெள்ளத்தால் 350 வீடுகள் முழுமையாகவும், 759 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

கண்டாவளை பிரதேச செயலக பிரிவில் 7,865 குடும்பங்களைச் சேர்ந்த 25,720 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 370 குடும்பங்களைச் சேர்ந்த 1,272 பேர் 4 தற்காலிக முகாம்களில் தொடர்ந்தும் தங்கவைக்கப்பட்டுள்ளனர். குறித்த பிரதேசத்தில் வெள்ளத்தால் 33 வீடுகள் முழுமையாகவும், 789 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

பூநகரி பிரதேச செயலக பிரிவில் 2,775 குடும்பங்களைச் சேர்ந்த 6,538 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 39 குடும்பங்களைச் சேர்ந்த 127 பேர் , தற்காலிக முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். குறித்த பிரதேசத்தில் வெள்ளத்தால் 3 வீடுகள் முழுமையாகவும் 530 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

பச்சிளைப்பளை பிரதேச செயலக பிரிவில் 2, 218 குடும்பங்களைச் சேர்ந்த 7, 270 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 13 குடும்பங்களைச் சேர்ந்த 38 பேர் தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அப்பிரதேசத்தில் வெள்ளத்தால் 145 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

மன்னார் பிரதேச செயலக பிரிவில் 27 குடும்பங்களைச் சேர்ந்த 85 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்டவர்கள் இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

நானாட்டன் பிரதேச செயலக பிரிவில் காற்றின் தாக்கத்தால் 12 குடும்பங்களைச் சேர்ந்த 56 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம், மருதங்கேணி பிரதேச செயலக பிரிவில் 4,257 குடும்பங்களைச் சேர்ந்த 12 ,642 பேர் வெள்ள இடரால் பாதிக்கப்பட்டு 6 குடும்பங்களைச் சேர்ந்த 10 பேர் தற்காலிக முகாமில் தங்கியுள்ளனர்.

வவுனியா வடக்கு பிரதேச செயலக பிரிவில் 155 குடும்பங்களைச் சேர்ந்த 526 பேர் வெள்ள இடரால் பாதிக்கப்பட்டு 23 குடும்பங்களைச் சேர்ந்த 71 பேர் இரண்டு இடைத்தங்கல் முகாம்களில் தங்கியுள்ளனர். அத்துடன் குறித்த பிரதேசத்தில் 2 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாகவும் குறித்த நிலையம் தெரிவித்துள்ளது.

## அட்டனில்...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

பேரும், சிறுவர்கள் 45 பேரும் அடங்குகின்றனர்.

வீட்டில் இருந்தவா்கள் கூச்சலிட்டதை அடுத்து அயலவர்கள் ஓடி வந்து தீயை அணைக்க முற்பட்ட போதும் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியவில்லை. அதனையடுத்து அட்டன் பொலிஸார், அட்டன் டிக்கோயா நகர சபை தீயணைப்பு படையினர், நுவரெலியா மாநகர சபை தீயணைப்பு படையினர், மற்றும் பொது மக்கள் இணைந்து தீயை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர நடவடிக்கை எடுத்ததுடன், சுமார் 3 மணித்தியாலயங்களுக்கு பிறகு தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

எனினும் சில வீடுகளில் இருந்த சில பொருட்களை மாத்திரம் அவர்களால் தீக்கு இரையாகாமல் வெளியில் கொண்டு வர முடிந்துள்ளது.

எனினும், சில வீடுகளில் இருந்த பெருமளவிலான வீட்டு உபகரணங்கள், பெறுமதியான ஆவணங்கள், தங்க நகைகள், பாடசாலை மாணவர்களின் சீருடைகள் மற்றும் பாடப் புத்தகங்கள் தீக்கிரையாகியுள்ளன.

இந்த தீ விபத்தினால் லயன் தொகுதியில் அமைந்திருந்த 24 வீடுகள் சேதமடைந்ததுடன் இந்த வீடுகளில் குடியிருந்த 19 குடும்பங்களை சேர்ந்த 108 பேர் தற்காலிகமாக போடைஸ் தமிழ் வித்தியாலயத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நிவாரண உதவிகளை தோட்ட நிர்வாகமும், நோர்வூட் பிரதேச சபையினரும், மலைநாட்டு புதிய கிராமங்கள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சின் ஊடாகவும் வழங்கப்பட்டுள்ளது.

இந்த தீ விபத்து ஏற்பட்டதற்கான காரணம் இதுவரையும் கண்டறியப்படவில்லை என தெரிவிக்கும் அட்டன் பொலிஸார், அட்டன் பொலிஸ் கைரேகை அடையாளப்பிரிவுடன் இணைந்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவித்துள்ளனர்.

## கூட்டமைப்பின்...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

ஆக்கப்பட்ட உறவுகளை கண்டறியும் சங்கத்தின் செயலாளர் ராஜ்குமார் தமிழ்த்தந்திக்குத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

எங்கள் கைகளைக் கொண்டே எங்களின் கண்களைக் குருடாக்கும் செயற்பாடு போல எங்கள் சங்கத்தைச் சேர்ந்தவர்களை தனியாகப் பிரித்தெடுத்து அவர்கள் மூலம் பெரும் போராட்டம் ஒன்றை நடத்தி எங்களின் இந்த நியாயமான போராட்டத்தை சிதைக்கும் முயற்சியில் பெரும்பான்மையினத்துடன் சேர்ந்து கொண்டு இங்குள்ள சில்லறைகள் முயற்சிக்கின்றன.

எங்களுக்கெதிராக புலம்பெயர் நாடுகளில் செயற்படும் தமிழ் தேசியவாதிகளின் ஆதரவோடு இங்கு பாரியளவிலே ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளனர்.

இலங்கை 2015 பாராளுமன்ற தேர்தலுக்கு முன் சம்பந்தனை வவுனியாவில் உள்ள விடுதியில் சந்தித்தோம். அப்போது ஜனாதிபதியுடன் இருக்கும் பிள்ளைகளை ஆதாரத்துடன் காணாமல் ஆக்கப்பட்டோரின் சாட்சியங்கள், வலுவான ஆதாரங்களை காட்டி அந்த சந்திப்பில் அவரிடம் கூறியிருந்தோம். அப்போது அவரது வழமையான தமிழர்களை ஏமாற்றும் பாணியில் தனது தொடையில் தட்டிக் கூறினார். தம்பி பாராளுமன்ற தேர்தல் முடியட்டும் காணாமல் ஆக்கப்பட்டோர் அரசியல் தீர்வுகள், பிரச்சினைகளை நானே முன்னிற்று போராடி தீர்வைப் பெற்று தருவேன் என்றார். அதை நாங்கள் நம்பாவிட்டாலும் மீண்டும் நாங்கள் பொறுமை காத்தோம்.

நாம் போதியளவு அவகாசம் தமிழ்த்தலைமைகளுக்கும்வழங்கியிருந்தோம். நாம் இவர்களை நம்பாத போதும் தமிழர்கள் மற்றும் சர்வதேசத்திற்கு இந்த உண்மையை நிருப்பிக்கவே வேதனையுடன் காத்திருந்தோம். இவ்வேளையிலே சம்பந்தன் 2016 தீர்வு என்று தமிழர்களை ஏமாற்றி தேர்தலில் பதவியேற்று காணாமல் ஆக்கப்பட்டோர், அரசியல் கைதிகளின் விடயங்களை தனக்கு சாதகமாகப் பயன்படுத்தி அரசிடம் எதிர்க்கட்சி தலைவர் பதவியினையும் பெற்றிருந்தார்.

அதன்படி அலரிமாளிகையில் பேச்சுவார்த்தையின் உறுதி மொழிக்கு அமைய சுமந்திரனின் நயவஞ்சகத்தால் தமிழர்களுக்கு எஞ்சியது துரோகம் மட்டும்தான். சிங்களவர்கள் காப்பாற்றப்பட்டார்கள். நாங்கள் இதற்கு அரசுக்கும் எமக்கும்தான் பேச்சுவார்த்தை. கூட்டமைப்புக்கும் எங்களுக்கும் சம்பந்தம் இல்லை ஏன்னென்றால் காணாமல் ஆக்கப்பட்டோர், அரசியல் கைதிகள் தொடர்பாக கூட்டமைப்பு எந்தவித போராட்டங்களையும் செய்யவில்லை. நாங்களே வீதிகளில் போராட்டங்களை நடத்தினோம்.

ஆகவே கடந்த அரசுகளும் தற்போதைய அரசும், இனிவரும் அரசும் தமிழர்களுக்கு நீதியை தரப்போவதில்லை. அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளின் மாத்திரமே தமிழர்களுக்கு சாத்தியம் என்பதனை தமிழர்களுக்கு நாங்கள் அறியதருக்கின்றோம்.

## மாற்று...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

சென்றோம் என்கிற ஒரு விமர்சனம். தென்னிலங்கையிலே இருக்கிற அரச தலைவர் யாராக இருந்தால் என்ன பிரதம மந்திரி யாராக இருந்தால் என்ன நாங்கள் ஏன் அதைக்குறித்து கவலைப்பட வேண்டும் என்கிற ஒரு விமர்சனம். இப்படியாக பல விமர்சனங்கள் இருக்கின்றன. நாட்டிலே ஜனநாயகம் வீழ்ச்சிடைகிறதாக இருந்தால் அல்லது சட்டத்தின் ஆட்சி வீழ்ச்சியடைகிறதாக இருந்தால் முதலில் பாதிக்கப்படுவது தமிழ் மக்கள். அரசியலைப்பைப் பேணி அதன்படி அனைவரும் ஒழுக வேண்டும் என்கிற நிலைப்பாட்டை இன்றைக்கு நாங்கள் செய்யாவிட்டால் தீர்வு வந்த பிறகும் அவர்கள் மீறுவார்கள். நாங்கள் ஒன்றுமே செய்ய முடியாத நிலை ஏற்படும். மூன்று வருட காலமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ன செய்தது எதுவும் செய்யவில்லை என்று சொல்லிக் கொண்டிருந்த பலருக்கு மஹிந்த ராஜபக்ஸ பிரதம மந்திரி ஆசனத்தில் அமர்ந்த உடனேயே தெளிவு வந்துவிட்டது.

பெப்ரவரி நான்காம் திகதிக்கு முன்னதாக ஐக்கிய தேசியக் கட்சியும், ஜேவிபியும் நாங்களும் இணங்கின ஒரு வரைபு வெளிவர வேண்டும். வரும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த பலர் 20,21 பேர் திரும்பவும் அரசாங்கத்தில் சேர வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களிடத்தில் பாரிய மோதல்கள் தற்சமயம் ஏற்பட்டிருக்கிறது. அவர்களின் அலுவலகம்கூட மூடப்பட்டிருப்பதற்கான காரணம் அதுதான். மற்றவர்களும் இந்த மாதத்திற்குள்ளே எப்படியாவது திரும்ப வருவார்கள் என்று நாங்கள் நம்புகின்றோம். அப்படி வருவார்களாக இருந்தால் ஜனாதிபதியும் இதை திரும்பவும் ஒரு தேசிய அரசாங்கமாக மாற்றுகிற ஒரு செயற்பாட்டிற்குள் வருவார் என்று நாங்கள் நம்புகிறோம். அப்படி வந்தால் எங்களுடைய, ஜேவிபி கட்சியுடைய வாக்குகளுடன் சேர்ந்து 150ஐ தாண்டக்கூடிய சாத்தியக்கூறு இப்போதும் இருக்கிறது.

### எனது வேண்டுகோளுக்கிணங்கவே வடக்கு அபிவிருத்தி அமைச்சை பிரதமர் பொறுப்பேற்பு

### தமிழ் தேசிய கூட்டமைப்பும் பிரதம மந்திரியும் இணைந்து வடக்கு அபிவிருத்தி அமைச்சில் பயணிக்கும்

தமிழ் தேசிய பிரச்சினைக்கான தீர்வு வரும் வரைக்கும் மத்திய அரசாங்கத்தில் மந்திரி பதவிகளை நாங்கள் எடுக்க மாட்டோம். இரண்டு வருடங்களுக்கு முன்னர் சுவாமிநாதன் இந்த பதவியிலிருந்து விலக வேண்டும் என்று பகிரங்கமாக பாராளுமன்றத்தில் பேசியவன் நான். நாங்கள் இந்த பொறுப்பு பிரதமரின் கையில் இருக்கவேண்டும் என கருதினேன். பிரதமரிட்டத்தில் இது இருக்குமாயின் எல்லா அமைச்சர்களும் அதற்கு இணங்கி செயற்படுவர்கள். பிரதமருடன் தமிழ் தேசிய கூட்டமைப்பு இணைந்து தான் இந்த பொறுப்புக்களை அவர் நிறைவேறறுவதற்கு உதவி செய்யப் போகின்றோம்.

காணி விடுவிப்பு தொடர்பில் ஆயிரம் ஆயிரம் வழக்குகள் இருக்கிறது. அந்த வழக்கினை தாக்கல் செய்தவர்கள் தமிழ் தேசிய கூட்டமைப்பினர் தவிர்ந்த எவரும் கிடையாது. நாங்கள் வைத்த வழக்கின் பிரகாரம் சம்பூர் விடுவிக்கப்பட்டது. தமிழ் மக்களின் பிரச்சினைக்காக நாங்கள் நீதிமன்றத்தினை நாடின வழக்குகளை நான் சொல்ல வெளிகிட்டால் ஒரு மணித்தியாலம் போதது. சமஸ்டி கோர முடியும் என்ற தீர்ப்பினை கூட நீதிமன்றத்தில் பெற்றிருக்கிறம்.

சட்டம் ஒழுங்கு அமைச்சை அவர் வைத்திருக்க முடியது அரசியலமைப்புச் சட்டத்தின்படி. ஆகையால் ஜனாதிபதியின் செயற்பாடு தவறானது. என்னுடைய சிந்தனையின்படி வெகு விரைவில் அதனை கொடுப்பார். கடைசியாக ஜனாபதியுடன் பேசியபோது (அரசியல் கைதி) ஒரு பக்கத்தினை மாத்திரம் விடுவிக்க முடியாது. இரண்டு பக்கத்தினையும் விடுவிக்க வேண்டும் என கூறினார். 10, 20 வருடங்களுக்கு மேலாக சிறையிலிருப்பவரையும் யார் என்று தெரியாது ஒருவரையும் விடுவிக்க வேண்டும் என்று சொல்வதில் அர்த்தமில்லை என ஜனாதிபதிக்கு தெளிவாக சொல்லியிருக்கிறம்.

கூட்டமைப்பு உருவானபோது விடுதலை புலிகளுக்கும் டீல் அரசியல் இருப்பதாக கூட்டமைப்பு உறுப்பினர் கூறியிருக்கிறார். இது தொடர்பில் நிலைப்பாடு.

தமிழ் தேசிய கூட்டமைப்பு உருவாகும் வரைக்கும் எந்த அரசியல் கட்சிக்கும் ஜனநாயக அரசில் செய்வதற்கு விடுதலைப்புலிகளினால் தடை விதிக்கப்பட்டிருந்தது. அதை மீறி ஜனநாயக அரசியலில்ல ஈடுபட்ட தமிழர் விடுதலைக்கூட்டணி தலைவர்கள் பலர் அப்படி அதை மீறியதற்காக கொல்லப்பட்டார்கள்.

விடுதலைப்புலிகளின் காலத்தில் அவர்கள் பேச்சுவார்த்தைக்கு வருகின்றபோது இடைநடுவில் செயற்பட்ட நோர்வே போன்ற அரசாங்கங்கள் அவர்களுக்கும் ஒரு ஜனநாயக சக்தி இருப்பது அவசியம்என்பதை வலியுறுத்தியது எனக்கு தெரியும். அப்படியானால் தான் சர்வதேசத்தின் ஆதரவினை பெறமுடியும் இலங்கை அரசாங்கத்துடன் ஏற்படும் இணக்கப்பாட்டினை நடைமுறைப்படுத்த முடியும் என்ற ஆலோசனைகள் விடுதலைப் புலிகளுக்கு கொடுக்கப்பட்டது தெரியும்.

தமிழ் தேசிய கூட்டமைப்பு உருவான போது இந்த இரண்டு பகுதியினரின் தேவைப்பாடுகளும் சந்திக்கப்பட்டது என்பது உண்மை. விடுதலைபுலிகளின் ஜனநாயக அங்கமாக இயங்குவதற்கு மக்களினால் தெரிவுசெய்யப்பட்ட ஒரு அமைப்பு உருவானது. வெள்ள அனர்த்தம் ஏற்பட்டவுடன் அரச இயந்திரம் உடனடியாக செயற்பட்டது. உடனடி நிவாரணமும் சரியாக நிகழ்ந்தது. அடுத்தடுத்த கட்டங்குக்களுக்கு போகின்றோம். ஒவ்வொருக்கும் பத்தாயிரம் ரூபா வழங்குவதாக. அந்த விடயத்தில் அரசாங்கத்துடன் நெருக்கமாக செயற்படுகின்றோம். பிரதம மந்திரி வந்திருந்தவர் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் பங்குபற்றினாா்ள். நாங்கள் முழுமையான ஈடுபாட்டுடன் செயற்படுகின்றோம். நாங்கள் ஈடுபடவில்லை என்று சொல்வது அப்பட்டமான பொய். தமிழ் தேசிய கூட்டமைப்பு தவறான பாதையில் செல்கிறது. மக்களின் கொள்கைக்கு விரோதமாக செல்கின்றது என்பது பொய். இது மாற்றுத்தலைமை என்று சொல்பவர்களா? மாட்டுத்தலைமை என்று சொல்லுற ஆக்களா. மாட்டுத் தலைமையா?அது மக்கள் தீர்மானிக்க வேண்டும். தேர்தல் வரும்போது மக்கள் தீர்மானிப்பார்கள்.

நான் தமிழ் ஊடகங்களிடம் ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன். மகா நாயக்க தேரருடன் விக்ரமசிங்க தமிழிலா பேசினார்? ஒற்றையாட்சி என்று தமிழிலா சொன்னார்? என்ன சொல்லியிருப்பார்? ஏக்கிய ராஜ்ய என்றுமதான் சொல்லியிருப்பார். ஏக்கிய ராஜ்யவுக்கு உரிய சரியான தமிழ்ச்சொல் ஒற்றையாட்சி இல்லை என்று இடைக்கால அறிக்கையில் தெளிவாக சொல்லப்பட்டிருக்கு. உரிய சரியாக தமிழ்ச்சொல் ஒருமித்த நாடு என்றும் இடைக்கால அறிக்கையில் சரியாக சொல்லப்பட்டிருக்குது. அப்படி இருக்கத்தக்கதாக இன்றைக்கும் ஊடகங்கள் அவர் ஏக்கிய ராஜ்ய என்று சொன்னால் ஒற்றையாட்சி என்றுதான் எழுதுகிறார்கள்.

# ஆற்று நீர் நஞ்சடைந்தமைக்கான காரணத்தை கண்டறியுமாறு பிரதேச மக்கள் கோரிக்கை

**சுஜீவன்**

ஒரு சில தினங்களுக்கு முன் நுவரெலியா மாவட்டத்தின் அக்கரபத்தனை பிரதேச சபை நிர்வாகத்திட்குட்பட்ட எல்ஜின் - மெராயா ஆகிய பிரதேசங்கள் வழியாக செல்லும் தும்புகஸ்தலா ஓயா என்ற கிளை ஆற்றின் நீர் கறுப்பு நிறமாக காணப்பட்டதோடு அதில் வாழ்ந்த ஏராளமான மீன்கள் இறந்த நிலையில் அவ் ஆற்றில் மிதந்ததாக பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

குறித்த கிளை ஆறு அம்பேவளை பகுதியிலிருந்து எல்ஜின் மெராயா கௌலினா ஹென்போல்ட் ஆகிய பிரதேசங்களூடாக சென்று கொத்மலை ஓயாவுடன் இணைகின்றது. கொத்மலை ஓயாவை மறித்தே மேல் கொத்மலை நீர்த்தேக்கம் அமைக்கப்பட்டு நாட்டிற்கு தேவையான 150 மெகாவோட் மின்சாரம் உற்பத்தியாக்கப்படுகிறது. அத்தோடு இந் நீர்த்தேக்கத்திலும் பல்லாயிரக்கணக்கான மீன்கள் விடப்பட்டுள்ளன. இந்நிலையில் தும்புகஸ்தலா ஓயாவில் ஏற்பட்ட மாசும் நச்சுத்தன்மையும் கொத்மலை ஓயாவையும் தாக்காதா?

மேலும் தும்புகஸ்தலா ஓயாவில் ஏற்பட்ட அசாதாரண நிலைமையை இலகுவாக எடுத்துக் கொள்ள முடியாது. ஏனெனில் இவ் ஆற்றில் நூற்றுக்கணக்கான மீன்கள் இறந்து மிதந்து கிடந்தமைக்கான காரணம் என்னவென்று சம்பந்தப்பட்ட சுகாதார அதிகாரிகள் ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டுமென பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். குறித்த ஆற்று நீரானது ஒவ்வொரு மாதமும் கடும் கறுப்பு



நிறமாக காணப்படுவது வழமை என பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். அம்பேவலை பகுதியிலுள்ள பன்னையை சுத்திகரிப்பதற்காக ஒரு வகை இரசாயணப் பதார்த்தை சேர்த்து சுத்தப்படுத்திய பின்பு அக் கழிவு நீர் இல் ஆற்றுடன் சேர்க்கப்படுவதாக பிரதேச மக்கள் சந்தேகிப்பதாக தெரிவித்தனர். இதன் காரணமாகவே நீர் நஞ்சாகி இருக்கக் கூடுமென்றும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

எல்ஜின் ஊவாக்கலை தங்கக்கலை மெராயா கௌலினா ஆகிய தோட்டங்களை சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் விவசாயத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்கள் தமது விவசாய நிலத்திற்கு தேவையான நீரை இவ் ஆற்றிலிருந்தே பெற்றுக் கொள்கின்றனர். அத்தோடு இவர்களின் வேறு சில தேவைகளுக்கும் தும்புகஸ்தலா ஓயா நீரையே பயன்படுத்தி வருவதாகவும் கூறுகின்றனர். இவ்வாறான திடீரென நீர் நச்சுத்தன்மை அடைவதால் பாதிக்கப்படுவது மீன்கள் மட்டுமல்ல மனித உயிர்களும் என்பதை அனைத்து அதிகாரிகளும் உணர வேண்டும்.

எனவே மக்கள் தெரிவித்தது போல் உண்மையிலேயே அம்பேவளை பன்னை அத்திகரிப்பிற்காக ஏதாவது இரசாயணப் பொருட்களை கலப்பதன் காரணமாகவா ஆற்று நீர் நச்சுத்தன்மையானது அல்லது வேறு ஏதும் காரணிகளா என்பது தொடர்பில் அதிகாரிகள் துரித கதியில் பரிசோதனைகளையும் விசாரனைகளையும் முன்னெடுத்து எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் நிகழாதிருப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

## புதிய கிராமங்களுக்கான அடிக்கல்



**கந்தளாய் நிருபர்**

வீடமைப்பு அமைச்சர் சஜித் பிரேமதாசவின் ஆதரவின் கீழ் முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினரும், கந்தளாய் பிரதேச அபிவிருத்தி குழு இணை தலைவரும், ஐக்கிய தேசியக் கட்சியின் சேருவில தொகுதி பிரதான அமைப்பாளருமான அருண சிறிசேன அவர்களால் வெள்ளிக்கிழமை (28) ஆறு கிராமங்களுக்கு அடிக்கள் நட்டுவைக்கப்பட்டது.

இதில் ஒரு கிராமத்திக்கு 30 வீடுகள் வகையில் மாவட்டத்திலுள்ள 180 குடும்பங்களுக்கு வீடுகள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் சேருவில பிரதேச சபை, தவிசாளர் தலைவர் ரணசிங்க, உறுப்பினர், திரு. சுகாத் மற்றும் அலி, கந்தளாய், பிரதேச சபை முன்னாள் தலைவர் ரத்னா பண்டார மற்றும் பல அரசியல் பிரதிநிதிகள் பலரும் கலந்து சிறப்பித்தார்கள்.

# 14 வருடங்கள் கடந்தும் இதுவரை வீடுகள் கிடைக்கப்பெறாத மக்கள்

**மூதூர் நிருபர்**

கடந்த 2004.12.26 அன்று இலங்கையில் ஏற்பட்ட சுனாமிப் பேரலையின் காரணமாக மூதூரில் பாதிக்கப்பட்டு முற்றாக வீடுகளை இழந்து இதுவரை சுனாமி வீடுகள் கிடைக்கப்பெறாத 63 குடும்பங்கள் சார்பாக 26.12.2018 அன்று மூதூர் ஐக்கிய சமூக அபிவிருத்தி ஒன்றியத்தினால் (மஸ்டா) வீடு வழங்க கோரி மூதூர் பிரதேச செயலாளரிடம் மகஜர் சமர்ப்பிக்கப்பட்டது

இதன்போது பாதிக்கப்பட்ட மக்களிடத்தில் உரையாற்றிய மூதூர் பிரதேச செயலாளர் எம். முபாரக் அவர்கள் 14 வருடங்கள் கழிந்தும் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களில் சிலருக்கு இதுவரை வீடுகள் கிடைக்கப் பெறாததையிட்டு நான் மிகவும் கவலை அடைகிறேன். பொறுப்பு வாய்ந்தவர்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கான தீர்வுகளை பெற்றுக் கொடுப்பதில் நீண்ட கால தாமதத்தை ஏற்படுத்தியதை எண்ணியும் பிரதேச செயலாளர் என்ற வகையில் வெட்கப்படுகிறேன். ஆனாலும் தற்போதைய மூதூர் பிரதேச செயலாளர் என்ற வகையில் சுனாமியால் பாதிக்கப்பட்டு இதுவரை வீடுகள் கிடைக்கப்பெறாத குடும்பங்களுக்கு அரசாங்க அதிபர், அமைச்சின் செயலாளர்கள் மட்டத்தில் அறிவித்து அவர்களின் ஆலோசனைகள் மற்றும் உதவிகளைப் பெற்று எதிர்வரும் 2019.12.26 ஆம் திகதிக்கு முன்னர் சுனாமி வீடுகளை பெற்றுக்கொடுப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வேன் என குறிப்பிட்டார்.



மஸ்டா அமைப்பினால் கடந்த 6 மாதங்களாக இம்மக்களுக்கு வீடு பெற்றுக் கொடுக்கும் நோக்கோடு ஜனாதிபதி அலுவலகம், பிரதமர் அலுவலகம், வீடமைப்பு அமைச்சு, மீள் குடியேற்ற அமைச்சு, அனர்த்த முகாமைத்துவ அமைச்சு, மாவட்டச் செயலாளர், பிரதேச செயலாளர், மாவட்ட அரசியல்வாதிகளுக்கும் மூதூரை பிரதிநிதித்துவப்படுத்தும் 31 சமூக அமைப்புக்களின் ஒப்பத்துடன் மகஜர் அனுப்பி வைக்கப்பட்டு அதற்கான முன்னெடுப்புக்களும் நடை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது .

## கேரளா கஞ்சாவுடன் சிவனொளிபாதமலையில் 7 இளைஞர்கள் அட்டன் பொலிஸாரால் கைது

**க.கிஷாந்தன்**

போதைப்பொருளுடன் சிவனொளிபாத மலை தரிசிக்க சென்ற 7 இளைஞர்கள் அட்டன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக அட்டன் பொலிஸார் தெரிவித்தனர். இந்த 7 பேரும் கேரள கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அட்டன் பொலிஸ் நிலையத்தின் விசேட குற்றத்தடுப்பு பிரிவு அட்டன் கொழும்பு பிரதான வீதியில் அட்டன் பகுதியில் 25.12.2018 அன்று காலை 11.00 மணிமுதல் இரவு வரை வாகனங்களை சோதனை செய்த போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மாத்தறை, கொழும்பு, உள்ளிட்ட நாட்டின் பல பகுதிகளை சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்டவர்கள் 26.12.2018 அன்றைய தினம் அட்டன் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

சிவனொளிபாதமலைக்கு போதை வஸ்துக்களை கொண்டு செல்வதனை தடுப்பதற்காக அட்டன் பொலிஸார் விசேட சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

## பூண்டுலோயாவில் மண்சரிவு

**பூண்டுலோயா நிருபர்**



மழைக் காலம் என்றாலே எங்கோ ஓரிடத்தில் சேதம் ஏற்பட்டுக்கொண்டு தான் இருக்கின்றன.அவ்வரிசையில் பூண்டுலோயாவிலும் பாரிய மண்சரிவு ஒன்று ஏற்பட்டுள்ளது.

கொத்மலை பிரதேச சபைக்கு உட்பட்ட பூண்டுலோயா- தலவாக்கலை பாதையில் வியாழக்கிழமை பாரிய மண்சரிவு ஒன்று ஏற்பட்டுள்ளது.அடிக்கடி அவ்விடத்தை அண்டிய பகுதிகள் சரிவுக்குள்ளாகி வருகின்றது.இவ்விடம் அபயாகரமான இடம் என பல மண் பரிசோதகர்களால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. அவ்வாறு இருக்கையில் இவ்வாறு மண்சரிவு ஏற்பட்டுள்ளதால் அப்பகுதி மக்கள் பெரும் அச்சத்திற்கு உள்ளாகியுள்ளனர்.

மேலும் குறித்த இடத்தின் மேல்ப்பகுதியில் பல குடும்பங்கள் வசித்து வருகின்ற இந்நிலையில் அவர்கள் அவதானமாக செயற்பட வேண்டியது மிக அவசியமாக காணப்படுகின்றது.

# இல்ல விளையாட்டுப் போட்டிகளை பாடசாலை நேரத்தில் நடாத்தத் தடை



**மீனோடைக்கட்டு நிருபர்**

கிழக்கு மாகாணத்திலுள்ள சகல பாடசாலைகளும் வருடாந்த இல்ல விளையாட்டு போட்டிகளை பாடசாலை நேரத்தில் நடாத்துவதை தவிர்ந்து கொள்ள வேண்டும் எனவும் இந்த விளையாட்டுப் போட்டிகளை எதிர்வரும் ஜனவரி 31ஆம் திகதிக்குள் நடத்தி முடிக்க வேண்டும் என்றும் கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் எம்.கே.எம்.மன்சூர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சகல வலய கல்வி பணிப்பாளர்களுக்கும் அனுப்பி வைத்துள்ள சுற்று நிரூபத்திலேயே இந்த விடயத்தை தெரிவித்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

குறித்த சுற்று நிருபத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இல்ல விளையாட்டுப் போட்டிகள் மற்றும் பயிற்சிகள் போன்றவற்றை பாடசாலை நேரத்தில் நடத்துவதை தவிர்த்து கொள்ள வேண்டும். போட்டிக்கான தெரிவுகளை பாடசாலை நேரத்தில் நடத்த வேண்டுமாக இருந்தால் குறிப்பிட்ட தினங்களில் பாடவேளைகளை 30 நிமிடங்களாக குறைத்து தெரிவுகளுக்கு மிகுதி நேரத்தினை பயன்படுத்துதல் வேண்டும்.

வலயமட்ட போட்டிகள் யாவும் 31.03.2019 இற்கு முதல் நடத்தி முடிக்கப்படல் வேண்டும் எனவும், அதேபோல் மாகாண மட்ட போட்டிகளை 10.06.2019 இற்கு முதல் நடத்தி முடித்தல் வேண்டும் என்றும் குறிப்பிட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

நேரடியாக தேசிய மட்டத்தில் நடைபெறும் போட்டிகளுக்கான விண்ணப்பங்களை 31.03.2019 இற்கு முன்னரும் மாகாண மட்ட போட்டிக்கான விண்ணப்பங்களை 31.01.2019 இற்கு முன்னரும் அனுப்பி வைத்தல் வேண்டும். வலய மட்டத்தில் மற்றும் மாகாண மட்டத்தில் நடாத்தப்படும் ஏனைய குழு போட்டிகள் மெய்வல்லுனர் போட்டிகளுக்கான விண்ணப்பங்களை 15.04.2019 இற்கு முன்னர் அனுப்பி வைத்தல் வேண்டும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மட்டக்களப்பு சிறைச்சலைக்கு கிழக்குமாகான ஆளுனரால் வைத்திய அதிகாரி ஒருவர் நியமனம்

**சீலாமுனை நிருபர்**

கடந்த ஆறுவருட காலமாக மட்டக்களப்பு சிறைச்சாலையில் நிலவி வந்த வைத்திய அதிகாரி ஒருவர் இன்மையினை போக்கும் நோக்கில் கிழக்கு மாகாண ஆளுநர் ரோகித்த போகொல்லாகமவினால் மட்டக்களப்பு சிறைச்சாலைக்கு வைத்திய அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு சிறைச்சாலை அத்தியட்சகர் தெரிவித்தார்

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினருமாகிய பூ.பிரசாந்தனின் வேண்டுகோளுக்கிணங்கவே வைத்திய அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிறைச்சாலையில் வைத்திய அதிகாரிகளுக்கான அலுவலகம் இருந்த போதிலும் கடந்த ஆறுவருட காலமாக வைத்திய அதிகாரி ஒருவர் நியமிக்கப்பாடமையால் சிறைச்சாலையில் நோய்வாய்படும் கைதிகளை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும்போது பாரிய பாதுகாப்பு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கவேண்டிய நிலை நிலவி வந்தது. இது தொடர்பாக பலமுறை சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவணத்திற்கு கொண்டு சென்ற போதிலும் எவரும் கவனம் செலுத்தாமல் இருந்தனர்.

குறித்த விடயம் தொடர்பில் மட்டக்களப்பு மாவட்ட தமிழ் மக்கள் விடுதல புலிகள் கட்சியின் பொது செயலாளர் பூ பிரசாந்தனின் கவனத்து கொண்டு சென்றதையடுத்தே அவரின் சிபார்சுக்கு அமைய கிழக்கு மாகான ஆளுனறினால் தற்போது வைத்திய அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் இதனால் மட்டக்களப்பு சிறைச்சாலையில் நிலவிவந்த பாரிய பிரச்சினை

ஒன்றுக்கு இன்று தீர்வு கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஏகமனதாக நிறைவேறிய நுவரெலியா பிரதேச சபையின் வரவு-செலவுத்திட்டம்

**பூண்டுலோயா நிருபர்**

நுவரெலியா பிரதேச சபையின் வரவு செலவு திட்டம் அண்மையில் நுவரெலியா பிரதேசபை தலைவர் வேலு யோகராஜின் தலைமையில் இடம்பெற்றது.பலரின் எதிப்பார்ப்புக்கு மத்தியில் நுவரெலியா பிரதேச சபை கூடியது.

பெரும் பிரச்சனைக்குள்ளாகும் என எதிர்ப்பார்க்கப்பட்ட போது வரவுசெலவுதிட்டத்தை முன்வைத்ததும் அனைத்து கட்சி உறுப்பினர்களும் எவ்வித தடையுமின்றி சபையில் 23 உறுப்பினர்களில் 22 உறுப்பினர்கள் ஏகமனதாக ஆதரவளித்து வாக்களித்து வரவு செலவு திட்டத்திற்கு ஆதரவளித்ததோடு ஒருவர் சபைக்கு சமூகம் தரவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

மேலும் தொடர்ந்து சபையில் நுவரெலியா பிரதேசபை தலைவர் வேலு யோகராஜ் உரையாற்றும் போது இச்சபை அனைத்து சபைத்தலைவர்களாலும் ஒன்றுப்பட்டது.எனவே அனைத்து உறுப்பினர்களினதும் வேண்டுகோளிற்கிணங்கவும் அபிவிருத்தி பணிகளிற்கிணங்கவும் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுமெனவும் எவ்வித கட்சிப்பாகுபாடின்றியும் நுவரெலியா பிரதேச சபையினால் நிதி ஒதுக்கப்படும் எனவும் குறிப்பிட்டார்.

## வவுனியாவில் மழை காரணமாக மூவாயிரத்து 588 ஏக்கர் நெற்செய்கை அழிவு

**வவுனியா நிருபர்**

வவுனியாவில் தொடர்ச்சியாக பெய்து வந்த மழை காரணமாக மூவாயிரத்து 588.75 ஏக்கர் விவசாய நிலங்கள் அழிவடைந்துள்ளது என கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் மாவட்ட உதவிப் பணிப்பாளர் இ.விஜயகுமார் தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்டத்தில் 48 ஆயிரத்து 902 ஏக்கர் நெற்செய்கை மேற்கொள்வதற்கு எதிர்பார்த்த நிலையில் தற்போது 48 ஆயிரத்து 914 ஏக்கர் நெற் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மத்திய நீர்ப்பாசனத்திற்கு உட்பட்ட குளங்களில் ஆறாயிரத்து 529 ஏக்கர் நிலப்பரப்பிலும், மாகாண நீர்பாசன திணைக்களத்தின் கீழான நடுத்தர குளங்களின் கீழ் ஐயாயிரத்து 585 ஏக்கரும், எமது திணைக்களத்திற்கு உட்பட்ட 661 குளங்களில் 29 ஆயிரத்து 800 ஏக்கரும், மானாவாரி அடிப்படையில் 7 ஆயிரம் ஏக்கரும் என மொத்தமாக 47 ஆயிரத்து 914 ஏக்கர் நெற்பயிற் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதுவரைக்கும் 29 ஆயிரத்து 895 ஏக்கருக்கு விவசாயிகள் உரமானியத்தைப் பெற்றுள்ளார்கள்.

சீரற்ற காலநிலையால் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக இதுவரை 3588.75 ஏக்கர் அழிவடைந்துள்ளது. இதில் 90 வீதமான காணிகள் வவுனியா வடக்கு பிரதேசத்தில் அழிவடைந்துள்ளது. அதேபோன்று யானையினால் 17 ஏக்கர் அழிவுக்கு உட்பட்டுள்ளது. உழுந்து பயிர்செய்கையில் 150 ஏக்கர் வெள்ளத்தினால் அழிவடைந்துள்ளது. இது தொடர்பான தகவல்களை திரட்டி வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## சந்தை கட்டிட வசதிகளை ஏற்படுத்தக்கோரிக்கை

**தோப்பூர் நிருபர்**

திருகோணமலை மாவட்ட மூதூர் பிரதேச சபைகள் எல்லைக்குட்பட்ட தோப்பூரில் யுத்த சூழலில் அழிவடைந்த சந்தைக் கட்டிடத்தொகுதிகள் மீளவும் இன்னும் அமைக்கப்படாது இங்கு சந்தைக்கட்டிட வசதிகள் இன்மையால் பிரதி செவ்வாய்க் கிழமைகள் தோறும் தோப்பூரில் நடைபெறுகின்ற வாராந்த சந்தைகள் திறந்த வெட்ட வெளியில் நடைபெற்றுவருவதாக இங்குள்ள பொதுமக்களும். சந்தை வியாபாரிகளும் கவலை வெளியிட்டிருக்கின்றனர்.

தோப்பூரில் பிரபமாண்டமான சந்தைகட்டிடத்தொகுதிகள் அப்போதய காலப்பகுதிகளில் இங்கு அமைந்திருந்தன இது கடந்த 1990 ஆம் ஆண்டுகளில் நாட்டில் நிலவிய கொடிய யுத்தத்தினால் அழிவடைந்துதரைமட்டமாகியுள்ளது.

மேலும் சந்தைக்கட்டிட வசதிகளை இங்கு ஏற்படுத்திதைருமாறு பல தடவைகள் பொதுமக்கள் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகள் ஆகியோரது கவனத்திற்கு கொண்டுசென்றும் இன்னும் சந்தைத்தொகுதிகள் அமைத்துத்தரவில்லையென இப்பகுதிமக்கள் ஆதங்கப்படுகின்றனர்

இப்பிரதேசங்களை சூழவுள்ள சுமார் 20 ஆயிரத்திற்கும் அதிகமான மூவின மக்களும் பயன்பெறும் விதமாக தோப்பூரில் நிலையான சகல வசதிகைளுடனான சந்தைக்கட்டிடத்தொகுதிகள் அமைக்கப்படுவேண்டுமென்பதே இப்பிரதேச மக்களது உருக்கமான கோரிக்கையாகும்.

# அமெரிக்காவில் கிறிஸ்துமஸ் பண்டிகையை கொண்டாடிய விஜயகாந்த்



மருத்துவ சிகிச்சைக்காக அமெரிக்கா சென்ற தேமுதிக தலைவர் விஜயகாந்த், அங்குள்ள நண்பர்களுடன் கிறிஸ்துமஸ் பண்டிகையைக் கொண்டாடினார். இதுதொடர்பான படங்களை அவர் தனது ட்விட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ளார்.

கடந்த சில நாட்களுக்கு முன் தேமுதிக தலைவர் விஜயகாந்த் மருத்துவ சிகிச்சைக்காக அமெரிக்கா புறப்பட்டுச் சென்றார். மனைவி பிரேமலதா உடன் சென்றார்.

தமிழகத்தில் தேமுதிகவின் செல்வாக்கை அதிகரிக்கும் நோக்கில், புதிய நிர்வாகிகள் நியமனம், மாவட்ட செயலாளர்களுடன் மாதாந்திரக் கூட்டம் என பல்வேறு நடவடிக்கைகளை கட்சித் தலைவர் விஜயகாந்த் எடுத்து வருகிறார். அவ்வப்போது வெளிநாடு சென்று மருத்துவ சிகிச்சையும் பெறுகிறார்.

முன்னதாக கடந்த ஜூலை மாதம் விஜயகாந்த் தன் மனைவி பிரேமலதா, மகன்கள் பிரபாகரன், சண்முகபாண்டியன் ஆகியோருடன் சிகிச்சைக்காக அமெரிக்கா சென்றார். ஒரு மாத காலம் தங்கியிருந்து மருத்துவ சிகிச்சை பெற்ற அவர், ஆகஸ்ட் மாதத்தில் தமிழகம் திரும்பினார்.

இந்நிலையில் இரண்டாம் கட்ட சிகிச்சைக்காக அமெரிக்கா சென்றுள்ள விஜயகாந்த், அங்குள்ள நண்பர்களுடன் கிறிஸ்துமஸ் பண்டிகையைக் கொண்டாடினார்.

# எச்ஐவி ரத்தம் விவகாரம்: உண்மை கூறிய இளைஞரை பாதுகாக்குமா அரசு?

சாத்தூர் கர்ப்பிணிக்கு எச்ஐவி ரத்தம் ஏற்றப்பட்ட விவகாரத்தில், நேர்மையாக இந்த சம்பவத்தை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்த எச்ஐவி பாதித்த இளைஞரை பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது.

கமுதியைச் சேர்ந்த 18 வயது இளைஞர், தனக்கு எச்ஐவி பாதிப்பு இருப்பது தெரியாமலேயே ரத்த தானம் செய்தார். அவரது ரத்தத்தை பரிசோதனை செய்யாமலேயே சிவகாசி அரசு மருத்துவமனையில் கர்ப்பிணிக்கு ஏற்றி உள்ளனர்.

ரத்த தானம் செய்த இளைஞர், வெளிநாடு செல்வதற்காக, மருத்துவப் பரிசோதனை செய்தபோதுதான், அவருக்கு எச்ஐவி பாதிப்பு இருப்பது தெரியவந்தது. அவர் நினைத்திருந்தால் இதை மறைத்திருக்கலாம். ஆனால், தனது ரத்தத்தை யாருக்கும் ஏற்றிவிடக் கூடாது என்ற நல்லெண்ணத்துடன், சிவகாசி அரசு



மருத்துவமனைக்குச் சென்று, தான் பாதிக்கப்பட்ட விவரத்தை தெரிவித்துள்ளார். ஆனால், அதற்குள் கர்ப்பிணிக்கு அவரது ரத்தம் ஏற்றப்பட்டதை அறிந்து பதறிப் போய் உள்ளார். அந்த விவகாரம் மாவட்ட மருத்துவ அதிகாரிகள், சிவகாசி அரசு மருத்துவமனையில் விசாரித்த பிறகுதான், கர்ப்பிணிக்குக்கு எச்ஐவி ரத்தம் ஏற்றப்பட்டது வெளியே தெரிந்தது.

இதுகுறித்து மருத்துவர்கள் சிலர் கூறியதாவது:

நிர்வாக ரீதியாக, மருத்துவ அதிகாரிகள், இதுபோன்ற தவறுகளை கண்டுபிடித்திருந்தால் அதை மறைக்கத்தான் பார்த்திருப்பர். அந்த இளைஞர் நேர்மையாக நடந்ததால்தான் கர்ப்பிணிக்கும், பிறக்கப் போகும் அவரது குழந்தைக்கும் உயர் சிகிச்சை கிடைக்கவும், அவரது குடும்பத்துக்கு அரசின் உதவிகள் கிடைக்கவும் வழி கிடைத்துள்ளது.

இந்த விவகாரத்துக்கு பிறகே, தற்போது ரத்த வங்கி நடைமுறையில் மிகப் பெரிய நடைமுறைகளை கொண்டுவர தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கம் முடிவு எடுத்துள்ளது. எச்ஐவி பாதித்த அந்த இளைஞருக்கு வாழ்நாள் முழுவதும் உயர் சிகிச்சை கிடைக்க ஏற்பாடு செய்வதோடு, அவரது குடும்பத்தையும் பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

# சென்னையில் தனியார் மருத்துவமனை பெண்கள் கழிவறையில் ரகசிய கேமரா- ஊழியர் கைது

சென்னை சைதாப்பேட்டையில் உள்ள கிட்னி மருத்துவமனையில் பெண்கள் உபயோகிக்கும் கழிவறையில் மறைமுகமாக ஒளித்து வைக்கப்பட்ட கேமரா பற்றி தகவல் அறிந்த போலீசார் அந்த மருத்துவமனை ஊழியர் ஒருவரை கைதுசெய்துள்ளனர்.

சென்னை சைதாப்பேட்டையில் உள்ள ஆர் பி ஸ்கேன் என்று கிட்னியில் உள்ள கல்லை நீக்கி சிகிச்சையளிக்கும் தனியார் மருத்துவமனையில் இன்று மாலை பெண் ஒருவர் பெண்கள் கழிவறைக்கு சென்றுள்ளார்.

கழிவறைக்கு சென்ற அந்தப் பெண் இந்த அறையில் ஏதேனும் ஒளித்து வைக்கப்பட்ட கேமராக்கள் உள்ளதா என சந்தேகித்துள்ளார். அண்மையில் சென்னையில் தனியார் பெண்கள் விடுதியில் ரகசிய கேமராக்கள் வைக்கப்பட்டிருந்தது சர்ச்சையை கிளப்பியிருந்தது அதேபோல் இந்த அறையிலும் கேமராக்கள் இருக்குமோ என்ற பயத்தில் தனது மொபைலில் உள்ள ரகசிய கேமராவை கண்டறியும் ஆப் மூலம் அந்த அறையை சோதனை செய்துள்ளார்.

அப்பொழுது அந்த அறையில் ரகசிய கேமரா வைத்திருப்பது தெரிந்தது. அதனையடுத்து மருத்துவமனையை விட்டு வெளியேறிய அந்த பெண் சைதாப்பேட்டை காவல் நிலையத்தில் உடனடியாக புகார் அளித்தார். அந்த புகாரின் பேரில் சம்பந்தப்பட்ட மருத்துவமனைக்கு சென்ற போலீசார் மருத்துவமனையின் பெண்கள் கழிவறையில் வைக்கப்பட்டிருந்த ரகசிய கேமராவை கைப்பற்றினர். மேலும் அதில் பல்வேறு பெண்களின் அந்தரங்க காட்சிகள் பதிவு செய்யப்பட்டது தெரியவர அந்த கேமராவை பொருத்தும் நபரும் அந்த கேமராவில் பிடிபட்டுள்ளார்.

அந்த கேமராவை பொருத்திய மருத்துவமனை ஊழியரான பிரகாஷ் என்பவரை போலீசார் கைது செய்து விசாரித்து வருகின்றனர்.

# திமுக பொதுச்செயலாளர் அன்பழகனை நேரில் சந்தித்த ஸ்டாலின்



திமுக பொதுச்செயலாளர் க.அன்பழகன், உடல் நலக்குறைவால் சென்னை ஆயிரம்விளக்கு பகுதியில் உள்ள அப்பல்லோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். இதனைதொடர்ந்து திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் நேரில் சென்று அவரின் உடல் நலம் குறித்து விசாரித்தார்.

அதன்பின்னர் செய்தியாளர்களை சந்தித்த மு.க.ஸ்டாலின், நெஞ்சில் நோய்தொற்று ஏற்பட்டுள்ளதால் அன்பழகன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார், ஓரிரு நாளில் வீடு திரும்புவார். க.அன்பழகன் மருத்துவர்களின் கண்காணிப்பில் உள்ளார் எனக்கூறினார்.

# குழந்தைகளுக்கு பாலியல் தொல்லை; மரணதண்டனை அமுல்

குழந்தைகளை பாலியல் வன்கொடுமை செய்வோருக்கு மரண தண்டனை விதிக்கும் வகையில் போக்சோ சட்டத்தை திருத்த மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் கூடிய, பொருளாதார விவகாரங்கள் மீதான, அமைச்சரவை குழு, ககன்யான் உட்பட, பல்வேறு திட்டங்கள் குறித்து விவாதித்தது. இந்த கூட்டத்தில், குழந்தைகள் மீதான பாலியல் குற்றங்களுக்கு, மரண தண்டனை உட்பட கடுமையான தண்டனைகள் அளிக்க வகை செய்யும், 'போக்சோ' சட்ட திருத்தங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

பாலியல் வன்கொடுமைகளில் இருந்து குழந்தைகளை காக்க கொண்டு வரப்பட்ட போக்சோ சட்டத்தில், குழந்தைகளை பாலியல் வன்கொடுமை செய்தால் குறைந்தபட்சம் 7 ஆண்டு முதல் அதிகபட்சம் ஆயுள் தண்டனையாகவும் இருந்தது. தற்போது இதில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. இதன்படி, குழந்தைகளை பாலியல் வன்கொடுமை செய்தால், மரண தண்டனை வழங்க போக்சோவிலுள்ள 4,5,6 சட்ட பிரிவுகளில் திருத்தம் செய்ய அமைச்சரவை ஒப்புதல் வழங்கி உள்ளது.

# கூடுதல் நீலநிறத்தில் வானம்: வேற்றுகிரக வாசிகள் வந்துவிட்டார்களா? - குழம்பிய அமெரிக்க மக்கள்



அமெரிக்காவின் நியூயார்க் நகரில் வானில் நடந்த மாற்றத்தைக் கண்டு வேற்று கிரகவாசிகள் வந்துவிட்டார்களா? என்று அந்நாட்டு மக்கள் சமூக வலைதளங்களில் பதிவிட்ட வினோதம் நடந்தது.

வியாழக்கிழமை இரவில் வானம் வழக்கமான வண்ணத்துக்கு மாறாக கூடுதல் நீல நிறத்தில் ஆங்காங்கே பிரகாசமாகத் தெரிய அமெரிக்க மக்கள் அதனைத் தங்கள் கைப்பேசியில் வீடியோக்களாகவும் புகைப்படங்களாகவும் பதிவிடத் தொடங்கினர்.

நியூயார்க் நகருக்கு வேற்றுகிரக வாசிகள் யாராவது படை எடுத்து வீட்டார்களா? என்று பலரும் பதிவிட இது தொடர்பான வீடியோ காட்சிகள் சமூக வலைதளங்களில் வைரலாகியது.

இந்த நிலையில் மின் உற்பத்தி ஆலையில் ஏற்பட்ட விபத்து காரணமாகத்தான் வானம் கூடுதல் வெளிச்சத்துடன் காணப்பட்டது என்று அமெரிக்க ஊடங்கள் செய்தி வெளியிட்டன.

இதுகுறித்து நியூயார்க் தீயணைப்பு துறை தரப்பில், Long Island City யில் உள்ள மின் உற்பத்தி ஆலையில் வியாழக்கிழமை இரவு விபத்து ஏற்பட்டது. மேலும் இதே மாதிரியான மின் விபத்து அஸ்டோரியா நகரத்திலும் ஏற்பட்டது. இதன் காரணமாகவே வானம் கூடுதல் வெளிச்சத்துடன் காணப்பட்டது.

தற்போது நிலைமை கட்டுப்பாட்டுக்குள் உள்ளது. இந்த விபத்தின் காரணமாக யாருக்கும் எந்த பாதிப்பும் ஏற்படவில்லை என்று தெரிவித்தன.

# விமானப் பணிப்பெண்ணான மகளுடன் கிறிஸ்துமஸ் கொண்டாட தந்தை செய்த சுவாரஸ்யம்



உறவுகள் அழகானவை. அதிலும் அப்பா - மகள் உறவு அதீத அழகு. விமானப் பணிப்பெண்ணான தனது மகளுடன் கிறிஸ்துமஸ் கொண்டாட அப்பா செய்த நெகிழ்ச்சியான செயல் இணையத்தில் வைரலாகி வருகிறது.

அமெரிக்காவின் ஒஹியொ மாகாணத்தைச் சேர்ந்தவர் ஹால் வாகன். இவரின் செல்ல மகள் பியர்ஸ் வாகன். இருவரும் கிறிஸ்துமஸ் நாளை சிறப்பாகக் கொண்டாடத் திட்டமிட்டிருந்தனர். விமான பணிப்பெண்ணான பியர்ஸ், திடீரென கிறிஸ்துமஸ் அன்று வேலைக்குச் செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

மகளைப் பிரியாமல் இருக்க என்ன செய்யலாம் என்று யோசித்தார் ஹால். மகள் பணிபுரியும் அனைத்து விமானங்களிலும் உடன் செல்ல முடிவெடுத்தார். உடனடியாக நாடு முழுவதிலும் பியர்ஸ் பயணிக்கும் அனைத்து விமானங்களிலும் முன்பதிவு செய்தார். மகளுடன் இரண்டு நாட்கள் தொடர்ந்து 6 விமானங்களில் பயணித்தார்.

ஒரு விமானப் பயணத்தின்போது உடன் வந்த மைக் லெவி என்னும் விற்பனைப் பிரதிநிதி, இந்தத் தகவலை ஹாலிடம் இருந்து கேட்டுத் தெரிந்துகொண்டார். இந்த நெகிழ்ச்சியான செயலை தனது ஃபேஸ்புக் பக்கத்தில் பதிவு செய்தார். அந்தப் பதிவை 1 லட்சத்துக்கும் அதிகமானோர் லைக் செய்தனர். 38 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பகிர்ந்தனர்.

இதே பதிவைப் பகிர்ந்த மகள் பியர்ஸ், தந்தைக்கும் தனது சக ஊழியர்களுக்கும் நன்றி தெரிவித்தார். பகிர்வுக்குப் பதிலளித்த நெட்டிசன்கள் பலர், இது ஒரு தந்தை தனது மகளுக்கு அளித்த அற்புதமான கிறிஸ்துமஸ் பரிசு என்று நெகிழ்ந்தனர்.

# ரூ.5000 கோடியை தானமாக எழுதிவைத்த நடிகர்



உலகைவிட்டுப் போகும்போது எதையும் கொண்டு போகப் போவதில்லை என்ற வாழ்க்கையின் தத்துவத்தை உணர்ந்தாரோ என்னவோ ஹாங்காங் திரை நட்சத்திரம் சவ் யுன் ஃபேட் தனது சொத்துக்களை தானமாக வழங்க உறுதியேற்றிருக்கிறார். The Giving Pledge என்ற உறுதியேற்பு ஒப்பந்தத்தில் அவர் கையெழுத்திட்டிருக்கிறார்.

The Giving Pledge என்ற ஒப்பந்தம் உலகப் பணக்காரர்கள் பில் கேட்ஸ், வாரன் பஃப்ஃபட் ஆகியோரால் உருவாக்கப்பட்டது. பணக்காரர்கள் ஏழை எளியவர்களுக்கு தானம் வழங்குவதை ஊக்குவிக்க இது தொடங்கப்பட்டது. தற்போது லேட்டஸ்டாக இணைந்திருக்கிறார் நடிகர் சவ் யுன் ஃபேட்.

Crouching Tiger, Hidden Dragon தமிழில் பாயும் புலி பதுங்கும் நாகம் என்ற பெயரில் வெளியான படம் இது. உலகளவில் பிரம்மாண்ட ஹிட் அடித்த படம் இது.

பைரேட்ஸ் ஆஃப் தி கரீபியன், ஏ பெட்டர் டுமாரோ ஆகிய படங்கள் இவருக்கு பெயர் பெற்றுத் தந்தன.

சவ் யுன் ஃபேட்டுக்கு தற்போது வயது 62. 2015-ம் ஆண்டில், ஃபோர்ப்ஸ் வெளியிட்ட அதிக சம்பளம் வாங்கும் ஹாலிவுட் நடிகர்கள் பட்டியலில் இவர் இடம்பெற்றார்.

இந்நிலையில், தென் கொரியாவில் முன்வா ப்ராட்காஸ்டிங் நிறுவனத்துக்கு (MBC)கடந்த வாரம் வழங்கிய நேர்காணலில் தன்னுடைய மறைவுக்குப் பின்னர் தனது சொத்துக்களை மக்களுக்குச் சேரும் வகையில் எழுதிவைக்கப்போவதாகக் கூறியிருக்கிறார்.

அந்தப் பேட்டியில் பணம் எப்போதும் நம்முடன் இருக்கப்போவதில்லை. ஒரு நாள் இந்த உலகைவிட்டுப் போகும்போது நீங்கள் உங்கள் உடைமைகளை விட்டுச் செல்ல வேண்டும். உங்கள் பொருட்கள் உங்களுக்குப் பின் மற்றவர்களுக்குப் பயன்படக் கூடியதாக இருக்க வேண்டும். மரணத்துக்குப் பின்னர் வங்கிக் கணக்கில் உள்ள பணத்தை உங்களுடன் எடுத்துச் செல்லவா முடியும்? அதனால் என் இறப்புக்குப் பின்னர் எனது சொத்திலிருந்து ரூ,5000 கோடி பணத்தை மக்களுக்கு தானமாக வழங்க உறுதியேற்றுள்ளேன். என்னுடைய முடிவை எனது மனைவி ஜாஸ்மின் டானும் முழுமையாக ஆதரிக்கிறார்'' என அவர் கூறிய கருத்து பரவலாக பாராட்டப்பட்டு வருகிறது.

சவ்வின் சொத்து மதிப்பு எவ்வளவு என்பது அவருக்கே உறுதியாகத் தெரியவில்லை. இதனால், பல்வேறு ஊடகங்களும் சவ்வின் சொத்து விவரமென பல தகவல்களைத் தெரிவிக்கின்றனர். ஆனால், இந்திய ரூபாய் மதிப்பில் அவர் ரூ.5012 கோடியே 54 லட்சத்து 33 ஆயிரத்து ஐநூறு அளவிலான சொத்துக்களை தானமாக வழங்க விருப்பதாகக் கூறப்படுகிறது.

சவ்வை ஹாங்காங் மக்கள் பாசமாக Brother Fat என்று அழைக்கின்றனர். சவ்வின் பழக்கவழக்கங்கள் பற்றி அவரது மனைவி டான் கூறும்போது, அவருக்கு எளிமையான உணவே பிடிக்கும். சாலையோரக் கடைகள் சாப்பாட்டை அதிகம் விரும்பிச் சாப்பிடுவார். பல ஆண்டுகளாக நோக்கியா ஃப்ளிப் ஃபோனையே பயன்படுத்தி வந்தார். இப்போது அந்த ஃபோன் செயலிழந்துவிட்டது என்றார்.

**எளிமையாக சாப்பிடவே விருப்பம்..**

எம்பிசி செய்தி நிறுவனத்தின் பேட்டியில் சவ் தனது உணவுப் பழக்கம் பற்றி பேசும்போது, சாப்பிடுவதற்கு உணவு கிடைத்தால்போதும். ஏனெனில் நாங்கள் ஒருகாலத்தில் பரம ஏழைகள். அப்போதெல்லாம் உருளையும் கொஞ்சம் காய்கறியும் சாப்பிடக் கிடைத்தாலே மகிழ்ச்சியடைந்துவிடுவேன். புத்தாண்டு பிறப்பன்று கறியோ கோழியோ கிடைத்துவிட்டால் பேரானந்தம் வந்துவிடும் என்றார்.

# தொடர்ந்து வெடிக்கும் எரிமலை:

## இந்தோனேசியாவுக்கு மீண்டும் சுனாமி ஆபத்து



இந்தோனேசியாவில் ஏற்பட்ட சுனாமிக்கு காரணமான அனாக் கிராக்கதோவ் எரிமலை தொடர்ந்து வெடித்து வருவதால் அதன் லாவா குழம்பு ஆபத்தான உயரத்தை அடைந்துள்ளதாக செய்திகள் வெளியாகி உள்ளன.

இதுகுறித்து ஊடகங்கள் தரப்பில், இந்தோனேசியாவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை கடலடி அனாக் கிராக்கதோவ் எரிமலை வெடித்து அதன் லாவா குழம்பு கடல் நீருடன் கலந்ததில் வெளிப்பட்ட ஆற்றலில் சுனாமி ராட்சத அலைகள் தாக்கியது.இதில் 400க்கும் மேற்பட்ட மக்கள் பலியாகினர். 700க்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர்.

இந்த நிலையில் அந்த எரிமலை தொடர்ந்து வெடித்து வருவதால் அதன் லாவா குழம்புகள் அதிகபட்ச உயரத்தை அடைந்துள்ளதாகவும் இதன் காரணமாக மீண்டும் மற்றுமொரு சுனாமி தாக்கலாம் என்பதை கவனத்தில் கொண்டு அந்த எரிமலையை ஒட்டிய மூன்று கிலோமீட்டருக்குள் வசிக்கும் மக்களுக்கு அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர் என்று செய்தி வெளியிட்டுள்ளது.

புதிய எச்சரிக்கை குறித்து இந்தோனேசிய புவியியல் துறை அதிகாரி கூறும்போது, கடலுக்கு அடியிலும், கடலுக்கு மேலும் நிலச்சரிவுக்கு இன்னும் வாய்ப்புகள் உள்ளது. மோசமான கால நிலை காரணமாக எங்களால் களத்துக்கு செல்ல முடியவில்லை. நாங்கள் செயற்கை கோள் படங்களை வைத்தும், அனாக் கிராக்கதோவ் எரிமலையினால் பாதிப்புக்குள்ளான பகுதிகளை வைத்துத்தான் இதனை கூறுகிறோம் என்றார்.

THAMILTHANTHI தமிழ்த்தந்தி
உண்மையாய். உரிமையாய். உணர்வாய்.
ஞாயிற்றுக்கிழமை 30.12.2018
இல. 146,டோசன் வீதி, கொழும்பு2
தொலைபேசி:0114369412பக்ஸ்:0114641294
மின்னஞ்சல்: thamilthanthi@gmail.com

## சீனாவின் அரசியல் செயற்கை கோளாக இலங்கை மாறும் அபாயம்

இலங்கை பாராளுமன்றத்தில் அண்மையில் ஏற்பட்ட குழப்பம், நாட்டின் வளர்ச்சிப் பாதையை அடைக்கும் அபாயமாக மாறக்கூடும். இலங்கையின் ஜனநாயக ஆட்சி முறை, தமிழகத்தினரால் உன்னிப்பாக கவனிக்கப்பட வேண்டியது. இலங்கையில் ஏற்படும் மாற்றங்களை, உலகளவில் வாழும் புலம்பெயர்ந்த தமிழ் தலைவர்கள் பேசினாலும், இந்தியாவிலும், குறிப்பாக தமிழகத்திலும், இதன் மாற்றங்கள் நிச்சயம் பேசப்படும். ஏனெனில், மொத்தம் உள்ள, 225 எம்.பி.,க் கள் என்ன நினைக்கின்றனர் அதில் உள்ள கட்சி தலைவர்கள் கருத்தும், பின்புலமும் என்ன என்பதை அறியாமல், ஜனாதிபதி சிறிசேன அவசரப்பட்டிருக்கிறார். சிறிய நாடு, ஜனாதிபதி அதிகார நடைமுறை ஆதிக்கம் மற்றும் அடிக்கடி தேர்தல் வந்தாலும் கவலைப்படாத பெரும்பான்மையான மக்கள் என்பது மட்டும் இன்றி, புத்த மதம் என்பது, ஒரு ஆதிக்க சக்தியாக இருக்கிறது என்பதும் அபாயம்.ஆனால், இன்றைய சூழலில், முன்னாள் ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கு, ஜனாதிபதி சிறிசேன அளித்த முக்கியத்துவம் மிக மோசமானது. மக்கள் வெறுத்தவரை ஆதரித்ததுடன், வடகிழக்கு மாகாணங்களில், தமிழர்கள் வாழ முடியாத நிலையை வேண்டுமென்றே, அவர் உருவாக்கியதை வரலாறு உணர்த்திய போதும், இலங்கை இறையாண்மையைக் காக்க, சிறிசேன எடுத்த வழி தவறானது.கிட்டத்தட்ட இரு மாதங்களாக, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை ஓரம் கட்ட, ஜனாதிபதி சிறிசேன செய்த முயற்சியை, அந்நாட்டு பாராளுமன்றம் ஏற்கவில்லை. ஆனால், அந்த சபாநாயகர் கரு ஜயசூர்யா, முதலில் ராஜபக்ஷவை தள்ளி விட்டது மட்டு மின்றி, அதற்கு அடுத்த திருப்பமாக ராஜபக்ஷவையும், சம்பந்தனையும், இரு எதிர்க்கட்சி தலைவர்களாக நியமித்ததில், அந்நாட்டு அரசியல் அமைப்பு செயல்படாமல் ஸ்தம்பிக்கும். பிரதமரை நீக்குவது என்பது, பாராளுமன்றத்தின் முடிவாகும் என, அரசியலமைப்பு சட்டம் சொல்கிறது. அதை விட, ரணில் விக்கிரமசிங்க தனக்கு பிடிக்காதவர் என்ற முறையில், அவர் எதிர்க்கட்சி தலைவர் என்ற முடிவை ஏற்க வேண்டிய கட்டாயம் சிறிசேனவுக்கு வந்ததும், அவரை நேருக்கு நேர் பார்க்கக் கூட தயங்கிஇருக்கிறார்.

புதிய உறவான ராஜபக்ஷவுடன் சேர்ந்து ஆள முற்பட்டது, மக்கள் அளித்த தீர்ப்புக்கு எதிரானது. ஆனால், ரணில் விக்கிரமசிங்க, மொத்தமுள்ள, 225 எம்.பி.,க்களில், பாதிக்கு மேல் தன்னிடம் கொண்டிருக்கிறார். கடைசியில், சிறிசேன முடிவை எதிர்த்து, உயர்நீதிமன்றம் சென்ற விக்கிரமசிங்கவுக்கு, அபார வெற்றி கிடைத்திருக்கிறது. இதுவரை இலங்கையில், இம்மாதிரி பதவி மோதல்கள், நீதிமன்றம் வரை சென்றதில்லை.

தவிரவும், ராஜபக்ஷ ஆதரவாளர்களும், விக்கிரமசிங்க ஆதரவு, எம்.பி.,க்களும், சபையில் கைகலப்பில் ஈடுபட்டதும் நடந்தமையை அவதானிக்க கூடியதாகவிருந்தது. எந்த விக்கிரமசிங்க, தன், யு.என்.பி., என்ற ஐக்கிய தேசிய முன்னணி ஆதரவை, சிறிசேன தலைமைக்கு, மூன்றாண்டுகளுக்கு முன் தந்தாரோ, இன்று அந்நிலை மாறி, இரு தலைவர்களிடமும், அதிக கசப்புணர்வு ஏற்பட்டிருக்கிறது. இதில் முக்கியமாக, தமிழ் தேசிய கூட்டமைப்பு தலைவர் சம்பந்தன், சபையில் தன் முக்கியத்துவத்தை இழந்திருக்கிறார்.கடைசியில், கண்டி தமிழர்களுக்கு வீடு கட்ட, இந்தியா அளித்த உதவி, வடகிழக்கு மாநிலங்களில் மீண்டும் குடியேறிய தமிழ் மக்கள், தங்கள் உடைமைகளை சிறிது சிறிதாக பெறும் காலம் வந்திருக்கிறது என்ற கதை, இனி அதிக தாமதமாகும். தவிரவும், சிங்களர் மற்றும் புத்தமத பிட்சுகள், இலங்கை அரசில் காய் நகர்த்துவதில், தொடர்ந்து காலம் காலமாக ஈடுபட்டு வருகின்றனர். மத வழி அரசு என்ற பேச்சு இல்லை என்றாலும், அதிகாரம்மிக்க ஜனாதிபதி என்ற அபார சக்தி கொண்ட ஜனாதிபதி பதவியை குறைக்க, ரணில் ஏதாவது செய்தால் ஒழிய, இலங்கையில் ஒட்டு மொத்த பொருளாதாரமும், ஆளும் திறனும் சிறிது சிறிதாக குறையும்.முதல்கட்டமாக, ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சி அணி ஒன்றை உருவாக்க முயல்கிறார். இதில், சிங்களவர் அதிகம் உள்ள, ஜனதா விமுக்தி பெரமுனா, தமிழ் தேசிய கட்சி ஆகியவை, ஒன்று சேரும் நிலை உருவாகலாம். அதற்கு முன்பாக, தமிழர்களுடைய வாழ்வாதாரம், கொழும்பில் உள்ள தமிழர்கள் போல உயரா விட்டாலும், இனியும் இலங்கை அரசியலமைப்பு சட்டத்தில், மொழி மற்றும் மதத்தை சேர்ந்த எவரும், இரண்டாம் தர குடிமக்களாக, எக்காலத்திலும் இருக்கக்கூடாது. இதை, இந்திய அரசின் வெளியுறவு துறையும், ஐக்கிய ஐரோப்பிய நாடுகள் குழுவும் வலியுறுத்தினால், சீனாவின் அரசியல் செயற்கைக்கோளாக இலங்கை மாறும் அபாயம்.

# கிழக்கின் விடியலும் தமிழ் அரசியல் தலைமைகளும்



சரணியா சுப்ரமணியம்
B.A (Hons)
பேராதனை பல்கலைக்கழகம்

எமது நாட்டினைப்பொறுத்தவரையில் அரசியல் கட்சிகள் மற்றும் தொழிற்சங்கங்கள் என்பன தேர்தல் காலங்களில் பேரணிகள் மற்றும் கூட்டங்களுக்கு மாத்திரம் மக்களை அழைத்துதமது அரசியல் பலத்தினை காட்விட்டு மறுமுனையில் தம்மை மக்கள் பிரதிநிதிகளாக்கிய உரிய பதவிகளை வழங்கிய மக்களை மறந்து அரசியல் தலைமைகள் செயற்பட்டுவருகின்ற நிலைமைகளே கடந்த பல வருடங்களாக காணப்பட்டு வருகின்றன. வடக்கு கிழக்கில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான மக்கள் தமது தொழில்களை இழந்த நிலையில் பல்வேறு விதமான பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து வருகின்றனர். தமது வாழ்வாதாரத்தினை கட்டியெழுப்ப முடியாத நிலையில் வடகிழக்கில் ஒருபகுதியினர் திண்டாடி வருகின்றனர். அதுமட்டுமின்றி யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகளில் பெருமளவானோர் உரிய வருமானங்கள் எதுவும் இன்றி இன்று வாழ்க்கையினை தொலைத்தவர்களாக வடகிழக்கில் வாழ்ந்து வருகின்றனர். மேலும், நல்லாட்சி முடிவடைய ஒருவருடம் நிறைவுபெற உள்ள நிலையில் இன்றளவும் சுமார் பத்ததாயிரத்திற்கும் மேற்பட்ட பட்டதாரிகள் படித்தும் வேலையற்றவர்கள் என்ற ரீதியில் வீதிகளில் இறங்கி போராடியும் எதுவித வேலைவாய்ப்புகளும் இன்றி பல்வேறு மனஉளச்சலுக்கும் உள்ளாகி உள்ளனர். இவ்வரசாங்கமானது பதவியேற்று மூன்றரை வருடங்களாகி உள்ள நிலையிலும் இவ்வரசாங்கம் பதவியேற்பதற்கு முன்னர் பல்வேறு விதமான உறுதிகளையும் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. கடந்த 2015 ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்தின்போது தாம் ஆட்சிக்கு வந்தால் பத்துஇலட்சம் தொழில்வாய்ப்புக்கள் வழங்கப்பட்டு வேலையில்லாப்பிரச்சினைகளுக்கு தீர்வுகாணப்படும். என பிரதமர் உறுதிமொழி வழங்கியிருந்தார். ஆனால் தற்போதைய நிலையில் நாட்டில் வேலையில்லாப்பிரச்சினையே அதிகரித்துக் காணப்படுகின்றது. ஒவ்வொரு ஆண்டும். தமது பட்டப்படிப்பபை நிறைவு செய்து வெளியாகிய பட்டதாரிகள் தமக்கு வேலை வழங்கப்பட வேண்டுமெனக்கூறி வடகிழக்கில் பல்வேறு இடங்களில் பல்வேறு யுத்திகளை கையாண்டு போராட்டங்களை நடாத்தியும் எதுவிதபலனுமின்றியும், எதுவித தீர்வுமின்றி அவர்கள் தொழிலின்றி இருப்பது இன்றைய அவலமாகவுள்ளது.

அதுமாத்திரமின்றி தமிழர்களின் நீண்டகால இனப்பிரச்சினைக்கு தீர்வு எட்டப்படாத நிலையில், கடந்த யுத்த காலங்களில் இலங்கையில் நடந்தது இனப்படுகொலையென்றும் அதுமுள்ளிவாய்க்காலில் மட்டுமின்றி வரலாற்று ரீதியாக கட்டமைக்கப்பட்ட ரீதியில் நடைபெற்றுள்ளதாகவும் முன்னாள் வடக்கு மாகாணசபையின் கடந்த வருடம் இனப்படுகொலை தீர்மான உரையில் குறிப்பிணீட்ட தீரமானம் கொண்டுவரப்படம்டமை குறிப்பிடத்தக்கது. போர்வழி மாத்திரமின்றி வேறு பல வழிகளிலும் கடந்து வந்த ஒவ்வொரு அரசாங்கங்களாலும் தமிழ் மக்கள் ஏதோ ஒரு வகையில் அழிக்கப்படுகின்றார்கள் அல்லது புறக்கணிக்கப்படுகின்றார்கள். இது வெளிப்படையாக புலப்படுகின்ற போதும் இதனைப்பார்த்தும் பாராமலும் வாய்மூடி மௌனிகளாக தமிழ் அரசியல் தலைமைகள் செயற்பட்டு வருகின்றனர். கடந்துவந்த அரசாங்கத்தில் வன்னியில் தமிழர்களுக்கு கட்டாயகருத்தடை செய்யப்பட்டது. இதன் போது சுமார் 20வீதமான பெண்கள் பாதிப்பினை எதிர்கொண்டதாக கூறிகின்றனர். இதேவேளை இறுதியுத்தத்தின் பின்னர் அரசின் உயர்மட்ட கட்டளைகளின் பிரகாரம் வவுனியா போன்ற மருத்துவ மனைகளுக்கு வரும் கர்ப்பமடைந்த தமிழ் தாய்மார்களிடம் சிங்களப்படிமங்களில் கையொப்பம் பெறப்பட்டு அவர்களின் கருவை கலைக்கும் செயற்பாடுகள் நடைபெற்றதாக தெரிவிகப்படுகின்றது. இது திட்டமிட்ட இன அழிப்பாகவும் ஈழ தமிழனத்தின் சந்ததியை கருவிலேயே அழிக்கும் செயல் என்றும் அக்காலத்தில் நிருபிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதுகாலம் காலமாக வடகிழக்கில் பல்வேறு தமிழனப்படுகொலைகளாக உருமாறிஅதன் உச்சக்கட்டமாகவே கடந்த 2009ம் ஆண்டுமுள்ளிவாய்க்காலில்தமிழ்மக்கள் கொன்று அழிக்கப்பட்டனர்.இன்றுவரை ஈழதத்தமிழனத்தின்இனப்படுகொலைக்கான நோக்கங்களான தமிழருக்கான சுயநிர்ணய உரிமையை மறுக்கும்செயலே காணப்பட்டுவருகின்றது. தமிழ் மக்களுக்கான உரிமைகளை மறுக்கவும் அவ்ரகளை இல்லாமல் செய்யவும் அவர்களின் சொத்துக்கள் அரசியல் உரிமைகள் தாயகம்முதலியவற்றை அபகரிக்கவும்இன அழிப்பு தொடர்ந்து இடம்பெற்றது.அத்துடன் தமிழர்களின் பூர்வீக பிரதேசங்களில் திட்டமிட்ட குடியேற்றங்கள் முன்னெடுக்கப்பட்டு தமிழ் மக்களை தமது தாய்நிலத்திலிருந்து ஒழிக்கும் செயலும் இதன்பாற்பட்டதென நீண்டகால தமிழினத்தின் அரசியலை ஆராய்ந்தவர்கள் குறிப்பிட்டு வருகின்றனர்.

ஆட்சியில் மாறி மாறி பங்கினை வகிக்கும் தேசிய கட்சியைச்சார்ந்தவர்கள் என்ற வகையிலும் கடந்த கால ஆட்சியில் பங்குபற்றியவர்கள் என்ற வகையிலும் தென்னிலங்கை சமூகம் என்ற வகையிலும் ஈழத்தமிழ்மக்கள் மீது நிகழ்த்தப்பட்ட மாபெரும் இன அழிப்புக்குறித்த கூட்டுப்பொறுப்பை இலங்கை அரசாங்கம் மறுக்கவோ நிராகரிக்கவோ முடியாது. ஒரு மாபெரும் இனப்படுகொலையை உலகறிப்பட்ட மாபெரும் அநீதியை மூடிமறைப்பதும் அவ்வளவெளிதல்ல. ஈழதமிழ் மக்கள் படுகொலைகளால் சந்தித்த காயத்தினை ஆற்றுவதென்பது ஒரு இனப்படுகொலையாக அதை ஏற்றுக்கொள்வதுடன் மீண்டும் ஒரு இனப்படுகொலை எதிர்காலங்களில் நிகழாத வகையில் உறுதியும் நியாயமும் நிரந்தரமும் கொண்ட அரசியல் தீர்வொன்றை ஏற்படுத்துவதிலேயே தங்கியுள்ளது.

தற்போதைய அரசாங்கத்தில் குறிப்பாக வடகிழக்கில் போதிய அளவு அபிவிருத்தி செயற்பாடுகள் முன்னெடுப்பதற்காக நிதியொதுக்கிடப்படுகின்றது. என பல்வேறு இடங்களில் சுட்டிக்காட்டப்படுகின்றது. இருப்பினும் ஒதுக்கப்பட்ட நிதிக்கமைவான குறித்த அபிவிருத்திப்பணிகள் மாத்திரம் வடகிழக்கில் நிறைவுபெறாமல் இருப்பதற்கு காரணமென்ன? இங்கு குறிப்பாக வடக்கில் பல்வேறு அபிவிருத்தி செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற அதேசமயம் தமிழர் தாயகமான கிழக்கில் குறிப்பாக தமிழர்கள் அதிகம் செறிந்து வாழும் பகுதிகளில் மாத்திரம் பல அபிவிருத்திச் செயற்பாடுகள் முடங்கி வண்ணமே தற்போது வரை காணப்பாடுகின்றன. அத்துடன் நிதியொதுக்கீட்டின் பெயரில் அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட்டாலும் அவை முற்றும் முடிவுறாத நிலையில் முடங்கி கிடக்கின்றன. இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உரிய அபிவிருத்தி தொடர்பாக அறிவித்தும் அதனை அதிகளவில் கண்டுகொள்ளாதபோக்கே அதிகளவில் காணப்படுகின்றது. அதுமட்டுமல்லாது இன்று மட்டக்களப்பு சுற்றுலாத்துறையில் பல்வேறு அபிவிருத்திகளை கண்டுவருகின்றது. இது ஒருவகையில் வரவேற்கதக்க விடயம் ஆயினும் மறுபக்கம் இங்கு ஒழுக்கத்தினை சீர்குலைக்கும்செயற்பாடுகளும் அரங்கேறி வருவதாக தகவல்கள் கிடைக்கின்றன. இவ்வாறான பல அபிவிருத்தி நடவடிக்கைகளின் போது எமது பாரம்பரிய ஒழுக்கத்தினை சீர்குலைக்காத விதத்தில் குறித்த செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும். அத்துடன் சுற்றுலாத்துறைச்சார்ந்த அபிவிருத்தி செயற்பாடுகள் மூலம் மட்டக்களப்பில் இன்று வேலையற்றிருக்கும் பல வேலையற்ற இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்புக்களை வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகளை உரிய பொறுப்புவாய்ந்த தமிழ் அரசியல் தலைமைகள் முன்னெடுக்க வேண்டும். இதுமட்டுமின்றி வடக்கு மற்றும் கிழக்கில் அபிவிருத்திக்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்ற போது உள்ளூர் இளைஞர் யுவதிகளுக்கான வேலைவாய்ப்பு நிராகரிக்கப்பட்டு வருகின்றது. இதனைத்தடுத்து அவர்களுக்கான உரிய வேலைவாய்ப்புக்களை வழங்குவதற்கு தமிழ் அரசியல் தலைமைகள் முனைப்புக்காட்ட வேண்டும். அதன்மூலம் வேலையற்றோர் வீதத்தினையும் ஓரளவு குறைத்துக்கொள்ள முடியும். இன்று அதிகளவில் மட்டுமாவட்டதில் இயங்கிவரும் அரசு சேவைகள் ஆனாலும் சரி அரசார்ப்பற்ற நிறுவனங்களானாலும் சரி அதிகளவில் வெளி மாவட்டங்களில் இருந்து நியமனங்களைப் பெறுகின்றனர். இதன்போது கிழக்கு மாகாண இளைஞர்யுவதிகள் வெளிப்படையாக புறக்கணிக்கப்படுகின்றனர். இவ்வாறான நடவடிக்கைகளை பார்த்தும் பாராமலும் இராது உடனடியாக தடுத்து உள்ளூர் இளைஞர் யுவதிகளுக்கான வேலைவாய்ப்புக்களை முதலில் வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகளை தமிழ் அரசியல் தலைமைகள் முன்னெடுக்க வேண்டும் என்பதே கிழக்கின் இளைஞர் யுவதிகளின் வேண்டுகோளாக அமைகிறது. உதாரணமாக பாசிக்குடாவில் அமைக்கப்பட்டுள்ள உணவுவிடுதிகளில் உள்ளூர் இளைஞர் யுவதிகளுக்கு குறித்தளவு வேலைவாய்ப்பு வழங்கப்படாதது, அப்பகுதியைச் சேர்ந்தவர்களுக்குமட்டுமின்றி அங்கு பணிபுரிய நியமித்தவர்கள் தொடக்கம் அனைவரையும் வேதனையை ஆழ்த்தியுள்ளது. இதுதொடர்பாக உரியவர்களுடன் பல்வேறு முறைப்பாடுகளை முன்வைத்தும் எதுவித தீர்வும் எட்டப்படாத நிலையே காணப்படுகின்றது.

மேலும் 21ம் நூற்றாண்டு தகவல் தொழிநுட்ப யுகத்தில் விரல்நுனியில் உலகப்பந்தை வைத்து இயங்கும் நிலையில் வாழ்ந்து வருகின்றோம். ஆனால் இன்றும் இலங்கையில் அதிகஸ்டப்பிரதேசங்களில் வாழும் மக்கள் இதுவரையில் ஆரம்ப வளர்ச்சினையே கண்டிருக்கின்றனர். என்பதனை அவர்களுக்கூடான உரையாடலின் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது. இவ்வாறான போக்குகள் தற்போதைய அரசாங்கத்தில் கவனத்தில் கொள்ளப்பட்டு அதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். அவர்களும் தொழிநுட்ப யுகம் கண்டு புத்தெளிவுபெற வேண்டும். இவர்களுக்கான தொழிநுட்ப அறிவினை வழங்கி, அவர்களுக்கான தொழில் வாய்ப்பினை வழங்க இலங்கை தொழில் பயிற்சி அதிகார சபையின் ஊடாக உரிய செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். இதுவே தமிழ் அரசியல் தலைமைகள் உட்பட இலங்கை ஆட்சியாளர்களினதும் பிரதான கடப்பாடாக உள்ளது. இதனையே அனைத்து மக்களும் கோரி வருகின்றனர்.

**வடக்கு மற்றும் கிழக்கில் அபிவிருத்திக்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்ற போது உள்ளூர் இளைஞர், யுவதிகளுக்கான வேலைவாய்ப்பு நிராகரிக்கப்பட்டு வருகின்றது. இதனைத்தடுத்து அவர்களுக்கான உரிய வேலைவாய்ப்புக்களை வழங்குவதற்கு தமிழ் அரசியல் தலைமைகள் முனைப்புக்காட்ட வேண்டும். அதன் மூலம் வேலையற்றோர் வீதத்தையும் ஓரளவு குறைத்துக் கொள்ள முடியும். இன்று அதிகளவில் மட்டு மாவட்டத்தில் இயங்கிவரும் அரசு சேவைகள் ஆனாலும் சரி அரசசார்பற்ற நிறுவனங்களானாலும் சரி அதிகளவில் வெளி மாவட்டங்களில் இருந்து நியமனங்களைப் பெறுகின்றனர். இதன்போது கிழக்கு மாகாண இளைஞர், யுவதிகள் வெளிப்படையாகப் புறக்கணிக்கப்படுகின்றனர்**

# இரணைமடு குள அனர்த்தத்திற்கு பின்னால் இருக்கும் அரசியல்

அண்மையில் பெய்த மழையினால் வடக்கில் பெரும் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக கிளிநொச்சி மாவட்டம் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது.

கிளிநொச்சி மாவட்டத்தில் குறிப்பாக இரணைமடு குளத்தை அண்டிய கிராமங்களும் வயல் நிலங்களும் பெரிதும் பாதிக்கப்பட்டதற்கு மழை வெள்ளம் தான் காரணம் என சொல்ல முடியாது.

இரணைமடு குளத்தை வைத்து அரசியல் செய்வோரும், இரணைமடு குள முகாமைத்துவத்திற்கு பொறுப்பானவர்களும் தான் இந்த பாதிப்புக்களுக்கு காரணமானவர்கள் என்பது மூடிமறைக்கப்பட்டுள்ளது.

இரணைமடு குளத்தை பரிபாலனம் செய்யும் நீர்பாசன பொறியியலாளர்களும், கிளிநொச்சியில் உள்ள தமிழ் அரசியல்வாதி ஒருவருமே இந்த பாதிப்புக்களுக்கு பொறுப்பு கூற வேண்டும் என குற்றம் சாட்டப்படுகிறது.

இரணைமடு குளத்தை வைத்து அரசியல் செய்யும் தமிழ் அரசியல்வாதியின் சுயநல செயற்பாடே இந்த அனர்த்தம் நிகழ்வதற்கு காரணமாகும்.

இரணைமடு குளத்தை அண்டிய கிராமங்கள் பாதிக்கப்படுவதற்கு நீர்பாசன பொறியியலாளர்களின் நடவடிக்கைகளே காரணம் என சொல்லப்படுகிறது. மக்களை அழிவுக்குள் உள்ளாக்கி அரசியல் செய்ய நினைக்கும் தமிழ் அரசியல்வாதிக்கும்



**இரணைமடு குளத்தின் நீர்மட்டம் உயர்ந்து வருவதை அவதானித்து நீரை படிப்படியாக வெளியேற்றியிருந்தால் குளத்தின் வான் கதவுகள் அனைத்தையும் திறந்துவிட வேண்டிய அவசியம் வந்திருக்காது. இந்த அனர்த்தமும் ஏற்பட்டிருக்காது என இந்தப் பிரதேசத்தில் முன்னர் பணியாற்றிய சிரேஷ்ட நீர்ப்பாசன பொறியியலாளர் ஒருவர் தெரிவித்திருக்கிறார்**

இதில் தொடர்பிருக்கலாம் என சந்தேகப்படுவதை நிராகரிக்க முடியாது.

இரணைமடு குளத்தின் நீர் மட்டம் உயர்ந்து வருவதை அவதானித்து நீரை படிப்படியாக வெளியேற்றியிருந்தால் குளத்தின் வான் கதவுகள் அனைத்தையும் திறந்து விட வேண்டிய அவசியம் வந்திருக்காது. இந்த அனர்த்தமும் ஏற்பட்டிருக்காது என இந்த பிரதேசத்தில் முன்னர் பணியாற்றிய சிரேஷ்ட நீர்ப்பாசன பொறியியலாளர் ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

இதனை விசாரணை செய்வதற்காக வடமாகாண ஆளுநர் மூவர் அடங்கிய விசாரணைக்குழுவை நியமித்திருக்கிறார்.

யாழ் பல்கலைகழக பொறியியல் பீட சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சுப்பிரமணியம் சிவகுமார் தலைமையில் வடக்கு மாகாண பிரதி பிரதம செயலாளர் (பொறியியல்) எஸ்.சண்முகநாதன், வடக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர் சிவகுமார் ஆகியோர் அடங்கிய குழு இதனை விசாரணை செய்ய உள்ளது

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் ஏற்பட்ட அனர்த்தங்களுக்கும் மக்கள் எதிர்கொண்ட அவலங்களுக்கும் யார் குற்றவாளிகள் என்பதை கண்டறிய வேண்டும் என விடுக்கப்பட்ட கோரிக்கையை அடுத்து இக்குழு நியமிக்கப்பட்டிருக்கிறது.

இந்த குழுவின் விசாரணை அறிக்கை வெளிவரும் போது இந்த அனர்த்தத்திற்கு காரணமானவர்கள் யார் என்ற உண்மை வெளிவரலாம்.

இரணைமடுக்குள நீர் என்பது இப்போது அரசியல் மயப்படுத்தப்பட்ட ஒன்றாக மாறிவிட்டது.

இலங்கையில் 7வது பெரிய நீர்த்தேக்கமாக இரணைமடு உள்ளது. வடமாகாணத்தில் இருக்கும் மிகப்பெரிய குளமாக இரணைமடு குளம் விளங்குகிறது.

36 அடி உயரம் கொண்ட இக்குளத்தின் நீர் மட்டம் 40அடிக்கு மேல் உயர்ந்ததால் குளக்கட்டிற்கு மேலால் நீர் கட்டுக்கடங்காது வெளியேறி கிளிநொச்சியின் பெரும்பாலான பகுதிகள் வெள்ளக்காடாக மாறியிருக்கிறது.

இரணைமடு குளத்திலிருந்து மேலதிகமாக வெளியேறும் நீரை யாழ்.குடாநாட்டின் குடிநீர் தேவைக்கு பயன்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை நீண்டகாலமாக முன்வைக்கப்பட்டு வருகிறது.

ஆனால் கிளிநொச்சியின் குறுநில மன்னராக தன்னை காட்டிக்கொள்ளும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் அங்குள்ள விவசாயிகளை தூண்டி விட்டு யாழ் குடாநாட்டிற்கு நீரைத்தரமாட்டோம் என அரசியல் செய்து வருகிறார்.

**இரா.துரைரத்தினம்**
சுவிட்சர்லாந்து

இரணைமடுக் குளத்தின் மேலதிக நீரை யாழ்ப்பாணத்துக்கு திருப்பும் திட்டம் குறித்து விடுதலைப்புலிகள் காலத்திலும் ஆராயப்பட்டு அதனை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு அரசியல்துறை பொறுப்பாளர் தமிழ்செல்வன் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக கிளிநொச்சியில் அரசியல் துறை அலுவலகத்தில் ஒரு கூட்டமும் நடைபெற்றது. சமாதான காலத்தில் நடைபெற்ற இக் கூட்டத்தில் வெளிநாட்டு நிதி உதவியுடன் இதனை நடைமுறைப்படுத்துவது என்றும் இலங்கை அரசாங்கத்தின் அனுசரணையை பெற்றுக்கொள்வது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

இந்த கூட்டத்தில் அப்போது இருந்த நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். அனைவரும் இந்தத் திட்டத்தை ஒருமனதாக வரவேற்று தேவையான நடவடிக்கைகளை உடன் முன்னெடுப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

இதன் பின்னர் 2009ல் ஆயுதப்போராட்டம் முடிவுக்கு வந்த பின்னர் வடமாகாணசபையில் மக்கள் பிரதிநிதிகளின் நிர்வாகம் வந்த போது ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் இரணைமடு குளத்தில் மேலதிகமாக வெளியேறும் நீரை யாழ் குடாநாட்டின் குடிநீர் தேவைக்கு பயன்படுத்தும் திட்டம் முன்வைக்கப்பட்ட போது கிளிநொச்சியை தளமாக கொண்டு செயற்படும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கிளிநொச்சியில் உள்ள விவசாயிகளை தூண்டி விட்டு யாழ். குடாநாட்டிற்கு ஒரு சொட்டு நீரும் தரமாட்டோம் என போர்க்கொடி தூக்கினர்.

நீர் மேலாண்மை அடிப்படையில் குடிநீரும் விவசாயத்துக்கான பாசன நீரும் உரியமுறையில் பகிரப்பட வேண்டும். இதுவே தேசிய நீர்ப்பங்கீட்டுக் கொள்கையாகும். அத்துடன் நீர்த்தேக்கத்தைப் புனரமைத்து விரிவாக்கம் செய்து, அதிகளவு நீரைத் தேக்கிய பின்னரே குடிநீர் பெறப்படும். இதில் விவசாயிகளின் நலன் 100 சதவீதம் பாதுகாக்கப்படும் என யாழ்.பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீட சிரேஷ்ட விரிவுரையாளரும், முன்னர் இப்பிரதேசத்தில் நீர்பாசன பிரதம பொறியியலாளராகவும் இருந்த கலாநிதி எஸ்.சிவகுமார் கூறுகிறார்.

கிளிநொச்சி மக்களுக்குத் தேவையான நீரைத் தவிர மேலதிக நீரை இவ்வாறான சந்தர்ப்பத்திலேனும் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பும் திட்டம் இன்று நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால் கிளிநொச்சி மாவட்டம் இந்தளவு தண்ணீரில் மிதந்திருக்கவும் மாட்டாது.

இரணைமடு குளத்திலிருந்து வருடாந்தம் பெருமளவு நீர் வெளியேற்றப்பட்டு சுண்டிக் குளம் ஊடாக கடலுக்கு செல்கிறது. அண்மையில் அனர்த்தம் ஏற்பட்ட போது இரணைமடு குளத்தின் கொள்ளளவில் மூன்று மடங்கு நீர் திறந்து விடப்பட்டு கடலுடன் கலந்திருக்கிறது.

மேலதிகமாக வெளியேறும் நீர் யாழ்.குடாநாட்டிற்கு தாராளமாக போதுமானதாகும். ஆனால் கடலுடன் நீர் கலந்தாலும் பரவாயில்லை. யாழ். குடாநாட்டிற்கு நீரைத்தரமாட்டோம் என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் அரசியல்வாதி நீரில் அரசியல் செய்து கொண்டிருக்கிறார்.

வைக்கல் பட்டறை நாய் தின்பவர்களையும் விடாது என ஒரு பழமொழி சொல்வார்கள். அந்த நிலையில் தான் அந்த அரசியல்வாதி குறுநில மன்னராக செயற்பட்டு வருகிறார். அதுவே அந்த மக்களையும் இன்று அழிவுக்கு உள்ளாக்கியிருக்கிறது.

இந்த அரசியல்வாதியும் சரி, கிளிநொச்சி விவசாய அமைப்பு என சொல்பவர்களும் சரி கிளிநொச்சியை சேர்ந்தவர்கள் அல்ல. இந்த அரசியல்வாதி நெடுந்தீவிலிருந்து கிளிநொச்சியில் குடியேறியவர்தான். யாழ். குடாநாட்டிற்கு தண்ணீர் தரமாட்டோம் என போர்கொடி தூக்கும் கிளிநொச்சி விவசாய அமைப்பை சேர்ந்தவர்கள் அனைவரும் யாழ். குடாநாட்டிலிருந்தும் தீவுப்பகுதிகளிலிருந்தும் சென்று கிளிநொச்சியில் விஸ்வமடுவிலும் குடியேறியவர்கள் தான்.

இரணைமடு குளத்து நீரை யாழ்.குடாநாட்டிற்கு வழங்குவதற்கு கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் அமைப்பு எதிர்ப்பு தெரிவித்திருக்கிறார்கள். அந்த எதிர்ப்பை தெரிவிப்பதற்கு கிளிநொச்சி விவசாயிகளுக்கு உரிமை கிடையாது என்கிறார் யாழ்.பல்கலைக்கழகத்தின் புவியியல்துறை ஓய்வுநிலை பேராசிரியர் சிவச்சந்திரன்.

இரணைமடு குளம் கிளிநொச்சி மாவட்ட எல்லைக்குட்பட்டதல்ல. முல்லைத்தீவு மாவட்ட எல்லைக்குள் இரணைமடு குளம் உள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் நிலப்பகுதியில் உள்ள இந்த நீர்த்தேக்கத்துக்கு வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் இருந்து நீர் வருகிறது. ஆனால் இந்தக் குளத்தின் பாசனநீர் மற்றும் பயன்பாட்டு நீர் கிளிநொச்சி மாவட்டத்திற்கே செல்கிறது.

இரணைமடு குளத்தின் வரலாறு பற்றி ஆய்வு செய்த யாழ். பல்கலைக்கழக பொறியியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எஸ்.சிவகுமார் இரணைமடு குளம் பற்றி பின்வருமாறு கூறுகிறார்.

1912இல் தொடங்கி 1922இல் கட்டி முடிக்கப்பட்ட இந்த நீர்த்தேக்கம் அன்று பிரிட்டிஷ் ஆட்சியில் இலங்கை அரசியலில் செல்வாக்காக இருந்த சேர். பொன். இராமநாதனின் பரிந்துரையில் கட்டப்பட்டது. பின்னர் அது படிப்படியாக விரிவாக்கப்பட்டு இப்பொழுதுள்ள ஒரு லட்சத்து அறுபது ஆயிரம் ஹெக்டர் நீர்ப்பரப்பளவைப் பெற்றுள்ளது.



1920 ல் 19 லட்சத்து 4 ஆயிரம் ரூபா செலவில் இரணைமடு முதல் கட்டமாக முழுமையாக்கப்பட்டது. அப்போது இரணைமடுவின் கொள்ளளவு 44 ஆயிரம் ஏக்கர் அடி, ஆழம் 22 அடி. 1954ல் இரண்டாம் கட்டக் கொள்ளளவு அதிகரிப்பு நடைபெற்றது. அப்போது கொள்ளளவு 82 ஆயிரம் ஏக்கர் அடியாகும். இதன்மூலம் குளத்தின் நீர்மட்ட



**இரணைமடுக் குளத்திலிருந்து மேலதிகமாக வெளியேறும் நீரை யாழ்.குடாநாட்டின் குடிநீர் தேவைக்குப் பயன்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை நீண்டகாலமாக முன்வைக்கப்பட்டு வருகிறது. ஆனால் கிளிநொச்சியின் குறுநில மன்னராக தன்னைக் காட்டிக் கொள்ளும் தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் அங்குள்ள விவசாயிகளைத் தூண்டிவிட்டு யாழ்.குடாநாட்டிற்கு நீரைத் தரமாட்டோம் என அரசியல் செய்து வருகிறார்**

ஆழம் 30 அடியாக உயர்த்தப்பட்டது. 3 ஆம் கட்டமாக கொள்ளளவு அதிகரிப்பு 1975ல் நடைபெற்றது. 1977ல் முழுமையடைந்த அக்கொள்ளளவு அதிகரிப்பின்போது இரணைமடுவின் கொள்ளளவு 1 லட்சத்து 6500 ஏக்கார் அடியாக அதிகமானது. ஆழம் 34 அடியாகும்.

1977ல் முடிவடைந்த இந்தப்பணிக்குப்பின் இரணைமடு முழுப் புனரமைப்புக்கு இதுவரை உட்படுத்தப்படவில்லை. 1977ல் தான் இப்போதுள்ள வான் கதவுகள் கொண்ட தோற்றத்தை இரணைமடு பெற்றது. 227 சதுரமைல்கள் நீரேந்து பரப்புக்கொண்ட இரணைமடு கனகராயன் ஆறு, கரமாரி ஆறு என இரு ஆறுகளின் மூலம் நீரைப் பெறுகின்றது. 9 கிலோ மீற்றர் நீளம் கொண்டது. இதன் அணை 2 கிலோ மீற்றர் நீளமுடையது. இதன்மூலம் 20 882 ஏக்கர் நிலப்பரப்பு பயன்பெற்றுள்ளது.

இரணைமடு நீர்த்தேக்கத்திலிருந்து யாழ்ப்பாண மாவட்டத்துக்கான குடிநீர் விநியோகத்தைச் செய்வதற்கு திட்டமிடப்பட்டது. ஆனால் இதற்கு கிளிநொச்சி மாவட்டத்தில் எதிர்ப்புக் கிளம்பியிருக்கிறது. இந்த எதிர்ப்பை கிளிநொச்சியில் உள்ள இரணைமடு நீர்த்தேக்கத்தின் கீழ் பயிர் செய்யும் விவசாயிகள் முன்னெடுத்து வருகிறார்கள். இதற்கான பின்னணியில் உள்ளூர் அரசியல்வாதிகள் சிலர் இயங்குகிறார்கள். குறிப்பாகத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த அரசியல்வாதிகளில் சிலர் எதிர்ப்பு அலையை உருவாக்கி வருகிறார்கள்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் வலிகாமம் மேற்கு, வடமராட்சி, தீவகம், தென்மராட்சி, யாழ்ப்பாண நகர் போன்ற இடங்களில் நீர்ப்பிரச்சனை உண்டு. இங்கே நல்ல தண்ணீரைப் பெறுவதற்காகத் தலைமுறை தலைமுறையாக மக்கள் பெரும் சிரமப்பட்டு வருகிறார்கள். இதற்குத் தீர்வுகாணும் நோக்கில் இரணைமடு நீர்த்தேக்கத்தில் இருந்து யாழ்ப்பாணத்துக்கான குடிநீரை மட்டும் பெறும் திட்டம் உருவாக்கப்பட்டது. திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதிக்கடன் திட்டத்தின்கீழ் இரண்டு ஆயிரத்து முன்னூறு கோடி இலங்கை ரூபாய்கள் ஒதுக்கப்பட்டன. ஆனால் தமிழ் அரசியல்வாதியின் தூண்டுதலின் பேரில் கிளிநொச்சி விவசாயிகள் எதிர்ப்பு தெரிவித்ததால் இத் திட்டம் தற்போது கிடப்பில் போடப்பட்டுள்ளது

இந்தத் திட்டத்தின் நோக்கம் - இப்போதுள்ள நீர்த்தேக்கத்தை மேலும் விரிவுபடுத்தி, அணைக்கட்டை மேலும் உயர்த்தி அதிகளவு நீரைத் தேக்குவதாகும். அப்படித் தேக்கப்படும் கூடுதலான நீரில் இருந்து 12 சதவீதம் நீரை மட்டுமே யாழ்ப்பாணத்தின் குடிநீர்த் தேவைக்காகப் பயன்படுத்துவதாகும்.

இந்நிலையில் கடந்த முப்பது ஆண்டுகளாக புனரமைப்புச் செய்யப்படாத நிலையில் இந்த நீர்த்தேக்கம் உள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் பாசன நீர், கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணத்திற்கான குடிநீர்ப் பிரச்சனைகள் நீக்க இத்திட்டம் நிறைவேறுவது

13 ஆம் பக்கம் பார்க்க....

# புதிய அழிவுப்பாதையை நோக்கி நகர்கிறதா இலங்கை?

**போதைப்பொருள் விற்பனையில் தொடர்புடையவர்களாக வசதி, வாய்ப்புக்களை உடைய சிலரே இருக்கின்றனர் என்பதும் பலரின் கருத்தாகவிருக்கின்றன. பணத்தினை இலகுவாகவும், அதிகமாகவும் சம்பாதிப்பதற்கு இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். இவற்றோடு நின்றுவிடாது திட்டமிட்டு சமூக ஒழுக்கத்தோடு இருக்கின்ற சமூகத்தினை சீர்குலைக்கும், அழிக்கும் சிந்தனையுடனும் போதைப்பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றமையே விசனத்துக்குரியதாகும்**

இலங்கை நாட்டினை அந்நியரிடமிருந்து கைப்பற்றுவதற்காக நாட்டில் இருந்த அனைத்து இனத்தவர்களும் குறிப்பாக சிங்களமொழி பேசுகின்றவர்களும், தமிழ்மொழிபேசுகின்றவர்களும் அயராது உழைத்தனர். உழைப்பின் பயனால் 1948ல் இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்தது. சுதந்திரத்தினைப் பெற்ற இலங்கை நாட்டினர் அனைவரும் அச்சுதந்திரத்தினை மகிழ்ச்சியாக ஒவ்வொருவருடமும் கொண்டாடி வருகின்றனரா என்ற கேள்வியும் உள்ளது. சுதந்திரம் பெற்றதன் பின்னர் இலங்கை நாடு ஒரு சிறிய தீவாக இருக்கின்றமையினால் விரைவில் வளர்ச்சிகாணும் என அனைவரும் எண்ணினர். அதற்கேற்றால்போல் கொழும்பு தலைநகரிலும் பல்வேறுமாற்றங்கள் ஏற்பட்டன. ஆனால் துரதிஸ்டம் இன்றுவரை அபிவிருத்தியடைந்த நாடாக இலங்கை மாறவில்லை.

**முனையூரான்**

நாட்டிற்குள்ளே காணப்பட்ட புரிந்துணர்வு இன்மையும், சமத்துவம், சமஉரிமை பேணப்படாமையும் உள்நாட்டு போராட்டங்களை ஏற்படுத்தியது. இப்போராட்டங்கள் அகிம்சைவழிப்போராட்டமாகவும், ஆயுதவழிப்போராட்டமாகவும் நடைபெற்று இன்றுவரை ஓயாது, அரசியல் போராட்டமும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. இப்போராட்டங்களிலே பல்லாயிரக்கணக்கான மனித உயிர்கள் பலியெடுக்கப்பட்டுள்ளன. அதேபோன்று எண்ணிலடங்காத சொத்துக்கள் அழிக்கப்பட்டிருக்கின்றன. இதனால் இன்றுவரை அபிவிருத்தி காணாத, மனிதநேயமும் இல்லாத, சமஉரிமை வழங்கப்படாத நாடாக இலங்கை உள்ளது. அதேவேளை நாளுக்கு நாள் பல்வேறு பிரச்சினைகளையும் எதிர்கொண்டுவருகின்றது. நாட்டுக்குள்ளே உள்ள பிரச்சினைக்கு தீர்வுகாணப்படாத சூழலில், அதுபற்றியதாக பேசிக்கொண்டிருக்கின்ற சந்தர்ப்பத்தில், பிறநாடுகளில் இருந்து போதைப்பொருட்கள் இலங்கைக்குள் கடல்வழி மார்க்கமாகவும், வான்வழிமார்க்கமாகவும் சட்டவிரோதமாக கொண்டுவரப்படுகின்றன. இது நாட்டிற்கு பாரிய சிக்கலையும் ஏற்படுத்தியிருக்கின்றது.

சட்டவிரோத செயல்களில், போதைப்பொருள் விற்பனையும் அதனைப் பயன்படுத்துவோர் பட்டியலுமே நாட்டினைப் பெரிதும் பாதிக்கின்ற விடயங்களாக அமைந்திருக்கின்றன. மதுபானம், புகையிலை, அபின், ஹெராயின், கஞ்சா, பான் மசாலா, போதை தரும் இன்ஹேலர்கள் என பல போதைப்பொருள் வகைகள் காணப்படுகின்றன. இவ்வாறான போதைப்பொருட்கள் தனிமனிதன், குடும்பம், சமுதாயம் என பல வகைகளிலும் பாதிப்புகளை ஏற்படுத்தி நிற்கின்றன. உலகிலே பலவகையான போதைப்பொருட்கள் உள்ள நிலையிலும், இலங்கையில் 648 க்கும் அதிகமான போதைப்பொருட்கள் பாவனையில் உள்ளதாக ஜனாதிபதி போதைப்பொருள் தடுப்பு சிறப்பு பிரிவு பணிப்பாளர் சமந்த குமார குறிப்பிட்டிருந்தார். இக்கருத்திற்கமைய இலங்கை நாடு பாரிய சிக்கலுக்குள் அகப்பட்டிருக்கின்றது என்பதனை உணரமுடிகின்றது. யுத்தத்தின்


கோப்புப்படம்

பின்னரான காலப்பகுதியிலேயே அதிகளவிலான போதைப்பொருட்கள் இலங்கைக்குள் ஊடுவி இருப்பதாகவும் கூறப்பட்டு வருகின்றது. இனங்களின் அழிப்புக்கு போதைப்பொருளும் முக்கிய பங்கு வகிக்கின்றது. சாதாரண மதுவிற்கே பலர் அடிமையாகி மீண்டுவர முடியாதவர்களாக இருக்கின்றனர். இதனால் பல குடும்பங்கள் பிரிந்தும் வீதிக்கும் வந்துள்ளது. அதேவேளை குடும்பத்தில் தொடர்ந்தும் பிரச்சினைகளையே உருவாக்கி வருகின்றது. அதைவிடவும் மிகவும் மோசமானதொன்றாக போதைப்பொருட்கள் பார்க்கப்படுகின்றன. இதனால் நேரடியாகவின்றி மறைமுகமாகவும் பாடசாலையினை சுற்றியுள்ள சூழல்களிலும் விற்கப்படுகின்றமை மிகவும் ஆபத்தான செயலாகும்.

இவ்வருடத்தின் முதல் ஏழுமாத காலப்பகுதிக்குள் போதைப்பொருட்களுடன் 48,129 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 19,441 பேர் ஹெரோயினுடன் கைதுசெய்யப்பட்டிருந்தனர். சந்தேகநபர்களிடமிருந்து 173 கிலோ 319 கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், 2,975 கிலோகிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்டவர்களில் வெளிநாட்டைச் சேர்ந்த 22 பேரும் அடங்கியிருந்தனர். அண்மைக்காலமாகவும் பல்வேறு இடங்களில் போதைப்பொருட்கள் மீட்கப்பட்டிருந்தன.

யாழ்ப்பாணம் - வல்வெட்டித்துறை கடற்கரையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த சுமார் 30 மில்லியன் ரூபா பெறுமதியான, 90 கிலோ கேரளக்கஞ்சா, 04 கிலோ அபின் மற்றும் 04 கிலோ ஹஷிஸ் போன்றன கைப்பற்றப்பட்டிருந்தன. பொரல்லை மற்றும் பேலியகொட பகுதிகளில் 2 கிராம் 400 மில்லிகிராம் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டிருந்தது. இரத்மலானை பகுதியில் 31 கிலோ கிராம் அளவிலான ஹெரோயின் மீட்கப்பட்டது. பிலியந்தலை பகுதியில் 71 வயதானவரிடமிருந்து 700 கிரேம் போதைப்பொருள் மீட்கப்பட்டது. கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து சந்தேக நபரிடமிருந்து 36 இலட்சத்துக்கும் அதிக பெறுமதியுடைய போதைப்பொருள் மீட்கப்பட்டது. பேலியகொட துட்டுகெமுனு மாவத்தையில் 425 மில்லி கிரேம் அயிஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டிருந்தது. யாழ்பாணத்தில் இருந்து திருமலைக்கு கடத்திச்செல்லப்படவிருந்த சுமார் 1600 போதை மாத்திரைகளை ஓமந்தை பொலிசார் கைப்பற்றியிருந்தனர். 13 மில்லியன் ஷரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப்பொருளுடன் பாதுக்கை பகுதியில் 1.1 கிலோ கிராம் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டிருந்தது. மூன்று கோடி ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப்பொருளுடன் பாகிஸ்தான் பிரஜையொருவர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் கைதுசெய்யப்பட்டிருந்தார். கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு போதைப்பொருள் கடத்தும் நடவடிக்கையில் நீண்டகாலமாக ஈடுபட்டு வந்த நபர் ஒருவரை கலேவல பொலிஸார் கைது செய்திருந்தமையுடன் அவரிடமிருந்து 25.25 கிராம் ஹேரோயின் போதைப்பொருள் கைப்பற்றபட்டது. இவ்வாறு நாட்டின் பலபகுதிகளிலும் நாளுக்கு நாள் போதைப்பொருட்கள் மீட்கப்படுகின்றன. இவ்வாறு நாள்தோறும் மீட்கப்படுகின்றமை இலங்கைநாட்டிற்கு அச்சுறுத்தலினை ஏற்படுத்துவதாக கூட பார்க்க முடியும்.

அதிகமான போதைப்பொருட்கள் வெளிநாடுகளிலிருந்தே நம்நாட்டிற்குள் நுழைகின்றன. விமானநிலையத்தின் ஊடாக சுங்கத்திணைக்கள அதிகாரிகளையும் கடந்து நாட்டிற்குள் நுழைகின்றமை வேதனையானதும், வேடிக்கையானதுமான விடயமே. போதைப்பொருட்களுக்கு அடிமையாகின்றவர்களாகவும், விற்பனை செய்கின்றவர்களாகவும் இளைஞர்களே காணப்படுகின்றனர். போதைப்பொருட்கள் இலங்கையின் பல பாகங்களிலும் சட்டவிரோதமாக விற்கப்படுவதுடன், வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் விற்கப்பட்டு வருகின்றன. மாணவர்களை இலக்குவைத்தும் போதைப்பொருள் வியாபாரம் நடைபெறுகின்றது. மாணவர் சமுகத்தினை இலக்குவைப்பதன் மூலமாக மாணவர்களை போதைக்குள் உள்வாங்கி அவர்களை அதற்கு அடிமைகளாக்கி நாட்டிலே பிரச்சினைகளையும், துஸ்பிரயோகங்களையும் ஏற்படுத்தி நாட்டினை சீர்குலைக்கும் நோக்கிலேயே இவ்வாறான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றது என பார்க்கமுடியும். இதன்மூலமாக பாரிய ஆபத்தான விளைவுகளை நாடு சந்திக்க நேரிடும்.

போதைப்பொருள் சட்டவிரோதமாக நாட்டிற்குள் நுழைவதனை தடுப்பதற்கு பாரிய வேலைத்திட்டங்களை தற்போதைய அரசுமேற்கொள்ள வேண்டியுள்ளது. அதற்கமைவாக சில திட்டங்களை முன்னெடுத்தும் வருகின்றது. குறிப்பாக போதைப்பொருளுக்கு அடிமையானவர்களுக்கு

13 ஆம் பக்கம் பார்க்க....





# தமிழர்களின் எதிர்காலமும் மாற்றத்தினை விரும்பாத கூட்டமைப்பும்

**நக்கீரர்**

**தமிழ்தேசிய கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகளும் அடங்கிய குழுவினால் இந்த விவகாரங்கள் கையாளப்பட வேண்டும். எதிர்காலத்தில் எது சாத்தியம் எது சாத்தியமற்றது என்பதனை அவர்கள் முதலில் கூட்டாகவிருந்து விவாதிக்க வேண்டும். பின்னர் தமிழ் மக்களுக்கு அவற்றினைத் தெளிவுபடுத்த வேண்டும். அரசியல் இலாபங்களுக்காக, சுகபோகங்களுக்காக மட்டும் தமக்கு பதவி வேண்டும் என்ற நிலைப்பாட்டில் தொடர்ந்து இருப்பார்களேயானால் அவர்களை நம்பியுள்ள தமிழர்களின் வாழ்விலும் எந்த மாற்றமும் நடக்கப்போவதில்லை**

இன்றைய அரசியல் உலகில் மனித உரிமைகள் என்பது முற்றிலும் அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளது. எவருடைய மனித உரிமைகள் முக்கியத்துவம்பெறுகின்றது,எவருடைய மனித உரிமைகள் நிராகரிக்கப்பட வேண்டும்என்பதனை அரசியலே தீர்மானிக்கின்றது. மிக



மோசமான பெண் ஒடுக்குமுறை, சிறுபான்மை மீதான ஒடுக்குமுறை, கருத்துச்சுதந்திரம் மறுப்பு நியாயமற்ற நீதித்துடிறையும் மோசமான மரண தண்டணைகளும் என்றே மனித உரிமைகளின் பட்டியலில் முன்னணியில் திகழும் சவுதிஅரேபியா ஐக்கியநாடுகள் சபையின் மனித உரிமைகள் கவுன்சிலின் தலைமையை ஏற்றுக்கொள்ளும் போது மனித உரிமைகளும் மக்கள் பிரச்சினைகளும் கேலிக்கூத்தாடப்படுகின்றதாகவே எண்ணத்தோன்றுகின்றது.

இலங்கை அரசு சுதந்திரம் அடைந்ததும் ஆரம்ப கட்டத்தில் மலையக தமிழர்களின் பிராஜாவுரிமையைப்பறித்து இலட்சக்கணக்கான மக்களின் அடிப்படையை உரிமையை மீறியது. அன்றுமுதல் இலங்கையில் காலத்துக்கு காலம் தொடர்ச்சியாக சிறுபான்மை இனங்களின் மனித உரிமைகள் மீறப்பட்டே வந்துள்ளன. இறுதிக்கட்ட வன்னி யுத்தம் இந்த மனிதஉரிமை மீறல்களின் உச்சக்கட்டம்என்றே கருதலாம்.

இந்நிலையில்தற்போதைய அரசின் அபிவிருத்தி உட்பட சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளை தீர்க்கும் செயற்பாடுகள் குறித்து தமிழ்பேசும் மக்கள் திருப்தி அடையாத நிலையில் நாட்டின் பல பாகங்களில் இருந்தும் பல்வேறு தரப்பினர். பல்வேறு விமர்சனங்களை முன்வைத்து வருகின்றனர். இந்த நிலை மாற்றமடைந்து நாட்டு மக்கள் அனைவர் இடத்திலும் புரிந்துணர்வு ஏற்பட வேண்டும்என்பதே இன்று அனைத்து மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

இதுதொடர்பானக விழிப்புணர்வுகள் பொதுமக்கள் மத்தியில் ஏற்பட்டால் மாத்திரமே அது தேசிய இன ஒற்றுமைக்கு வழிவகுக்கும் எனினும் தற்போதைய மைத்திரி -ரணில் அரசாங்கம் தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்கம் என்பவற்றிற்கு முன்னிருமையளித்து வருகின்றது. எனினும் அவை மக்கள் மத்தியில் சரியாக ஊடாடப்படுகின்றதா?,அவற்றினால் அம்மக்களது பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு கிடைக்கின்றதா? என்பது கேள்விக்குறியாகவே அமைந்துள்ளது. பல இனங்களை, மதங்களை கொண்ட எமது நாடு அரசியலில் ஸ்திரமாக இருந்தால்தான் நிலையான நீடிக்கும் அபிவிருத்தியை நாட்டில் முன்னெடுக்கும் போது அதன் முன்னேற்றகரமான இலக்குகளை அடைய வழிகோலும் அதுவே இலங்கை அரசியலில் நிதர்சனமும் கூட.

கடந்த மூன்று தசாப்த காலமாக சிறுபான்மையினருக்கும், பேரினவாதத்தினருக்கும் இடையே இடம்பெற்ற உரிமைப் போராட்டத்தில் பல இலட்சக்கணக்கான உயிர்களை இந்நாட்டு மண், தமக்கு இரையாக்கி கொண்டதே மீதமானது. தொடர்ந்து யுத்தத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து, சமதானத்தினை நிலைநாட்ட வேண்டிய தருணத்திலும் நாட்டில் பல்வேறு இனவிசமிகளால் சிறுபான்மையினத்தின் குரல் மற்றும் உரிமைகள் நசுக்கப்பட்டே வந்தன. இவை நாம் அறிந்ததொரு விடயமே. எனினும், இதுவும் கடந்துபோகும் என்பதில் மாறாத நம்பிக்கை கொண்டு தமிழ் பேசும்மக்கள் மாற்றத்தினைக்காண காத்திருந்தனர். அம்மாற்றத்திற்கான ஒருபடைப்பே கடந்த 2015 உருவான நல்லாட்சி அரசாங்கம் எனக்கூறலாம்.

இந்நிலையில் கடந்த மூன்றரை வருடங்களாக நல்லாட்சி குறித்து பல்வேறுதரப்பினராலும், பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்ற நிலையில், குறிப்பாக கிழக்கு மாகாண அரசியல் தலைமைகளின் பொறுப்பற்ற செயற்பாடுகள் குறித்து மக்கள் வேதனைக்குள்ளாகி வருகின்றனர். குறிப்பாக தமிழ்மக்களின் நம்பிக்கைக்கு பாத்திரமான தமிழ்தேசிய கூட்டமைப்பின் செயற்பாடுகள், நடவடிக்கைகள் குறித்து தமிழ் மக்கள் அதிருப்தி நிலையையே அடைந்துள்ளனர். இந்நிலை உருவாவதற்கு தமிழ்தேசிய கூட்டமைப்பின் பல்வேறு நடவடிக்கைகளை இங்கு சுட்டிக்காட்டலாம்.

இதனடிப்படையில் மக்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வுத்திட்டமொன்றினை தற்போதைய அரசாங்கம் வழங்கும் என தமிழ்தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் தெரிவித்து வருகின்றார். அதேவேளையில் வடக்கு கிழக்கு இணைப்பில்லாத தீர்வினை ஒரு போதும் ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்றும் அவர் கூறுகின்றார்.

அவரது இந்தக்கருத்துக்கள் ஒன்றுக் கொன்று முரண்பாடானதாகவும் தமிழ் மக்களை மேலும் தமிழ்மக்களை குழப்புவதுமாகவே இற்றைவரை அமைந்துள்ளது.

2016ல் தீர்வு நிச்சயம் என்று தெரிவித்துவந்த அவர், கடந்த 2017லில் தீர்வு வரும் என்றே கூறினார். தற்போதைய 2018ம் ஆண்டும் முடிவடைய ஒருதினம்தான் உள்ள நிலையில் எதிர் வரும் 2019ம் ஆண்டு தமிழ் மக்களுக்கு எந்தக்கருத்தினைக்கூறி ஏமாற்றி குழப்பப்போகின்றார் என்பதே தமிழ்மக்கள் மத்தியில் எழுந்துள்ள வினாவாகும். இதுகுறித்து அண்மையில் ஊடகவியாலளர்கள் அவரிடம் வினா எழுப்பிய போது அரசாங்கம் வழங்கிய நம்பிக்கை வாக்குறுதியை வைத்துதான் தான்அவ்வாறு கூறியதாகவும் ஆனாலும் 2016ல் முன்னேற்றகரமான பல நடவடிக்கைகள் பல நடைபெற்றுள்ளதாகவும் அவை 2017லும் 2018லும் தொடர்ந்துள்ளதாகவும் தெரிவித்திருந்தார்.

அரசாங்கம் வழங்குவதாக கூறும் தீர்வுத்திட்டம் எவ்வாறு அமையும். எவ்வாறான அதிகாரங்கள் வழங்கப்படும். சமஸ்டி வடக்கு கிழக்கு இணைப்பு என்பன சாத்தியமானதா? என்பதெல்லாம் தமிழ்தலைமை சம்பந்தர் ஐயாவிற்கு தெரியாமல் இருக்கப்போவதில்லை. தமிழ் தலைமைசம்பந்தருக்கும் இவ்விவகாரங்களில் இணையாகச்செயற்படும் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனுக்கும் தெரியும் என்பது மக்களுக்கும் வெளிச்சம்.

அண்மையில் தமிழ்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் வெளிப்படையாக இவ்விடயம் தொடர்பில் கருத்துவெளியிட்டிருக்கின்றார். தீர்வுத்திட்டத்தில் வடகிழக்கு இணைப்பு இல்லை. தீர்வுத்திட்டத்திற்கான வார்த்தைப்பிரயோகமும் இல்லை. என அவர்கூறியுள்ளார். உத்தேச அரசியல் யாப்பில் 13வது திருத்தச்சட்டத்தினை ஒத்தவகையில் அதிகாரங்கள் பகிரப்படுகின்ற அதேவேளை அதில் காணப்படுகின்ற பொதுப்பட்டியல் நீக்கப்படுவதுடன், வடக்கு கிழக்கு இணைப்பு என்பது முஸ்லமும் மக்களின் நம்பிக்கையைப் பெறும் வரை சாத்தியமாகாதென அவர் தெரிவித்துள்ளார். ஆனால் அதிகாரங்களை மீள பறித்தெடுக்க முடியாத வகையிலான சட்டஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டு எந்தவொரு சமுகத்தினையும் பாதிக்காத முழுமையான அதிகாரப்பகிர்வாக அமையும் வகையிலேயே உருவாக்கப்படுகின்றது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



இவ்வாறான உண்மைகளை மக்களுக்கு உண்மையாகவும் வெளிப்படையாகவும் தெளிவாகவும் வெளிப்படுத்துவது அவசியமானதாகும். இவ்விடயத்தில் ஓரளவிற்காவது, வெளிப்படையாக கருத்துக்களை முன்வைக்கும் தமிழரசுகட்சியைப் பாராட்டலாம். சமஸ்டி ஆட்சியை தமிழருக்கு வழங்கி நாட்டினை பிளவுபடுத்த மைத்திரி - ரணில் அரசாங்கம் திட்டமிட்டுள்ளதென தென்னிலங்கை மக்கள் மத்தியில் கடந்த அரசாங்கத்தின் அணியினர் கடுமையான பிரசாரத்தினை முன்னெடுத்து வந்தமை குறிப்பிடத்தக்கது. மறுபுறம் சம்பந்தகும், சுமந்திரனும் அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலுக்கு அமைய செயற்பட்டு தமிழ் மக்களுக்கான அதிகாரங்களை விட்டுக்கொடுத்துவிட்டார்கள் என்று தமிழ்தேசிய முன்னணி தலைவர் கஜேந்திரகுமார், முன்னாள் பாராளுமன்ற



உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரரன் போன்றோரின் தரப்பினர் தமிழ் மக்கள் மத்தியில் பிரசாரம் செய்து வருகின்றனர்.

தான் ஆட்சியில் இருக்கும் வரை நாட்டில் சமஸ்டி ஆட்சியை ஏற்படுத்தவோ,நாடடை பிளவுபடுத்தவோ ஒருபோதும் இடமளிக்கபோவதில்லையென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். பிரதமர் ரணிலும் இவ்வாறே தெரிவித்திருக்கின்றார். தமிழ்தலைமைகளும் இதன்போது சாத்தியமான தீர்வு எதுவென்பதனை தமிழ்மக்களிடம் வெளிப்படுத்த வேண்டும். எது சாத்தியமானது. எவ்வாறானதொரு தீர்வு கிடைக்கும் என்பதை தெரிந்திருந்தும் ஒரு சந்தர்ப்பத்தில் தீர்வு நிச்சயம் கிடைக்கும் என்றும் மற்றுமொரு சந்தர்ப்பத்தில் சமஸ்டி வடக்கு, கிழக்கு இணைப்பு இல்லாத தீர்வை ஏற்கமாட்டோம் என்றும் கூறிக்கொண்டிருப்பதென்பது.

எவ்விதத்தில் நியாயம் எனக்கேட்க தோன்றுகின்றது.

இந்நிலையில் தமிழ்தேசிய கூட்டமைப்புக்கு எதிரான கருத்து நிலைப்பாட்டை கொண்டிருக்கும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தரப்பினரும் தமிழ் தேசிய கூட்டமைப்பில் முன்னர் அங்கம் வகித்த சுரேஸ்பிரேம்மசந்திரனும் இன்று சம்பந்தன் மற்றும் சுமந்திரனுக்கும் தமிழர்களின் துரோகிகள் எனப்பட்டம் சூட்டிவருகின்றனர். கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தினை விடவும், சுரேஸ்பிரேம்மசந்திரன் இதில் தீவிரமாக உள்ளார் என்பதை அவரது பேச்சுக்களும், செயற்பாடுகளுமே உணர்த்தி வருகின்றது.

ஆனால் தமிழ் மக்களுக்கான தீர்வுத் தொடர்பில் பேச்சுவார்த்தைகள் என்று வரும்போது, சம்பந்தனும்,சுமந்திரனும் மட்டும் அவற்றில் கலந்து கொள்வதனாலேயே இவ்வாறான எதிர்ப்புக்கள் துரோகிப்பட்ட சிக்கல்கள் ஏற்படுகின்றன. இதனைக்கூட்டுப்பொறுப்பில் செயற்படுத்திகின்ற போது உள்ளே ஏற்படுகின்ற எதிர்ப்பபுக்களை தவிர்த்துக்கொள்ளலாம் என்பது ஒருசாராரின் கருத்தாக அமைந்துள்ளது.

எது எவ்வாறு இருப்பினும் தற்போதைய அரசாங்கத்தால் தமிழ்தேசிய கூட்டமைப்புக்கு வழங்கப்பட்டுள்ள நிதிவரவுகள் உரியமுறையில் மக்களின் நலனுக்காக கொண்டுசெல்லப்படுவதில்லை.என்ற குற்றச்சாட்டு மக்கள் மத்தியில் நிலவுகின்றது. மக்களின் நலனுக்காக மற்றும் பிரதேச அபிவிருத்திகளுக்காக ஒதுக்கப்படுகின்ற நிதிமூலங்கள் குறிப்பிட்ட சில அரசியல்பிரதிநிதிகளால் மோசடிக்குள்ளாக்கப்பட்டு வருகின்றன. இதனால் மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம் மக்கள் செறிந்துவாழும் பிரதேசங்களான ஓட்டமாவடி, ஏறாவூர், காத்தான்குடி முதலான பிரதேசங்களைத்தவிர்த்து ஏனையபிரதேசங்கள் அபிவிருத்திப்பணியில் முடங்கிய நிலையிலேயே காட்சியளிக்கின்றது. இதனைக்குறித்த பிரதேசங்களை அவதானிக்கின்ற போதும், அப்பிரதேச மக்கள் பிரதிநிதிகளின் செயற்பாடுகளை அவதானிக்கும் போதும் நன்கு புலப்படும் எடுத்துக்காட்டாக முஸ்லிம் பிரதிநிதிகள் தம் இனம்சார்ந்து மிகுந்த அக்கறையுடன் உள்ள அதேவேளை அவர்களின் எதிர்காலம் குறித்து அன்றாடம் சிந்திப்பவர்களாவே காணப்படுகின்றார்கள்.

ஆனால் தமிழ் மக்கள் பிரதிநிதிகள் தமிழ்மக்களின் நலனிலோ தம் இனம்சார்ந்த வேலையில்லாப்பட்டதாரிகளின் எதிர்காலம் கருதியோ சற்றேனும் சிந்திக்காத வெறுமனே பணத்திற்காகவும், பதவிக்காகவும் தங்களது சுகபோகங்களுக்காவும், சுய இலாபங்களுக்காகவும் மாத்திரம் அரசியல் நடாத்துகின்றனர். என்றே எண்ணத்தோன்றுகின்றது.

எனவே தமிழ் மக்களின் எதிர்காலம் கருதி வடக்கு கிழக்கு இணைப்பு என்பதனை தனியே வடக்கு அரசயில் வாதிகள் மட்டும் பேசிக்கொண்டிருக்க முடியாது, கிழக்கிலும் தமிழ்பேசும் அரசியல்வாதிகளினால் பேசப்பட வேண்டும். முஸ்லிங்களை இணங்க வைப்பதுமட்டும்தான் வடக்கு கிழக்கு இணைப்புக்கு வழியென்று கூற முடியாது. கிழக்கில் உள்ள தமிழர்கள் வடக்குடன் இணைய இன்றைய சூழ நிலையில் இணங்குவார்களா? அல்லது விரும்புவார்களா? என்பதனையும் ஆராய வேண்டும்.

தமிழ் பிரதேசங்களுக்கான அதிகாரப்பகிர்வு சிறந்தாக அமைய வேண்டும் என்பது தமிழ்தேசிய கூட்டமைப்பு உறுதியாக தமது காய்களை நகர்த்த வேண்டும். வடக்கு கிழக்கு இணைப்பு என்பதோ, சமஸ்டி என்ற பெயரினை பயன்படுத்துவதோ சாத்தியமில்லையென்றால் அதனை பகிரங்கமாக தமிழ் அரசியல் தலைமைகள் தமிழ் மக்களிடம் கூறுவதுதான் எதிர்கால அரசியலுக்கு ஆரோக்கியமானதாகும்.

அத்துடன் தமிழ்தேசிய கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் அனைத்து கட்சிகளின் பிரதிநிதிகளும் அடங்கிய குழுவினால் இந்த விவகாரங்கள் கையாளப்பட வேண்டும். எதிர்காலத்தில் எது சாத்தியம் எதுசாத்தியமற்றது என்பதனை அவர்கள் முதலில் கூட்டாகவிருந்து விவாதிக்க வேண்டும். பின்னர் தமிழ்மக்களுக்கு அவற்றினை தெளிவுபடுத்த வேண்டும். அரசியல் இலாபங்களுக்காக, சுகபோகங்களுக்காக மட்டும் தமக்கு பதவிவேண்டும் என்ற நிலைப்பாட்டில் தொடர்ந்து இருப்பார்களேயானால் அவர்களை நம்பியுள்ள தமிழர்களின் வாழ்விலும் எந்த மாற்றமும் நடக்கப்போவதில்லை.

இவை எல்லாவற்றிக்கும் மேலாக எதிர்வரும் ஆண்டுகளில் இடம்பெறவுள்ள தேர்தலில் தமிழ்மக்கள் கட்சிகள் முன்வைக்கின்ற கொள்கையின் அடிப்படையில், அந்த கொள்கைகளை எதற்காகவும் விட்டுக்கொடாத தலைவர்களின் ஆளுமையின் அடிப்படையிலும், தமிழ் மக்களின் எதிர்காலம் கருதிஇன்றுவரையும் உழைக்கின்றவர்கள் என்பவை ரீதியாகவும், அவர்களின் கடந்த கால வரலாறுகள் அவர்களின் இன்றைய நிலையை உறுதிப்படுத்துகின்றதா? என்ற அடிப்படையில் சிந்தித்து வாக்களிக்க வேண்டும். அதுவே எதிர்காலத்தில் தமிழ்சமுகம் வலுப்படச்செய்ய வேண்டிய முதற்கடமையாகும்.

# எது தமிழரின் ராஜதந்திரம்?

ராஜதந்திரம் தொடர்பில் ஒரு பிரபலமான கூற்று உண்டு. அதாவது, ஆயுதம் இல்லாத ராஜதந்திரம் என்பது, இசைக்கருவிகள் இல்லாமல் இசையமைப்பதற்கு ஒப்பானது. இது 18ம் நூற்றாண்டில், பிரட்றிக் த கிறேட் என்னும் பிரஸ்யன் அரசனால் கூறப்பட்ட வாசகம்.

பிற்காலத்தில் நெப்போலியன், இந்த வாசகத்திலுள்ள ஆயுதம் என்னும் சொல்லுக்கு பதிலாக பலம் (Force) என்னும் சொல்லை பயன்படுத்தியிருந்தார்.

அதாவது, ஒரு பலம் இல்லாத ராஜதந்திரம் என்பது இசைக்கருவிகள் இல்லாமல் இசையமைப்பதற்கு ஒப்பானது.

இன்றும் உலக ராஜதந்திர அரசியலில் இந்த வாசகம் கவர்ச்சி குன்றாத ஒன்றாகவே இருக்கிறது. இந்தக் கட்டுரையில் நான் வாதிடவுள்ள விடயங்களுக்கும் மேற்படி கூற்றுக்கும் ஒரு தொடர்புண்டு.

அண்மையில் காலம் சென்ற விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியர் அன்ரன் பாலசிங்கத்தின் நினைவு தினம் யாழ்.பல்கலைக்கழகத்தில் பிறிதொரு பெயரில் நினைவுகூரப்பட்டது.

அங்கு, காலம் சென்ற ஒரு தமிழ் ராஜதந்திரியை நினைக்கும் வகையில் தமிழரின் ராஜதந்திர அரசியல் தொடர்பிலும் பேசப்பட்டது. இந்த உரைகளை அவதானித்த போது இப்படியொரு தலைப்பில் எழுத வேண்டுமென்னும் எண்ணம் ஏற்பட்டது. பாலசிங்கத்தை ஒரு தமிழ் ராஜதந்திரி என்று கூறுவதற்கான முழுத் தகுதியுடன் அவர் இருந்தார் என்பது உண்மை.

பாலசிங்கத்திற்கு முன்னரும், பின்னரும் பாலசிங்கத்தை போன்று ஒரு தமிழ் ராஜதந்திரியாக எவராலும் செயற்பட முடியவில்லை என்பதும் உண்மையே!

இந்த இடத்தில் ஒரு கேள்வி எழலாம். அவ்வாறாயின் ஏன் அவருக்கு முன்னால் அப்படியான ஆளுமைகள் உள்ள எவரும் இருந்திருக்கவில்லையா? அல்லது அப்படியானவர்கள் உருவாகுவதற்கான களநிலைமைகள் இருந்திருக்கவில்லையா? நிச்சயமாக இருந்தது.

ஈரோஸ் இயக்கத்தை சேர்ந்த ரத்தினசபாபதி, புளொட் இயக்கத்தை சேர்ந்த சந்ததியார் போன்றவர்களிடம் மார்க்சிய பின்புலத்தில் விடுதலை அரசியலை முன்னிறுத்துவதற்கான அரசியல் மற்றும் தத்துவார்த்த ஆற்றல் இருந்ததாக அறியமுடிகிறது. இன்னும் பலரும் இருந்திருக்கலாம்.

சிவராம் இதன் பிற்பகுதியில் வந்த ஒருவர். சிவராமின் எழுத்துக்கள் அதிகம் இராணுவ விஞ்ஞான கண்ணோட்டத்தில் விடுதலைப் போராட்டத்தை ஆய்வுக்குட்படுத்தியதைவே அன்றி, விடுதலை அரசியலை பரந்த கண்ணோட்டத்தில் பார்த்தவை அல்ல.

ஆனாலும் தமிழ் ராஜதந்திர பின்புலத்தில் சிவராமை முன்னிறுத்தி வாதிடலாம் என்று நினைப்பது பொருத்தமான ஒன்றல்ல.

ஆனால் சிவராமிடம் அதற்கான ஆற்றலும் அளுமையும் இருந்தது என்பதை மறுக்கமுடியாது. ஆனால் ஒருவரிடம் ஆற்றல் இருக்கிறது என்பது வேறு அவரது ஆற்றலை பிரயோகிப்பதற்கான களம் என்பது வேறு.

இந்த இடத்தில்தான், பாலசிங்கம் மட்டும் எவ்வாறு ஒரு தமிழ் ராஜதந்திரியாக பரிணமிக்க முடிந்தது என்பதற்கான பதிலும் இருக்கிறது.

ஏனெனில் பாலசிங்கத்தின் 'ராஜதந்திரி' என்னும் அந்தஸ்த்து ஒரு ஆயுதபலத்தின் ஊடாக அவருக்கு கிடைத்தது. அயுதமே சர்வதேச அரங்குகளில் பாலசிங்கத்தை ஒரு தமிழ் ராஜதந்திரியாக்கியது. அதாவது பாலசிங்கம் இசைக்கருவிகள் இல்லாமல் இசையமைக்கச் செல்லவில்லை.

எனவே பாலசிங்கத்தை முன்னிறுத்தி தமிழ் ராஜதந்திரம் பற்றி பேச முற்படுவோர், அதற்கு பின்னாலிருந்த விடுதலைப் புலிகளின் இராணுவ பலத்தை கருத்தில்கொள்ளாமல் பேசுவது தவறாகும்.

தமிழர் விடுதலை போராட்டம் ஐந்து இயக்கங்களால் பங்குபோடப்பட்டிருந்த சூழலில், அவற்றுக்கான ராஜதந்திர அந்தஸ்த்தை இந்தியா வழங்கியிருந்தது.

அதாவது, இயக்கங்களை இராணுவரீதியில் வலுப்படுத்தி, அவற்றுக்கு திம்புப் பேச்சுவார்த்தையில் சிறிலங்காவுடன் சமதையாக பேசுவதற்காக சூழலையும் இந்தியா வலிந்து ஏற்படுத்தியிருந்தது.

இராணுவ ரீதியில் பலப்படுத்தப்பட்ட பின்னர்தான், அந்த ராஜதந்திர அந்தஸ்த்து வழங்கப்பட்டது. 90களுக்கு பின்னர், விடுதலைப் புலிகள் இயக்கம் இந்தியாவை பகைத்துக் கொண்டு, சுயாதீனமாக தங்களை இராணுரீதியில் பலப்படுத்தி, வன்னியை மையப்படுத்தி ஒரு நிழல் அரசாங்கத்தை நிறுவிய பின்புலத்தில்தான் மீண்டுமொரு ராஜதந்திர களம் திறக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகள் சர்வதேசரீதியில் ராஜதந்திர அந்தஸ்த்தை பெறுகின்றனர். அந்த வகையில் பார்த்தால், திம்பு பேச்சுவார்த்தைக்கு பின்னர் தமிழ் ராஜதந்திரத்தை பிரயோகிப்பதற்கான மீண்டுமொரு களம் ஒஸ்லோவில் திறக்கப்பட்டது.

மேற்படி இரண்டு சந்தர்ப்பங்களையும் உற்று நோக்கினால், இரண்டுக்கு ராஜதந்திர வாய்ப்புக்களுமே, அயுதங்களின் வழியாக கிடைக்கப்பெற்றதுதான்.

அதாவது, அயுதங்கள் அல்லது பலம் என்பது ராஜதந்திர அரசியலுக்கான தற்பாதுகாப்பாக இருந்தது. ராஜதந்திர நகர்வுகள் பிழைத்தால் மீளவும் யுத்தம் மூளும் என்னும் ஒரு எச்சரிக்கையுணர்வை அரசாங்கத்திற்கு கொடுத்துக் கொண்டிருந்தது.

ஒஸ்லோ பேச்சுவார்த்தைகள் முறிவடைந்த போது விடுதலைப் புலிகள் மீளவும் யுத்தத்திற்கு சென்றனர்.

அது தோல்வியில் முடிந்தது. அவ்வாறானதொரு முடிவு ஏற்பட்ட சந்தர்ப்பத்தில் பாலசிங்கம் உயிரோடு இல்லை. ஒரு வேளை அவர் இருந்திருந்தால் தனது முழு ஆற்றலையும் தொடர்புகளையும் பயன்படுத்தி, விடுதலைப் புலிகளை பாதுகாக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பார் என்றும் ஒரு கருத்துண்டு.

இதனை முற்றிலுமாகவும் நிராகரித்துவிடவும் முடியாது. ஏனெனில் பாலசிங்கம் மேற்குலக ராஜதந்திரிகளுடன் நெருக்கமான தொடர்புகளை கொண்டிருந்தார்.

ஏனெனில் பாலசிங்கம் தூய்மைவாத சிறைக்குள்ளிருந்து சிந்தித்த ஒருவரல்ல. இதன் காரணமாகத்தான்,

2006இல், ரஜீவ்காந்தி படுகொலையை விவகாரத்தில் இந்தியாவிடம் மன்னிப்புக் கோரினார். எனெனில் இறுதி யுத்தத்தின் போது, இந்தியாவினால் மட்டும்தான் தீர்மானகரமான பாத்திரத்தை வகிக்கமுடியும் என்பதை பாலசிங்கம் ஒரு ராஜதந்திரி என்னும் வகையில் நன்கு அறிந்திருந்தார்.

ஆனால் இன்று பாலசிங்கம் தொடர்பில் பேசுபவர்களும், அவரது உருவப்படத்திற்கு மலர்மாலை போடுபவர்களும், அவரிடமிருந்து எதையாவது கற்றுக்கொண்டிருக்கின்றனரா!

2009இற்கு பின்னர் ராஜதந்திர போராட்டம், மென்வலு ராஜதந்திரம் என்றெல்லாம் ஏதோ கூறிக்கொண்டாலும் கூட, உண்மையில் ராஜதந்திர அரசியலுக்கான எந்தவொரு வாய்ப்பும் தமிழர்களிடம் இருந்திருக்கவில்லை.

எனெனில் 2009இற்கு பின்னர் தேர்தல் மூலம் கிடைக்கப்பெற்ற பாராளுமன்ற பிரதிநித்துவம்மட்டும்தான் தமிழர்களிடமிருந்த ஒரேயொரு பலம்.

உண்மையில் தேர்தல் அரசியல் என்பது, ராஜதந்திர அரசியலை கையாளுவதற்கான ஒரு பலம் அல்ல. இதனை சரியாக புரிந்துகொண்டால்தான் இன்றைய சூழலில், தமிழர்களால் ராஜதந்திர அரசியலை கையாள முடியுமா என்பதையும் புரிந்து கொள்ள முடியும்.

ஆயுத விடுதலை இயக்கங்கள் எழுச்சிபெறுவதற்கு முன்னர் எவ்வாறானதொரு நிலைமை இருந்ததோ, அவ்வாறானதொரு நிலைமைதான் தற்போதும் இருக்கிறது.

அரசியல்வாதிகளே ராஜதந்திரிகளாகவும் தொழிற்படுகின்றனர். அரசியல் வாதிகள் ராஜதந்திரிகளாக இருக்க முடியாது என்று நான் வாதிடவில்லை.

திம்பு தொடக்கம் தற்போதுள்ள அரசியல் சூழல் வரையில் அனுபவம் கொண்ட அரசியல்வாதிகள் தமிழ் சூழலில் இருக்கின்றனர்தான்.

ஆனால் தமிழ் அரசியல் ஒரு தரப்பாக தன்னை நிருபிக்க முடியாத சூழலில் ராஜதந்திரம் என்பது வெறும் சொல்லேயன்றி, அதற்கு செயல் ரீதியில் எந்தவொரு பெறுமதியும் இருக்கப் போவதில்லை.

2009இற்கு பின்னரான சூழலில் தமிழ் தேசிய அரசியல் தன்னை ஒரு பலமாக உருத்திரட்டிக் கொள்ளவில்லை. பலமில்லை என்றால் ராஜந்திரமும் இல்லை.

அந்த வகையில் நோக்கினால், இன்றைய தமிழ் அரசியல் என்பது முக்கியமாக கூட்டமைப்பின் தலைமையில் இருக்கும் அரசியல் என்பது வெறும் தரகு அரசியல்தான்.

அதற்காக கூட்டமைப்பிற்கு வெளியில் தங்களை அடையாளப்படுத்த முயல்பவர்களிடம் அவ்வாறானதொரு பல மையம் இருப்பதாகவும் நான் கூறவில்லை. மொத்தத்தில் இன்றைய தமிழர் அரசியல் என்பது போகுமிடம் தெரியாத அரசியல்தான்.

ராஜதந்திர அரசியல், தந்திரோபாயம், மூலோபாயம் இப்படியான சொற்கள் சாதாரண மக்களுக்குரியவை அல்ல. இது அரசியலை இலக்கு நோக்கி கையாள முற்படும் அரசியல் சக்திகளுக்குரியவை.

அப்படிப் பார்த்தால் இவ்வாறான சிந்தனைகள் ஆயுத இயக்கங்களின் தோற்றங்களின் பின்னர்தான் தமிழ் சூழலுக்கு அறிமுகமானவை. மிதவாதிகள் அரசியலை தீர்மானித்த காலத்தில் இது போன்ற சிந்தனைகள் தமிழ் சூழலுக்கு சொற்களாகக் கூட பரிச்சயமாகியிருக்கவில்லை.

தமிழ் சூழலில் ராஜதந்திர ஆற்றலுள்ள அரசியல் தலைவர்களும் அரசியல் செயற்பாட்டாளர்களும் ஏன் உருவாகவில்லை என்பதையும் நாம் ஆழமாக பரிசீலிக்க வேண்டும்.

மிதவாதிகளைப் பொறுத்தவரையில் அவர்களில் அனேகர் பகுதி நேர அரசியல்வாதிகளாகவே இருந்தனர்.

தமது அப்புக்காத்துத் தொழிலுக்கான நேரம் போக, மிகுதி நேரத்தில்தான் அரசியல் பேசினர். அவர்களிடமும் சட்ட அறிவைத்தாண்டி, அரசியல் கருத்தியல் மற்றும் தத்துவார்த்த அறிவு இருக்கவில்லை.

விடுதலை அரசியல் ஒன்றை தாம் பிரதிநித்துவப்படுத்துகின்றோம் என்னும் புரிதல் அனேகரிடம் இருந்திருக்கவில்லை.

2009இற்கு பின்னர் இந்த நிலைமை மேலும்

**12 ஆம் பக்கம் பார்க்க....**



# மீண்டும் ஒரு இனவிரிசலுக்கு முயற்சி?

சத்தார் எம் ஜாவித்

உலக நாடுகள் மத்தியில் இலங்கையும் பல்வேறுபட்ட சிறப்பம்சங்களைக் கொண்ட ஒரு நாடாக திகழ்கின்றது என்றால் அது மிகையாகாது. பலரையும் கவரக்கூடிய வகையில் சிறந்த கால நிலை, இயர்க்கைத் துறைமுகங்கள், பரந்த புல்வெளிகள். இயர்க்கையை அழகுற வைக்கும் எழில்மிகு மலைநாடு, சமதரைக் கடற்பரப்புக்கள், வரலாற்றுச் சிறப்புமிக்க அம்சங்கள், இயர்க்கை வளங்கள் என பலவாறு கூறிக் கொண்டே போகலாம்.

இவ்வாறானதொரு நாட்டில் பல்லின, பல் சமமுங்களைக் கொண்ட மக்கள் வாழ்வதும் மற்றொரு சிறப்பம்சம் என்றே கூறலாம். இவ்வாறான சிறப்பம்சங்களுக்கு மத்தியில் மீண்டும் மாவனல்லையில் புத்தர் சிலை உடைப்பு மக்களை அச்சத்தில் ஆழ்த்தியுள்ளது. இது இனங்களுக்குள்ள ஒற்றுமை, நல்லெண்ணத்தையும் குழப்பும் செயலாக



இருக்கின்றது. இது விடயமாக அசில இலங்கை ஜமிய்யதுல் உலமா சபையும் கடுமையான கண்டனத்தையும் வெளியிட்டுள்ளதுடன் குற்றமிழைத்தவர்களுக்கு கடுமையான தண்டனைகளை வழங்குமாறும் தெரிவித்துள்ளது. சுதந்திரத்தின் பின்னரான காலத்தில் இலங்கையில் சிறுபான்மை இனங்களுக்கு எதிரான பல்வேறுபட்ட பிரச்சினைகள் அவ்வப்போது ஏற்பட்டுக் கொண்டே வந்தன என்றாலும் அக்காலத்தில் இருந்த சிறுபான்மை அரசியல் தலைமைகள் இன நல்லிணக்கத்தினை கருத்திற் கொண்டு பகைமைகளை வளர்த்துக் கொள்ளாது நளினமான முறையில் நடந்து கொண்டதால் பல பிரச்சினைகள் பூதாகாரமாக வில்லை என்றே கூறலாம்.

இலங்கை சுதந்திரமடைந்து சுமார் எட்டு வருடங்களில் அதாவது 1956ஆம் ஆண்டு தொடக்கம் சிறுபான்மை மக்கள் மீதான இனவாதச் செயற்பாடுகள் பாரியளவில் ஆரம்பிக்கத் தொடங்கியது எனலாம். காரணம் இந்த நாட்டின் சிறுபான்மை தமிழ் மற்றும் முஸ்லிம் சமுகங்களில் அக்கறை கொள்ளாது ஒருசில இனவாத அரசியல் தலைமைகள் தன்னிச்சையாக 1956ஆம் ஆண்டு தனிச் சிங்களச் சட்டத்தைக் கொண்டு வந்தமையாகும்.

இதன் ஒரு வெளிப்பாடே வடக்கில் உருவெடுத்த தமிழ் இளைஞர்களின் ஆயுதக் கலாசாரமாகும். தமிழ் சமுகங்களுக்கு கொடுக்க வேண்டிய ஜனநாயக உரிமைகளை கொடுக்க மறுத்து இனவாதம் காட்டியதன் காரணமாகவே தமிழ் இளைஞர்கள் பல குழுக்களாகப் பிரிந்து ஆயுதம் ஏந்தி இந்த நாடு குறிப்பாக வடகிழக்குப் பகுதிகள் சின்னாபின்னமானதைக் குறிப்பிடலாம். அந்தக் கலாச்சாரத்தின் வடுக்களை இன்றும் நாம் கண்முன்னே காணக் கூடியதாகவுள்ளதை மறந்துவிட முடியாது. இதேபோல் முஸ்லிம்கள் மீது சமய ரீதியாகவும், இனரீதியாகவும்கூட பல தாக்குதல்கள், வன்முறைகள் அவ்வப்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இருந்தாலும் சிறுபான்மையினர் என்ற வகையிலும், நாட்டின் இன ஐக்கியம், சமாதானம், ஜனநாயக இறைமைகள் என்ற வகையில் முஸ்லிம்கள் அமைதியாகவும், பொறுமையாகவும் இருந்து வருகின்றமையையும் இங்கு சுட்டிக்காட்டலாம்.

இவ்வாறான துன்பியல் நிலைமைகளுக்குள் பொறுமை காத்து வரும் முஸ்லிம்களை ஏதோ ஒருவகையில் வன்முறைக்குள் இழுக்க அல்லது வன்முறையாளர்களாக ஆக்குவதற்கு மறைமுகமாகவும், நேரடியாகவும் பலவாறான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை இந்தச் சமுகங்கள் மத்தியில் கவலையை மட்டுமல்லாது அச்சத்தையும்கூட ஏற்படுத்தியுள்ளது.

சமாதானம், நல்லிணக்கம், இன உறவை மேம்படுத்தல் ஊழல்களை ஒழித்தல் போன்ற வாக்குறுதிகளின் அடிப்படையில் மக்கள் வழங்கிய வாக்குகளால் வந்த இந்த தேசிய நல்லிணக்க கூட்டாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்தும் அவை மக்களுக்கான இன ஒற்றுமை விடயத்தில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்க வில்லை என்ற குற்றச்சாட்டுக்களும் இருந்தே வருகின்றன. இனவாதக் கும்பலின் கைங்கரியங்கள் குறைவதாகவும் இல்லை அரசாங்கமும் அவர்கள் மீது எதுவித நடவடிக்கைகளும் எடுக்காதிருப்பதும் முஸ்லிம் சமுகத்தினை அதிகளவில் சந்தேகங் கொள்ள வைத்துள்ளது.

இவ்வாறன நிலைமைகள் இனவாதிகள் முஸ்லிம்களைத் தாக்குவதற்கும், அவர்கள் மீது வன்முறைகளை மேற்கொள்ளவும் வழிசமைக்கின்றனவே தவிர அமைதிக்கான சமிக்கைகள் எதனையும் கான முடியவில்லை. இலங்கையில் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்த சர்வமத அமைப்புக்கள் பலமான முயற்சிகளை எடுத்து வந்தாலும் இனவாத சக்திகள் குழப்பங்களை ஏற்படுத்த விடாப்பிடியாக இருப்பதும் சர்வமத அமைப்புக்கள் மத்தியில் மன உழைச்சல்களை ஏற்படுத்தியிருக்கின்றன.

இந்த அரசாங்கம் மத நிந்தனைச் சட்டத்தினை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து சட்டமாக்கிய போதிலும் அது எழுத்து வடிவில் இருப்பதும் இந்த நாட்டில் இனவாதம் தலைதூக்க சந்தர்ப்பத்தினை ஏற்படுத்திக் கொடுப்பதாகவே அமைகின்றது எனலாம். சட்டம் சரியான முறையில் எவருக்கும் பாரபட்சமற்ற வகையில் நடைமுறைப்படுத்தப்படுமானால் இந்த நாட்டில் பல பிரச்சினைகள் இல்லாது போய் விடும் எனலாம். ஆனால் சட்டத்தில் உள்ள ஒருசில குறைபாடுகளை வைத்துக் கொண்டு குற்றமிழைப்பவர்கள் தப்பித்துக் கொள்வதே மக்கள் மத்தியில் அதிர்ப்த்தியை ஏற்படுத்தியிருக்கின்றது.

மத நிந்தனை செய்யக்கூடாது. இனவாதம் பேசக்கூடாது என்று இன்று பாராளுமன்றத்திலும், பாராளுமன்றத்திற்கு வெளியிலும் ஆட்சியாளர்களாலும், அரசியல் வாதிகளாலும் பேசப்பட்டுக் கொண்டிருந்தாலும் சட்டத்தை மீறி இலங்கைவாழ் முஸ்லிம்கள் மீது பல தீய குழுக்கள் மத நிந்தனை செய்து வருவதற்கு அரசால் பகிரங்கமாக இன்று வரை எதிர்ப்புத் தெரிவிக்கப்படாதிருப்பது சமாதான விரும்பிகள் மத்தியில் அரசின் மீதான சந்தேகங்களுக்கும் உள்ளாகி வருகின்றது.

இனவாதக் குழுக்களின் கபடத்தனங்கள் ஒழிக்கப்படாதவரை இந்த நாட்டில் எவ்வாறு சமுக ஒற்றுமை ஏற்படும்? சமாதானம் எவ்வாறு உறுதிப்படுத்தப்படும்? போன்ற கேள்விக்கு விடைகாண வேண்டியே விடயமே முன்னிற்கின்றது. இவ்வாறான நிலையில் கடந்த சில தினங்களுக்கு முன் மாவனல்லையில் புத்தர் சிலைகள் உடைக்கப்பட்டுள்ளன. இது முஸ்லிம் சமுகத்திற்கும் பௌத்த சமுகத்திற்கும் இடையில் மோதல்களை உருவாக்க ஒருசில தீய சக்திகளால் மேற்கொள்ளப்பட்ட ஒரு செயலாகவும் உள்ளது.

இவ்வாறன நிலையில் நாட்டில் தற்போது சிங்கள, முஸ்லிம் சமுகத்தின் ஒற்றுமையை சீர்குலைத்து பிரிவினை வாதத்தினை ஏற்படுத்த பாரிய முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன எனவும் இதன் பின்னணியில் பல்வேறு அமைப்புக்கள் உருவெடுத்து செயற்படுகின்றன என்பது மட்டும் உண்மையான விடயங்களாகும். இந்தச் சந்தர்ப்பத்தில் நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றுபட வேண்டும் என சமய அமைப்புக்கள் அழைப்பு விடுக்கின்றன. அண்மைக்காலமாக நாட்டில் முஸ்லிம்களுக்கு எதிராக மீண்டும் இனவாதச் செயற்பாடுகள் தேற்றம் பெற்று வருகின்ற நிலையில் இன்று புத்தர் சிலை உடைப்புக்கள் மக்கள் மத்தியில் கவலையை ஏற்படுத்தி இருக்கின்றது.

புத்தர் சிலைகளை உடைப்பதால் முஸ்லிம்களுக்கு எந்த விதத்திலும் பயன்கள் இல்லை. அதனால் எதுவும் கிட்டப்போவதில்லை. இவ்வாறான நிலையில் மாவனல்லைச் சம்பவம் முஸ்லிம்கள் மத்தியில் பாரிய சந்தேகங்களை ஏற்படுத்தியிருக்கின்றது. குறிப்பாக தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் கொந்தளிப்பு நிலைமைகளை வைத்துக் கொண்டு அரசியலில் தோற்றவர்கள் இவ்வாறு சமுகங்களுக்கு இடையில் குழப்பங்களை ஏற்படுத்தி தமது அரசியலை நடாத்த முனைகின்றார்களா? என்ற சந்தேகங்களும் ஏற்பட்டுள்ளன.

இந்த நிலையில் முஸ்லிம்கள் ஒவ்வொரு விடயத்திலும் கவனமாகவும், அவதானமாகவும் இருக்க வேண்டியுள்ளது. முஸ்லிம்களை தமது சுயலாபங்களுக்காக பலிக்கடாக்கலாக ஆக்குவதற்கு இவ்வாறான சம்பவங்கள் மேற்கொள்ளடுகின்றது



என்பதே உண்மையான விடயமாகும். குறிப்பாக முஸ்லிம்கள் தேவையற்ற வகையில் கண்ட கண்ட இடங்களிலும் கூடுவது, தேவையற்றவர்களுடன் தொடர்புகளை வைத்துக் கொள்ளல் போன்ற விடயங்களில் இருந்து விலகிக் கொள்வது முக்கிய விடயமாகும். குறிப்பாக ஒருசில தீய குழுக்கள் முஸ்லிம் சமுகத்தினை தேவையற்ற வகையில் வன்முறைக்கு வலிந்து இழுக்க முனைகின்றதால் எந்த நேரத்திலும் அவதானமாக இருப்பதே முக்கியமானதாகும்.

எனவே ஜனாதிபதி நாட்டின் தலைவர் என்ற வகையில் சிறுபான்மை மக்கள் மீதான இனவாத செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து அதனை மீறும் நபர்கள் அல்லது குழுக்கள் மீது அதிகபட்ச சட்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என முஸ்லிம்கள் கோரிக்கை விடுவதுடன் ஏனைய சமுகங்களுடன் முஸ்லிம்கள் இன நல்லிணக்கத்துடன் வாழ ஜனாதிபதியும், அரசாங்கமும் உடன் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனவும் தெரிவிக்கின்றனர்.

# முஸ்லிம் தலைவர்களும் அமைச்சுப்பதவிகளும்

தந்திமகன்

நாட்டில் அரசியல் புரளிகளும், திருகுதாளங்களும் ஓரளவு முடிவடைந்த கையோடு நாட்டின் வடபுலத்தில் பயங்கரமான வெள்ளம். பல ஆயிரக்கணக்கான மக்கள் அவலப்பட்டு துன்பப்பட்டனர். தற்போது வெள்ளம் வடிந்திருந்தாலும் அவர்களுக்குரிய நிவாரணங்கள் வழங்கப்பட்டு வருவதாகக் கூறப்படுகின்றது. எது எப்படியோ அந்த மக்களின் துயரங்களில் நாமும் பங்காளிகளாக மாறி உதவிடவேண்டும். மனிதன் என்பவன் எந்த சமயமாக இனமாக இருந்தபோதிலும் இயற்கை சாதி சமயம், மொழிபார்த்து வருவதில்லை. அழிவுகள் அனைவருக்குமேதான் கிடைக்கும். மனிதர்கள் இன்று சாதி வேற்றுமையாலும், சமய தோற்றப்பாடுகளாலும், நீயா? நானா? என்கிற வெறியில் கட்டுண்டு போனவர்களாகவே இருக்கிறார்கள். உலகின் பல நாடுகளில் இந்நிலைமை காணப்படுகிறது. இலங்கையும் அதற்கு விதிவிலக்கல்ல. அரசியல் அதிகாரம் நாளை யார்கைகளிலும் செல்லலாம். அந்த அதிகாரத்தின் கோரத்தை மக்கள் மத்தியி;ல் வெறும் பாமர மக்கள் மத்தியில் காண்பிப்பதும், காண்பிப்பதற்கு முயற்சிப்பதும் சிலரது விளையாட்டாகவும் இருக்கிறது.

இன்று வெள்ளம் நாட்டில் ஏற்பட்டு பல நாட்களாகின்றன. அந்த மக்களின் துயர்களை துடைத்துக் கொண்டு காப்பாற்றியிருக்கிறார்கள் நாட்டின் இராணுவத்தினர். உண்மையில் அவர்கள் நாட்டைப்பாதுகாக்கவும், நாட்டு மக்களைப்பாதுகாக்கவும் உருவாக்கப்பட்டவர்கள். இருப்பினும் மக்கள் அவர்களுக்குரிய கௌரவத்தை கொடுக்க வேண்டியதும் அவசியமானதாகும். அண்மையில் ஏற்பட்ட வடபுல வெள்ளம் அனேக மக்களை புரட்டியெடுத்துவிட்டது. அவர்களை காப்பாற்றி, உண்ண உணவும், பொரும் கொடுத்து உதவியிருக்கிறார்கள் நமது இராணுவத்தினர். இந்த இராணுவத்தின்;; பேசவல்ல ஒருவர் தெரிவித்த கருத்துக்கள் முஸ்லிம் தலைவரையும், வடபுல மக்கள் தலைவரையும் சாடியிருக்கின்றார். உண்மையில் நாட்டு மக்கள் எப்பாடு பட்டாது போகட்டும் பதவி பட்டங்கள்தான் முக்கியமாகத் தெரிந்வர்கள் இவர்கள் மட்டுமே. தன் இனம் பாதிக்கப்பட்டிருக்கிறது. தனது மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். வரவில்லை பார்க்கவில்லை. ஆனால் பதவியும் கதிரையும் தான் முக்கியம் என்பதை அந்த இராணுவ அதிகாரி மிகவும் கனதியாகவே கூறியிருக்கிறார். பாராட்ட வேண்டும். அரசியல் இன்றுவரும் நாளை போகும். இவ்வாறான மனிதாபிமான வேலைகள் அதில் இருக்கிற சுகம் தனியானது. இராணுவதிற்கு மட்டும் உரித்தான ஒரு விடமல்ல. பிராந்திய அரசியல் தலைமைகள் மக்களோடு மக்களாக ஒடோடிவந்து உதவேண்டும் என்பதைத் தான் இவர் கூறியிருக்கிற விடயமாகும்.

சம்பந்தனும், ஹக்கீமும் தலைகாட்டவில்லை - வெள்ளத்திலிருந்து மக்களை நாங்களே மீட்டோம் - இராணுவம் பெருமிதமடைவதாக கூறியிருக்கின்றார் அந்த இராணுவ அதிகாரி. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்களின் உரிமைகளைப் பெற்றுத்தருமாறு கூறிவரும் சம்பந்தனோ, ரவூப் ஹக்கீமோ தற்போது வெள்ளம் தாக்கிய வடக்கு, கிழக்கு பிரதேச மக்களைப் பார்வையிட வரவில்லை. இந்நிலையில் இராணுவத்தினரே அந்த மக்களை தமது தோள்களில் தூக்கி சுமந்து, வெள்ளத்தில் இருந்து காப்பாற்றியுள்ளனர். வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வெள்ளத்தின் பின்னரான மீட்பு பணிகளில் நியாயமான இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளர்.

எமக்குக் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் வெள்ளப்பெருக்கினால் ஏற்பட்ட சேதங்கள் அதிகம் என்பதுடன், அங்குள்ள நீர்நிலைகள் உடைப்பெடுத்தமையின் காரணமாக விரைவான மீட்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய அவசியமும் காணப்பட்டது. எனவே கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலேயே பெருமளவிலான இராணுவத்தின் மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

வெள்ளப்பெருக்கின் காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட பல ஆயிரக்கணக்கான குடும்பங்கள் தனிநபர்கள் 16 ஆம் இலக்க ஐ.ஜி.பி முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். அதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தில் வெள்ளத்தின் பின்னரான மீட்பு நடவடிக்கைகளுக்காக நூற்றுக்கணக்கான இராணுவ வீரர்கள் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மேலும் முல்லைத்தீவு மாவட்டத்தில் சுமார் 8 பிரதேசங்கள் வெள்ளப்பெருக்கினால் அதிகளவில் பாதிப்பிற்குள்ளாகியுள்ள அதேவேளை, அப்பிரதேசங்களைச் சேர்ந்த சுமார் 1500 தனிநபர்கள் பாதிப்பை எதிர்கொண்டிருந்தனர். எனவே முல்லைத்தீவு மாவட்டத்தில் மீட்புப் பணிகளுக்காக 150 இராணுவ வீரர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். பாதிக்கப்பட்ட மக்களை பொது நிர்வாக அதிகாரிகள் பொறுப்பேற்கும் வரை இராணுவத்தினரே இந்நடவடிக்கைகளில் ஈடுபடுபட்டிருந்தனர்.

ஆனால், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்களின் உரிமைகளைப் பெற்றுத் தருமாறு கோருகின்ற சம்பந்தன், ரவூப் ஹக்கீம் போன்றோர் தற்போது வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களை சந்தித்து பேசுவதற்கு முன்வரவில்லை. இந்நிலையில் இராணுவத்தினரே முன்நின்று அம்மக்களை வெள்ளத்தில் இருந்து மீட்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தனர். ஆனால் இவர்களுக்கு மக்கள் மத்தியில் அந்தளவுக்கு சென்று அவர்களை பார்க்கவேண்டிய அவசியமோ, அவசரமோ இல்லை. காரணம், அமைச்சர்களாக பொறுப்பேற்கும் நிகழ்வினையும் பெரியளவில் நடாத்தி சாதனை படைக்க வேண்டும் என்பது முஸ்லிம் அமைச்சர்களின் கௌரவமாகும். ஒருபுறம் சிலை உடைப்பு என்று மாவனல்லைப் பிரதேசங்களில் முஸ்லிம் சகோதரர்கள் அடிவாங்குகின்றனர். அதேநேரம் கல்முனையில் அமைச்சர் சவால்விடுத்துப் பேசுகின்றார். ஒருகட்டத்தில் தென்கிழக்கு அலகு இல்லை என்றால் எனது அமைச்சினை தூக்கிவீசுவேன் என்றார். இப்போது சாய்ந்தமருது மக்களின் ஏகோபித்த ஒருமைப்பட்ட ஒற்றமையின் காரணமாக கல்முனை மாநகரசபையின் வரவு செலவுத்திட்டம் தோற்கடிக்கப்பட்டிருக்கிறது. காரணம் ஒற்றுமை. சாய்ந்தமருதுக்கான தனித்துவமான நிருவாக அலகு கேட்டு யாரும் கொடுக்க முன்வராமையினால் தமக்குரிய வாக்கினை அவர்கள் யாருக்கும் வழங்காமையினால் எதிர்கட்சியிலிருந்து இன்னுமொரு அணி இணைந்து 2019க்கான பஜட்டை தோற்கடித்துள்ளனர்.

அண்மையில் கல்முனையில் அமைச்சுக்களை பாரமெடுத்த கையோடு ஓடோடிவந்து பல வேலைத்திட்டங்களை உயர்கல்வி அமைச்சரோடு இணைந்து முஸ்லிம் காங்கிரஸார் ஆரம்பித்திருந்தனர்.. நல்ல விடயம். ஆனால் அருகிலுள்ள சாய்ந்த மருதுக்கான, அவர்களின்கோரிக்கையினை எப்பாடு பட்டாது வழங்குவதற்குரிய முயற்சிகளை மேற்கொள்ளத்தான் என்னவோ நாட்டின் பிரதமர் அவர்கள் மாகாண அமைச்சினை வழங்கியிருக்கிறது என்கிறவர்களும் உண்டு. எதுவாக இருந்ததலும் சவால்விடுவதில் கல்முனை இராஜங்க அமைச்சருக்கு அவரே நிகர். அந்தளவுக்கு சவால் விடுவதும், பின்னர் அது காணாமல் போவதும் வழமையான விடயமாக இருந்து வருகின்றது. இப்போதும் ஒரு புதிய சவால். அதுதான் முஸ்லிம், தமிழ் சமூகங்களுக்கு பாதகமான புதிய மாகாண சபை சட்ட அடிமை விலங்கை தகர்தெறிந்து பழைய விகிதாசார முறையினை கொண்டுவரும் தனது முயற்சிக்கு தடை ஏற்படுகின்றபோது இந்த அமைச்சில் ஒரு நிமிடம் கூட இருக்காமல் நான் இராஜினாமாச் செய்வேன் என மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் ஹரீஸ் அவர்கள் அண்மையில் தெரிவித்திருந்தார்.

இதன்போது பேசிய இராஜங்க அமைச்சர் இந்த பிராந்தியத்தில் கடந்த காலத்தில் ஏற்பட்ட அரசியல் சர்ச்சையுடன் சம்பந்தப்பட்ட அமைச்சான மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு கல்முனை பாராளுமன்ற உறுப்பினருக்கு வழங்கப்பட்டிருப்பததனைத் தொடர்ந்து இவர் என்ன செய்யப்போகின்றார் என்ற பல்வேறு வாத பிரதிவாதங்கள் தோற்றம் பெற்றுள்ளன. இந்நிலையில் இவ்வமைச்சின் ஊடாக சமூகம் சம்பந்தப்பட்ட இரண்டு சவால்களுக்கு நான் முகம்கொடுக்க வேண்டியுள்ளது. இந்த நாட்டின் தமிழ் முஸ்லிம் சமூகத்தின் தூக்குக் கயிறாக இருக்கின்ற புதிய மாகாண சபைச் சட்டத்தை இரத்துச் செய்வது மற்றும் ஆள்புல ரீதியாக கல்முனை மாநகரத்திற்கு ஏற்பட்டிருக்கின்ற பிரச்சினை என்பனவாகும்.

புதிய மாகாண சபைச் சட்ட அறிக்கை பாராளுமன்றத்திற்கு வந்தபோது தலைவர் ரவூப் ஹக்கீம் அவர்கள் மஹிந்த ராஜபக்ஷவின் வீடு சென்று அவருடைய உதவியையும் பெற்று மிகப் பெரிய பிரயத்தனம் மேற்கொண்டு மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் தோற்கடித்தோம். இருந்தபோதிலும் அது இன்னும் சட்ட ரீதியாக ரத்துச் செய்யப்படவில்லை. இந்நிலையில் மீண்டும் பழைய மாகாண சபை விகிதாசார தேர்தல் சட்டத்தை கொண்டுவர வேண்டிய மிகப் பெரிய தார்மிகப் பொறுப்பில் நான் இருந்துகொண்டிருக்கின்றேன்.

இந்த விடயதானத்திற்கு பொறுப்பான இராஜாங்க அமைச்சர் என்றரீதியில் முஸ்லிம், தமிழ் சமூகங்களுக்கு பாதகமான இந்த அடிமை விலங்கை தகர்த்தெறிய வேண்டியுள்ளது. அந்தவகையில் பழைய விகிதாசார முறையிலான மாகாணசபை தேர்தல் சட்டத்தை மீண்டும் கொண்டுவர முடியும் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. அந்த முயற்சியில் தோல்வியுறும் பட்சத்தில் இந்த அமைச்சில் ஒரு நிமிடம் கூட நான் இருக்காமல் இராஜினாமாச் செய்வேன். இந்த நாட்டின் எந்த ஒரு முஸ்லிம் மகனுக்கும் பாதிப்பு வரக்கூடாது என்பதில் போர்க்குணம் மிக்க அரசியலைத்தான் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசும் நாங்களும் செய்துவருகின்றோம்.

அதேபோன்றுதான் இந்த கல்முனை விவகாரம் தொடர்பிலும் நாம் செயற்படுவோம். எல்லோரும் இதய சுத்தியுடன் இவ்விடயத்தை நோக்க வேண்டும். கல்முனை நகரத்தை உருவாக்கியவர்கள் சாய்ந்தமருதில் பிறந்த எம்.எஸ் காரியப்பர் மற்றும் எம்.சி. அகமது ஆகியோர்களாகும். இவர்களுடைய காலத்தில்தான் கல்முனைக்கான பட்டின சபை உருவாக்கப்பட்டு அதற்கான எல்லைகள் போடப்பட்டன. பட்டின சபைக்குள் கரையோர மாவட்டம் உருவாகத் தேவையான அத்தனை மாகாண மற்றும் மாவட்ட தலைமைக் காரியாலயங்களையும் கொண்டுவந்து கல்முனை மத்தியில் நகர் ஒன்றை உருவாக்கி தமிழ் முஸ்லிம் ஒற்றுமையை கட்டியெழுப்பினார்கள். அவர்களுக்கு எங்கலால் துரோகம் செய்யவும் முடியாது, அவர்களுடைய ஆள்புல எல்லைக்கு குந்தகம் ஏற்படுத்தவும்

13 ஆம் பக்கம் பார்க்க....

# ரணிலின் வடக்கு விஜயம் என்ன சொல்கிறது?



பிரதமராக ஐந்தாவது முறையாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட பின்னர் இவ்வாறு அவர் திக்விஜயம் செய்ய முன்னர் கண்டிக்கு சென்று அஸ்கிரிய மல்வத்து பீடங்களிடம் ஆசீர்வாதம் பெற்றார்.

அவ்வாறு அவர் அங்கு சென்றபோது அவர் வெறுங்கையுடன் செல்லவில்லை. மஹா சங்கங்களுக்குரிய பிரியத்துக்குரிய செய்திஒன்றையும் காவிச்சென்றார்.இனிவரும் காலத்திலும் நாட்டின் அரசியலமைப்பில் பௌத்தத்துக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்ற செய்தியை வழங்கிவிட்டே அவர் ஆசீர்வாதம் பெற்றிருக்கிறார்.

இவ்வாறு கண்டி அரசியல் ஆசீர்வாதங்களை முடித்தகையுடன் நேரடியாக வடக்கு பறந்த ரணில் வடக்கின் வெள்ள நிவாரண நகர்வுகளை மேலும் முடுக்கியிருக்கிறார்.

மைத்திரியின் சொந்தமாவட்டமான பொலனறுவைக்கும் அதேபோல கடும்போக்கு வாக்காளர்கள் அதிகமுள்ள அநுராதபுரத்தின் சில இடங்களுக்கும் ரணில் மறக்காமல் செல்வதை அவதானிக்கவேண்டும்

இவ்வாறு பொலனறுவ மற்றும் அநுராதபுரத்தையும் இதேசமகாலத்தில் எட்டிப்பார்க்காமல் விட்டால் தமிழர்சார்பு அனுதாபஅரசாங்கம் என்ற ஒரு முத்திரை தன்மீது குத்தப்பட்டுவிடும் என்பதால் ரணில் ஒரே பயணத்தில் சில மாங்காய்களை அடிக்கமுனைவது இயல்பானது.

ரணில் இப்போது பிரதமராக அரியணையில் இருந்தாலும் அவருக்கு வழங்கப்படும் குடைச்சல்களுக்கு குறையவில்லை. அந்தவகையில் இப்போது அவரது சொந்த அணியில் இருந்து புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான பாலித ரங்கே பண்டாரவின் வடிவில் புதியஎச்சரிக்கை வந்திருப்பதை அவதானிக்கவேண்டும்

ஐக்கியதேசியக்கட்சியின் திருப்புமுனை(?) ரங்கே பண்டார என்பதாக அல்லது மகிந்ததரப்பின் குதிரைபேர ஒலிப்பதிவை அம்பலப்படுத்திய ஹீரோ என எல்லோரும் தன்னை விளித்தாலும் ரணிலின் புதிய அமைச்சரவையில் தனக்கு இடம்வழங்கப்படாததால் விசனப்படும் பாலித ரங்கே,, யானையின் ஹீரோவானதான் இப்போது என்ன சீரோவா எனச்சீறுகிறார்.

அத்துடன்இன்னமும் ஒரு மாதத்துக்குள் தனக்கு அமைச்சுப்பதவியொன்று வழங்கப்படாவிட்டால் கடுமையான முடிவு ஒன்றை தான் எடுக்க வேண்டிவருமெனவும் அவர் எச்சரித்துள்ளார்.

பாலித ரங்கே தனது வாயால் கூறிக்கொள்ளும் இந்த கடுமையான முடிவு என்னவாக இருக்கக்கூடும்? ஒன்றில் கட்சிக்குள் ரணிலுக்கு எதிராக கிளர்வது இல்லையென்றால் அணிதாவுவது ஆகிய தெரிவுகளில் ஏதாவது ஒன்றாகவே அது இருக்குமென்பது வெளிப்படையானது.

**பிறேம்**

இதேபோல தமிழ் முற்போக்குகூட்டணியின் பிரதி தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இராதாகிருஷ்ணன் தரப்பிலும் ரணிலுக்கு மறைமுக அழுத்தங்கள் வருவதை இராதாகிருஷ்ணன் நடத்திய ஊடக மாநாடு வெளிப்படுத்தியது.

மக்களுக்கு சேவை செய்யக்கூடிய வகையில் அமைச்சு ஒன்று கிடைக்காத பட்சத்தில் தான் அமைச்சு பதவியை ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்கிறார் இராதாகிருஷ்ணன்.

இவ்வாறான அரசியல் குடைச்சல்கள் மட்டுமல்ல ரணிலின் அரசாங்கத்துக்கு பொருளாதாரசவால்களும் உள்ளன.

இதற்குரிய ஆதாரமாக இன்று அமெரிக்க டொலர் ஒன்றுக்கு எதிரான இலங்கை ரூபா மேலும் வரலாற்றில் அதியுச்சமான வீழ்ச்சியுற்ற நிலை அமைந்தது

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி அண்மையில் சற்று ஏறுமுகப்பட்ட நிலையில் இன்று மீண்டும் அது வீழ்ச்சியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறான நானாவித சவால்களின் பின்னணியில்தான் ரணிலின் இன்றைய வடக்கு திக்விஜயம் இடம்பெற்றது.

வடக்கின் வெள்ள நிவாரண நடவடிக்கைகளைப் பொறுத்தவரை மைத்திரி ரணில் ஆகிய இரண்டுதரப்புக்களுமே தமது நகர்வுகளை தமிழ்மக்கள் மத்தியில் அதிகமான விளம்பரப்படுத்தலுக்கு உள்ளாக்குவதை அவதானிக்கமுடிகிறது.

மைத்திரி ரணில் ஆகிய இருவருடைய ஊடகபிரிவுகளும்போட்டிபோட்டுக்கொண்டு இதனை நகர்த்துகின்றன.

ஆனால் கொழும்பு அதிகாரமையம் இவ்வாறு அதிக விளம்பரங்களை செய்தாலும் விளம்பரங்களே இல்லாதவகையில் தன்னார்வமாக தமிழ் அமைப்புகள் செய்துவரும் உதவிகள் இங்கு நினைவூட்டப்படவேண்டியதும் அவசியமானது.

வடக்கின் சமகால வெள்ளச்சேதாரங்களுக்கு குறுகிய காலத்தில் பெய்த அதிக மழை பொழிவு காரணம் என்பதை ஏற்றுக்கொள்ளலாம். சில மணிநேரத்தில் 365 மில்லி மீற்றருக்கு மேல் மழைப்பொழிவை யாரும் எதிர்பார்க்கவில்லைத்தான் இதனால்தான் கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள அனைத்து குளங்களும் வழமைக்கு மாறாக நிரம்பி வழிந்தன.

கிளிநொச்சி மாவட்டத்தில் 60 கிராமங்களும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 77 கிராமங்களும் வெள்ளத்தில் மூழ்கடிக்கபட்டு பலரது வாழ்வாதாரம் முற்றாக அழிக்கப்பட்டுள்ளது. பல்லாயிரம்ஏக்கர் பரப்பளவு நெல் வயல்கள் அழிவடைந்துள்ளன. வியாபார நிலையங்களுக்குள் வெள்ள நீர் உட்சென்றதால் இனிவரும் நாட்களில் பொருளாதாரநெருக்கடி கழுத்தை நெரிக்கும். இதற்கும் அப்பால் மாணவர்களின் கற்றல் உபகரணங்கள் நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளன.

இறுதி யுத்தத்தின் அதிக பாதிப்புக்களை சந்தித்த கிளிநொச்சி முல்லைத்தீவு ஆகிய இரண்டு மாவட்டங்களில் மீள்குடியேற்ற பணிகள் இன்னும் முழுமையாக பூர்த்தியாகநிலையில் இந்த அவலம் ஏற்படுள்ளதால் இந்த அவலத்தில் இருந்த அந்த மக்கள் மீட்கப்படவேண்டும். எதிர்காலத்தில் இவ்விதமான நிலைமைகள் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கு தேவையான வேலைத் திட்டங்களே இப்போது அரசாங்கத்தின் முன்னுரிமைக்குரிய திட்டமாக மாறவேண்டும்

போருக்குப்பின்னராக உட்கட்டமைப்பு நிர்மாணத்தின்போது முன்னெடுக்கப்படுகின்ற ஒழுங்குமுறையற்ற அபிவிருத்தித் திட்டங்களே வடக்கின் பல பிரதேசங்களில் இந்தமுறை வெள்ளத்தில் மூழ்கடித்துள்ளமை ஆதாரப்படுத்தப்படுத்தப்பட்டுள்ளது.

அதேபோல இரணைமடுக்குளத்தில் இருந்து யாழ் குடாநாட்டு மக்களுக்கு குடிநீர் வழங்க முடியாதென அடம்பிடித்த தமிழ்அரசியல்வாதிகளும் இப்போது அதே இரணைமடு குளத்தின் நீர் கடலுக்குள் செல்வதை கண்ணார கண்டுவருகின்றனர்

இவ்வாறான நிலைமைகளுக்கு காணவேண்டிய தீர்வே மக்களுக்கு வழங்கப்படும் அன்றாடம்காச்சி நிவாரணங்களைவிட அதி அத்தியாவசியமாக இருக்கக்கூடும் ஆனால் இந்தமுறையாவது இந்த அதி அத்தியாவசிய தீர்வு கிட்டுமா? இதுவே இப்போதைய வினா.

# அரசியல் நெருக்கடியைத் தீர்ப்பதற்கான பொறுப்பை மக்களிடம் விட வேண்டும்

இலங்கையில் சுமார் இரண்டு மாதங்கள் நீடித்த அரசியல் குழப்ப நிலை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாடாளுமன்றத்தைக் கலைத்தது அரசியல் அமைப்புக்கு முரணானது என்று உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புடன் முடிவுக்கு வந்துவிட்டது என்றதொரு தோற்றப்பாட்டை சில அரசியல் கட்சிகளும் பெரும்பாலான ஊடகங்களும் உருவாக்கி வருகின்றன.

ஆனால் உண்மை அதுவல்ல. ஒரு பெரும் யுத்தத்தில் ஒரு கள நடவடிக்கைதான் (One Field Operation) முடிந்துள்ளது என்பதுதான் கள நிலவரம்.

ஏனெனில், இந்த விடயம் ஜனாதிபதி மைத்திரி நாடாளுமன்றத்தைக் கலைத்ததுடன் சம்பந்தப்பட்டது மட்டுமானது அல்ல. அதனால் அது 225 உறுப்பினர்கள் கொண்ட நாடாளுமன்றத்தில் பல கோடி ரூபா பெறுமதியில் ஆட்களை விலைக்கு வாங்கி பெரும்பபான்மையை நிரூபிப்பதாலோ அல்லது 2 கோடி சனத்தொகை கொண்ட ஒரு நாட்டில் ஏழு நீதிபதிகள் வழங்குகின்ற ஒரு தீர்ப்பினாலோ முடிவுக்கு வந்துவிடப் போவதில்லை என்பதே உண்மை.

அதற்குக் காரணம், நாட்டின் உண்மையான எஜமானர்களாகவும், ஜனநாயகத்தின் பாதுகாவலர்களாகவும், தமது உடன்பிறப்பான இறையாண்மையைப் பிரயோகிப்பவர்களாகவும் திகழ்கின்ற இலட்சோப இலட்சம் மக்களின் கருத்துக்களை கணக்கில் எடுக்காமல், விரல்விட்டு எண்ணக்கூடிய சிலர் நாடாளுமன்றத்தினதும், சட்டப் புக்ககங்களினதும் தயவில் தங்கி நின்று எடுக்கும் முடிவுகளையே அதிகார வர்க்கம் முதலும் முடிவுமாகக் கொள்ளும் ஒரு போக்கு முதலாளித்துவ நாடாளுமன்ற ஜனநாயகத்தில் தொன்று தொட்டு நிலவி வருகின்றது.

முதலில் இந்த அரசியல் நெருக்கடி எதனால் ஏற்பட்டது என்பதை ஆராய்ந்து பார்த்தால்தான் நோய்க்கான வைத்தியத்தைச் செய்ய முடியும்.

அப்படிப் பார்த்தால் 2015 ஜனவரி 8இல் உள்நாட்டு - வெளிநாட்டு பிற்போக்கு சக்திகளின் பின்னணியுடன் எதிரெதிரான கொள்கைகளைக் கொண்ட இரண்டு அணிகள் இணைந்து ஒரு ஜனாதிபதியைத் தெரிவு செய்ததில்தான் இந்தக் குழப்பம் ஆரம்பமாகிறது. நாட்டு நலன் கருதி இவ்வாறான ஒரு ஏற்பாட்டைச் செய்திருந்தால் அதை ஏற்றுக் கொண்டிருக்கலாம். ஆனால் அப்படியில்லாமல் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் தமது வல்லாதிக்க நோக்கங்களை ஈடேற்றுவதற்காகவே சர்வதேச - பிராந்திய வல்லாதிக்க சக்திகள் அந்த ஜனாதிபதித் தேர்தலைப் பயன்படுத்திக் கொண்டன.







அடுத்ததாக, அதே வருடம் ஓகஸ்டில் நடந்த பொதுத் தேர்தலைத் தொடர்ந்து அதே எதிரும் புதிருமான இரண்டு கட்சிகளும் சேர்ந்து அமைத்த ‘நல்லாட்சி’ அல்லது ‘தேசிய அரசாங்கம்’ என்பது இன்னொரு பொருந்தாக் கலியாணமாகும். ஜனாதிபதித் தேர்தலின் தொடர்ச்சியாகவே இது மேற்கொள்ளப்பட்டது.

இந்த இரண்டு நடவடிக்கைகளும் இலங்கை மக்களின் உண்மையான நலன்களைப் புறந்தள்ளி மேற்கொள்ளப்பட்ட அரசியல் சதி சூழ்ச்சி நடவடிக்கைகளாகும். இந்த சூழ்ச்சியில் பலிக்கடாக்கள் ஆக்கப்பட்டது சிறீலங்கா சுதந்திரக் கட்சியும், அதன் பொதுச் செயலாளராக இருந்த மைத்திரிபால சிறிசேனவுமாகும். அது எப்படி நடந்தது?

‘தேசிய அரசாங்க’த்தின் பிரதான கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி நீண்டகால நோக்கில் தனது அதிகாரத்தை நிறுவி அந்நிய எஜமானர்களுக்குச் சேவை செய்யும் வகையில் பல நேரடி மற்றும் மறைமுகத் திட்டங்களைத் தீட்டிச் செயல்படத் தொடங்கியது. அது பின்வரும் செயல்பாடுகளில் இறங்கியது.

இலங்கை தனது அரசியல், பொருளாதார சுயாதிபத்தியத்தையும், இறையாண்மையையும் பாதுகாக்கும் கொள்கைகளைப் புறந்தள்ளிய ஐ.தே.க., 1977இல் தற்போதைய அக்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் மாமனாரும், கடைந்தெடுத்த ஏகாதிபத்திய விசுவாசியுமான ஜே.ஆர்ஜெயவர்த்தன அறிமுகப்படுத்திய திறந்த பொருளாதாரக் கொள்கைகளை நவ தாராளவாத வடிவத்தில் மேற்கொள்ளும் முயற்சிகளை ரணில் தலைமையிலான அரசாங்கம் ஆரம்பித்தது. அதை அவர் ஒருமுறை வெளிப்படையாகவும் குறிப்பிட்டார். இந்தப் போக்கு நீண்டகாலம் ஏகாதிபத்திய எதிர்ப்பு சிறீலங்கா சுதந்திரக் கட்சியில் ஊறித் திளைத்த ஜனாதிபதி மைத்திரிக்கும் அவரது அணியினருக்கும் ஒவ்வாத ஒன்றாகும். இந்தப் பிரச்சினையே தேசிய அரசாங்கத்தில் முரண்பாடு முளை விடுவதற்கு அத்திபாரமாக அமைந்தது.

அடுத்ததாக, பிரதமர் ரணில் தனது அதிகார வரம்புக்கு அப்பால் சென்று ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களைத் தனது கையில் எடுத்து தன்னிச்சையாக பிரயோகிக்கத் தொடங்கினார். அதே நேரத்தில் ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைக்கும் வகையிலும், எதிர்காலத்தில் இலங்கையில் ஐ.தே.க. எதிர்ப்பு, ஏகாதிபத்திய எதிர்ப்பு அரசாங்கம் ஒன்று பதவிக்கு வர முடியாத வகையிலும் அரசியல் அமைப்பில் 19ஆவது திருத்தச் சட்டம் ஒன்றைக் கொண்டு வந்தனர்.

இவற்றுக்கும் அப்பால் இன்னொரு நடவடிக்கையையும் ஐ.தே.க. தலைமையிலான அரசாங்கம் மேற்கொண்டது. அதாவது தமது பிரதான எதிரியான சிறீலங்கா சுதந்திரக் கட்சி மீண்டும் அதிகாரத்துக்கு வர முடியாத வகையில் அதன் முன்னாள் அரசாங்கத் தலைவர்கள் மீது பல பொய் வழங்குகள் போடப்பட்டன. அது மாத்திரமின்றி, பாசிசப் புலிகளுக்கு ஆதரவான வெளிநாட்டுச் சக்திகளைத் திருப்திப்படுத்துவதற்காக நாட்டை ஏகாதிபத்தியத்துக்கு ஆதரவான பயங்கரவாத இயக்கத்திடமிருந்து மீட்டெடுத்த படையினர் மீது தண்டனைகள் விதிக்கவும் ரணில் அரசு முயற்சிகளை மேற்கொண்டது.

இந்த நடவடிக்கைகள் எல்லாம் அரசாங்கத்தில் அங்கம் வகித்த இரண்டு பிரதான கட்சிகளுக்கிடையிலும் நாளுக்குநாள் மோதல் போக்கை வளர்த்துச் சென்றது. மறுபக்கத்தில் ரணில் தலைமையிலான அரசாங்கத்தின் இத்தகைய மக்கள் விரோத - தேச விரோத செயற்பாடுகள் நாட்டு மக்கள் மத்தியில் பெரும் கோபாவேசத்தையும் வெறுப்பையும் ஏற்படுத்தியிருந்தது. மக்கள் தமது வெறுப்பை அரசாங்கத்தால் இழுத்தடிப்புச் செய்யப்பட்டு பின்னர் 2018 பெப்ருவரி 10இல் நடத்திய உள்ளூராட்சி தேர்தலில் வெளிப்படுத்தினர். இந்தத் தேர்தலில் மக்கள் அரசாங்கத்தின் இரண்டு பங்காளிக் கட்சிகளான ஐ.தே.கவையும், சுதந்திரக் கட்சியையும் தோற்கடித்து, புதிதாக உருவான சிறீலங்கா பொதுஜன பெரமுனவை அமோகமாக வெற்றிபெற வைத்தனர்.

பொதுஜன பெரமுனவின் இந்த அமோக வெற்றி, ஐ.தே.கவும் அதனது சர்வதேச எசமானர்களும் எதிர்பார்க்காத ஒன்று. எதிர்காலத்தில் எந்தத் தேர்தல் நடந்தாலும் அரசின் பங்காளிக் கட்சிகள் இரண்டையும் தோற்கடித்து பொதுஜன பெமுரனதான் வெற்றிவாகை சூடும் என்பது தெளிவாக நிரூபிக்கப்பட்டு விட்டது. அதே நேரத்தில் இந்த வளர்ச்சிப் போக்குத்தான் ஜனாதிபதியினதும் அரசுடன் இணைந்திருந்த ஒருபகுதி சுதந்திரக் கட்சியினரதும் கண்களையும் திறக்க உதவியது. அதாவது அரசியல்வாதிகள் செய்ய முடியாத மாற்றத்தை மக்கள் சக்தியே உருவாக்கியது.

இந்தச் சூழ்நிலையில்தான் ஜனாதிபதி மைத்திரி தலைமையிலான சுதந்திரக் கட்சி அணியினரும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தலைமையிலான சுதந்திரக் கட்சி (சிறீலங்கா பொதுஜன பெரமுன என்ற பெயரில் செயல்பட்டு வந்த) அணியினரும் மீண்டும் ஒன்றிணையும் சூழல் உருவானது. இந்த நிலைமை உருவாவதைப் பொறுக்காத சக்திகள்தான் ஜனாதிபதியைளயும், ராஜபக்ச குடும்பத்தினரையும் கொலை செய்வதற்குத் திட்டம் தீட்டினர்.

நாடு இப்படியான ஒரு அபாயகரமான சூழலை எதிர்கொண்ட பின்னரே ஜனாதிபதி மைத்திரி அவசரம் அவசரமாக ரணிலைப் பிரதமர் பதவியில் இருந்து நீக்கிவிட்டு, மகிந்த ராஜபக்சவை பிரதமராக நியமித்தார். இது ஒரு தற்காலிகத் தீர்வுதான் என்று கருதிய ஜனாதிபதி, நாட்டில் ஒரு ஸ்திரமான அரசாங்கத்தை உருவாக்கும் பொருட்டு மக்களிடம் ஆணை கேட்டுச் செல்வதற்காக நாடாளுமன்றத்தைக் கலைத்து புதிய தேர்தலுக்கு அறிவிப்பு விடுத்தார்.

ஆனால் மைத்திரி நாட்டைக் காப்பாற்ற எடுத்த இந்த அதிரடி நடவடிக்கைகள் இரண்டு பாரிய தடைகளைச் சந்தித்தது.

ஒன்று, நாடாளுமன்றத்தில் இருந்த பல வகையான பிற்போக்கு சக்திகளை வெளிநாட்டு சக்திகளின் உதவியுடன் ஐ.தே.கட்சியால் திரட்ட முடிந்ததால், புதிய பிரதமர் மகிந்தவால் நாடாளுமன்றத்தில் தனது பெரும்பான்மையை நிரூபிக்க முடியவில்லை.

இரண்டாவது, ஐ.தே.க. தலைமையிலான சக்திகள் நீண்ட நோக்குடன் இப்படியான ஒரு நிலைமை உருவாகலாம் எனக் கணித்து 19ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றியதால், நாடாளுமன்றக் கலைப்புக்கு உச்ச நீதிமன்றம்

12 ஆம் பக்கம் பார்க்க....



# தொடர் போராட்டமே வாழ்க்கையாகிப்போன தமிழர்கள்



ஆட்சியதிகாரம் பிரித்தானியர்களது கைகளுக்கு சென்றது. அதனுடன் தமிழர்களின் போராட்ட வரலாறு முடிவுற்றதா என்றால் இல்லை என்றே அதற்கும் விடைகிடைக்கும். பிரித்தானியர்களது கைகளில்ஆட்சியதிகாரம் கிடைத்ததும் அவர்களிடமிருந்து சுதந்திரம் பெறும் நோக்கில் பல தனிவழிப்போராட்டங்கள் இடம்பெற்றே வந்துள்ளன. பிரித்தானியரின் ஆளுகைக்குட்பட்டிருந்த வேளையில் வடக்கிலே குறிப்பாக யாழப்பாணத்து மக்கள் பல எதிர்ப்புக்களையும் போராட்டங்களையும் மேற்கொண்டதுடன் பிரித்தானியருடன் பகைமையினை வளர்த்துவந்தனர் என்றே கூறமுடியும். அதற்கு உதாரணமாக வடக்கில் காங்கேசன்துறை மற்றும் மயிலிட்டிப்பகுதியில் வாழ்ந்து வந்த தேவர்பரம்பரையினரின் வரலாறு சான்றாக அமைகின்றது. அவர்களுடைய போராட்டங்களின்போது அவர்களுடைய ஆலயங்கள், சொத்துக்கள், வீடுகள் என்பன முற்றாக அழிக்கப்பட்டதுடன் உயிர்களையும் களையும் நடவடிக்கைகளில் பிரித்தானிய அரசாங்கம் ஈடுபட்டது. அதன் காரணமாக அவர்கள் வடகரையோரமாக மேற்கு நோக்கியும் கிழக்கு நோக்கியும் சிதறி இடம்பெயர்ந்துசென்று தமது வாழ்வைத் தொடர்ந்தனர் என்று அறியக்கிடைக்கின்றது. அதன்பின்னர் இந்தியாவில் உப்புச்சத்தியாக்கிரகத்தை மேற்கொண்டு மஹாத்மா காந்தி பிரித்தானியரிடமிருந்து இந்தியாவிற்கு சுதந்திரத்தை பெற்றுக்கொடுத்ததும் அதனைத்தொடர்ந்து இலங்கை போன்ற தெற்காசிய நாடுகளுக்கும் சுதந்திரம் கிடைத்ததும் வரலாற்றில் பதிவாகிப்போன விடயமே.

இவ்வாறாக தமிழ் மக்களின் வாழ்க்கை என்பது போராட்டத்துடன் என்றுமே தொடர்புபட்டதாக அமைந்திருந்தது.

அதன்பின்னர் இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்தபின்னர் ஆட்சிப்பொறுப்புக்களை பெரும்பான்மை சிங்கள மக்களிடம் அவர்கள் ஒப்படைத்தமையானது தமிழர்களின் உரிமைகளை மறுப்பதாக அமைந்ததுடன் பெரும்பான்மையினத்தவர்களுக்கும் சாதகமாக அமைந்தது. அதன் விடளைவாக சிறுபான்மையினராக இருந்த

தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் உரிமைகள் நாளடைவில் மறுக்கப்பட்டு வந்ததுடன் அவர்களுக்குரிய சுதந்திரத்தினையும் வழங்கமறுத்தது பெரும்பான்மையினம். அதன்விளைவாக மீண்டும் தமிழர்கள் போராட்ட வாழ்விற்கு தொடர்ந்தும் வற்புறுத்தப்பட்டார்கள் என்றே கூறவேண்டும். இவ்வாறாக அவர்களுடைய வாழ்வு என்பது தொடர்ந்தும் போராட்டங்களுடனேயே கழிந்தது. அதுமட்டுமன்றி அந்தப்போராட்டங்களின் பரிமாணங்கள் வெவ்வேறு காலப்பகுதிகளில் வெவ்வேறாக இருந்து வந்ததே தவிர போராட்டங்களை விடுத்த வாழ்வு தமிழர்கள் தலையில் எழுதப்படவில்லை என்றே கருதவழிசமைத்தது. படிப்படியாக தமிழர்களின் போராட்ட முறைகள் பல்வேறு பரிமாணங்களை அடைந்து இறுதியில் ஆயுதப்போராட்டமாகவும் பரிணமித்து இலங்கையின் சிங்களபேரினவாத அரசாங்கத்தையும் சர்வதேச அரசாங்கங்களையும் சிந்திக்க வைத்ததுமட்டுமன்றி இவற்றிற்கான உரிய தீர்வினை வழங்குவதில் சிக்கல்நிலையையும் ஏற்படுத்தியிருந்தது என்றால் மிகையாகாது. இவ்வாறாக போராட்டமே வாழ்க்கையாகிப்போன தமிழர்களுக்கு அவ்வாயுதப்போராட்டத்தினை முடிவுக்குக்கொண்டுவந்த பின்னராவது அமைதியான போராட்டமற்ற வாழ்வு

உமா

கிடைத்ததா என்றால் இல்லை என்பதே அதற்கும் விடையாக உள்ளது.

இன்றைய வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் வாழ்க்கைமுறைமையை அவதானித்தால் அவர்களுடைய அன்றாட வாழ்வின் தேவைக்கான போரும் ஓயவில்லை. கௌரவமான வாழ்வுக்கான போராட்டமும், அவப்பெயருக்கு பயப்படும் போராட்டமும், சமூகப் பாதுக்காப்புக்கான போரட்டமும் ஓயப் போவதில்லை என்றே தெரிகின்றது. அவர்களுடைய இத்தகைய போராட்ட வாழ்க்கையானது இன்னும் எத்தனை தலைமுறைகளுக்குத் தொடரப்போகின்றதோ என்ற விடைகாணமுடியாத கேள்வியும் எம்முன்னே இராட்சதஉருக்கொண்டு நின்று பயமுறுத்துகின்றது.

வடக்கு - கிழக்கில் 89 ஆயிரமும் கிழக்கில் 26ஆயிரம் பெண்களும் அவர்களது கணவர்களை இழந்துள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. இது தவிர வடக்கில் மட்டும் தங்கள் குடும்பத்துக்கு வருவாயைப் பெற்றுக் கொடுத்த 20,000 ஆண்கள் தற்போது அவர்கள் குடும்பத்துடன் இல்லை. (இந்த ஆண்கள் காணாமல் ஆக்கப்பட்டவர்களாக இருக்கலாம், கடத்தப்பட்டு இருக்கலாம், சிறைக்கைதியாக இருக்கலாம் அல்லது இறுதி யுத்தத்தில் அல்லது அதற்கு முன் கொல்லபட்டவர்களாகவும் இருக்கலாம்).

இதுதவிர வட மாகாணத்தில் மட்டும் 80% குடும்பங்களில் ஆண்கள் இல்லை என 2013க்கான சனத்தொகை மதிப்பீடு சொல்கிறது. இந்த 80%-இல் உள்ள குடும்பங்களில் உள்ள பெண்கள், ஒன்று துணைவனை இழந்தவராக இருக்கலாம், திருமணம் செய்து கொள்ளாத முன்னாள் போராளியாக அல்லது சாதாரணப் பெண்ணாக இருக்கலாம்.

அப்பெண்கள் விவாகரத்து பெற்றவர்களாக அல்லது மேற்குறிப்பிட்ட காணாமல் ஆக்கப்படவரின் அல்லது கடத்தப்பட்டவரின் அல்லது கொலை செய்யப்பட்டவரின், அல்லது சிறையில் உள்ளவரின் தாயாக, துணைவியாக, தங்கையாக, அல்லது மகளாக இருக்கலாம்.

இந்த எண்ணிக்கையானது மிகவும் துயரம் தரும் வாழ்வியலை எடுத்தியம்புகிறது. ஊத்தியோகம் புரு லட்சணம் என்று சொல்லிக்கொண்டு ஒரு குடும்பத்துக்குத் தேவையான வருவாயைப் பெற்றுத்தரும் பொறுப்பை ஆண்மகனின் தலையில் சுமத்தி, அந்தக் குடும்பத்துக்கான தீர்மானம் எடுக்கும் பொறுப்பை அந்த வீட்டில் இருக்கும் ஆணின் தலையில் சுமத்தும் சமூகத்தில் இன்று வரை வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். அவ்வாறான மரபுக்கே இன்றைய சமூகமும் பழகி விட்டது. இவ்வாறாக எதற்கும் ஆண்தான் முக்கியத்துவமானவன் என்ற கொள்கையும்மரபும் இத்தனை போராட்டங்கள், பெண்படையணிகளை பெண்களே பொறுபு;பேற்று எத்தனையோ சமர்க்களங்களைக்கண்டு அவற்றில் வெற்றிச்சாதனை புரிந்து சாகசம் செய்துள்ள இன்றைய நிலையிலும் இந்த கருத்தியலில் இருந்து சமூகம் மாறவில்லை என்பது சாபக்கேடு என்றுதான் கொள்ளவேண்டும்.

அதற்கு காரணமாக பிரதானமாக வருவாயை குடும்பத்துக்கு கொண்டு வந்து அந்த குடும்பத்தின் தேவைகளை பூர்த்தி செய்தவன் ஆண்மகனே. அது அந்தக்காலம் நடந்தது என்னவோ உண்மைதான்.

ஆனால் இன்று பெண்கள் வேலைகளுக்குச்சென்று குடும்பத்தையும் பிள்ளைகளையும் பார்த்துகொண்டு வருவாயைத் தேடி குடும்பத்தைத்தடிலைமை தாங்கிச் செல்லுகின்றாள். என்னதான் பெண்கள் வேலைக்கு சென்று வருவாயை தேடினாலும் குடும்பப்பொறுப்பை முழுவதுமே தலையில் சுமந்தாலும் அவளிடமே குடும்ப அங்கத்தவர்களை பேணிப்பராமரிக்கும் முழுப்பொறுப்பும் வலிந்து திணிக்கப்பட்டுள்ளது. இதனாலேயே இவர்கள் வீட்டை அண்மிய பகுதிகளில் வேலை செய்ய விரும்புகிறார்கள்.

அதே போல் வேறு இடங்களுக்கு வேலைக்கு செல்வதானால் போக்குவரத்துச் செலவு அதிகமாகும். இன்னும் போக்குவரத்து வசதிகளும் சரியான முறையில் நடை பெறுவதும் இல்லை. உள்கட்டமைப்பு வசதிகள் செய்து வீதிகள் அபிவிருத்தி செய்யபட்டாததால் வெளிமாவட்டத்து வியாபாரிகளும் லீசிங் கம்பெனி காரர்களும் சிறுதொகை கடன் கொடுப்பவர்களும் நாளுக்கு நாள் சகல வீடுகளுக்கும் செல்வதும் வீட்டில் தனியே இருக்கும் பெண்பிள்ளைகளின் அல்லது முன் பள்ளிக்கு செல்லும் சிறுவர்களின் பாதுகாப்பை கேள்விக்குறியாக்குகிறது. இதையெல்லாம் கருத்தில் கொள்ளும் எந்தப் பெண்ணும் தூரத்தில் இருக்கும் இடங்களுக்கு வேலைக்குப் போவதை விரும்புவதில்லை.

இதில் தன் பிள்ளைகளையெல்லாம் இழந்த அல்லது மத்திய கிழக்குக்கு சென்றவர்களின் பேரப்பிள்ளைகளை பராமரிக்கும் வயது முதிர்ந்த பாட்டிமாரின் பாடு அந்தோ பரிதாபம். இவர்கள் மூன்று நான்கு பேரப்பிள்ளைகளையும் பராமரிக்க வேண்டும். அதே நேரம் வருவாயையும் தேடிக்கொள்ள வேண்டும்.

அத்துடன் தமது கடமை முடிந்தது என்று இருந்துவிடுகின்றார்களா? இன்னும் அவர்கள் தமது உரிமைகளையும் அரசியல் தீர்வுவேண்டியும் அரசியல் போராட்டங்களையும் மேற்கொண்டுவருகின்றார்கள் என்றால் பெண்ணினத்தின் பொறுப்புமிக்க போராட்ட வாழ்க்கையை என்னவென்று சொல்வது.

அதனைடவிட பெண்போராளிகளாக இருந்த பெண்களின் நிலையோ இன்னும் பரிதாபம். அவர்களை மணம் முடிக்க எந்த ஆண்மகனும் இலகுவில் முன் வராத நிலையும் காணப்படுது கொடுமையிலும்கொடுமை.

தொழில் வாய்ப்பு தேடிப்போனாலும் இலகுவில் இவர்களை எல்லாரும் வேலைக்கு அமர்த்த முன் வராத நிலையும் காணப்படுகிறது. அப்படி வேலைகள் கிடைத்தாலும் உடல் நிலை இயலாமை காரணமாக அவர்களுக்கு வேலை செய்யவும் முடிவதில்லை. இன்னும் தன் உடல் பாகத்தில் செல் துண்டுகளை சுமப்பவர்களாகவே இவர்கள் வாழ்கின்றார்கள். பலருக்கு மருத்துவ வசதி தேவைபடுகிறது.

இன்னும் சிலர் போரில் கைகால் இழந்த சக்கர நாற்காலியில் வாழும் துணைவனையும் கவனிக்க வேண்டியவர்களாக உள்ளனர். இந்த பெண்ணே அவருக்கு தேவையான மருத்துவ செலவையும் தேடிக்கொள்ள வேண்டும். இவர்கள் துணை இருந்தும் விதைவையாக வாழ்பவர்கள். இவ்வகையான பெண்கள் முகம் கொடுக்கும் சவால்கள் சாதாரணமான போரில் பாதிக்கபட்ட பெண் முகம் கொடுக்கும் சவால்களை விட பன்மடங்கு அதிகமானது.

அதுமட்டுமன்றி இம்முன்னாள் போராளிப்பெண்கள் இராணுவத்தினரின் கழுகுப்பார்வைகளிலிருந்து தப்பி சாதாரணமாகவும் சுதந்திரமாகவும் வாழ்வது என்பது குதிரைக்கொம்பாகிவிட்ட விடயம். அரசாங்கம் மாறினாலும் அரச இயந்திரமும் அரச அதிகாரிகளும் மாறவில்லை என்பதை இங்கே சுட்டிக்காட்ட வேண்டும். இவ்வாறாக அன்றாடம் அடிப்படை தேவைக்காக தங்களுடைய கௌரவமான வாழ்வுக்காக போராடும் இந்த பெண்களின் அவல நிலையைப்போக்கப் போர் முடிந்து வருடங்கள் கடந்த நிலையிலும் எந்த அரசியல் கட்சியும் எந்த விதமான ஆக்கபூர்வமான செயல்திட்டத்தையும் இன்று வரை முன் வைக்கவில்லை என்பது கவலைகொள்ளும் விடயம் மட்டுமல்ல் ஒவ்வொரு பெண்ணையும் சிந்திக்கத்தூண்டும் விடயமாகவும் உள்ளது.

தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்த வருகின்றோம் என்று கதிரையில் அமர்ந்தவர்கள் மக்களை மறந்துவிட்டார்கள், தமக்குள்ளே சண்டை போடுகின்றனர், இன்னும் சிலர் குற்றம் காண்பதிலும் குறை சொல்லுவதில் மட்டுமே காலத்தைப் போக்குகின்றனர்.

முதலில் போரால் பாதிக்கபட்ட சமூகத்துக்கு இப்போது உடனடியாக தேவைப்படுவது பசி பட்டினி இல்லாத வாழ்வுக்கான போராட்டத்திற்கு தீர்வு, அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்தலுக்கான போராட்டத்திற்கான தீர்வு, அதன் பின்னர் சரியான கல்வி வசதி, பொருளாதார வசதி உடல் மற்றும் உள்ள ஆரோக்கியம், கௌரவமான பாதுக்காப்பான வாழ்க்கைக்கான போராட்டத்திற்கான தீர்வு. இவ்வாறு தீர்வுகள் பல இன்னும் தீர்க்கப்படாமலே தமிழர்களின் குறிப்பாக பெண்களின் போராட்ட வாழ்க்கை முறை போராட்டத்துடனேயே கழிந்துகொண்டிருக்கின்றது.

# சேர் ராஸிக் பரீடின் மகளிருக்கான மகத்தான சேவைகள்



மறைந்த மாமனிதர் எம் பெருமதிப்புக்குரிய தலைவர் சேர் றாசிக் பரீட் அவர்களின் 125 வது பிறந்த தினம் 2018 டிசம்பர் மாதம் 29ம் திகதியாகும்.

இவரது தாயார் பெயர் ஹாஜரா உம்மாஇ தந்தை ஹொனரபல் டபிள்யூ. எம். அப்துல் றகுமான், பாட்டனார் வாப்பிச்சி மரைக்கார் இவர்கள் எல்லோருமே பொது நோக்கும் சமூக சிந்தனையும் உடையவர்கள்.

சேர் றாசிக் பரீட் அவர்களுக்கு மூன்று வயதாக இருக்கும் போது தாயார் காலமானார். அதன் பின்னர் சகோதரி உம்மு ஹஸீனாவோடு பம்பலப்பிட்டி இல்லத்தில் வசித்து வந்தார். அல்குர்ஆனையும் ஆரம்ப கல்வியையும்இ அரபு மொழிக் கல்வியையும் கற்றுத் தேர்ந்தார்.

தனது 11 ஆவது வயதில் கொழும்பு றோயல் கல்லூரியில் இணைந்து கல்வியை தொடர்ந்தார்.

இளமையில் இருந்தே சமூக சேவையில் ஆர்வம் காட்டினார். 1913 இல் தனது இருபதாவது வயதில் மத்திய கொழும்பு இளைஞர் சம்ளேனம் என்னும் ஒரு அமைப்பை நிறுவி மக்களின் தேவைகளை மேம்படுத்த பாடுபட்டார்.

1930 இல் கொழும்பு மாநகர சபை நியூ பஸார் வட்டாரத்தில் போட்டியிட தந்தையிடம் அனுமதி கேட்ட போது அவர் முழு விருப்போடு அனுமதியும் செலவுக்கான நிதியும் வேறு சொத்துக்களும் கொடுத்து உற்சாகமூட்டினார்.

தேர்தலில் வெற்றி பெற்றதோடு அந்த வட்டாரத்தை தொடர்ந்தும் தனதாக்கிக் கொண்டார். இவரது பாராட்டத்தக்க சேவைக்காக 1932 இல் சமாதான நீதவான் பதவியும்,1936 இல் இலங்கை சோனகரின் பிரதி நிதியாக அரசாங்க சபை உறுப்புரிமையும் கிடைத்தது.

இதிலிருந்து மக்கள் மத்தியில் இவருடைய செல்வாக்கு உயர்ந்தது. தொட்டது துலங்கும் கேட்டது கிடைக்கும் என்ற அளவுக்கு வெள்ளி உச்சம் கொடுத்தது. பம்பலப்பிட்டியில் முஸ்லிம் பெண்களுக்கு கல்வி வசதி இல்லாமையை உணர்ந்த சேர் றாசிக் பரீட் அவர்கள் அந்தக்குறையை நிவர்த்தி செய்ய துரித முயற்சி எடுத்தார்.

1946 நவம்பர் மாதம் 1ம் திகதி அப்போதைய கல்வி அமைச்சரும், இலவச கல்வியின் தந்தை என வர்ணிக்கப்பட்டவருமான டாக்டர் கன்னங்கரா அவர்களைக் கொண்டு இதை ஆரம்பித்தார். ஆரம்ப வேளையின் போது 26 மாணவர்களும் 3 ஆசிரியர்களும் மட்டுமே இருந்தனர்.

சேர் றாசிக் பரீட் அவர்கள் அழகுணர்ச்சி மிக்கவர் அவர் தனது பம்பலப்பிட்டி பரீட் பிளேஸ் இல்லத்தில் ஒரு ஓக்கிட் மலர் தோட்டத்தையே உருவாக்கி இருந்தார்இ அந்த தோட்டத்தில் அதிக நேரத்தை செலவிடுவார் என அவதானிகள் கூறும் தகவல். இல்லத்தின் எதிரே மகளிர் கல்லூரி, மகளிர் கல்வி வளர்ச்சியோடு கல்லூரியின் எதிர்கால வளர்ச்சி அவர் சிந்தனையில் நிரம்பி நிற்கும்.

இன்று எங்கள் கல்லூரி தலை நகரில் தனித்துவமிக்க மகளிர் கல்லூரியாக சகல வசதிகளுடனும் தலை நிமிர்ந்து காட்சிதருவது எங்கள் எல்லோருக்கும் பெருமையை தருகிறது.

யா அல்லாஹ்! தலைவர் சேர் றாசிக் பரீட் அவர்களின் நற்சேவையை ஏற்று அன்னாரை ஜன்னத்துல் பிர்தௌஸில் மேலானவர்கள் வரிசையில் இடம்பெறச் செய்வாயாக!ஆமீன் ஆமீன் யாறப்பல் ஆலமீன்.

**உல்பத் இபாஸா டில்ஷாட்**
**தரம் 8 E**
**முஸ்லிம் மகளிர் கல்லூரி**
**பம்பலப்பிட்டிய**

## அரசியல்...

II ஆம் பக்கத் தொடர்ச்சி

தடை விதித்துவிட்டது.

ஆனாலும், இந்த அரசியல் நெருக்கடி அரசியல் காரணங்களால் உருவானது என்பதே உண்மையாகும். எனவே அதை அரசியல் ரீதியாகத் தீர்ப்பது தான் முறை.

அப்படிப் பார்த்தால், புதிதாக பொதுத் தேர்தல் ஒன்றை நடத்தி மக்களிடம் புதிதாக ஆணை பெறுவதொன்றே இதற்கான தீர்வாகும்.

அதை விடுத்து நாடாளுமன்றத்தில் விலைக்கு வாங்கப்பட்ட உறுப்பினர்கள் மூலமும், பிற்போக்கு அரசியல் நோக்கங்கள் மூலமும் உருவாக்கப்பட்ட பெரும்பான்மையைக் காட்டி வலுக்கட்டாயமாக ஆட்சியைத் தொடர்வதற்கு ஐ.தே.கட்சிக்கு எந்தவிதமான உரிமையும் இல்லை. அதுமட்டுமல்ல, பெரும்பான்மை பலம் என்று பார்த்தாலும் கூட இன்று எதிரணியில் இருக்கும் பொதுஜன பெரமுனையும், சுதந்திரக் கட்சியும் கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் ஐ.தே.கவை நான்கில் மூன்று பெரும்பான்மை வாக்குகளால் தோற்கடித்திருக்கின்றன. எனவே, புதிதாக மக்கள் தீர்ப்பைப் பெறுவதுதான் இன்றைய அரசியல் நெருக்கடி தீர்வதற்கான ஒரே வழியாகும்.

ஒரு தனி மனிதனின் கையில் இருக்கும் நிறைவேற்று அதிகாரத்தை விட, 225 நாடாளுமன்ற உறுப்பினர்களிடமிருக்கும் சட்டவாக்க அதிகாரத்தை விட, விரல் விட்டெண்ணக்கூடிய நீதிபதிகளின் சட்ட வியாக்கியான அடிப்படையிலான தீர்ப்புகளை விட, இலங்கையின் இரண்டு கோடி மக்களினால் ஜனநாயக முறைப்படி நடத்தப்படும் தேர்தல் ஒன்றில் வழங்கப்படும் தீர்ப்புதான், ஜனநாயக ரீதியானதும், இறையாண்மை மிக்கதும், தேசப்பற்று மிக்கதுமாகும்.

எனவே, ‘நாடு பொதுத் தேர்தல் ஒன்றுக்கு செல்ல வேண்டும்’ என அனைத்து மக்களும் ஏகோபித்து குரல் எழுப்ப வேண்டும்.

## எது...

09 ஆம் பக்கத் தொடர்ச்சி

மோசமடைந்தது. ஆரம்பகால மிதவாதிகளிடம் இருந்த ஆகக் குறைந்த அரசியல் ஒழுங்கு மற்றும் நேர்மை கூட இவர்களிடம் இருக்கவில்லை.

2009இற்கு பின்னர் அரசியல் அரங்கிற்கு வந்திருக்கும் தமிழரசு கட்சியின் அரசியல் வாதிகளில் அனேகர் அரசியல் தொடர்பில் எவ்வித பயிற்சியோ படிப்போ இல்லாதவர்கள்.

இவர்களிடம் ராஜதந்திர ஆற்றலை எதிர்பார்க்க முடியுமா? இவர்களில் அனேகர் கல்வி திணைக்களங்களில் பணியாற்றி ஓய்வுபெற்றவர்கள், ஏனையோர் கட்டுமான பணிகளிலும் வியாபாரங்களிலும் ஈடுபட்டவர்கள்.

இவர்களைப் பொறுத்தவரையில் அரசியல் என்பது கோசங்களும் சுலோகங்களுமே அன்றி, வேறில்லை.

ஏனெனில் அவர்களுக்கு வேறு ஒன்றும் தெரியாது. இயல்பிலேயே தமிழ் சமூகத்தின் அறிவுத்தேடல் என்பது அரச உத்தியோகத்துக்குரியது.

இதன் காரணமாக தமிழர்களின் அறிவுசார் தேடல் பெருமளவிற்கு திணைக்களங்கள் சார்ந்ததாகவே இருக்கிறது.

இதனை திணைக்களத்தனம் (Departmentality) என்றும் வரையறுக்கலாம். தமிழர்களின் செயற்பாடுகளில் இந்த திணைக்களத்தனம்தான் எல்லா இடங்களிலும் மேலோங்கிக் காணப்படுகிறது.

அதாவது ஏற்கனவே இன்னொருவரால் வகுக்கப்பட்டிருக்கும் சட்டதிட்டங்களுக்குள் பணியாற்றுவதற்கான அறிவுதான் இவர்களுடையது. இவ்வாறானவர்களே பின்னர் அரசியலுக்கும் வருகின்றனர்.

இதன் காரணமாகவே இவர்களால் புத்ததாக்கமிக்க, தந்திரோபாயம் சார்ந்து, சூழ்நிலைகருதி முடிவெடுக்கும் திறன் சாடந்து, செயலாற்ற முடியாமல் இருக்கிறது.

இவ்வாறானவர்கள் அரசியல் அரங்கில் செல்வாக்குச் செலுத்தும் வரையில் ராஜதந்திரம் என்பது தமிழர்களை பொறுத்தவரையில் தேர்தல் அரசியல் மட்டும்தான்.

# அதிகரித்து வரும் இடைவிலகல்களும் சமூகப் பங்களிப்பின் அவசியங்களும்!



மலையக பகுதிகளில் கல்வி அபிவிருத்தி ஒரு புறம் மேம்பட்டுள்ள வேளையில் மாணவர் மத்தியில் இடைவிலகலும் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்து வருகிறது. இடைவிலகுவோரின் எண்;ணிக்கை பொதுவான அனுமானத்தை விட அதிகமான எண்ணிக்கையில் இருப்பது அதிர்ச்சி தரக் கூடிய விடயமென்பதுடன், இது ஒட்டு மொத்த மலையக சமூகத்தின் வளர்ச்சியில் பாரதூரமான பாதிப்பை ஏற்படுத்தும் விடயமாகும்.

பிள்ளைகள் மத்தியிலும் பெற்றார் மத்தியிலும் கல்வியில் ஆர்வம் குறைவதற்கு பெருந்தோட்ட மக்கள் மத்தியில் சினிமா மோகமும், தொலைக் காட்சி நாடக மோகமும் பெருமளவில் காரணமாக இருக்கின்றன. அனேகமான வீடுகளில் காலைமுதல் மாலைவரை இந்திய சினிமாக்களை பார்ப்பதும் , மாலைவேளைகளில் இந்திய தொலைக் காட்சி நாடகங்களையும் பார்ப்பதன் காரணமாக வீடுகளில் கற்றலுக்கான சூழலுக்கு பாதிப்பு ஏற்படுகிறது. கல்வியில் அவர்களின் ஆர்வத்தை குறைக்கிறது. பெற்றார்களும் இதனை ஒரு பாரதூரமான பிரச்சானையாக கருதுவதாக தெரியவில்லை. சிறுவர்களுக்காக நடத்தப்படும் பல செயலமர்களின் போது உங்களுடைய கதாநாயகன் இல்லது கதாநாயகி யார் என்று கேட்டால் தொன்னூற்றுக்கும் அதிகமான சிறுவர்கள் சினிமா நடிகர்களினதும் நடிகைகளினதும் பெயர்களையே சொல்கிறார்கள். தங்களுக்காக பல பரித்தியாகங்களை செய்து , தங்களுக்கு உணவு உடைகொடுத்து பாதுகாக்கும் தாயையோ தந்தையையோ தமது கதாநாயர்களாகவே அல்லது கதாநாயகிகளாவே அடையாளப்படுத்தும் பிள்ளைகள் ஐந்து சதவிகிதம் கூட இல்லை என்பதை அவதானிக்க கூடியதாகவே உள்ளது. இது மிகவும் கவலைக்குறிய விடயமாகும். மாணவரின் விழுமியங்களில் ஏற்பட்டுள்ள இந்த பாதிப்பு பின்னர் அவர்கள் இடைவிலகளுக்கு ஒரு காரணமாக உள்ளது என்பதை பலர் பாரதூரமான விடயமாக கருதுவதில்லை.

இதற்கிடையில் இடைவிலகிய மாணவரோடு நடத்தப்பட்ட பல கலந்துரையாடல்களின் போது இடைவிலகலுக்கு காரணமான பல்வேறு விடயங்களையும் வெளிக் கொணர கூடியதாக இருந்தது. இடைவிலகிய மாணவர்களில் ஆண் பிள்ளைகளும் பெண் பிள்ளைகளும் சம அளவில் காணப்பட்டனர். பெற்றோரில் ஒருவர் வெளிநாடு சென்றுள்ள குடும்பங்களில் இடைவிலகள் பாரிய பிரச்சனையாக உள்ளது. இவ்வாறான குடும்பங்களில் தந்தைமார் பிள்ளைகள் குறித்து அக்கறை காட்டாமை , அல்லது கவனிக்காமல் விடப்படுகின்றமை, பெற்றோர்கள் தொழில் காரணமாக வெளிநாடுகளுக்கு அல்லது வெளி இடங்களுக்கு சென்லும் போது பராமரிப்பாளரால் பிள்ளைகள் கவனிக்கப்படாமல் விடப்படுதல், தாய் தந்தைக்கு இடையில் குடும்ப பிரச்சினை ஏற்பட்டு பிரிதல், பெற்றோரில் ஒருவர் உழைக்க முடியாத அளவுக்கு சுகவீனமடைவதால் குடும்ப வருமானம் பாதிக்கப்படுதல், பிள்ளைகளுக்கு நோய்கள் ஏற்படும் போது அவற்றிற்கு சரியான சிகிச்சை அளிக்கப்படாததினால் சுகவீனம் நீண்ட நாட்களுக்கு தொடர்வதனால் பாடசாலையில் இருந்து இடைவிலகல், போதிய வழிகாட்டல் இல்லாததினால் தங்களிடம் இருக்கும் வளங்களை முறையாக பயன்படுத்த தெரியாத பெற்றோர்கள் வறுமையை காரணங்காட்டி பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பாமல் இருத்தல் என்பது போன்ற காரணங்கள் இடைவிலகலுக்கு காரணமாக இருக்கின்றன. மொத்தத்தில் வறுமை காரணமாக மட்டும் இடைவிலகல் ஏற்படுவதாக காட்டுவதற்கான ஆதாரங்கள் மிகவும் குறைந்த அளவே காணப்பட்டன.

இந்த மாணவர்களுக்காக நடத்தப்பட்ட செயலமர்வின் போது கல்வியின் முக்கியத்துவம் எடுத்துரைக்கப்பட்ட போது அனைவருமே மீண்டும் பாடசாலைக்கு செல்லுவதற்கு அக்கறை காட்டுகிறார்கள். பொருளாதார ரீதியில் உதவி வழங்கப்படாவிட்டால் பாடசாலைக்குச் செல்ல முடியாத சில மாணவர்களையும் இவ்வமர்வுகளின் போது அடையாளம் காண முடிந்தது. இவ்வாறானவர்களுக்கு அரசினால் வழங்கப்படும் பொருளாதார ரீதியான உதவிகளை பெற்றுக் கொடுப்பது அவசியமாகும். இந்தவேளையில் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்ட நகர் மற்றும் கிராம புற குடும்பங்களுக்கும் மற்றும் பிள்ளைகளுக்கும் அரசின் மூலமாக வழங்கப்படும் உதவிகள் பெருந்தோட்ட பிள்ளைகளுக்கு கிடைக்கவில்லை என்பதை சுட்டிக்காட்டல் அவசியம். இவ்வாறான உதவிகள் இப்பிள்ளைகளுக்கு கிடைக்க வேண்டுமென குரலெழுப்பி அழுத்தம் கொடுப்பதற்கு ஆசிரியர்கள், அதிபர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்கம், மலையக அரசியல் வாதிகள், நலன் விரும்பிகள் ஆகிய அனைவருக்கும் பொறுப்பு உள்ளது. விசேடமாக கோயில் கமிட்டிகள் இதுவிடயத்தில் நல்ல பங்களிப்பை செய்யலாம். தோட்டங்களில் மிகவும் வறுமை காரணமாக தங்கள் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்ப முடியாத பிள்ளைகளில் சிலருக்கு அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றுவதற்கு ஆலய பரிபாலன சபை நிதி உதவி வழங்க முடியும். பிரிடோ நிர்வனம் முன்னெடுக்கும் சிறுவர் உரிமை மேம்பாடு, இடைவிலகல் மாணவர்களை பாடசாலையில் சேர்த்தல் போன்ற பணிகளில் உதவி செய்வதற்காக போகவந்தாலாவை கீணீபி. கோயில் பரிபாலன சபை மாதா மாதம் ஒரு குறிப்பிட்ட தொடிகை தனது நிதியில் இருந்து வழங்கி வருகிறது. இது மற்றைய கோயில் பரிபால சபைகளுக்கு நல்லதொரு முன்மாதிரியாகும்.

முன்னைய காலங்களில் பாடசாலைக்கு மாணவர்கள் வராமல் இடைவிலகும் போது ஆசிரியர்களும் அதிபர்களும் அது தொடர்பான விழிப்பணர்வுடன் இருந்து அவ்வாறான பிள்ளைகளை தாங்களாகவோ அல்லது பாடசாலை அபிவிருத்தி சங்க உதவி மூலமாகவோ அவர்களை மீண்டும் பாடசாலைக்கு கொண்டு வந்து சேர்க்கும் ஒரு சமூக பற்றுடனான கலாச்சாரத்தை நாம் காண முடிந்தது. ஆயினும் தற்போது இந்த சமூக உணர்வை பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்கள் மத்தியில போதியளவு காணமுடிவதில்லை. இதன் காரணமாக மிகச் சிறிய காரணங்களுக்காக ஓரிரு நாள் பாடசாலை வராமல் இருக்கும் மாணவர்கள் அது தொடர்பாக பெற்றோரும் பாடசாலையும் அக்கறை காட்டாதன் காரணமாக தொடர்ச்சியாக பள்ளி செல்லாத இடை விலகிய மாணவர்களாக ஆகிவிடுகின்றனர்.

இதை விட பாடசாலை கட்டணங்களை செலுத்த முடியாமையினால் தங்களால் தங்கள் பிள்ளைகளை அனுப்ப முடியவில்லை என சில பெற்றோர்கள் கூறுகிளார்கள். இது ஒரு பாரதூரமான விடயமாகும். இலங்கையில் இலவச கல்வி நடைமுறையில் உள்ளது. அத்தோடு அனைவருக்கும் கல்வி என்ற கோட்பாடை அரசாங்கம் கடுமையாக வலியுறுத்துகிறது. இந்த பிண்ணனியில் பாடசாலை கட்டணம் செலுத்த முடியாது என்ற காரணத்தினால் தன்னுடைய பிள்ளை பாடசாலைக்கு செல்லாமல் இருக்கின்றது என்ற நிலை ஏற்படவே முடியாது. இந்த பிண்ணனியில் இவ்வாறாக வறுமையில் இருக்கும் பிள்ளைகளுக்கு பாடசாலை கட்டணம் பாடசாலைக்கு வருவதற்கு தடையாக இருப்பதை எந்தவொரு அதிபரும் அனுமதிக்க மாட்டார்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம் தான். ஆயினும் பெற்றாரும் தங்கள் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பாமல் இருக்க இந்த விடயத்தை சொல்வதற்கு காரணம் தங்கள் இயலாமையை நிரூபித்தால் எது வித கட்டணமும் இன்றி பிள்ளை பாடசாலையில் சேர்க்கு முடியும் என்ற சாதாரண விடயமும் இ;ந்த பெற்றாருக்கு தெரியாமல் இருப்பதாகும் . எனவே இதுவிடயத்தை பெற்றாருக்கு அறிவுறுத்தி ஒவ்வொரு பிள்ளையும் பாடசாலை செல்வதை உறுதி செய்வது அதிபர்களின் பொறுப்பாகும்.

ஒவ்வொரு தோட்டத்திலும் பிள்ளைகள் பாடசாலைக்கு செல்லாதிருக்கும் போது அது தொடர்பாக அந்த தோட்டத்திலுள்ள அனைவருக்கு அது தொடர்பாக தெரிந்திருந்தும் அது தொடர்பாக சமூகம் அக்கறை காட்டாமல் இருப்பது துரதிஷ்டவசமாகும் பெருந்தோட்ங்களில் மக்கள் நெருக்கமாக வாழுவதாலும் மக்கள் மத்தியில் பல விடயங்களில் கூட்டுறவு இருப்பதனாலும் பாடசாலை செல்லாது இடைவிலகிய மாணவர்கள் குறித்து சமூகம் அக்கறை காட்டு;ம் நிலைமையை ஏற்படுத்துவது இலகுவாகும் .ஒவ்வொரு தோட்டத்திலும் முன்பள்ளி ஆசிரியர்கள், கோயில் அபிவிருத்தி சபை, வேறு அமைப்புக்களின் பிரதிநிதிகள், பெண்கள் அமைப்புக்களின் சிறுவர் கழகத்தின பிரதிநிதிகள் ஆகியோரை உள்ளடக்கிய கண்காணிப்பு குழு ஒன்றை ஏற்படுத்தலாம். வசதியான போது கிராம சேவகர், சமூர்த்தி உத்தியோகத்தர், தோட்ட வைத்திய அதிகாரி,சேம நல உத்தியோகத்தர் ஆகியோரையும் இக்குழுவில் உள்ளடக்கலாம். இக்குழுவினர் பாடசாலை செல்லாமல் இடைவிலகிய மாணவர்கள் குறித்து அக்கறை காட்டும் குழுவாகவும் பாடசாலையோடு தொடர்பு கொண்டு இடைவிலகலை குறைப்பதற்கு ஆலோசனையும் உதவி வழங்கும் குழுவாகவும் அரச நிறுவனங்களோடு தொடர்புகளை ஏற்படுத்தும் குழுவாகவும் செயற்படும் போது இடைவிலகலை குறைப்பதோடு மாணவர்கள் ஒழுங்காக பாடசாலை செல்வதற்கு உதவி செய்யும் பணியை மேற்கொள்ள முடியும். இவ்வாறான குழுக்கள் சிறப்பாக இயங்குமானால் இடைவிலகலை மட்டுமன்றி பிள்ளைகள் தொடர்பான வேறு பணிகளிலும் முழு சமூகமும் சமூக உணர்வோடு செயல்படும் நிலையை உருவாக்கலாம்.

இதே வேளையில் தோட்டங்களில் நடத்தும் சிறுவர் கழகங்களின் உறுப்பினர்கள் இடைவிலகிய மாணவர்கள் தொடர்பாக சிறப்பான பணிகளை செய்து வருகின்றனர். இடைவிலகிய மாணவர்கள் அடையாளம் காணுதல், அவர்களை பாடசாலைக்கு அனுப்புமாறு பெற்றாரை வலியுறுத்துதல், இடைவிலகிய மாணவருக்கு பாடசாலை புத்தகங்கள் கொப்பிகள் எழுத்துபகரணங்கள் என்பன இல்லாத போது அதற்காக உதவிகளை மற்றவர்களிடம் இருந்து பெற்றுக்கொடுத்தல், சில சந்தர்ப்பங்களில் தங்களின் பணத்தை சேகரித்து கொப்பி புத்தம், புத்தகப்பை ஆகிவற்றை வாங்கித்தருதல் என்னும் செயல்பாடுகள் மூலம் இடைவிலகியவர்களை மீண்டும் பாடசாலைக்கு அனுப்புகின்றனர். இவை மற்றயை தோட்டங்களிலும் கடைபிடிக்கக் கூடிய, அற்புதமான முன்மாதிரிகையாகும். சிறுவர் கழகங்கள் நன்றாக இயங்கும் தோட்டங்களில் இடைவிலகல் குறைவு என்பது இந்த சிறுவர்களின்

இறுதியாக இடைவிலகிய மாணவர்கள் மற்றும் சிறுவர் மேம்பாடு தொடர்பான அரசின் திட்டங்கள் பெருந்தோட்ட சமூகத்திற்கு இலகுவில் கிடைப்பதற்கான பரிந்துரையை நாம் மேற்கோள்வது அவசியமாகும். மலையக பெருந்தோட்ட சமூகத்தில் இடைவிலகல் ஒரு அபாய காரணியாக உருவெடுத்து வருவதை நாம் அடையாளங்கண்டு அதனை தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பது காலத்தின் தேவையாகும்.

**எஸ். வடிவழகி**

---

**புதிய..**

**07 ஆம் பக்கத் தொடர்ச்சி**

புனர்வாழ்வளிப்பதற்கென புதிய சட்டமொன்று அறிமுகப்படுத்தப்படும். பலவகையான இரசாயனத்துடனான போதைப்பொருட்களை இணங்காண்பதற்கென துரித நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு தேசிய சபை தெரிவித்திருந்தது. அதேபோன்று போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபடுவோருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்படும். எவ்வாறான தடைகள் வந்தாலும் குறித்த விடயம் தொடர்பில் கவனம் செலுப்படுமென ஜனாதிபதி தெரிவித்திருக்கின்றார். போதைப்பொருள் விநியோக வலயத்தில் கைவைக்காமல் நாட்டில் போதைப்பொருள் பாவனை அதிகரிப்பதை நிறுத்த முடியாது. கடந்த 2015ம் ஆண்டிலிருந்து போதைப்பொருள் வர்த்தக நடவடிக்கைகளை முடக்க தற்போதைய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. கடந்த 2002ம் ஆண்டளவில் ஆரம்பிக்கப்பட்ட வேலைத்திட்டங்களை முன்னோக்கி கொண்டுசெல்வதற்கென சட்டதிட்டங்களை முறையாக செயற்படுத்தாமை, போதைப்பொருள் ஒழிப்புக்கான வேலைத்திட்டங்கள் இன்மை மற்றும் அரசியல் தலையீடு காரணமாக போதைப்பொருள் பாவனை கிராமங்களிலும் வியாபித்துள்ளதாக பிரதமர் சுட்டிக் காட்டியுள்ளார். போதையினை நாட்டில் இருந்து ஒழிப்பதற்காக ஜனாதிபதியின் தலைமையில் பல்வேறு விழிப்புணர்வுகளும் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. இலங்கையில் போதைப்பொருட்கள் ஒரு பொதுப்பிரச்சினையாக மாறிவிடுமோ என்ற அச்சம் பல்வேறு மட்டங்களிலும் ஏற்பட்டுள்ளது. அதன் விளைவாக போதைப்பொருள் குற்றங்களைக் கட்டுப்படுத்தவென மரணதண்டனையை மீண்டும் நடைமுறைக்கு கொண்டு வருவதற்கு அமைச்சரவையும் தீர்மானித்துள்ளது. இவ்வாறான செயற்பாடுகள் குறித்து பேசப்பட்டாலும் கூட இன்னமும் இச் செயற்பாடுகள் நடைமுறைக்குவரவில்லை என்பதே வேதனையான விடயமாகும்;.

போதைப்பொருள் விற்பனையில் தொடர்புடையவர்களாக வசதி, வாய்ப்புக்களை உடைய சிலரே இருக்கின்றனர் என்பதும் பலரின் கருத்தாகவிருக்கின்றன. பணத்தினை இலகுவாகவும், அதிகமாகவும் சம்பாதிப்பதற்கு இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். இவற்றோடு நின்றுவிடாது திட்டமிட்டு சமூக ஒழுக்கத்தோடு இருக்கின்ற சமூகத்தினை சீர்குலைக்கும், அழிக்கும் சிந்தனையுடனும் போதைப்பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றமையே விசனத்துக்குரியதாகும்.

ஆயுதப்போராட்டங்கள் மூலமாக மனிதர்களை அழிப்பதனைவிட சிறிது சிறிதாக போதைப்பொருட்களின் ஊடாக மனிதர்களை அழித்துவிட முடியும். இதனால்தான் போதைப்பொருள் வியாபாரங்களுக்கும் சர்வதேசங்களிலேயே தடை விதிக்கப்பட்டுள்ளது. அதேநேரம் பல நாடுகளில் சட்டவிரோத போதைப்பொருள் விற்பனைக்கு பாரியளவிலான தண்டணைகள் வழங்கப்படுகின்றன. குறிப்பாக மரணதண்டனை இதற்கு வழங்கப்பட்டுகின்றது. இதன்மூலமாகவே நாட்டில் போதைப்பொருள் விற்பனையினை தடுக்கமுடியும் என்பது அந்நாடுகளின் எண்ணமாகவிருக்கின்றது. இதன்பயனாக பல நாடுகள் வெற்றியும் கண்டுள்ளது. இந்நிலையில்தான் இலங்கை நாடும் போதைப்பொருள் பாவனைக்கெதிராக மரணதண்டணை சட்டத்தினை நிறைவேற்ற பேசிவருகின்றது.

நாட்டில் உள்ள மக்களுக்கு இடையிலான பிரச்சினைக்கு தீர்வினை வழங்க வேண்டியபொறுப்பு இந்த நாட்டின் அரசுக்குள்ளது. நாட்டினைப் பொறுப்பேற்ற காலம் நிறைவுபெற அண்மித்துள்ள சூழலில், தீர்வு விடயம் மிகமுக்கியமானதொரு விடயமாக நோக்கப்படுகின்றது. அந்நோக்கத்தினை தற்போதைய அரசு 2019க்குள் நிறைவேற்ற வேண்டும். அவ்வாறின்றி கடந்த காலங்களைப் போன்று இழுத்தடிப்புக்களை மேற்கொண்டால், நாடு தொடர்ந்தும் பிரச்சினைகளையையே சந்திக்க நேரிடும். இதனால் நாட்டிற்குள் உள்புகும் புதிய பிரச்சினைகளை இலங்கை அரசினால் நிறுத்தமுடியாமல் போகும். இதன்காரணமாக நாட்டில் வெவ்வேறான பிரச்சினைகள் ஏற்படக்கூடும். எனவே காலத்தினையும், நேரத்தினையும் இலங்கை கடந்துநினைக்குமானால், அவ்வாறு தாழ்த்தப்படும் ஒவ்வொரு நேர, காலத்திற்கும் பாரிய பிரச்சினைகளை எதிர்கொள்ளவேண்டியேற்படும்.

உடல் நலத்திற்கு கேடுவிளைக்கின்ற, சமூகத்தினை சீரழிக்கின்ற போதைப்பொருளை கட்டுப்படுத்துவதற்காகவும் கட்டுப்பாட்டுச்சபைகள், திணைக்களங்கள் இயங்கிவருகின்றன. அவற்றினையும் கடந்து இன்றும் விற்பனை செய்யப்பட்டுக் கொண்டே இருக்கின்றன. இவ்வாறான செயற்பாடுகளை முற்றாக அழிக்க வேண்டியது நல்லாட்சிக்கு இருக்கின்ற ஒரு கடமையாகும். இதற்காக சில நாடுகளில் இருக்கின்ற கடுமையான சட்டத்தி



னையும், தண்டனையும் போன்று இலங்கையிலும் கடுமையான சட்டங்களை அமுல்படுத்த வேண்டும். அவ்வாறான சட்டங்கள் மூலமாக அதிகபட்ச தண்டனைகளையும் வழங்க வேண்டும். இதன்மூலம் போதைப்பொருள் அற்ற நாடாக இலங்கை உருவாக வேண்டும் என்பதே அனைவரினதும் விருப்பாகும்.

---

**இரணைமடு..**

**06 ஆம் பக்கத் தொடர்ச்சி**

அவசியமாகும் என கலாநிதி சிவகுமார் கூறுகிறார்.

யாழ். குடாநாட்டின் குடிநீர் தேவைக்காக இரணைமடு குளத்தின் நீர் படிப்படியாக வெளியேற்றப்பட்டிருந்தால் இரணைமடு குளத்தின் நீர் மட்டம் சடுதியாக உயர்ந்திருக்காது. நீர் மட்டத்தை கண்காணித்து நீரை வெளியேற்றியிருக்க வேண்டும். இதனை செய்ய சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தவறிவிட்டார்கள் என்றும் குற்றம் சாட்டப்படுகிறது.

இரணைமடு குள வெள்ள அனர்த்தத்தால் வீதிகள், வயல் நிலங்கள், ஆறுகள், வாய்க்கால்கள், பாலங்கள் என உட்கட்டமைப்பு மோசமாகச் சிதைந்திருக்கிறது.

கிளிநொச்சியில் அழிவு ஏற்படுவதற்கு காரணமாக இருந்த தமிழ் அரசியல்வாதி இப்போது இந்த அழிவை வைத்தே அரசியல் செய்ய முற்பட்டிருக்கிறார்.

---

**முஸ்லிம்...**

**10 ஆம் பக்கத் தொடர்ச்சி**

முடியாது என்பதில் மிகத் தெளிவாக இருக்கின்றோம்.

ஆனால் சாய்ந்தமருது மக்களுக்கு எவ்வித பிரச்சினையும் இல்லை என்றோ அவர்களின் கோரிக்கை விதன்டாவாதமானது என்றோ கல்முனை மக்கள் கூறமுடியாது. எவ்வாறு இந்த நாட்டில் தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் தேசிய இனப் பிரச்சினை இருக்கின்றதோ அதேபோன்று சாய்ந்தமருது மக்களுக்கு அந்த ஊரின் அடையாளம், தனித்துவம் சம்பந்தமான பிரச்சினை இருக்கின்றது என்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும். 1889ஆம் ஆண்டு கரைவாகு தெற்கு கிராம சபை என்று ஒரு தனித்துவமான அரசியல் அந்தஸ்தில் சாய்ந்தமருது மக்கள் இருந்தார்கள். துரதிர்ஸ்டவசமாக 1987ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா கொண்டுவந்த சட்டத்தின் காரணமாக கரைவாகு மேற்கு, கரைவாகு வடக்கு மற்றும் பட்டின சபை என்பவற்றுடன் ஒன்றாக இணைக்கப்பட்டது. இதனால் அந்த மக்கள் அவர்களுடைய உரிமைகளை இழந்தார்கள். தலைவர் அஸ்ரபின் காலத்தில் பிரதேச சபை தொடர்பில் பேசக்கூடாது என்று கூறி பிரதேச செயலகத்தை வழங்கினார். இருந்தபோதிலும் பின்பு ஏற்பட்ட அரசியல் மாற்றங்களினால் மீண்டும் பிரதேச சபை கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இப்பிரச்சினையை நாங்கள் பேசித் தீர்க்கவேண்டும், கல்முனை முஸ்லிம் களுடைய அபிலாசைகளுக்கு குந்தகமாகவும் இப்பிரதேசத்தின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு துரோகமாகவும் தீர்மானங்களை எடுக்க முடியாது என்பதிலும் தெளிவாக இருக்கின்றோம். அதேநேரம் தமிழ் மக்களுடைய வகிபாகத்தைக் கொடுத்து சாய்ந்தமருது மக்களுடைய அபிலாசையை தீர்க்கக்கூடிய தீர்வுகள் இருந்து கொண்டிருக்கின்றன. சாய்ந்தமருதுக்கான அடையாளத்தை அடைவதற்கு பல வழிமுறைகள் இருக்கின்றன. அதை தீர்மானிக்க வேண்டியவர்கள் சாய்ந்தமருதிலுள்ள கண்ணியமிக்க உலமாக்களும் பள்ளிவாசல் தலைவர்களும் அங்கு தெரிவு செய்யப்பட்டிருக்கின்ற மாநகர சபை உறுப்பினர்களுமாகும். எங்களுடைய கட்சியின் கதவுகள் திறந்திருக்கின்றன, ஆனால் சமூகப் பார்வையில் இவ்விடயம் பேசப்பட்டு தீர்க்கப்பட வேண்டும் என்பதுதான் என்னுடைய அவாவாகும் என இராஜாங்க அமைச்சர் ஹரீஸ் தெரிவித்தார்.

உண்மையான விடயங்களை உண்மையான முறையில் மேற்கொள்ள தூய்மையான அரசியல் பயணத்தில் முகாவின் அமைச்சர்கள் பயணிக்கிறார்களா என்பதை இனிவரும் சில மாதங்களில் நடைபெறுவதாகக் கூறப்படுகின்ற தேர்தல்கள் கட்டியம்கூறும். வெள்ளம், சிலை உடைப்பு, பள்ளிவாசல் உடைப்பு எல்லாவற்றையும் தாண்டி நாட்டில் ஒற்றுமை ஓங்குவதற்குரிய வழிகளை ஒவ்வொருவரும் கண்ணைத் திறந்துகொண்டு செயற்படுத்தவேண்டிய காலகட்டம் இதுவாகும் என்பதை அனைவரும் ஒரு முகத்துடன் நோக்க வேண்டும் என்பதே நமது அவா!



# தாய்மையை சிதைக்கும் இளவயது பெண் சமூகம்

இன்று மனித சமுதாயத்தை அச்சுறுத்திக் கொண்டிருக்கின்ற கொடிய நோயாக அதாவது மனநோயாக பாலியல் துஷ்பிரயோகம் அதனுடன் இணைந்ததாக சமூக சீரழிவுகள் இருந்து வருகின்றது. மனித வாழ்வு என்பது ஒழுக்கம் மிக்கதாக இருக்க வேண்டுமென உலகிலுள்ள அனைத்து மதங்களும் போதிக்கின்றன. சமய வாழ்வு என்பது இறை பக்தியை மட்டும் குறிப்பதாக இருக்கின்றது என நினைத்து செயற்படுவதினால் தான் பாரிய பிரச்சினைகளுக்கும் நாடு முகம் கொடுத்து வருகின்றது.

மதங்கள் எல்லாமே ஒழுக்கமுள்ள கட்டுக்கோப்பான வாழ்வு முறைகளையே முதன்மைப்படுத்துகின்றது. சட்டங்களால் கட்டுப்படுத்த முடியாத சமூகப் பிரச்சினைகளை மத அனுஷ்டான கோட்பாடுகளுடன் இலகுவில் கட்டுக்குள் கொண்டுவரக்கூடியதாக இருக்கும். இதனால் தான் மத கலாச்சாரத்திற்கு நாம் அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகின்றோம். மதங்களின் சமயங்களின் கட்டுப்பாட்டின் கீழ் வராத சமூகத்தை காட்டுமிராண்டிகள் என வர்ணிக்கின்றார்கள் மதப்பெரியார்கள்.

இந்த வகையில் இன்று எமது நாட்டில் மிகப் புனிதம்மிக்கதாகக் கருதப்படும் ஆண்பெண் உறவு திக்குத்திசை கெட்டு மிருங்களின் வாழ்வு நெறிக்கு சென்று கொண்டிருக்கின்றது. இன்று இளவயதுகளில் கர்ப்பம் தரிப்பதும் சட்டவிரோத கருக்கலைப்புகளும் அதிகரித்துச் செல்வது மனித விழுமியத்தை சிதைப்பதுனை ஆரோக்கியமான சமுதாயக் கட்டமைப்பை சிதைப்பதாகவும் அமைந்துள்ளன. இதற்கு பல காரணங்கள் உள்ள போதிலும் அறியமாமையே பிரதானமாகச் சொல்ல முடியும்.

**இரத்தினம் நடராஜன்**
**அக்கரைப்பற்று**

நவீன நாகரிகம் பன்மடங்கு வளர்ச்சி கண்டாலும் சமூகங்களை கலாசார ரீதியாக அழித்துக் கொண்டுதான் முன்னோக்கிப் பயணிக்கின்றது. விஞ்ஞான தொழில் நுட்பத்தின் வளர்ச்சி மனிதகுல மேம்பாட்டிற்கு உறுதுணையாக உள்ளதைவிட கூடுதலான அளவு தீய விளைவுகளையும் ஏற்படுத்தி வருகின்றது. உலகை விரல் நுனியின் கீழ் வைத்து விளையாடும் இளவட்டங்கள் பல தவறான விரைவான முடிவுகளை எடுத்து தன்னைத்தானே அழித்துக் கொண்டிருக்கின்றார்கள். இந்தத் தவறான முடிவுகளின் வெளிப்பாடாகவே இளவயது கருத்தரிப்பும் துஷ்பிரயோக செயல்களுமாகும்.

இந்தத் தவறான செயற்பாடுகளுக்கு பெற்றோர்களோ அல்லது வேறு சமூகங்களோ பொறுப்பாக இருப்பதில்லை. இளவயதுகளில் கர்ப்பம் அடைவதை எவருமே அனுமதிப்பதில்லை. இளம் பெண்கள் கூடத னக்கு என்ன நடக்கின்றது இதன் பின்னால் உருவாகப்போகும் பக்க விளைவுகள் என்ன என்பது தெரியாதவர்களாகவே அதிக பெண்கள் உள்ளார்கள். காமுகர்களின் வஞ்சக வார்த்தைஜாலங்களில் கட்டுண்டு தன்னைத்தானே அழித்துக் கொண்டு வருகின்றார்கள். இவ்வாறான சமூக விரோதிகளை இனங்கண்டு கடுமையான சட்டத்தை அமுல்படுத்த வேண்டும். தகாத உறவுகள் என்பது நமது கலாசாரத்தினால் புறக்கணிப்பட்ட விடயமாகும். சுய இன்பத்திற்காக உறவு கொண்டுவிட்டு கருவில் வளரும் குழந்தையை மனச்சாட்சியின்றி அழிப்பது எந்தவகையில் தர்மமாகும்.

கருவிலை அழித்தொழிப்பதுடன் தற்போது பிறந்து ஓரிரு நாட்கள் ஆன சிசுக்களை தெருவில் வீசி எறிவதும் மலசலகூட குழியில் போடுவதும் நீரோடைகளில் கைவிட்டுச் செல்வதும் தொடர்கதையாகவே உள்ளது. இவ்வாறாக கண்டெடுக்கப்பட்ட சிசுக்களின் தரவுகள் பொலிஸ் உட்பட சிறுவர் பாதுகாப்பு மையங்களில் உள்ளது.

இலங்கை அரசியல் அமைப்பின் தண்டனைச் சட்டக்கோவையின் பிரகாரம் தாயின் உயிருக்கு ஆபத்து ஏற்படலாம் என்ற நிலையில் மாத்திரமே வைத்தியர்களின் சிபார்சின் அடிப்படையில் கருவினைக் கலைக்க சட்டம் அனுமதிக்கின்றது. ஏனைய காரணங்கள் யாவும் சட்டவிரோதமானவையாகும்.

எமது நாட்டில் நாள்தோறும் இடம்பெறுகின்ற சிறுவர் துஷ்பிரயோகங்கள் சிசுக்கொலைகள், தகாத உறவுகளினாலான கருக்கலைப்புகள் என நீண்டு செல்கின்றது. குறிப்பாக பாடசாலை செல்லும் மாணவிகள் மற்றும் திருமணமாகாத பெண்கள் கருத்தரித்தல் இதன் விளைவுகளால் ஏற்படுகின்ற பிந்திய நிலவரங்களால் தேவையற்ற வேண்டத்தகாத சமூகப்பிரச்சினைகள் பல ஏற்படுகின்றன. இத்துடன் பெண்களின் ஒழுக்க விழுமியங்கள் கேள்விக்குறியாகி வருவதுடன் நாட்டில் வேறான ஒரு கலாசாரம் ஆரம்பமாகின்றதோ என எண்ணத் தோன்றுகின்றது.

இன்று இலங்கையில் பாலியல் சார் பிரச்சினைகள் மிகத்தீவிரமாக அதிகரித்துள்ளன. இதன் மூலமாக சட்டவிரோத கருக்கலைப்புகள் அதிகரிப்பதாகவும் இது நாட்டின் சுகாதாரத்துறையில் பாரிய பண இழப்பிற்கும் வழிவகுத்துள்ளது என அண்மைய செய்திகள் கூறுகின்றது. அதாவது இலங்கையில் 15 வயதுக்கும் 19 வயதுக்கும் இடைப்பட்ட யுவதிகள் மத்தியில் கருக்கலைப்பு வீதம் அதிகரித்துள்ளதாக பொரளை காசல் வீதி மகளிர் மருத்துவமனையின் விசேட நிபுணர் சனத் வெனரோல் தெரிவித்திருப்பது அதிர்ச்சியான செய்தியாக உள்ளது. சமூகம் சார்ந்த புத்திஜீவிகளுக்கு இச் செய்தி ஆச்சரியமிக்கதாக அமைந்துள்ளது. இவற்றுடன் மதப்போதனைகளை அதிகம் பின்பற்றும் எமது நாட்டில் இவ்வாறாக சமூக மாற்றம் அழிவின் முன் ஒலிக்கும் மணியோசை என கொள்ள முடியும்.

மேலும் நாள் ஒன்றுக்கு சராசரியாக ஆயிரம் கருக்கலைப்புகள் இடம்பெறும் நிலையில் 15-19 வயதிற்கு இடைப்பட்ட யுவதிகள் மத்தியிலேயே கருக்கலைப்பு வீதம் அதிகரித்துள்ளதாகவும் டாக்டர் சனத் வெனரோல் கூறுகின்றார்.

கடந்த 30 ஆண்டுகால உள்நாட்டு யுத்தத்தின் சுவடுகள் மறைய இன்னும் முப்பது ஆண்டுகளாவது பிடிக்கலாம். யுத்தகாலத்தில் குடும்பத் தலைவன் தலைவி அல்லது இருவரும் மரணத்தை தழுவிய சம்பவங்கள் ஏராளம். இக்குடும்பங்களில் வாழ்ந்த பெண் பிள்ளைகளின் பாதுகாப்பு, கல்வி, வாழ்வாதாரம் என்பன அழிப்பட்டதுடன் பிள்ளைகள் அயலவர்களின் துணையுடன் வாழும் சூழ்நிலை வடகிழக்கில் அதிகமாகக் காணப்பட்டதும் சிறுவர் துஷ்பிரயோக செயற்பாடு அதிகரிக்க காரணம் எனலாம். இதனுடன் போர்முனையில் தப்பிக்க பாதுகாப்புக்கு அல்லது வலுக்கட்டாயமாக பாலியல் இலஞ்சம் ஓர் ஆயுதமாக பாவிக்கப்பட்ட வரலாறுகளும் உலகளவில் உள்ளது. பிள்ளைகள் தனிமையில் தனக்கு ஒரு நிழல் விரும்பியோக விருப்பமின்றியோ பெற வேண்டிய தேவை காணப்பட்டிருக்கின்றது. இதன் மூலமாகவும் பாலியல் சீரழிவுகள் இடம்பெற்றிருக்கின்றது.

இதனுடன் இணைந்ததாக வறுமை பொருளாதார சீரழிவு வேலைவாய்ப்பின்மை போன்ற பல காரணங்களால் யுவதிகள், குடும்பப் பெண்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கு பிற தேசங்களுக்கு செல்லும் நிலை ஏற்பட்டது. இவ்வாறான வெளிநாட்டு வேலைவாய்ப்புகளைப் பெற முகவர்களை நாடவேண்டிய தேவை ஏற்பட்டது. இந்த வெளிநாட்டு மோகத்தினால் கிராமங்களிலிருந்து தலைநகருக்கு அழைத்துவரப்படுகின்ற யுவதிகள் பாலியல் வன்புணர்வுகளுக்கு இரையாக்கப்பட்டார்கள். மாதக்கணக்கில் தலைநகரில் தங்கவைக்கப்பட்டு அவர்களை அடிமைகளாக விற்று பின்னர் வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கும் நிகழ்வுகள் இடம்பெற்றிருக்கின்றது. சில பெண்கள் தமது கிராமத்திற்கு மீளத்திரும்புவதா அல்லது பிறநாடுகளுக்கு செல்வதா என்ற இக்கட்டான சூழ்நிலையில் மீள குடும்பங்களுடன் இணைந்து கொண்ட சம்பவங்களும் வெளிநாட்டு பணியக பதிவேடுகள், உள்ளூர் பெண் விடுதலை அமைப்புகக்களிடம் உள்ளதை அவதானிக்கலாம். இவ்வாறான சம்பவங்களாலேயே அதிக கருக்கலைப்புகள் இடம்பெற்றிருக்கின்றது.

ஆசிய நாடுகளில் பாலியல் அறிவின்மையாலேயே கருத்தரித்து சிறுவயதில் தாய்மையடைகின்றனர். இவர்களே கருக்கலைப்பு நிலையங்களை நாடிச் சென்று எதிர்காலத்தை சூனியமாக்கிக் கொள்கின்றனர். சட்டவிரோத கருக்கலைப்பு நிலையங்கள் முறையான பாதுகாப்பு ஏற்பாடுகளின்றியே கருக்கலைப்புகள் இடம்பெறுகின்றது. இதனால் அதிக குருதிப்பெருக்கு மற்றும் பிற ஆரோக்கிய குறைபாடுகளால் அவதியுற்று பின்னர் அரச வைத்தியசாலைகளை நாடிச் செல்கின்றனர். சில நேரங்களில் மரணம்கூட சம்பவிக்கின்றது. உண்மையில் ஆண்கள் தமது காதலியை அல்லது மனைவியரை அழைத்துச் சென்று எமனிடம் கொடுப்பதற்கு சமமான நிகழ்வாகவே இதைப் பார்க்க முடியும்.

மேலும் பல்வேறு சூழ்நிலைகளில் ஏமாற்றப்பட்ட, வஞ்சிக்கப்பட்ட பெண்கள் மாத்திரமல்ல, திருமணமான பெண்கள் கூட சட்டவிரோத கருக்கலைப்பு நிலையங்களை நாடுகின்றனர். ஒருமுறை கருவை பாதுகாப்பற்ற முறையில் அகற்றிக் கொள்வதால் பிற்காலத்தில் தாய்மைப்பேறை இழக்கும் பாரிய ஆபத்துகள் எதிர்கொள்ளப் படுகின்றது. இதேநேரம், குடும்ப சுகாதாரப் பணியகத்தின் சிறப்ப நிபுணர் டாக்டர் சஞ்சீவ கொடகந்த குடும்ப திட்டமிடல் மூலம் அநாவசிய கர்ப்பங்களைத் தவிர்த்துக் கொள்ள முடியும் எனவும் கூறியுள்ளார்.

எனவே இளவயது கர்ப்பமடைவதை தவிர்க்க சமூகம் சார்ந்த விடயங்களில் விழிப்புணர்வைக் கொண்டுவரல், பாலியல் தொடர்பான தெளிவூட்டங்கள், இளவயது ஆண்பெண்களை கல்வித்துறைகளில் ஈடுபடுத்தல், மத ரீதியாக நடவடிக்கைகள், பெற்றோர், பாதுகாவலர்களுக்கு போதியளவு அறிவுறுத்தல்களை வழங்குதல், மேலும் பல நடவடிக்கைககளை மேற்கொள்ள முடியும்.

# நீரிலிருந்து பொன் ஊறும் அதிசயம்

புஸ்ஸல்லாவ பிரதேசத்திற்கு உட்பட்ட நுவரெலியா கண்டி பிரதான பாதையில் இருந்து சுமார் 300 மீற்றர் தூரத்தில் வகுகவ்பிட்டிய பிரதேசத்தில் ஊற்று மாரியம்மன் என்ற ஒரு சிறிய கோவில் காணப்படுகின்றது. இந்த ஆலயம் இருக்கும் இடம் சுமார் 05 ஏக்கர் கொண்ட பாதுகாக்கபட்ட காட்டு பிரதேச ஆறுதலாகவும் கோயிலும் காணப்படுவதினால் தெய்வீக தனமாகவும் வியக்கதக்க வகையில் காணப்படுகின்றது. எவ்வளவுதான் வெயில் காலம் வந்தாலும் இந்த நீர் ஊற்று வற்றுவதில்லை. சிறிய ஊற்றாக வெளி வந்து ஆறாக ஓடுகின்றது. இந்த நீரை மக்கள் குடிப்பதற்கும் விவசாயம் செய்வதற்கும் பாவித்து





மாகும். இந்த இடத்தில் விசித்திரமான ஊற்று நீர் ஒன்று காணப்படுகின்றது. ஒரு பானையில் நீரை நன்கு கொதிக்க வைத்தால் அந்த நீர் எவ்வாறு தொதித்து பொங்கி எழுமோ அந்த அளவிற்கு இந்த நீர் ஓர் குறிப்பிட்ட இடத்தில் இருந்து பொங்கி வருகின்றது. இந் நீர் மிகவும் குளிர்மையான செறிவு கூடியதாக விரும்பி பருகுவதற்கு சுவையானதாகவும் மருத்துவ குணமிக்கதாகவும் காணப்படுகின்றது.

அத்துடன் இந்த இடத்தில் 'காக்கா பொன்னு' என்று சொல்லக் கூடிய கனிய வளமும் காணப்படுவதால் நீருடன் தங்க துகள்கள் போன்று காக்கா பொன்னும் நீர் பொங்கி எழுகின்றது. பார்ப்பதற்கு மிகவும் புதுமையாகவும் மனதிற்கு வருகின்றனர்.

பொதுவாக புஸ்ஸல்லாவ, இறம்பொடை, நுவரெலியா போன்ற இடங்கள் இராமாயணத்திற்கு பெயர் போன இடங்கள். நுவரெலியாவிலேயே சீதை அம்மன் கோவில் காணப்படுகின்றது. அசோகவனமும் காணப்படுகின்றது. அரம்பத்தில் புஸ்ஸல்லாவ பிரதேசத்தில் இருந்தே அசோகவனம் ஆரம்பித்து உள்ளது. காலப்போக்கில் தேயிலை உற்பத்திக்காக காடுகள் அழிக்கப்பட்டு அசோகவனம் வேறாக பிரிக்கப்பட்டு விட்டது புஸ்ஸல்லாவ வேறாக்கபட்டுவிட்டது.

இராமாயணத்தில் இராவணன் சீதை அம்மனை இந்தியாலில் இருந்து இராமேஸ்வரம், மன்னார், மாத்தளை, புஸ்ஸல்லாவ வழியாக தனது புஸ்பக விமானத்தில் நுவரெலியாவிற்கு அழைத்து செல்லும் வழியில் சீதை அம்மன் இராமனை நினைத்து விட்ட கண்ணீரின் ஒரு துளி இப்பிரதேசத்தில் விழுந்துள்ளது. இந்த கண்ணீர் விழுந்த இடம் தற்போதும் சீதை அம்மனின் கண்ணீராக பொங்கி நீராக வருகின்றது என்ற வரலாறும் உள்ளது. அது உண்மையாக இருக்கலாம். காரணம் பல ஆண்டுகளுக்கு முன்னர் அருகில் உள்ள சோகம தோட்டத்தில் காணப்பட்ட அம்மன் சிலை ஒன்று கள்வர்களினால் களவாடப்பட்டு வேறு இடத்திற்கு இவ்வழியாக கொண்டு செல்லும் போது, இந்த இடத்தில் அந்த சிலை இயற்கையாகவே பூமிக்கு அடியில் சென்று விட்டதாம். அன்று முதல் இந்த நீர் ஊற்று உருவாகி சிலையின் நிறத்தில் தங்க துகள்களுடன் பொங்கி வருவதாக கூறுகின்றனர். தற்போதும் இந்நிலை காணப்படுகின்றது.



இராமயணத்துடன் தொடர்பு கொண்டதால் என்னவோ குறித்த இடத்தில் அனுமானின் உருவம் ஒன்று இயற்கையாகவே மரம் ஒன்றில் உருவாகி உள்ளது. இதையும் மக்கள் வணங்கி வருகின்றனர். இந்த காட்டு பகுதியில் குரங்குகளும் வசித்து வருவதுடன் தமக்கு உணவு தேவை ஏற்படும் போது ஆலயத்திற்கு வந்து உணவை பெற்று செல்கின்றன. அசோகவனத்தை ஒத்த இயற்கை காட்டு வளமும் இங்கு காணப்படுவதுடன் அரசாங்கம் இதனை பாதுகாத்து வருகின்றது.

சோகம தோட்ட மக்கள் தற்போதும் தங்கள் ஆலயத்தில் திருவிழாக்கள் நடக்கும் சந்தர்ப்பத்தில் இந்த நீர் ஊற்றில் நீர் எடுத்து கரகம் பாலித்து திருவிழாக்களை நடாத்தி வருகின்றனர்.

இதனை தொடர்ந்து இந்த இடத்தில் அம்மனை வைத்து 'ஊற்று மாரியம்மன்' என்ற பெயரில் ஆலயம் அமைத்து வணங்கி வருகின்றனர். இந்த ஆலயத்தை இப்பிரதேசத்தை சேர்ந்த ஆலய தர்மகர்த்தா கிருஸ்ணபிள்ளை வேலுராமன் அய்யா அவர்கள் மிகவும் அர்பணிப்புடன் நடாத்தி பக்தர்களுக்கு சேவை செய்து வருகின்றார். இவரின் முயற்சியினாலயே இந்த ஆலயம் உருவாகியுள்ளது. இவருக்கு இவரது மகள்மார்கள் மிகவும் உதவியாக இருக்கின்றார்கள்.

இந்த ஆலயத்திற்கு இன மத பேதம் இன்றி அனைத்து மக்களும் வந்து வணங்கி செல்கின்றனர். பக்தர்கள் தாங்கள் கேட்கும் அனைத்தையும் அம்மன் வழங்கி வருகின்றாள்.



பிள்ளைபேறு, நினைத்த காரியங்கள் நிறைவேற்றல், கூடிய விரைவில் திருமணம்,தோசம் கழிதல், தீராத நோய் பிணி தீர்த்தல், நினைத்த காரியம் நிரைவேற்றல் இவை அனைத்தும் நிறைவேறி வருகின்றன.

தற்போது உலக சைவ திருச்சபையின் ஏற்பாட்டில் ஊற்றுலிங்கேஸ்வரர் சிவலிங்கம்



ஒன்றும் பிரதிஸ்டை செய்யப்பட்டுள்ளது. தனியாக இருந்து மக்களுக்கு அருள்பாலித்து வந்த ஊற்று மாரியம்மன் ஊற்றுலிங்கேஸ்வரருடன் இணைந்து அருள் பாலித்து வருகின்றாள். பக்தர்கள் ஊற்று நீரை எடுத்து சிவனுக்கு தாங்களாகவே ஊற்றி வழிபட்டு வருகின்றனர். பிரதோச விரதம் மற்றும் பிதிர் கடன்களை இங்கு நிறைவேற்றி வருகின்றனர்.

**பா.திருஞானம்**

# உங்களோடு கூட்டணி வைத்தால் பேரழிவு!

## பா.ஜ.க.வை எச்சரிக்கும் எடப்பாடி



**‘ம**த்திய அமைச்சர்கள் நிர்மலா சீதாராமனுடன் தமிழக அமைச்சர்கள் வேலுமணியும் தங்கமணியும் பேசியதை வைத்து, கூட்டணி முடிச்சு போடத் தொடங்கினர் அரசியல் கட்சிகள். ‘பா.ஜ.கவோடு கூட்டணி வைத்தால் பேரழிவை உண்டாக்கும். தனித்துப் போட்டியிடுவதே நல்லது’ என ஆதரவாளர்களிடம் பேசியிருக்கிறார் எடப்பாடி பழனிசாமி.

புதுடெல்லியில் மத்திய நிதித்துறை அமைச்சர் அருண் ஜெட்லியைச் சந்தித்துப் பேசினார் தமிழக உள்ளாட்சித்துறை அமைச்சர் எஸ்.பி.வேலுமணி. இதன்பிறகு மத்திய ஊரகத்துறை அமைச்சர் நரேந்திர சிங் தாமோரையும் அவர் சந்தித்துப் பேசினார். தொடர்ச்சியான இந்தச் சந்திப்புகளின் மூலம், பா.ஜ.க கூட்டணியை அ.தி.மு.க உறுதிப்படுத்துகிறது என அரசியல் வட்டாரத்தில் தகவல் பரவியது. மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் நிர்மலா சீதாராமனைச் சந்தித்தபோது, இதேபோன்ற கருத்து பரவியது. இதற்கு விளக்கம் கொடுத்த அமைச்சர் தங்கமணி, ‘நிர்மலா சீதாராமன் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர். கஜா புயலால் தமிழ்நாட்டு மக்கள் அதிகம் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். அதனால், தேவையான நிதியைப் பெற்றுத்தருமாறு தமிழ்நாட்டைச் சேர்ந்தவர் என்ற முறையில் அவரை சந்தித்தோம். இதில் என்ன தவறு இருக்கிறது?’ என்றார் நிதானமாக.

டெல்லி சந்திப்புகள் பற்றி நம்மிடம் பேசிய அ.தி.மு.க நிர்வாகிகளும், ‘பா.ஜ.கவுடன் கூட்டணி இல்லை என்பதைப் பற்றித் தெளிவுபடுத்துவதற்காகத்தான் இந்தச் சந்திப்பு நடந்தது. தனித்துப் போட்டியிட்டு தேர்தலைச் சந்திக்கிறோம். பிறகு உங்களை ஆதரிக்கிறோம் என்பதுதான் சந்திப்புகளின் பிரதான நோக்கமாக இருந்தது’ என்றனர். இதற்கு பா.ஜ.க தரப்பில் பதில் சொன்னவர்களும், ‘இதைப் பற்றி மோடி, அமித் ஷாவிடம் பேசிவிட்டுச் சொல்கிறோம்’ எனக் கூறியுள்ளனர். டெல்லி சந்திப்புகளுக்குப் பிறகு எடப்பாடி பழனிசாமியின் செயல்பாடுகளிலும் கூடுதல் உற்சாகம் தென்படத் தொடங்கிவிட்டது. இந்த உற்சாகத்தை தன்னைச் சந்திக்க வந்தவர்களிடமும் அவர் வெளிப்படுத்தியிருக்கிறார். அந்த வகையில் மூத்த அமைச்சர்களிடம் பேசிய முதல்வர், ‘பா.ஜ.க-வுடன் கூட்டணி இல்லை. தேர்தலுக்குப் பிறகு பிரச்னைகளின் அடிப்படையில் அவர்களுக்கு ஆதரவு தருவோம். இந்த முடிவில் நான் உறுதியாக இருக்கிறேன்’ எனக் கூற, பா.ஜ.க-வின் வழக்கு அஸ்திரங்களைப் பற்றி ஒருவர் எடுத்துக் கூறியிருக்கிறார்.

இதற்குப் பதில் கொடுத்த முதல்வர் எடப்பாடி பழனிசாமி, ‘அம்மா சந்திக்காத வழக்குகளா...அதைவிட நம் மேல் என்ன வழக்கு வந்துவிடப் போகிறது. நம்மீது நேரடியாக எந்த வழக்குகளும் இல்லையே... மோடி எதிர்த்தால் நாம் மிகப் பெரிய ஹீரோக்களாகப் பார்க்கப்படுவோம். 44 சதவிகித வாக்குகளைப் பெற்று 37 சீட்டுகளையும் பெற்றுக் கொடுத்தார் அம்மா. 1996-ம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் 13 சதவிகித ஓட்டுக்களைப் பெற்றார் அம்மா. அப்போது, மிகக் குறைவான எண்ணிக்கையில் போட்டியிட்டோம். இப்போது நாமும் கட்சி பலத்தில் களத்தில் நிற்கிறோம். சந்திரசேகர ராவ் பெற்ற வெற்றியை நாமும் பெறுவோம். 2014, 16 தேர்தல்களில் தனித்து நின்று அம்மா வெற்றி பெற்றது போல நமக்கும் வெற்றி வாய்ப்பு வந்து சேரும். பா.ஜ.க-வோடு கூட்டணி வைத்தால் மாநிலப் பிரச்னைகள் அனைத்துக்கும் நம் மீது பழிபோடுவார்கள். இந்தத் தேர்தலில் சிட்டிங் எம்.பி-க்களுக்கு சீட் கொடுக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். அவர்களும் சரியாகச் செயல்படவில்லை என்ற குற்றச்சாட்டும் இருக்கிறது.

இப்படிப்பட்ட சூழலில், பா.ஜ.க-வோடு நாம் சேர்ந்தால் கிறிஸ்துவ, முஸ்லிம் வாக்குகளை இழக்க நேரிடும். தைரியமாக அம்மா போல 40 தொகுதிகளிலும் நாம் போட்டியிடலாம். மக்கள் மத்தியில் அம்மாவின் துணிச்சலுக்கு இன்றளவும் மரியாதை இருக்கிறது. இதே பாணியில் போட்டியிட்டால், குறிப்பிடத்தக்க வெற்றியை நம்மாலும் பெற முடியும். தேர்தல் முடிவில் பிரச்னைகளின் அடிப்படையில் நாம் பா.ஜ.க-வுக்கு ஆதரவு கொடுக்கலாம். அதைப் பற்றி பா.ஜ.க தலைவர்களிடம் தெளிவுபடுத்திவிட்டோம். ‘எங்களுக்கு எதிரி ஸ்டாலின்தான். அவர் காங்கிரஸ் கட்சியுடன் இருப்பதால், நாங்கள் உங்களைத்



தான் ஆதரிப்போம்’என பா.ஜ.க தலைமையிடம் சொல்வோம். எதிரியுடன் காங்கிரஸ் இருப்பதால் பா.ஜ.க-வைத்தான் நாம் பெட்டராகப் பார்க்க முடியும். தேர்தலில் பா.ஜ.க-வுடன் நாம் கூட்டணி வைத்தால் அதனால் அவர்களுக்கும் லாபமில்லை, நமக்கும் லாபமில்லை. மிகப் பெரிய பேரழிவை உருவாக்கும். முத்தலாக் சட்ட மசோதாவை எதிர்த்ததும் இதே அடிப்படையில்தான்’ என விவரித்திருக்கிறார்.

# என் நம்பிக்கை வீண்போகாது!

## அற்புதம்மாள் வேதனை

**ரா**ஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள பேறிவாளன் உள்ளிட்ட ஏழு பேரின் விடுதலை தொடர்பாக, தமிழக அரசு ஆளுநருக்குப் பரிந்துரைக்கலாம் எனக் கடந்த செப்டம்பர் மாதம் 6-ம் தேதி, உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி ரஞ்சன் கோகாய் தீர்ப்பு வழங்கினார். இதன் பின்னர் செப்டம்பர் 9-ம் தேதி, தமிழக அமைச்சரவைக் கூட்டம் கூட்டப்பட்டு, அதில் எழுவர் விடுதலை தொடர்பாக ஒரு மனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அது ஆளுநருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. ஆனால், அதன் மீது பல நாள்களாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. 7 பேரையும் விடுவிக்க வேண்டும் எனப் பலரும் குரல்கொடுத்து வருகின்ற நிலையில் பேறிவாளன் விடுதலைக்காக அவரின் தாயார் அற்புதம்மாள் தொடர்ந்து போராடி வருகிறார். அதன் ஒருபகுதியாக அற்புதம்மாள் ட்விட்டர் பக்கத்தில் பேறிவாளன் விடுதலை தொடர்பாக பதிவு வெளியிட்டுள்ளார்.



ஆளுநர் விடுதலைக் கோப்பில் கையெழுத்திடத் தாமதத்துக்கான காரணம் கேட்டு பேறிவாளன் கடந்த 8.11.2018 அன்று புழல் சிறை மூலம் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் மனு அனுப்பினார். 48 மணி நேரத்தில் தகவல் தரக் கேட்டு அனுப்பப்பட்ட அவ்விண்ணப்பம் 48 நாள்களுக்குப் பிறகும் ஆளுநர் மாளிகை தகவல் அதிகாரி பதிலளிக்காத நிலையில் RTI மனுவை மேற்கோள் காட்டி மிகுந்த வேதனையோடு தனது உணர்வுகளை ட்விட்டரில் அற்புதம்மாள் பதிவிட்டுள்ளார்.

அதில், ‘விடுதலைக் கோப்பு கையெழுத்தாகல. தினம் நம்பிக்கை அவநம்பிக்கைக்கிடையே சிக்கிச் சாகிறேன். தாமதம் ஏன்னு கேட்டு அறிவு ஒரு கீகூஜ அனுப்பினான். 48 மணி நேரத்துல பதில் கேட்டு 48 நாளும் ஆயிருச்சு. பதில காணோம். அரசியல் சட்டத்துக்குத்தான் மதிப்பில்ல. RTI யுமா செல்லாம போயிரும்?’எனக் கூறியுள்ளார்.

# ஓபிஎஸ்-இபிஎஸ் நாடகம் அம்பலம்





**அ**திமுகவின் பெயருக்கு களங்கம் ஏற்படுத்திவிட்டதாக ஒபிஎஸ்சின் தம்பி ஒ.ராஜாவை அதிமுகவிலிருந்து நீக்குவதாக ஒபிஎஸ்சும், இபிஎஸ்சும் கூட்டாக அறிவித்தனர். இந்த அறிவிப்பு அதிமுகவில் பரபரப்பை ஏற்படுத்தியதோ இல்லையோ, மீடியாக்களில் பெரிதாக பரபரக்கப்பட்டது.

தம்பியாக இருந்தாலும் தயவுதாட்சண்யம் இல்லாமல் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். அதிமுகவில் குடும்ப ஆதிக்கம் இல்லை என்பதை நிருபித்திருக்கிறார்கள் என்றெல்லாம் ஆளாளுக்கு பில்டப் செய்தார்கள்.

ஒ.ராஜா இப்போதுதான் களங்கம் ஏற்படுத்தினாரா? பூசாரி நாகமுத்து தற்கொலை வழக்கு, மணல்கடத்தல் வழக்கு என்றெல்லாம் ஒ.ராஜா மீது ஏகப்பட்ட புகார்கள் இருக்கின்றன. ஆனால், இப்போது திடீரென்று களங்கம் ஏற்படுத்தி விட்டதாக கூறுவதன் பின்னணி என்ன?

பெரியகுளம் முன்னாள் ஒன்றியச் செயலாளர் செல்லமுத்து தேனி தொகுதியில் செல்வாக்கு மிக்கவர். அதிமுக மாவட்ட பொருளாளராக இருக்கிறார். இவருக்கு மதுரை ஆவின் கூட்டுறவு தலைவர் பதவியை பெற்றுத் தருவதாக ஒபிஎஸ் கூறியிருக்கிறார். ஆனால், ஒ.ராஜா தலைவர் பதவியைக் கைப்பற்ற மறைமுகமாக உதவியிருக்கிறார். இதனால் செல்லமுத்து ஒரு பெரிய கூட்டத்தோடு அதிமுகவிலிருந்து விலகி திமுகவில் சேரப் போவதாக தெரியவந்தது.

இதையடுத்து, தன்னை யோக்கியராக காட்டிக் கொள்ள தம்பியை கட்சியிலிருந்து விலக்குவதாக ஒரு நாடகத்தை அரங்கேற்றியிருக்கிறார் ஒபிஎஸ். அதற்கு இபிஎஸ்சும் ஒத்துப்போயிருக்கிறார். ஆனால் இவர்களுடைய நாடகம் எடுபடவில்லை.

கட்சியிலிருந்து நீக்கியவர்கள், ஒ.ராஜாவின் ஆவின் தலைவர் பதவியை பறிக்க முடியுமா என்று கட்சிக்காரர்கள் கேட்கிறார்கள். ஒபிஎஸ்சுக்கு தெரியாமலா ஆவின் தலைவர் பதவிக்கு விண்ணப்பித்தார்? ஒபிஎஸ் ஆதரவு இல்லாமலா அவருக்கு அதிமுகவினர் வாக்களித்தனர்? வெள்ளிக்கிழமை பதவி ஏற்கப்போவதாக கூறிய ஒ.ராஜா, கட்சியிலிருந்து நீக்கப்படுவதை அறியாமலா அவசரஅவசரமாக தலைவர் பதவியை ஏற்றுக்கொண்டார்.

கட்சியை விட்டு நீக்குவதாக அறிவித்தாலும், ஒ.ராஜா ஆவின் தலைவராக நீடிப்பதை தடுக்க முடியவில்லையா என்று சரமாரியாக வினா தொடுக்கிறார்கள். தேனியில் ஏற்கெனவே, தங்க தமிழ்செல்வன் ஊசலாட்டத்தில் இருப்பதாக கூறும் நிலையில், இப்போது செல்லமுத்து குரூப்பையும் வெறுப்பேற்றியிருக்கிறார்கள்.

இந்நிலையில்தான், அதிமுகவில் குடும்ப ஆதிக்கம் இல்லை என்ற தோற்றத்தை ஏற்படுத்த முயற்சி செய்து அதிலும் தோல்வி அடைந்திருக்கிறார்கள்.

# அமைச்சர்கள் தங்கள் திருவாயை மூடினால் அணிகளின் இணைப்பு சாத்தியமாகும்

**அ**திமுக - அமமுக இணைப்புக்கு அச்சாரமிடுவதுபோலப் பேசிப் பரபரப்புக்கு வித்திட்ட தங்க தமிழ்ச்செல்வன் தொடர்ந்தும் அதிமுக தொண்டர்களை உள்ளிழுக்கும் உத்தியுடனேயே பேசிவருகிறார். டி.டி.வி.தினகரனின் ஊதுகுழல் என்று அழைக்கப்படும் தமிழ்ச்செல்வனுடன் பேசியதிலிருந்து...

கள்ளக்குறிச்சி பிரபு அதிமுகவுக்கும், செந்தில் பாலாஜி திமுகவுக்கும் போகிறார்கள். அமமுக தேய்கிறதா?

அவங்களுக்கு வருத்தம் இருந்தது உண்மைதான். சோதனையான நேரத்துல கொஞ்சம் பொறுத்துத்தான் போகணும். அவசரப்பட்டுட்டாங்க. எதற்காகப் போனாங்கன்னு நீங்க அவங்ககிட்ட தான் கேட்கணும்.

நீங்கள்தான் ‘ஆட்சி போனா, கட்சி தானா எங்க கைக்கு வந்துடும்’ என்று சொல்லிவந்தீர்கள். இப்போது திடீரென்று அதிமுக - அமமுக இணைப்பு பற்றிப் பேசக் காரணம் என்ன?

நாங்களா பேசல. பாஜகதான் அப்படிப் பேச வைக்குது. ரெய்டு மேல ரெய்டு, அப்புறம் விசாரணைன்னு சின்னம்மா குடும்பத்துக்கு மிகப் பெரிய அச்சுறுத்தலைக் கொடுக்குது. எங்களுக்கு மட்டுமில்ல, முதலமைச்சர், அமைச்சர்கள்னு அந்தப் பக்கத்துலயும் குடைச்சல் கொடுக்குறாங்க. நிபந்தனைகளை ஏத்துக்கிட்டா இணைப்புக்கு நாங்களும் தயார்தான்.

நீங்கள் பாஜகவுக்குப் பயந்து பேசுவதுபோலத் தெரியவில்லையே? பின்னணியில் வேறு கணக்கு ஏதும் இருக்கிறதா?

இன்னிக்கு இருக்கிற சூழல்ல நாடாளுமன்றத் தேர்தல் எப்ப வந்தாலும் அதிமுக ஜீரோன்னு நிரூபணமாகிடும். நாங்க தனிச்சு நின்னாலும் ஜீரோதான், அதையும் ஒப்புக்கிறேன். பாஜக நிலையைச் சொல்லவே வேண்டாம். நோட்டாவுக்கும் பின்னால இருக்காங்க. திமுக - காங்கிரஸ் கூட்டணி பெரிய வெற்றியடையாமத் தடுக்கணும்னா, நாங்க இணைஞ்சு ஆகணும்கிறதுதான் கணக்கு. அமமுகவைத் தொடங்கும்போதே அதிமுகவை மீட்பதுதான் லட்சியம்னு சொன்னோம். அதுக்காகச் சில தியாகங்களைச் செஞ்சா என்ன தப்புன்னு கேட்குறேன்.

பன்னீர்செல்வத்தையே விழுங்கிவிட்டு, அதிமுக என்றால் இனி பழனிசாமிதான் என்ற அளவுக்கு இந்த ஓராண்டில் கட்சிக்குள் தன்னை வளர்த்துக்கொண்டிருக்கிறார் பழனிசாமி. இந்த நேரத்தில் அவரை நீக்கிவிட்டால், அதிமுக - அமமுக இணைப்பு நடக்கும் என்று நீங்கள் சொல்வது பேராசையில்லையா?

பழனிசாமி அரசுக்கு, மக்கள்கிட்டேயும் தொண்டர்கள்கிட்டேயும் என்ன செல்வாக்கு இருக்குதுன்னு பத்திரிகையாளர்களுக்கே தெரியும். மத்திய அரசாங்கத்துக்கும் தெரியும். ஏன், அவருக்கே நல்லாத் தெரியும். உளவுத்துறை அவர்கிட்டதான இருக்கு. தொண்டர் பலமும் இல்லை, மக்கள் செல்வாக்கும் இல்லை. பவர் பாலிடிக்ஸை வெச்சி ஓட்டிக்கிட்டு இருக்காங்க. இந்த அதிமுகவை நம்பி, தேர்தலைச் சந்திச்சா தோல்வியைத்தான் சந்திப்போம்னு பாஜகவும் உணர்ந்திடுச்சி. மக்கள் செல்வாக்கும், தொண்டர்கள் செல்வாக்கும் தினகரனுக்குத்தான்ங்கிற உண்மை தெரிஞ்சவங்க, பழனிசாமியை ஒருபொருட்டாவே நினைக்க மாட்டாங்க.

ஜெயக்குமார் பேட்டி பார்த்தீர்களா, விருந்துக்கே அழைக்கவில்லை. அதற்குள் வாழையிலை கிழிந்திருக்கிறது என்கிறார் தங்க தமிழ்ச்செல்வன். அவர் வேண்டுமானால் வரட்டும். டிடிவி, சசிகலாவை சேர்த்துக்கொள்ள மாட்டோம் என்று கூறியிருக்கிறாரே?

இப்படியே வாய்க்குப் பத்தாத பேச்சா பேசிக்கிட்டு இருந்தா, பிரச்சினை எப்படி அடைபடும்? ஜெயக்குமார், கடம்பூர் ராஜு மாதிரியான மந்திரிகள் எல்லாம் அவங்க திருவாயை மூடிக்கிட்டிருந்தாலே, அதிமுக பலமாகிடும். எனக்குப் பிறகு நூறாண்டுகள் அதிமுக இருக்கும், நாட்டை ஆளும்னு அம்மா சட்ட சபையில் அறிவிச்சாங்க. அதை அவங்க மறந்திருக்கலாம். நாங்க ஞாபகம் வெச்சிருக்கோம். திமுக ஒரு நோஞ்சான் கட்சி. அதிமுக அதைவிட நோஞ்சான்கள் கையில இருக்கிறதால, திமுக பலமா இருக்குறது மாதிரி தெரியுது. அதிமுகவுக்கு ஒரு பலமான தலைவர் வேணுங்கிற நேரத்துல, தினகரன் வேணாம், சசிகலா வேணாம்னு சொல்றது புத்திசாலித்தனமா? தமிழக அரசியல், வரலாறு தெரிஞ்ச யாரா இருந்தாலும் எங்க முடிவை வரவேற்பாங்க. ஊரு ரெண்டுபட்டதாலதான், கூத்தாடிங்களுக்குக் கொண்டாட்டமாப் போச்சு.



பாஜகவுடன் கூட்டணி கிடையாது என்று சொன்னவர் டிடிவி. அதிமுக இணைப்புக்குப் பிறகு பாஜகவுடன் கூட்டணி வைக்க மாட்டீர்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம்?

வடக்கே எப்படியோ, தமிழ்நாட்டைப் பொறுத்தவரைக்கும் பாஜக ஜீரோதான். ஜிஎஸ்டி, பணமதிப்புநீக்கம், மதவெறிப் பிரச்சாரம் என்று ஏகப்பட்ட கெட்ட பேர் வேற வாங்கி வெச்சிருக்காங்க. அதோடு கூட்டணி வைப்பது சரிவராது. அதற்குப் பதில், வேறு சில கட்சிகளோடு தனித்து நின்றால், கௌரவமான தோல்வியாவது கிடைக்கும்.

தினகரனின் மனசாட்சி நீங்கள் என்றும், அவர் சொல்லவிரும்புவதை உங்களைவிட்டுச் சொல்லவைப்பார் என்றும் கூறுகிறார்கள். ஆக, இந்தக் கருத்துகள் எல்லாம், சசிகலா, தினகரனின் கருத்துகள் என்று சொல்லலாமா?

மனசாட்சியோ, கினசாட்சியோ. எதார்த்தத்தைச் சொல்றேன்.

ஒரு கற்பனைக் கேள்வி. நீங்கள் சொல்வதெல்லாம் நடந்து அதிமுகவும் அமமுகவும் இணைந்துவிடுவதாகவே வைத்துக்கொள்வோம். அடுத்து முதல்வராகப்போவது யார்?

ஹா... ஹா... ஹா... நீங்களா இருக்கலாம். ஏன் நானாக்கூட இருக்கலாம். அதிமுகவுல ஆளா இல்ல? ஓபிஎஸ், இபிஎஸ் எல்லாம் முதல்வரா ஆனாங்க. யாருக்கு வேணும்னாலும் வாய்ப்பு குடுக்கிற கட்சிதான் இது!

# மபாப்பேயின் மின்னல் வேகம், செரீனா பாய்ச்சல்: விளையாட்டில் முக்கிய நிகழ்வுகள்

2018ம் ஆண்டு விளையாட்டுக்கு மிகவும் நினைவில் வைத்துக் கொள்ள ஆண்டாக அமைந்தது. ரஷ்யாவில் உலகக்கோப்பையை பிரான்ஸ் வென்றது. ஸ்மித், பேங்கிராப்ட், வார்னர் தடை விவகாரம், தலைப்புச் செய்திகளில் தீயாகப் பரவிய செரீனா வில்லியம்ஸின் ஆவேசம் என்று சுவாரசியமான ஆண்டாகத் திகழ்ந்தது 2018.

### கால்பந்து உலகக்கோப்பையை வென்ற பிரான்ஸ்



ரஷ்ய தலைநகர் மாஸ்கோவில் நடைபெற்ற உலகக்கோப்பைக் கால்பந்து இறுதிப் போட்டியில் ஜூலை 15ம் தேதியனறு குரேஷியாவை 4-2 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி பிரான்ஸ் உலக சாம்பியன் களானது. மின்னல் வேக கிலியன் மபாப்பே, பால் போக்பா, ஆண்டாய்ன் கிரீஸ்மேன் கோல்களை அடித்தனர். 1998ம் ஆண்டு பிரான்ஸ் உலகக்கோப்பையை வென்ற போது மபாப்பே பிறக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



### உலக சைக்கிள் சாம்பியன்ஷிப்பான டூர் தி பிரான்ஸை வென்ற தாமஸ்

வெல்ஷைச் சேர்ந்த ஜெரைண்ட் தாமஸ் என்ற வீரர் ஜூலை 29ம் தேதி புகழ்பெற்ற டூர் தி பிரான்ஸ் சைக்கிள் பந்தய சாம்பியன் ஆனார்.

### மான்செஸ்டர் யுனைடெட் கால்பந்து அணி கோச் ஜோஸ் மோரின்ஹோ நீக்கம்

டிசம்பர் 18ம் தேதியன்று இங்கிலிஷ் பிரிமியர் லீக் கால்பந்து அணியான மான்செஸ்டர் யுனைடெட் அணியின் கோச் பொறுப்பிலிருந்து மோரின்ஹோ நீக்கப்பட்டார். ஏற்கெனவே செல்ஸீ, ரியால் மேட்ரிட் அணிப் பொறுப்புகளிலிருந்தும் இவர் நீக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

### செரீனாவின் அமெரிக்க ஓபன் ஆவேசம்

செப்.8ம் தேதி அமெரிக்க ஓபன் கிராண்ட்ஸ்லாம் டென்னிசில் 24ம் பட்டம் வெல்லும் முனைப்பில் ஆடிய செரீனா வில்லியம்ஸ், நடுவர் கார்லோஸ் ரேமோஸுடன் சண்டையிட்டார். 2 விதிமீறலில்



ஈடுபட்டதாக செரீனாவின் 2 புள்ளிகளைக் குறைத்தார் நடுவர். இதனையடுத்து அவர் கடுமையாக சண்டையிட அபராதமும் விதிக்கப்பட்டது. இதனால் மேலும் ஆவேசமடைந்தார். இதனால் கவனம் இழந்த செரீனா ஜப்பான் வீராங்கனை நவோமி ஒசாகாவிடம் இறுதிப் போட்டியை இழந்தார்.

### ரியால் மேட்ரிட்டின் 'ட்ரிபிள்'

மே 26-ம் தேதி லிவர்பூல் அணியை 3-1 என்ற கோல் கணக்கில் வீழ்த்திய ரியால் மேட்ரிட் சாம்பியன்ஸ் லீக் கோப்பையை வென்றது. பயிற்சியாளர் ஜினடைன் ஜிடேன் தலைமையில் இது தொடர்ச்சியாக 3வது கோப்பையாகும். மொத்தமாக 13வது சாம்பியன் பட்டமாகும். ஜினடேன் ஜிடேனின்



கடைசி போட்டியாக இது அமைந்தது. ஸ்டார் ஸ்ட்ரைக்கர் கிறிஸ்டியானோ ரொனால்டோ யுவன்டஸ் அணிக்குச் சென்றது ரியாலை மேலும் வலுவிழக்கச் செய்தது.

### நெருக்கடியில் ஆஸி. கிரிக்கெட்


ஆஸ்திரேலிய கிரிக்கெட்டுகு மிகப்பெரிய அவப்பெயரை ஏற்படுத்திக் கொடுத்த கேப்டவுன் டெஸ்ட் பந்து சேதப்படுத்திய சம்பவம். டெஸ்ட் கேப்டன் ஸ்டீவ் ஸ்மித், வார்னர், பேங்கிராப்ட் தடைசெய்யப்பட்டனர், பயிற்சியாளர் டேரன் லீமென் ராஜினாமா செய்தார். கேமராவில் பால் டேம்பரிங்கைப் படம் பிடித்த சேனலில் முன்னாள் தென் ஆப்பிரிக்க பிரமாத ஸ்விங் பவுலர் ஃபானி டிவில்லியர்ஸ் பணியாற்றியது குறிப்பிடத்தக்கது, அவர்தான் இதனை அம்பலப்படுத்தினார், தற்போது வார்னர்தான் முழுக்காரணம் என்று பேங்கிராப்ட் கூற, ஸ்மித்



ஆஸி. கிரிக்கெட் வாரிய உயரதிகாரிகள் கொடுத்த வெற்றி நெருக்கடிதான் காரணம் என்று ஒருவர் மீது ஒருவர் சேற்றை வாரி இறைத்து கொண்டு வருகின்றனர்.

### மோட்ரிச் சாதனை

கால்பந்து நட்சத்திரங்கள் லியோனல் மெஸ்ஸி, கிறிஸ்டியானோ ரொனால்டோவைப் பின்னுக்குத் தள்ளி உலகின் சிறந்த கால்பந்து வீரர் விருதை குரேஷியாவின் மோட்ரிச் தட்டிச் சென்றார். ரஷ்யாவின்



கால்பந்து உலகக்கோப்பையில் குரேஷியா இறுதிப் போட்டிக்கு முன்னேற மோட்ரிச் மிக முக்கியப் பங்களிப்பைச் செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# அஸ்வின் அவர் மேல் இருக்கும் நன்மதிப்புக்கு நல்லது செய்யவில்லை: கங்குலி காட்டம்



பெர்த் டெஸ்ட் போட்டியில் காயம் காரணமாக விளையாடாத அஸ்வின், மெல்போர்ன் டெஸ்ட் போட்டியிலும் காயத்திலிருந்து குணமடையாததால் விளையாட முடியாமல் போயுள்ளது குறித்து அஸ்வினின் டெஸ்ட் எதிர்காலம் குறித்த கவலைகளை முன்னாள் கேப்டன் கங்குலிக்கு அதிகரித்துள்ளது.

ஆங்கில ஊடகம் ஒன்றிற்கு அவர் எழுதிய பத்தியில் கூறியிருப்பதாவது:

ரவிச்சந்திரன் அஸ்வின் இப்போது எனக்கு பெரிய கவலைகளைத் தருகிறார். இப்படி முக்கியத் தொடர்களில் அவர் காயமடைந்து கொண்டிருந்தால் அவர் இந்திய அணியின் முன்னிலை சுழற்பந்து வீச்சாளராக இருக்க முடியாது.

இங்கிலாந்து, தென் ஆப்பிரிக்கா, தற்போது ஆஸ்திரேலியா என்று பெரிய தொடர்களிலெல்லாம் அவர் பாதியில் காயமடைந்து ஆட முடியாமல் போகிறது.

இடது கை வீரர்களுக்கு எதிராக அஸ்வின் தேவைப்படுகிறார், ஆனால் அவரோ அவர் மீது வைத்திருக்கும் நன்மதிப்புக்கு நல்லது செய்பவராகத் தெரியவில்லை.

இவ்வாறு கங்குலி காட்டமாகத் தெரிவித்துள்ளார்.

ஏற்கெனவே கிரிக்கெட் எழுத்தாளர் ஆர்.மோஹன், அஸ்வின் காயமடைந்ததாகக் கூறுவது உண்மைதானா, உண்மையான காயமா என்று சந்தேகம் எழுப்பியதும் இதனுடன் நோக்கத்தக்கது.

# நான் செய்தது தவறுதான்! - நோ பால் சர்ச்சையில் மன்னிப்புக் கேட்ட வங்கதேச நடுவர்

வங்கதேசம் - வெஸ்ட் இண்டீஸ் அணிகள் இடையிலான மூன்றாவது டி20 போட்டியில் தான் தவறுதலாக நோ பால் என்று அறிவித்துவிட்டதாக வங்கதேச நடுவர் தன்வீர் அஹமது மன்னிப்புக் கேட்டிருக்கிறார்.

வங்கதேசம் - வெஸ்ட் இண்டீஸ் அணிகள் இடையிலான மூன்றாவது டி20 போட்டி தாக்காவில் கடந்த 22-ம் தேதி நடைபெற்றது. இந்தப் போட்டியில் 50 ரன்கள் வித்தியாசத்தில் வங்கதேசத்தை வீழ்த்திய வெஸ்ட் இண்டீஸ் அணி, 2-1 என்ற கணக்கில் தொடரை வென்றது. வெஸ்ட் இண்டீஸ் நிர்ணயித்த 191 ரன்கள் இலக்கை நோக்கிக் களமிறங்கிய வங்கதேச அணியால், நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 140 ரன்கள் மட்டுமே எடுக்க முடிந்தது.

இந்தப் போட்டியில் வங்கதேச அணி



பேட் செய்துகொண்டிருந்தபோது, அந்த இன்னிங்ஸின் 4வது ஓவரை வெஸ்ட் இண்டீஸின் ஒஷேன் தாமஸ் வீசினார். அந்த ஓவரின் 5வது பந்தை கள நடுவர் தன்வீர் அஹமது நோ - பால் என அறிவித்தார். ஆனால், டி.வி ரீபிளேயில் தாமஸ் வீசியது நோ - பால் இல்லை என்பது தெளிவாகத் தெரிந்தது. ஐ.சி.சி விதிமுறைப்படி நோ பால் என அறிவித்த பின்னர், அதைத் திரும்பப் பெற முடியாது என்பதால், அடுத்த பந்தை ஃப்ரீ ஹிட்டாக அறிவிக்க வேண்டிய சூழல் ஏற்பட்டது. ஒஷேன் தாமஸ் வீசிய அடுத்த பந்து சிக்ஸருக்குப் பறந்தது.

களநடுவரின் தவறான முடிவை அடுத்து வெஸ்ட் இண்டீஸ் கேப்டன் பிராத்வொய்ட், அவரிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். மூன்றாவது நடுவர், மேட்ச் ரெஃப்ரி, வங்கதேச அணியின் கேப்டன் ஷகிப் அல் ஹசன் உள்ளிட்டோர் பிராத்வொயிட்டை சமாதானப்படுத்தினர். இதனால், சிறிது இடைவெளிக்குப் பின்னர் போட்டி தொடங்கியது.

போட்டிக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய வெஸ்ட் இண்டீஸ் கேப்டன் பிராத்வெயிட், கள நடுவர்களின் செயல்பாடு குறித்து கடும் அதிருப்தி தெரிவித்ததுடன் இதுபோன்ற சம்பவங்களை நம்பவே முடியவில்லை என்று தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியிருந்தார். அதேபோல், ஒருநாள் தொடரிலும் கள நடுவர்கள் ஒரு அணிக்கு சாதகமாக முடிவெடுத்திருக்க வாய்ப்பிருப்பதாகவும் குற்றம்சாட்டியிருந்தார். இந்த விவகாரம் சர்ச்சையை ஏற்படுத்திய நிலையில், அதுதொடர்பாக மன்னிப்புக் கோரியிருக்கிறார் தன்வீர் அஹமது.

அந்தத் தொடரில் தான் ஏற்கெனவே சில முறை தவறு இழைத்துள்ளதாகவும் தன்வீர் ஒப்புக்கொண்டிருக்கிறார். அவர் கூற்றுப்படி, இரண்டாவது டி20 போட்டியின்போது இன்சைட் எட்ச்



ஆகிய வெஸ்ட் இண்டீஸ் பேட்ஸ்மேன் ஒருவருக்கு எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்ததாக அறிவித்ததாகக் கூறியிருக்கிறார். அதேபோல், மூன்றாவது டி20 போட்டியில் ஒஷேன் தாமஸ் வீசிய 4வது ஓவரில் ஏற்கெனவே ஒருமுறை தவறுதலாக நோ-பால் அறிவித்ததாகவும் அவர் ஒப்புக்கொண்டிருக்கிறார்.

இதுகுறித்து தன்வீர் அஹமது மேலும் கூறுகையில், நோ-பால் விவகாரத்தைப் பொறுத்தவரையில் கோடுகள் அருகருகே இருப்பதால், அதைக் கணிப்பதில் தவறு நிகழ வாய்ப்பிருக்கிறது. பந்துவீச்சாளர் வேகமாகக் குதித்து பந்துவீசுகையில், நோ பாலைக் கணிப்பதில் சிரமம் ஏற்படும். சர்வதேசக் கிரிக்கெட்டுக்கு நான் புதிது என்பதால், நான் தவறிழைத்துவிட்டேன். அந்த தவறிலிருந்து நான் மீண்டு வருவேன் என்று கூறியிருக்கிறார்.

# எனக்கு எந்த மாற்றமும் தேவையில்லை! ரொனால்டோவுக்கு மெஸ்ஸி கொடுத்த பதில்



கால்பந்து உலகின் சூப்பர்ஸ்டார்களான போர்ச்சுகலின் ரொனால்டோ மற்றும் அர்ஜெண்டினாவின் மெஸ்ஸி ஆகிய இருவருக்கு உலக அளவில் ரசிகர்கள் பட்டாளம் அதிகம். கிளப் போட்டிகளிலும் இந்த ஜாம்பவான்கள் ஆதிக்கம் செலுத்தி வருகிறார்கள்.

கடந்த 9 ஆண்டுகளாக விளையாடி வந்த ரியல் மாட்ரிட் அணியிலிருந்து விலகி, இத்தாலியின் யுவான்டஸ் அணியில் சமீபத்தில் இணைந்தார் ரொனால்டோ. ஆனால், மெஸ்ஸியோ ஸ்பெயினின் பார்சிலோனா அணிக்காகத் தனது 13 வயதில் இருந்து விளையாடி வருகிறார். மெஸ்ஸியை மிஸ் செய்கிறீர்களா? என்று சமீபத்தில் செய்தியாளர்களைச் சந்தித்த ரொனால்டோவிடம் கேள்வி எழுப்பப்பட்டது. அந்தக் கேள்விக்குப் பதிலளித்த ரொனால்டோ,அவரும் ஒருநாள் இத்தாலி வருவார். நான் இங்கிலாந்து, ஸ்பெயின், இத்தாலி, போர்ச்சுகல் (தேசிய அணி) ஆகியவற்றுக்காக விளையாடி இருக்கிறேன். ஆனால், மெஸ்ஸி இன்னும் ஸ்பெய்னில்தான் விளையாடிக் கொண்டிருக்கிறார். என்னைப் போலவே அவரும் சவால்களை ஒப்புக்கொள்ள வேண்டும் என்று கூறியிருந்தார். எனினும் ஸ்பெயினில் மெஸ்ஸி மகிழ்ச்சியாக இருந்தால் அதற்கு நான் மதிப்பு கொடுக்கிறேன். இத்தாலியில் நான் யாரையும் மிஸ் செய்ததாக உணரவில்லை. ஒருவேளை மெஸ்ஸிக்கு அத்தகைய உணர்வு ஏற்பட்டிருக்கக்கூடும் என்றும் ரொனால்டோ கூறியிருந்தார்.

இந்தநிலையில் ரொனால்டோவின் இந்தக் கருத்துக்கு மெஸ்ஸி பதிலளித்திருக்கிறார். ரொனால்டோ குறித்த கேள்விக்குப் பதிலளித்த மெஸ்ஸி, ரொனால்டோவின் சவாலை ஏற்று இத்தாலி கிளப்பில் இணைவதா? எனக்கு எந்த மாற்றமும் தேவையில்லை. உலகின் சிறந்த அணியில் நான் இருக்கிறேன். என்னுடைய சவால்கள் ஒவ்வோர் ஆண்டும் மாறிவருகின்றன. புதிய இலக்குகளை நிர்ணயிப்பதற்காக அணியை அல்லது லீக் தொடர்களையோ மாற்ற வேண்டிய அவசியம் எனக்கு இல்லை. நான் எனது சொந்த அணியில் இருக்கிறேன்; எனக்கு எந்த மாற்றமும் தேவையில்லை என்று மெஸ்ஸி போல்ட் ஸ்டேட்மென்ட் தட்டியிருக்கிறார்.



# நாப்போலியை வென்றது இன்டர் மிலன்

இத்தாலியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான சீரி ஏ தொடரில், தமது மைதானத்தில் இடம்பெற்ற நாப்போலி அணியுடனான போட்டியில் 1-0 என்ற கோல் கணக்கில் இன்டர் மிலன் அணி வென்றது. இன்டர் மிலன் சார்பாகப் பெறப்பட்ட கோலை லோட்டரோ மார்ட்டின்ஸ் பெற்றிருந்தார்.

இதேவேளை, தமது மைதானத்தில் நேற்றிரவு இடம்பெற்ற ஜுவெண்டஸ் அணியுடனான போட்டியை 2-2 என்ற கோல் கணக்கில் அட்டலாண்டா அணி சமநிலையில் முடித்துக் கொண்டது.



இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், லெய்செஸ்டர் சிற்றியின் மைதானத்தில் இடம்பெற்ற அவ்வணியுடனான போட்டியில் நடப்புச் சம்பியன்களான மன்செஸ்டர் சிற்றி 1-2 என்ற கோல் கணக்கில் தோற்றது.

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் (தனியார்) நிறுவனத்தின் ஜாஎல, மினுவான்கொட வீதி, 302/1/A இலக்கத்தில் அமைந்துள்ள அச்சகத்தில் அச்சிடப்பட்டு 30.12.2018 ஞாயிற்றுக்கிழமை அன்று வெளியிடப்பட்டது.

# தென்னிலங்கை மக்கள் மத்தியில் தமிழ்தேசிய கூட்டமைப்புக்கு பாரிய மரியாதை ஏற்பட்டுள்ளது: எம்.ஏ.சுமந்திரன் தெரிவிப்பு

**க.விஜயரெத்தினம், உ.உதயகாந்த்**

நாட்டினை சர்வதிகாரத்திற்கு இட்டுச் செல்வதனை தடுக்க வேண்டும் என்பதற்காகவே முதலாவது மனுவை உச்ச நீதிமன்றத்திலே தமிழ்தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஐயாவே வழங்கினார். இதனால் தென்னிலங்கை மக்கள் மத்தியில் தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு மரியாதை ஏற்பட்டு இருக்கின்றது என பாராளுமன்ற உறுப்பினரும்,ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் ஜோசப் பரராஜசிங்கத்தின் 13ஆம் ஆண்டு நினைவு தினம் மட்டக்களப்பு அமெரிக்க மிஷன் மண்டபத்தில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி மட்டக்களப்பு மாவட்ட இளைஞர் அணியின் ஏற்பாட்டில் அதன் தலைவர் எஸ்.சேயோன் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது அமரர் ஜோசப் பரராஜசிங்கத்தின் திருவுருவச் சிலைக்கு மலர்மாலை அணிவித்தும்,ஈகைச்சுடரேற்றி வைத்து உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் கி.துரைராஜசிங்கம்,தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான த.கனகசபை, பா.அரியநேந்திரன், பொன்.செல்வராசா, பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனின் துணைவியார், மட்டக்களப்பு மாநகரசபை முதல்வர் தி.சரவணபவன், பிரதிமேயர், முன்னாள் மாகாணசபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டார்கள்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:-

இந்த நாட்டை குடியரசாக இருந்து முடியரசாக மாற்றுவதற்கான சதிவேலைகள் அண்மையில் நடந்தேறிய போது அதனைத்தடுத்து நாட்டினுடைய ஜனநாயத்தையும், இறைமையும் பாதுகாப்பதற்கே தமிழ்தேசிய கூட்டமைப்பும் இணைந்து கொண்டது.

19ஆவது சீர்திருத்தத்திற்கு முன்னர் ஒரு பிரதமரை பதவி நீக்க 3 காரணங்கள் இருந்தன. அதில் ஒன்று ஜனாதிபதி கையொப்பம் இட்டு ஜனாதிபதியை நீக்கி வைக்க முடியும். ஆனால் 19ஆவது சீர்திருத்தத்தில் அந்த மூன்று காரணிகளில் ஜனாதிபதி கையொப்பம் இட்டு பிரதமரை நீக்கமுடியும் எனும் காரணி நீக்கப்பட்டது.இந்தநிலையில்தான் அதிகாரத்துக்கு அப்பால் ஜனாதிபதியால் பிரதமர் நீக்கப்பட்டிருந்தார்.

இதனைத் தொடர்ந்து 2015ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ அவர்களை தோற்கடிப்பதற்காக பொது வேட்பாளரை ஆதரித்து வெற்றி பெறச்செய்தோம். இவ்வாறு தோற்கடிக்கப்பட்ட நபரையே பிரதமராக்கியிருந்தார். அவர் பாராளுமன்றத்திலே பெருபான்மையை நிருபிப்பிதற்காக பாராளுமன்ற உறுப்பினர்களை விலைபேசப்பட்டார்கள். இக்காலகட்டத்தில் தமிழ்தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களுகிடையும் பேரம்பேசப்பட்டது. அதில் வியாளேந்திரன் எம்.பி. அவர்கள் பக்கம் சென்றிருந்தார்.ஏனையவர்கள் அவர்களின் கருத்துக்கு செவிசாய்க்கவில்லை.

பெருபான்மையை நிரூபிக்க முடியாமலே பாராளுமன்றம் கலைக்கப்பட்டது.அதாவது 19 ஆவது சீர்திருத்தத்திற்கு முன்பு பாராளுமன்றத்தின் ஆயுட்காலம் ஒரு வருடம் முடிவடைந்தால் ஜனாதிபதியால் கலைக்கமுடியும்.19 ஆவது சீர்திருத்தின் பிரகாரம் நான்கரை வருடம் பாராளுமன்றம் கடந்த பிற்பாடே பாராளுமன்றம் கலைக்கப்பட வேண்டும். இந்த விடயத்தை ஜனாதிபதி கருத்திற் கொள்ளாமாலே பாராளுமன்றம் கலைக்கப்பட்டது.இதனால் நீதிமன்றம் சென்று ஜனநாயக்தை உறுதிப்படுத்தியுள்ளோம்.இதனால் தென்னிலங்கை மட்டுமல்ல சர்வதேசத்திலும் தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு மரியாதை உள்ளது.

தமிழ்தேசிய கூட்டமைப்பு ரணிலுக்கு ஆதரவாக நீதிமன்றம் சென்றதாக பலர் பேசுகின்றார்கள்.ஆனால் ரணில் விக்கிரமசிங்கவுக்கோ அல்லது ஐக்கிய தேசிய கட்சிக்கோ நாம் நீதிமன்றம் செல்லவில்லை.நாட்டை சர்வதிகாரப்போக்கு இட்டுச் செல்லாது ஜனநாயகத்தை பாதுகாக்கவே நீதிமன்றம் சென்றிருந்தோம்.இந்த நாடு சர்வதிகாரப்போக்கிற்கு தள்ளப்பட இருந்தநிலையில் அதனை முளையோடு கிள்ளியெறிந்த நிலை தமிழ்தேசிய கூட்டமைப்புக்கே இருப்பதாக பலராலும் பேசப்படுகின்றது.

இந்தநாட்டிலே தமிழ்மக்களுக்கு சுயநிர்ணய உரிமையை பெறுவதற்கு உரித்துண்டு.அதனைப்பெறுவதற்கு தமிழ்தேசிய கூட்டமைப்பின் தாகம், உணர்வு, பயணம் இருக்கின்றது. தென்னிலங்கையில் உள்ள மக்களிடம் சமஸ்டி என்ற பயமும்,வடக்கிலே ஒற்றையாட்சி என்ற பயமும், பயஉணர்வும் இருக்கின்றது எனத்தெரிவித்தார்




## பல்கலைக்கழக மாணவர் பேரவையில் பெண்கள் பிரதிநிதித்துவம் அதிகரிக்க வேண்டும்

**சேனையூர் நிருபர்**

பல்கலைக்கழக மாணவர் பேரவையிலே பால் நிலை சமத்தவத்தை உறுதிப்படுத்தும் வகையில் வகையில் பெண்கள் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்படவேண்டும் என அம்பாறை மாவட்ட மனித உரிமைக்கள் ஆணைக்குளுவின் உதவி ஆணையாளர் ஏ.எல்.இசடீன் தெரிவித்தார்.




திருகோணமலை இந்துக்கலாசார மண்டபத்தில் நடந்த மாபெரும் மனித உரிமைகள் ஆய்வரங்கில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்படி விடயத்தை வலியுறுத்தினார்

அவர் தொடர்ந்து குறிப்பிடுகையில்

பல்கலைக்கழகங்களில் உள்ள மாணவர்கள் பேரவைகளில் அதிகளவிலானமாணவர்கள் பெண்களாக இருக்கின்றனர். அங்கு குறிப்பாக 80வீதமான பெண் மாணவர்கள் உள்ளபோதிலும் மாணவர்கள் பேரவை போன்ற அமைப்புக்களில் 20 வீதமான பிரதிநிதித்தவத்தைக்கொண்ட ஆண்களே முக்கியமான பதவிகளில் இருப்பதுடன் பெண்களின் பிரதிநிதித்துவம் அங்கு குறைவாகவே காணப்படுகின்றது.

இங்கு பெண்களின்பிரதிநிதித்தவம் அதிகரிக்கப்படவேண்டும் பால்நிலை சமத்துவத்தை சமூகத்தில் உறுதிப்படுத்தும் வகையில் முன்மாதிரியாக பல்கலைக்கழக மாணவர்கள் பேரவையில் பெண்களின் பங்களிப்பபை அதிகரிக்க வேண்டும்

இவ்வாறான பேரவைகளில் தலைவராகவும் ஒரு ஆண்மாணவர்தான் இருப்பார், உபதலைவராகவும் ஒரு ஆண்மாணவர்தான் இருப்பார் இவ்வாறான கட்டைப்பிலேயே பிரதிநிதித்துவம் இருப்பதனைக்காண முடிகின்றது.

ஆனால் 80 வீதமான பெண்கள் இருக்கும் இ;வாறான அமைப்புக்களில் பெண்களுக்கான பிரதிநிதித்துவம் வழங்கப்படுவதில்லை. இதனால் தான் பெண்களுக்கான உரிமைகளை உத்தரவாதப்படுத்தும் வகையில் ஆரம்ப அடிப்படையாக பெண்களின் பிரதிநிதித்துவ மாற்றம் முன்மாதிரியாக இங்கு கொண்டுவரப்படவேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

## சமூக சேவைகள் திணைக்களத்தின் சேவைகள்

**சேனையூர் நிருபர்**

கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் சேவைகள் தொடர்பாக மாகாணத்தில் உள்ள அனைவரும் முறையிட்டும் கேள்வி எழுப்பியும் சேவைகளை பெற முடியும் என கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்கள பணிப்பாளர் மதிவண்ணன் தெரிவித்தார்.

வீ எபக்ட் நிறுவனத்தின் நிதி அனுசரணையில் இளைஞர் அபிவிருத்தி அகத்தினால் திருகோணமலையில் இடம் பெற்ற மனித உரிமைகள் அரங்கில் விருந்தினராக கலந்துகொண்டு சிறப்பு உரையாற்றும் போது இவ்வாறு தெரிவித்தார்.



தமது திணைக்களத்தால் கிழக்கு மாகாண மட்டத்தில் வழங்கப்படும் சேவைகள் தொடரபாக ஒவ்வொரு பிரதேச செயலகங்களிலும் உள்ள சமூக சேவைகள் உத்தியோத்தரிடமும் பெற்றுக் கொள்ள முடியும்.

இதனடிப்படையில் பொது சன உதவித் தொகை பாரிய நோய்களுக்கான உதவு தொகை சிறு கைத்தொழில் முயற்சியாளர்களுக்கான மானியம் மாற்றுத் திறனாளிகளுக்கான உதவிகள் பெண் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கான உதவித் திட்டம் தடுப்பு முகாம்களில் இருந்து புனர்வாழ்வு பெற்றவர்களுக்கான உதவித் திட்டம் போன்ற சேவைகள் வழங்கப்படுகின்றது.

இவற்றை எழுத்து மூலமாக கோருமிடத்து வெளிப்படையாக பெற்றுக் கொள்ள முடியும் என்று கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்கள பணிப்பாளர் மதிவண்ணன் மேலும் தெரிவித்தார்.

## கிழக்கு மாகாணத்தில் 2018 ஆம் ஆண்டு முகாமைத்துவ உதவியாளர் தரம் III வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்பில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது

### முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஜெ.ஜெனார்த்தனன்

**சேனையூர் நிருபர்**

கிழக்கு மாகாணத்தில் 2018 ஆம் ஆண்டு முகாமைத்துவ உதவியாளர் தரம் III வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்பில் ஏற்பட்டுள்ள அதிருப்தி மற்றும் சந்தேகத்தன்மை.உள்ளது என கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ஜெ.ஜெனார்த்தனன் கௌரவ கிழக்கு மாகாண ஆளுநர் ரோகித போகொல்லாகம அவர்களுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

இக்கடிதம் பின்வருமாறு அமைந்துள்ளது.

கிழக்குமாகாணத்தில் முகாமைத்துவ உதவியாளர்கள் ஆட்சேர்ப்புச் செய்வதற்காக நியாயமற்றமுறையில் நேர்முகத் தேர்வுக்கான கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக பரீட்சாத்திகளிடம் இருந்து முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றவண்ணம் இருக்கின்றன.

இது தொடர்பில் தாங்கள் நியாயமான முறையில் நேர்முகப்பரீட்சையும் நியமனங்களும் வழங்குவதற்கு ஏதுவாக பின்வரும் கருத்துக்களை தெரிவிக்கின்றேன்.

1-முகாமைத்துவ உதவியாளர் ஆட்சேர்ப்பிற்கு வெளியிடப்பட்ட மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ விளம்பரத்தில் வெற்றிடங்கள் மாவட்ட ரீதியான இன வீதாசாரமுறையில் நிரப்பப்படும் என குறிப்பிடப்பட்டிருந்தது. இது இலங்கையில் எந்த மாகாணத்திலும் இல்லாத அடிப்படை மனித உரிமை மீறுகின்ற ஒரு விளம்பரம் என கருதுகிறேன்.

2- பல்லினங்கள் கலந்து வாழும் வடக்கு , மத்திய, மேல், வடமத்திய போன்ற மாகாணங்களில் இவ்வாறு அடிப்படை மனிதஉரிமை மீறும் வகையில் விண்ணப்பங்கள் கோரப்படவில்லை. அவ்வாறு கோரப்பட்டிருந்தால் குறித்த மாகாணங்களின் இனவீதாசாரத்திற்கேற்பவே முகாமைத்துவ உதவியாளர்கள் உள்ளிட்ட அனைத்து அரச உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையும் அமைந்து இருக்கும்.

3-மத்திய அரசாங்கத்தால் கோரப்படுகின்ற எந்த வேலைவாய்ப்புக்கான வர்த்தமானியிலும் இனவீதாசாரஅடிப்படையில் வெற்றிடங்கள் நிரப்பப்படும் என அறிவித்தல் வருவதில்லை. அதே போன்று 2013 இடம்பெற்ற கிழக்கு மாகாணசபையின் பொதுச்சேவைகள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட முகாமைத்துவ உதவியாளர் ஆட்சேர்ப்புக்கான விளம்பரத்திலும் இனவீதாசாரம் பற்றி குறிப்பிட்டிருக்கவில்லை.

4- 2013ஆம் ஆண்டு திறமை அடிப்படையில் ஆட்சேர்ப்புச்செய்வதற்கான விளம்பரங்கள் கோரப்பட்டிருந்தும் உலகத்தில் எந்த நாட்டிலும் இல்லாத விநோதமான முறையாக இனரீதியான சமப்படுத்தல் முறையில் திருகோணமலை மாவட்டத்தில் தமிழர்கள் முற்று முழுதாக புறக்கணிப்பட்டு இருந்தார்கள். சட்டத்தின் உதவியை நாடிய பரீட்சாத்திகளுக்கு நியமனம் வழங்கப்பட்டு இருந்தாலும் ஏனைய பரீட்சாத்திகளுக்கு அநீதி இழைக்கப்பட்டு அவர்களுக்கான நியமன வாய்ப்பு பறிக்கப்பட்டிருந்ததை தங்களின் நினைவுக்கு கொண்டுவர விரும்புகிறேன்.

5-முன்னர் நடைபெற்றது போலவே சமப்படுத்தல் செயற்பாடு; அரச உத்தியோகத்தர் மட்டத்தில் இடம்பெறுவதானால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தில் தமிழ்பேசும் மக்களின் இனங்களே அதிகளவாக வாழ்கிறார்கள் அந்த அடிப்படையில் ஆளுநர்.பிரதமசெயலாளர்.மற்றும் அரசாங்க அதிபர்களை தமிழ்பேசும் இனங்களை சேர்ந்தவர்களாக நியமிக்கப்பட்டிருக்க வேண்டும். அவற்றில் இனரீதியான சமப்படுத்தலை பார்க்காத போதிலும் அரச உத்தியோகத்தர்களில் மட்டும் இனவீதாசாரம் பார்ப்பதும் அதை சமப்படுத்தும் முயற்சி என்று ஏழை இளைஞர் யுவதிகளின் வயிற்றிலடிப்பதும் நியாயத்திற்கு முரணானது.

6- நிரப்பப்படவிருக்கும் மாகாணத்திற்குரிய மொத்த வெற்றிடங்களோ, மாவட்ட ரீதியான வெற்றிடங்களோ விளம்பரத்தில் பகிரங்கமாக குறிப்பிடாமல் விட்டிருப்பது ஆளுநர்செயலகம், மாகாணபொதுச்சேவைகள் ஆணைக்குழு மற்றும் மாகாணபொது நிர்வாக திணைக்களம் ஆகியவற்றின் வெளிப்படைத்தன்மையை சந்தேகம் கொள்ள வைக்கிறது.

7-இச் செயற்பாடானது கடந்த அரசாங்கத்தில் இடம்பெற்ற இனரீதியான சமப்படுத்தலைப்போல கொடுமையான மனித உரிமை மீறும் செயற்பாட்டை ஒத்ததான நடைமுறைப்படுத்தலுக்கான முனைப்பாக இருக்குமோ என பரீட்சைக்கு தோற்றியவர்களையும் பொது மக்களையும் அச்சம் கொள்ள வைக்கிறது.



8- கிழக்கிலும் பெரும்பாண்மையாக தமிழ் மக்களும் வாக்களித்து ஏற்படுத்திய நல்லாட்சியின் அதிமேதகு ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட மதிப்புக்குரிய தாங்கள், கடந்த எதேச்சதிகாரமான ஆட்சியில் இடம்பெற்றதை போன்ற அடிப்படை மனித உரிமை மீறும் செயற்பாட்டை ஒத்த நடவடிக்கைக்கு துணைபோகமாட்டீர்கள் என நம்புகிறோம்.

9- நடைபெறவிருக்கும் முகாமைத்துவ உதவியாளர் நியமனத்தில் எவரும் பாதிக்காவண்ணம் ஆககுறைந்தது விளம்பரத்தில் குறிப்பிட்டதை போலவாவது நியமனங்களை வழங்குவதற்கான நியாயமான நடவடிக்கையை தாங்கள் எடுக்கவேண்டும் என்று பாதிக்கப்பட்டிருக்கும் பரீட்சாத்திகள் சார்பாக கேட்டுக்கொள்வதோடு. எதிர்காலத்தில் மாகாணத்தின் நியமனங்களை திறமை அடிப்படையில் வழங்குவதை உறுதிப்படுத்துமாறும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.என கிழக்கு மாகாண ஆளுநர் ரோகித போகொல்லாகம அவர்களுக்கு முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஜெ.ஜெனார்த்தனன் அனுப்பிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 14வது ஆண்டு சுனாமி ஞாபகார்த்த நிகழ்வுகள்













**உதயகாந்த்**

14வது ஆண்டு சுனாமி ஞாபகார்த்த நிகழ்வுகள் மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் உணர்வுபூர்வமாக நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சுனாமி அனர்த்தம் காரணமாக 2800க்கும் மேற்பட்டவாகள் காவுகொள்ளப்பட்ட நிலையில் இன்று அதன் 14வது ஆண்டிநினை நினைவுகூரும் வகையில்நிகழ்வுகள் நடைபெற்றன.

மட்டக்களப்பு கல்லடி டச்பார், திருச்செந்தூர், நாவலடி ஆகிய பகுதிகளில் சுனாமி நினைவேந்தல் நிகழ்கள் நடைபெற்றன.

திருச்செந்தூர் சுனாமி ஞாபகார்த்த நினைவாலயத்தில் நிகழ்வுகள் உணர்வுபூர்வமாக நடைபெற்றன.

மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் பொன்னையா ஜோசப் ஆண்டகையினால் விசேட பூஜைகள் நடைபெற்று ஈகச்சுடர் ஏற்றப்பட்டு உறவுகள் அஞ்சலி செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாநகரசபை முதல்வர் தி.சரவணபவன்,பிரதிமுதல்வர் க.சத்தியசீலன்,ஆணையாளர் க.சித்திரவேல்,முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் இரா.துரைரெட்னம் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இப்பகுதிகளில் சுனாமி அனர்த்தம் காரணமாக 1800க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்திருந்ததுடன் நூற்றுக்கணக்கானோர் படுகாயமடைந்த நிலையில் பல கோடி ரூபா சொத்துகள் இழக்கப்பட்டன.




## காரைதீவு பல்கலைக்கழக மாணவர்கள் சமூக ஒன்றியத்தின் வெள்ளி விழா ஜனவரி 13 இல்

**கல்முனை நிருபர்**

பல்கலைக்கழக மாணவர்கள் சமூக சேவை ஒன்றியம் -காரைதீவு அதன் வெள்ளி விழாவை எதிர்வரும் ஜனவரி 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கோலாகலமாக கொண்டாடுகின்றது.

விழா ஏற்பாடுகள் ஒன்றியத்தின் தலைவர் என். நிராஜ் தலைமையிலான நிர்வாகத்தால் மேற்கொள்ளப்படுகின்றன.

விழாவுக்கு பிரதம விருந்தினராக கிழக்கு பல்கலைக்கழக உப வேந்தர் பேராசிரியர் ரி. ஜெயசிங்கம் அழைக்கப்படவுள்ளார்.

அத்துடன் பல்கலைக்கழகங்களின் பேராசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்கள், ஒன்றியத்தின் சிரேஷ்ட உறுப்பினர்கள் ஆகியோரும் பேராளர்களாக அழைக்கப்படவுள்ளனர்.

விழாவின் சிறப்பம்சங்களாக வெள்ளி விழா நூல் வெளியீடு, கௌரவிப்புகள், புதிய உறுப்பினர்களுக்கான வரவேற்பு ஆகியன இடம்பெற உள்ளன.

நாடு பூராவும் உள்ள பல்கலைக்கழகங்களின் காரைதீவு மாணவர்களை ஒன்றுதிரட்டி 1993 ஆம் ஆண்டு மே 01 ஆம் திகதி ஒன்றியம் ஆரம்பிக்கப்பட்டு கடந்த 25 வருடங்களாக காரைதீவின் கல்வி வளர்ச்சியில் மிக காத்திரமான பங்களிப்புகளை செய்து வருகின்றது. 300 இற்கும் அதிகமான உறுப்பினர்கள் இவ்வொன்றியத்தில் அங்கத்துவம் வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## வாழைச்சேனை பிரதேச செயலகத்தில் சுனாமியால் உயிரிழந்தவர்களுக்காக மௌன அஞ்சலி





**வாழைச்சேனை நிருபர்**

மிகவும் பாதுகாப்பான நாளை நோக்கி என்ற தொனிப்பொருளில் வாழைச்சேனை கோறளைப்பற்று பிரதேச செயலகத்தில் சுனாமியால் உயிரிழந்தவர்களுக்காக மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

பிரதேச செயலாளர் வி.வாசுதேவன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டு சுனாமிப் பேரலையால் உயிரிழந்தவர்களுக்காக இரண்டு நிமிட அஞ்சலி செலுத்தினர்.

செயலக அனர்த்த முகாமைத்துவ பிரிவு ஏற்பாடு செய்திருந்த தேசிய பாதுகாப்பு நிகழ்வில் செயலக பிரிவிற்குட்பட்ட கல்குடா, பாசிக்குடா, கல்மடு, பட்டியடிச்சேனை உட்பட்ட பகுதிகளில் உயிர் இழந்தவர்களுக்கும், உலகளாவிய ரீதியில் சுனாமிப் பேரலையால் உயிரிழந்தவர்களுக்குமாக அஞ்சலி காலை 9.25 மணி முதல் 9.27 மணி வரையில் செலுத்தினர்.

2004ம் ஆண்டு சுனாமி என்ற பேரலை ஏற்பட்டு 14 வருடங்கள் பூர்த்தியடைவதை முன்னிட்டு நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் நினைவு நிகழ்வுகளும் மத அனுஷ்டானங்களும் இடம்பெற்று வருகின்றது.

சகல அரசாங்க நிறுவனங்கள் மற்றும் பொது நிறுவனங்களிலும் சுனாமியில் உயிரிழந்தவர்களுக்காக காலை 9.25 மணி முதல் 9.27 மணி வரையில் இரண்டு நிமிட நேரம் மௌன அஞ்சலி செலுத்துமாறும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

2004 டிசம்பர் 26ம் திகதி ஏற்பட்ட சுனாமி - 2004 இந்தியப் பெருங்கடல் நில நடுக்கத்தினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் மட்டக்களப்பும் ஒன்றாகும்.









சுனாமி ஆழிப் பேரலை ஏற்பட்டு 14 ஆண்டுகள் நிறைவில் எம்மை விட்டு பிரிந்து சென்ற எம் உறவுகளுக்காக சுனாமி நினைவு தீபம் ஏற்றும் ஆத்ம சாந்தி பிரார்த்தனை நிகழ்வு புதன்கிழமை காரைதீவு இந்துசமய விருத்திச் சங்கத்தின் ஏற்பாடில் சங்கம் தலைவர் திரு.எஸ்.மணிமாறன் அவர்களின் தலைமையில் காரைதீவில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் காரைதீவு பிரதேசசெயலாளர், உத்தியோகத்தர்கள், பாடசாலை அதிபர்கள், சம்மாந்துறை பொலிஸ், ஆலய பரிபாலன சபையினர், தர்மகத்தாக்கள், காரைதீவு பிரதேச சபை தவிசாளர், உத்தியோகத்தர்கள் ஊழியர்கள் கலந்து கொண்ட சேவையாளர்களையும் பொது மக்களையும் படத்தில் காணலாம்.

படம்: காரைதீவு நிருபர்

## கிழக்கு மாகாணத்தின் கல்வி வளர்ச்சி உயர்த்தப்படவேண்டும்

**க.விஜயரெத்தினம்**

கிழக்கு மாகாணத்தின் கல்வி வளர்ச்சி,வீழ்ச்சி பற்றி எல்லோரும் மிகவும் உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருக்கின்றார்கள்.இலங்கையில் ஒன்பது மாகாணங்கள் காணப்படுகின்றது.ஒவ்வொரு மாகாணங்களின் கல்வி வளர்ச்சி, அதன் தரப்படுத்தல்கள் எல்லோருக்கும் தெரியும். இலங்கையில் ஒன்பதாவது இடத்திற்கு கிழக்கு மாகாணத்தின் கல்வி வளர்ச்சி நிரல்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு ஒன்பதாவது இடத்திற்கு தள்ளப்படுவதற்கு காரணம் யுத்தமும் ஒரு காரணமாகும். யுத்தத்தில் சிக்குண்ட மக்களின் எண்ணங்களும்,மனப்பாங்கும்,மாற்றமடையாமல் அல்லது விருத்தியடையாமல் இருப்பது தான் கல்வி வளர்ச்சி வீழ்ச்சிக்கான காரணமாகும்.

இவற்றை தூரநோக்குடன் கட்டியெழுப்புவதில் அரசாங்கம் முனைப்புடன் செயற்படுகின்றது. கிழக்கின் கல்வியை வளர்ச்சிக்கு கொண்டு செல்வதாயின் அனைவரும் முனைப்புடன் செயற்பட வேண்டும்.கிழக்கு மாகாணத்தின் கல்வி வீழ்ச்சியை உணர்ந்து செயற்பட்டால் ஏனைய மாகாணங்களுடன் போட்டி போட்டு எங்கள் கிழக்கு மாகாணத்தை முதன்மையான மாகாணமாக மாற்றிடலாம்.இதுதான் இம்மாகாணத்தில் உள்ள கல்வி அதிகாரிகளின் எதிர்பார்ப்பாகும்.

கிழக்கு மாகாணத்தில் தற்பொழுது மாகாண சபை ஆட்சி நிறைவடைந்திருக்கின்ற இந்த நிலையில் இங்கே நிர்வாக ரீதியாக ஒரு சில சிக்கல்கள் ஏற்பட்டிருப்பதாக தெரியவருகின்றது. இந்த சிக்கல்கள் நிவர்த்தி செய்யப்படாவிட்டால் அது மாணவர்களின் கல்வியையே பாதிக்கும்.

அண்மையில் வெளிவந்துள்ள ஐந்தாம் தர புலமைப்பரீட்சை பெறுபேறுகளின்படி மிகவும் பின்தங்கிய கஸ்டபிரதேசங்களை சேர்ந்த மாணவர்கள் மிகவும் சிறந்த புள்ளிகளை பெற்று பிரபலமான பாடசாலைகளுக்கு சவால் விடுக்கும் வகையில் சித்தியடைந்திருக்கின்றார்கள். அதனை நான் வரவேற்கின்றேன்.இதே போல எங்களுடைய மலையக பகுதிகளிலும் மாணவர்கள் சித்தியடைந்துள்ளார்கள். எனவே பாடசாலையில் இருக்கின்ற வளங்களை கொண்டு அவர்களுடைய திறமையின் காரணமாக இந்த பரீட்சையில் வெற்றி கொண்டுள்ளார்கள்.

பாடசாலையில் எத்தனை குறைபாடுகள் இருந்தாலும் அவற்றையெல்லாம் பின் தள்ளிவிட்டு மாணவர்கள் தங்களுடைய திறமைகளை வெளிக்காட்டியிருக்கின்றார்கள்.

இலங்கையில் இருக்கின்ற அனைத்து பாடசாலைகளின் தரமும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும் என்ற காரணத்தினால்தான் கல்வி அமைச்சின் மூலமாக அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை எனும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதன் மூலம் இன்று பல பாடசாலைகள் நன்மைகளை பெற்றுக் கொண்டுள்ளது.இந்த திட்டமானது ஐந்து வருடத்திற்கு நடைமுறைபடுத்தப்படுகின்ற வகையிலேயே அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.அப்படியானால் இந்த திட்டம் நிறைவடைகின்ற பொழுது அநேகமான பாடசாலைகள் சிறந்த நிலையை அடையும்.

இன்று நாட்டில் பொருளாதார ரீதியாக சில பின்னடைவுகள் இருக்கின்றது. அதனை முழுமையாக நிவர்த்தி செய்ய வேண்டுமானால் முதலாவதாக தமிழர்களின் அரசியல் பிரச்சினைக்கு ஜனநாயக ரீதியில் தீர்வை பெற்றுக் கொடுக்க வேண்டும். அப்படி செய்தால் இன்னும் அதிகமான முதலீட்டாளர்களை எங்களுடைய நாட்டிற்கு அழைத்து வர முடியும் அப்படி செய்ய முடியுமாக இருந்தால் நிச்சயமாக எமது பொருளாதாரத்தை அபிவிருத்தி அடைய செய்ய வேண்டும்.

தற்போது கிழக்கு மாகாணத்தில் தரம் ஒன்றுக்கு சேர்க்கப்படும் தமிழ் மாணவர்களின் எண்ணிக்கை பெருமளவில் வீழ்ச்சியடைந்து வருகின்றது.பாடசாலைகளுக்கும்,மத தலங்களுக்கும் இடையில் இந்த நாட்டின் கல்வி வரலாற்றில் நெருங்கிய தொடர்பு இருந்ததை நாங்கள் காணமுடியும்.இந்த நாட்டில் குடியேற்றவாதம் செய்தவர்கள் கூட தமது மதத்தினை பரப்புவதற்கு கல்வியை பயன்படுத்தினர்.மதத்தின் ஊடாக கல்வி பரப்பப்பட்டது.தேவாலயம்,வித்தியாலயம்,காரியாலயம் போன்றன மதிப்பு,மரியாதை,பண்பாடு,ஒழுக்கம் போன்றவற்றுக்குரிய இடங்கள் ஆகும்.இந்த மூன்றுக்கும் இடையில் ஒருமித்த நல்லிணக்கம் காணப்படும் போதுதான் அந்த பிரதேசத்தில் ஒரு செழிப்பான நிலை உருவாகும்.இதனால்தான் அப்பிரதேசம் கல்வியில் வளர்ச்சியடையும்.

ஆலயங்கள் சமூகத்திற்கு உதவிசெய்யும் நிறுவனமாகவும்,சமூகம் ஆலயத்திற்கு உதவும் நிறுவனங்களாகவும் காணப்படவேண்டும். இதேபோன்று சமூகம் பாடசாலைகளுக்கு உதவவேண்டும்,பாடசாலை சமூகத்திற்கு உதவவேண்டும்.பாடசாலை என்பது ஒரு சமூக பரிவர்த்தன நிலையமாகவும் காணப்படுகின்றது.பாடசாலைக்குரிய வளங்கள் சமூகத்திற்காக திறந்துவிடப்படவேண்டும், சமூகத்தில் இருக்கும் வளங்கள் பாடசாலைக்காக திறந்துவிடப்படவேண்டும். இந்த அடிப்படையிலேயே இந்த பாடசாலைகள் செயற்படவேண்டும்.இந்த நாட்டில் தமிழர்களை பொருத்தவரையில் எமது அனைத்து தேவைகளும் கல்வியாகவே இருக்கவேண்டும்.எமதுபிள்ளைகளுக்கு கல்வியை வழங்கவேண்டியது எமது கடமை என்பதுக்கு எப்பால் எமது தலையாய கடமையாகும்.ஐந்து வயதை பூர்த்திசெய்யும் பிள்ளை முறையான பாடசாலையில் தரம் ஒன்று கல்வியை கற்கவேண்டும்.அதற்கு முன்னர் முன்பள்ளியில் கல்வியை பெறவேண்டும். அந்த பிள்ளை பாடசாலைக்கு சென்று கல்வியை கற்பதற்கான களத்தினையே முன்பள்ளிகள் ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும்.இந்த கல்வியை வளங்கும்போது கல்வி துறை சார்ந்தவர்களுக்கு உளவியல் ரீதியான அறிவு அவசியமாகும்.

01 தொடக்கம் 05வரையான கற்பித்தல் செயற்பாடுகள் ஆரம்பக்கல்வி செயற்பாடுகள் என வரையறுக்கப்பட்டுள்ளது. இதில் தரம் 01யும் 02யும் உள்ளடக்கியது முதன்மை நிலை 01 என சொல்லப்படுகின்றது. தரம் 03யும் 04யும் கொண்டது முதன்மை நிலை 02 என சொல்லப்படுகின்றது. தரம் 05 முதன்மை நிலை 03 என சொல்லப்படுகின்றது. இதில் தரம் 01யும் 02யும் உள்ளடக்கியது முதன்மை நிலை 01இல் உள்ள பிள்ளைகளை ஒன்றுடன் ஒன்று ஒப்பிடக்கூடாது என கல்வி அமைச்சின் சுற்று நிருபத்தில் மிக இறுக்கமாக பணிக்கப்பட்டுள்ளது. அதில் உள்ள பிள்ளைகளை மதிப்பீட்டு பரீட்சை வைத்து தரமதீப்பீடு செய்யக்கூடாது என கூறப்படுகின்றது. ஆனால் சில தேசிய பாடசாலைகள் பரீட்சைகளை வைத்து மதீப்பீடுகளை செய்யும் நிலை காணப்படுகின்றது. இது சுற்று நிருபத்தினை மீறும் செயற்பாடாகும். சில பாடசாலைகளில் ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப் புள்ளிக்கு அதிகமாக பெற்ற மாணவர்களின் புகைப் படம்தாங்கிய பதாகைகளை வைத்துள்ளனர். இது சட்ட விரோதமன நடவடிக்கையாகும்.

ஒரு சில நோக்கங்களுக்காகவே ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சை நடாத்தப்படுகின்றது. இரண்டு வினாப்பத்திரங்களிலும் 35புள்ளிகளுக்கு மேல் எடுத்து 70 புள்ளிகளுக்கு மேல் எடுத்த மாணவர்கள் சித்தியடைந்த மாணவர்கள் என்று சான்றிதழ் வழங்கப்படுகின்றது.இந்த நாட்டில் 98 வீதமான பிள்ளைகளே தரம் ஒன்றுக்காக முறையான பாடசாலைக்கு அனுமதிக்கப்படுகின்றனர்.இரண்டு வீதமான பிள்ளைகள் பாடசாலைக்கு அனுமதிக்கப்படுவதில்லை.அனுமதிக்கப்படும் பிள்ளைகளில் பலர் தரம் ஐந்தை பூர்த்திசெய்யுமுன்பாக பாடசாலைகளின் கல்விச்செயற்பாடுகளில் இருந்து இடையில் விலகுகின்றனர்.கல்வியின் மூலமே தமிழ் சமூகத்தினை தலைநிமிர்ந்து வாழச்செய்யமுடியும்.

கிழக்கு மாகாணத்தில் தரம் ஒன்றுக்கு சேர்க்கப்படும் தமிழ் மாணவர்களின் எண்ணிக்கை வருடாந்தம் பெருமளவில் குறைந்துகொண்டுவருகின்றது. வருடாந்தம் ஐந்தாயிரம் என்ற கணக்கில் குறைந்துவருகின்றது.ஒப்பீட்டு ரீதியில் முஸ்லிம் மாணவர்களின் தொகையினை விட தமிழ் மாணவர்களின் தொகை குறைந்துவருகின்றது.ஐந்து வருடங்களின் பின்னர் சிறிய தொகையில் இயங்கிவரும் தமிழ் பாடசாலைகள் இழுத்து மூடப்படும் அபாயமும் இருந்துவருகின்றது.இதற்கு வகைசொல்லவேண்டியவர்கள் யதார்த்தவாதிகளாகும். தமிழர்களின் இருப்பினை உறுதிப்படுத்துவதற்கு முயற்சிக்கவேண்டும்.இதற்கான விழிப்புணர்வினை சமூகத்திற்கு ஏற்படுத்தவேண்டும்.

கிழக்கு மாகாண புதிய கல்விப் பணிப்பாளராக எம்.கே.எம்.அவர்கள் மன்சூர் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் கிழக்கு மாகாண ஆளுநர் ரோஹித போகல்லாகம அவர்களினால் நியமிக்கப்பட்டுள்ளார். இவரின் வழிகாட்டலில் கிழக்கு மாகாணம் கல்வியில் மாற்றமடைந்து எல்லா மாகாணங்களிலும் முதன்மையான மாகாணமாக திகழ வேண்டும். இதற்கு கல்விக்கொள்கையுடன் கூடிய திட்டமிடலை மாகாண கல்விப்பணிப்பாளர் ஏற்படுத்தப்படவேண்டும்.

கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் மன்சூர் அவர்கள் கிழக்கின் கல்வியை முன்னேற்றுவதற்கும், கிழக்கு மாகாணத்தின் கல்விக்கான வீழ்ச்சியையும்,சிக்கல்களையும் ஆய்வுசெய்து அதன்மூலம் சிறந்ததொரு கல்வித்திட்டங்களை கையாண்டு கிழக்கின் கல்வி வளர்ச்சியை அதிகரிக்க வேண்டும் என்பதுதான் கிழக்கு மாகாணத்தில் உள்ள கல்வி அதிகாரிகளினதும்,அரசியல்வாதிகளினதும், அதிபர், ஆசிரியர்கள், பொதுமக்களின் எதிர்பார்ப்பாகும்.

இலங்கை அரசாங்கம்,கல்வி அமைச்சு ஒன்றிணைந்து நாட்டின் கல்வியை சர்வதேச கல்விக் கொள்கை,திட்டமிடல்களுடன் பல்வேறுவகையான பௌதீகவளங்கள்,ஆளணி வசதி வாய்ப்புக்களுடன் கூடுதலான நிதிப்பங்களிப்புடன் கட்டியெழுப்புவதற்கு திட்டமிட்டுள்ளது.அரசாங்கமும்,கல்வி அமைச்சும் இணைந்து பல சவால்களுடன் வடகிழக்கின் கல்வியை கட்டியெழுப்புவதில் கடுமையான முயற்ச்சிகளை மேற்கொண்டு வருகின்றது. கிழக்கு மாகாண ஆளுநர் ரோஹித போகல்லாகம அவர்களின் வழிகாட்டல்,ஆலோசனையின் பேரில் யுத்தத்தை வெற்றிக்கொண்ட அரசு கிழக்கின் கல்வியை முன்னேற்றுவதில் துரிதமாக செயற்படுகின்றது. எது எவ்வாறாக இருந்தாலும் கிழக்கில் உள்ள மாகாணக்கல்வி பணிப்பாளர், மேலதிக கல்விப் பணிப்பாளர்கள்,வலயக்கல்விப்பணிப்பாளர்கள், பிரதிக்கல்விப்பணிப்பாளர்கள், கல்வியாளர்கள், புத்திஜீவிகள், மாணவ சமூகம், அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவ சங்கங்கள், பெற்றோர்கள் ஒன்றிணைந்து செயற்படுவதுதான் கிழக்கின் கல்விக்கான வீழ்ச்சியை வளர்ச்சிப்பாதைக்கு இட்டுச்செல்லலாம் என்பதுதான் இன்றைய நிலைப்பாடும்,தேவையுமாகவுள்ளது.

ஒரு பாடசாலையின் வளர்ச்சிப்போக்கும்,வீழ்ச்சிப்போக்கும் பாடசாலையின் அதிபர் தலைமையிலான கல்விச்சமூகத்தில் மட்டும் தங்கியிருக்கவில்லை.அவை இன்று பெற்றோர்களின் செயற்பாட்டிலும்,எண்ணத்திலும் தங்கியிருக்கின்றது.இந்த விடயங்களில் அரசாங்கமும்,கல்வி அமைச்சும் சரியான திட்டமிடல்களுடன் நாட்டின் கல்வியை முன்னேற்றுவதில் வீரியமாக செயற்பட்டுக்கொண்டிருக்கின்றது. இவ்வாறுதான் கிழக்கின் கல்வியை முன்னேற்றுவதில் செயற்பட்டுக்கொண்டிருகின்றார்கள்.

நவீன தொழில்நுட்பம் விரைவான முறையில் வளர்ச்சியடைந்து வருவதன் காரணமாக அவற்றில் தேவையான பலன்தரும் விடயங்களைக் கற்றுக் கொள்ளவேண்டும்.இன்று மாணவர்கள் தேடிப் படிக்கும் நிலை இல்லாமல் போயுள்ளது. தனது பெற்றோர்கள்,பாதுகாவலர்கள் படிக்கனும் என்பதற்காகத்தான் மாணவர்கள் பாடசாலைக்கு புறப்படுகின்றார்கள். இந்நிலை மாற்றப்படவேண்டும். மாணவர்கள் தங்களின் குடும்பத்தின் நிலைப்பாடு,வறுமையை கருத்திற்கொண்டு எதிர்காலத்தை வளப்படுத்திக் கொள்ளவேண்டும். மாணவர்களை அல்லது தங்களின் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பி வைத்துள்ளோம் என்ற நிலையில் பெற்றோர்கள், பாதுகாவலர்கள் இருக்ககூடாது. தமது பிள்ளைகளின் கல்விரீதியான செயற்பாடு,ஒழுக்கவிடயங்கள்,அவனது சமூகரீதியான பார்வை,மாணவர்களின் நடத்தைசார் மதிப்பீடுகள்,தமது பிள்ளைகள் கற்றல் செயற்பாடுகளில் இருந்து விலகி செல்வதற்கான காரணங்கள் பெற்றோர்கள் அறிந்து,தெரிந்து கொள்ளவேண்டும்.

இன்றைய மாணவ சமூகம் கற்றல் செயற்பாடுகளில் இருந்து விலகிச் செல்வதற்கான காரணம் தகவல் தொழில்நுட்பத்தில் தேவையில்லாமல் மூழ்கியிருப்பதாகும்.இதுவும் தவிக்கப்பட வேண்டும். இதனால் கிழக்கின் கல்வி வீழ்ச்சி அடைந்து செல்கின்றது.

எழுதுவதற்கும்,வாசிப்பதற்கும் மாணவர்கள் அதிகளவு அக்கறை செலுத்தவேண்டும்.மாணவர்களின் மத்தியில் வாசிப்பு பழக்கம் பெரியதொரு வீழ்ச்சி கண்டு வருகின்றது.எழுத வாசிக்க தெரியாவிட்டால் ஒரு மனிதன் இருள்சூழ்ந்த உலகத்தில் வாழ்கின்றான்.அவனால் இவ்வுலத்தில் சாதிக்க முடியாமல் போகும்.அந்தநிலை மாற்றமடைந்து ஒவ்வொரு பாடசாலைகளிலும் எழுதுவதற்கும், வாசிப்பதற்கும் மாணவர்களை ஊக்கப்படுத்த வேண்டும்.கிழக்கு மாகாணத்தில் எழுத்து துறையில் சமூக ரீதியாக எழுத்து துறையில் பாரிய இடைவெளி காணப்படுகின்றது.தமிழ் சமூகம் மத்தியில் எழுத்து துறையானது ஒரு தலைமுறை பெரியதொரு இடைவெளி காணப்படுகின்றது.

எனவே பல்வேறு சவால்களுடன் கல்விகற்கும் மாணவர்களின் கல்விவளர்ச்சி உயர்த்தப்பட வேண்டும்.பெற்றோர்கள் தங்களின் பிள்ளைகளின் எதிர்காலம் உணர்ந்து செயற்படவேண்டும்.தேவையான விடயங்களை தவிர்த்து கல்வி முன்னுரிமை வழங்கி சமய நிறுவனங்கள் செயற்பட வேண்டும்.

# மட்டக்களப்பில் கிராமசக்தி வேலைத்திட்டம்





**க.விஜயரெத்தினம்**

ஜனாதிபதி செயலகத்தினால் மட்டக்களப்பு மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் கிராமசக்தி வேலைத்திட்டங்கள் தொடர்பில் அது தொடர்பில் பிரதேச ரீதியில் பணியாற்றும் உத்தியோகத்தர்க்கான பயிற்சிச் செயலமர்வொன்று மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் மா.உதயகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தின் போது, கிராம சக்தி வேலைத்திட்டம் மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படும் கிராமங்களில் கடமையாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

இதன் ஆரம்ப நிகழ்வில், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி.சசிகலா புண்ணியமூர்த்தி, பிரதம உள்ளகக் கணக்காளர் திருமதி.இந்திரா மோகன், உதவித்திட்டமிடல் பணிப்பாளர் அ.சுதர்சன் உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர்.

இதன் போது கிராம மட்டத்தில் நடைபெற்றுவரும் கிராம சக்தி மக்கள் சங்கங்களின் செயற்பாடுகள், திட்டத் தெரிவு, செயற்படுத்தல், எதிர்கால நடவடிக்கைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் தெளிவுபடுத்தப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இதுவரையில் 42 கிராம சக்தி மக்கள் சங்கங்கள் கம்பனிகளாகப் பதிவு செய்யப்பட்டு அவற்றுக்காக 10 லட்சம் ரூபா வீதம் நிதிகள் வழங்கப்பட்டுள்ளன. இவற்றிலிருந்து வாழ்வாதாரம், ஆற்றல் விருத்தி, உட்கட்டமைப்பு வசதி மேம்படுத்தல் ஆகிய செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

நாடளாவிய ரீதியில் 1000 கிராமங்களில் முன்னெடுக்கப்படும் வறுமையைத் தணிக்கும் திட்டத்திற்கு மட்டக்களப்பு மாவட்டத்தில் 42 கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றில் 28 கிராமங்கள் வறுமைக் கிராமங்களாகவும், 14 கிராமங்கள் உற்பத்திக் கிராமங்களாகவும் இனங்காணப்பட்டுள்ளன.

இந்த திட்டம் நடைபெறும் கிராமங்களில் மக்கள் அமைப்புக்கள் உருவாக்கப்பட்டு அவர்களுக்குத் தேவையான திட்டங்களை இனங்கண்டு செயற்படுத்தி பயனடைய வேண்டும் என்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

ஒவ்வொரு கிராம மக்கள் அமைப்புகளுக்கும் 10 இலட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது. இதில் ஆற்றல் மேம்பாட்டுக்காக 30 சதவீதமும் பிரதேசத்தின் வாழ்வாதாரத்தை ஊக்குவிப்பதற்கு மிகக்குறைந்த வட்டியில் வாழ்வாதார கடன்கள் வழங்க 50 சதவீதமும் உட்கட்டுமானத்துக்கு 20 சதவீதமும் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் கிராம சக்தி என்ற கிராமத்தை வலுவூட்டும் வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. வறுமையை ஒழித்து கிராமத்தை அபிவிருத்தி செய்வதே இந்த வேலைத்திட்டத்தின் முக்கியநோக்கமாகும்.

கிராம மட்டத்தில் வறுமையை ஒழிப்பதை நோக்காகக் கொண்டு வாழ்வாதார மேம்படுத்தல், ஆற்றல் விருத்தி, உட்கட்டமைப்பு மேம்படுத்தல் உள்ளிட்ட செயற்பாடுகள் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. 2020ஆம் ஆண்டளவில் 5000 கிராமஉத்தியோகத்தர் பிரிவுகளில் வறுமை ஒழிப்பினை மேற்கொள்ள திட்டமிடப்பட்டதாக இக் கிராம சக்தி வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இதன் முதல் கட்டமாக 20ஆம் திகதி வியாழக்கிழமை ஆயிரம் கிராமங்கள் திட்டம் நாடு தளுவிய ரீதியில் நடத்தப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.




## கலாசார விழாவில் கலைஞர் கௌரவிப்பும் மலர் வெளியீடும்

**துறைநீலாவணை நிருபர்**



கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் போரதீவுப்பற்று பிரதேச செயலக கலாசார பேரவையின் கலாசார விழாவில் கலைஞர் கௌரவிப்பு, புத்தக கண்காட்சி மற்றும் மருதம் சிறப்பு மலர் வெளியீடு என்பன ,பிரதேச செயலாளரும் கலாசார பேரவைத் தலைவருமான இ.ராகுலநாயகி தலைமையில் அண்மையில் இடம்பெற்றது

வெல்லாவெளி கலாசார மத்திய நிலையத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில், தமிழ்த்துறைப் பேராசிரியர் செ.யோகராசா பிரதம அதியாகவும் போரதீவுப்பற்று கோட்டக்கல்வியதிகாரி த.அருள்ராஜா சிறப்பு அதிதியாகவும் கலந்துகொண்டார்.



இதன்போது செயலக கலாசார பேரவையினால் மருதம் சிறப்பு மலர் வெளியீடப்பட்டதுடன் உடுக்கை கலைஞர் க.சுந்தரம்பிள்ளை, மரச்சிற்பக் கலைஞர் அ.சுலக்சன், கூத்துக் கலை விற்பனர் க.சுப்பிரமணியம், நாடக விற்பனர் மு.அம்பலவாணப்பிள்ளை,கூத்துக் கலைஞர் க.பாலசுந்தரம், கிராமிய மருத்துவிச்சி திருமதி மாதம்மை பாலிப்போடி ஆகிய மூத்த கலைஞர்கள் அதிதிகளினால் பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

## வாழ்வாதார உதவி வழங்கல்

**முள்ளிப்பொத்தானை நிருபர்**

தம்பலகாம பிரதேச செயலகத்திலுள்ள சத்துமா உற்பத்தியாளர் சங்கத்திற்கு சுய தொழில் அபிவிருத்திக்காக மீள்குடியேற்ற அமைச்சின் வாழ்வாதார உதவிகளை தம்பலகாம பிரதேச செயலகத்தினூடாக வழங்கி வைக்கப்பட்டது.



இதனை திட்டமிடல் கிளையின் தலைமை இலிகிதர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர் ஆகியோர் இணைந்து வழங்கி வைப்பதை படத்தில் காணலாம்.

## ஓமடியாமடு பிரதேச மாணவனுக்கு அரசாங்க அதிபரால் துவிச்சக்கர வண்டி வழங்கிவைப்பு

2015ஆம் ஆண்டு புலமைபபரிசில் பரீட்சையில் 150 புள்ளிகள் பெற்ற மட்டக்களப்பு மாவட்டத்தின் மிகப்பின்தங்கிய மற்றும் எல்லைப்புறக் கிராமமான ஓமடியாமடு பிரதேச மாணவனுக்கு மாவட்ட அரசாங்க அதிபர் மாணிக்கம் உதயகுமாரின் பிறந்த தினத்தன்று துவிச்சக்கர வண்டியொன்று பரிசாக வழங்கி வைக்கபபட்டது.

மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில், மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்களான திருமதி சுதர்சினி சிறிகாந்த், திருமதி நவரூபரஞ்சினி சிறிகாந்த், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி சசிகலா புண்ணியமூர்த்தி, தேசிய உரச் செயலக உதவிப்பணிப்பாளர் ஏ.எல்.சிராஜுன், பிரதம உள்ளகக்கணக்காளர் திருமதி இந்திரா மோகன், மாவட்ட பொறியியலாளர் எஸ்.சுமன் மற்றும் அதிகாரிகளும் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.



மாவட்டத்தின் பொலநறுவை மாவட்ட எல்லையில் உள்ள மிகப்பின்தங்கிய பிரதேசமான ஓமடியாமடுவைச் சேர்ந்த ஒரு மாணவன் புலமைப்பரிசில் பரீட்சையில் 150 புள்ளிகளைப் பெற்றுக்கொண்டமையானது அரசாங்க அதிபரால் பாராட்டப்பட்டதுடன் தொடர்ச்சியான கற்றலின் மூலம் சிறந்ததொரு கல்வியாளனாக எதிர்காலத்தில் திகழவேண்டும் என்றும் வாழ்த்தினார்.

தேசிய உரச் செயலகத்தினால் ஏற்பாட்டில் இத் துவிச்சக்கர வண்டிய வழங்கும் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிபபிடத்தக்கது.

## அரசியலமைப்பு சதிகளுக்கு முற்றுப்புள்ளி புதிய அங்கத்தவர்களை இணைத்து குழுக்கள் நியமிப்பு

**கிண்ணியா நிருபர்**



அரசியலமைப்பு சதிகளுக்கு எதிராக மேற் கொள்ளப்படும் எல்லா சதிகளுக்கும் முற்றுப் புள்ளி வைக்கும் நோக்குடன் திருகோணமலை மாவட்டத்தில் புதிய அங்கத்தவர்களை இணைத்து குழுக்களை நியமிப்புக்கும் நடவடிக்கை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இத் திட்டத்தின் நிகழ்வு திருகோணமல மாவட்டத்தில் சேருவலத் தொகுதியில் கோமறங்கடவல பகுதியில் உள்ள 5 பிரதேச சபை பகுதியில் சேருவலைத் தொகுதி ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளரும், முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினருமான வைத்தியர் அருண சிறிசேன தலைமையில் இடம் பெற்றது.

இதன் போது இத் தொகுதியில் அமைப்புக்களின் வலிமையை சரி பார்க்கும் திட்டத்தின் கீழ்

ஐ.தே.க வாக்காளர்கள் சேருவில தொகுதி குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

இதன் போது,கோமறங்கடவல, ஹீரோஸ், கல்யாண புர, கல் கட வெவ, மதவச்சி, போன்ற பகுதிகளில் நடை பெற்றுள்ளது. இந் நிகழ்வில் சேருவில பிரதேச சபைத் தலைவர் ஆர், பிராந்திய கவுன்சிலர் சேருவில திரு சுகத் கோமரங்கடவல பிரதேச சபை குழுவின் தலைவர் சந்தன கோமரங்கடவல, பிரதேச சபை திருமதி மாளா மஹா, கோமரங்கடவல பிரதேச சபை கவுன்சில் அலைகள் மதவி ஸ்ரீபுர பிரதேச சபைநிஸந்த, கோமறங்கடவல அமைப்பாளர்கள் ஏற்பாட்டில் இடம் பெற்ற இந் நிகழ்வில் பிரதேச மக்கள், கட்சி ஆர்வலர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

## நலன்புரிச் சங்கத்திற்கு கொட்டகைகள் அன்பளிப்பு



**வாழைச்சேனை நிருபர்**

செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள இரண்டு நலன்புரி சங்கத்திற்கு கொட்டகைகள் வழங்கி வைக்கும் நிகழ்வு பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

செங்கலடி பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஏ.கருணாகரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

மேலும் அதிதிகளாக செங்கலடி பிரதேச செயலாளர் ந.வில்வரெட்ணம் மற்றும் நலன்புரி சங்க பிரதிநிகள் கலந்து கொண்டனர்.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினரின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் இருந்து வந்தாறுமூலை நலன்புரி சங்கத்திற்கு ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியாக கொட்டகையும், களுவன்கேணி நலன்புரி சங்கத்திற்கு ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியாக கொட்டகையும், வழங்கி வைக்கப்பட்டது.

## தேசிய ரீதியில் விருது




தேசிய ரீதியில் நடைபெற்ற 'லக் ரெகியா ஹரசர Excellent Performance 'மட்டக்களப்பு மாவட்டத்திற்கான விருதினை மண்முனைப் பற்று பிரதேச செயலகத்தில் மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர் உ.சுரேஸ்குமார் பெற்றுக் கொண்டுள்ளார்.

இவருக்கு இவ்விருது மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறந்த சேவையை வழங்கியதற்காக தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சின் அனுசரணையுடன் மனிதவலு வேலை வாய்ப்புத் திணைக்களத்தினால் இவ்விருது வழங்கிவைக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டம் குருக்கள்மடத்தை சேர்ந்த இவர் கலைமானி பட்டம் பெற்று பின்னர் தொழில் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை டிப்ளோமாவினை முடித்துவிட்டு சிறந்த சேவையினை மண்முனைப்பற்று பிரதேச செயலகத்திற்கு ஆற்றி வருவதுடன் மாவட்டத்தின் சிறந்த தொழில் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை வளவாளராகவும் தனது கடமையினை சகல மாவட்டங்களுக்கும் வழங்கி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மட்டக்களப்பு ஸ்ரீ பேரின்ப ஞான பீடத்தில் உலக நலனுக்காக காயத்திரி மகா யாகம்

**க.விஜயரெத்தினம்**

புதிய ஆண்டான 2019 மலர்வதை முன்னிட்டு மட்டக்களப்பு ஸ்ரீ பேரின்ப ஞான பீடத்தில் எதிர் வரும் ஜனவரி 1ம் திகதி மு.ப 10:00 மணிக்கு உலக சேமத்துக்காக காயத்திரி மகா யாகம் ஆன்மீகக் குரு மகா யோகி எஸ்.புண்ணியரெத்தினம் சுவாமிகளின் தலைமையில் நடைபெறவுள்ளது.

பல ஆண்டுகளாக இலங்கை,மற்றும் உலக மக்கள் துன்பங்கள் வேதனைகள், இனந்தெரியாத நோய்கள், என பல இன்னல்களை எதிர் நோக்கி சவால் நிறைந்த வாழ்கையினை வாழ்ந்து வந்திருக்கிறார்கள்.

கலி முற்றி அதன் உச்ச கட்டத்தில் இவ்வாறான நிகழ்வுகள் பல யுகங்களிலும் இடம்பெற்று வந்துள்ளதனை பல சமய நூல்கள்,புராணங்கள் மூலமாக நம்மால் அறிய முடிகிறது அவ்வாறான இன்னல்களை போக்கவென பண்டைய காலங்களில் இவ்வாறு காயத்திரி மகா யாகங்கள் வேள்விகளை சித்தர்கள், யோகிகள்,ஞானிகள், மகரிஷிகள் நிகழ்த்தி உலகத்தில் அமைதியினை நிலை நாட்டியுள்ளார்கள்.

இவ்வாறு அகஸ்தியரை மூல குருவாக கொண்டு அவரின் நேரடிச் சீடராகவிருந்து யோகியான ஸ்ரீ கண்ணையா யோகி மகரிஷிகள் அவரின் நேரடிச் சீடரான காயத்திரி சித்தர் ஸ்ரீ பஹவான் ஆர்.கே.முருகேசு சுவாமிகள் பின்னர் முருகேசு சுவாமிகளின் மாணவர் மகா யோகி எஸ்.புண்ணியரெத்தினம் சுவாமிகள் தலைமையில் நடைபெறவுள்ளது.

வாழையடி வாழையாக வந்த குரு மார்க்கத்தில் நான்காவது தலை முறையில் சுவாமிகளின் நேரடி அருள் பார்வையினாலும், பக்தர்களினால் இந்தியாவிலிருந்து இமயம் முதல் குமரி வரையுள்ள சஞ்ஜீவினி உட்பட 108 உயிர் மூலிகைகள்,உலகை ஆளும் சப்த ரிஷிகள்; பதினெட்டு சித்தர்களை ஆவாகனம் செய்யவென பதினெட்டு நிறைகுடம் வைத்து யாக பூசை இடம்பெறள்ளது.

இலங்கையில் மட்டுமல்ல இனம், ஜாதி, மதம்,மொழி பேதங்களை கடந்து உலகின் அனைத்து மக்களின் ஏனைய ஜீவராசிகளின் பரிபூரண நலனை கருத்தில் கொண்டும் அவர்களின் ஜென்ப சாபங்கள், பாவங்கள், பசிப்பிணி, நோய்ப்பிணி, வறுமை, சாக்காடு, சூனியம், தரித்திரம் என அனைத்து விதமான மற்றும் கிரக தோஷங்கள் பிரம்ம ராட்சசன் பீடித்திருந்தாலும் அதிலிருந்து விமோசனம் பெற செய்திடும் காயத்திரி மகா யாகமானது சூட்சுமமாக உலகை ஆழும் சப்த ரிஷிகள் மற்றும் பதினெட்டு சித்தர்களின் உத்தரவின் பெயரில் சுவாமிகளினால் நிகழ்த்தப்படவுள்ளது.

இந்த மகா யாகத்தினை தொடர்ந்து வருகை தரும் பக்தர்களுக்கு சுவாமிகளினால் ஆசீர்வாதமும்,ஆன்மீக அருள் உபதேசமும்,அன்னதானமும் வழங்கப்படும். காலத்தின் தேவையான மகரிஷிகளின் ஆணையின் பெயரில் உலக சேமத்துக்காக மட்டக்களப்பு பெரிய உப்போடையில் அமைந்துள்ள ஸ்ரீ பேரின்ப ஞான பீடத்தில் நிகழவிருக்கும் காயத்திரி மகா யாகத்தில் ஜாதி,மதம்,இனம்,மொழி பேதங்களை கடந்து அனைத்து மக்களும் இந்த கூட்டு யாக வழிபாட்டில் கலந்து கொண்டால் இறையருளினை நேரடியாக பெறுவதோடு மட்டுமல்லாது தங்களை பீடித்துள்ள அனைத்து விதமான பிணிகளிலிருந்தும் விடுபடலாம்.




## மட்டக்களப்பு மாவட்ட இலக்கிய, பண்பாட்டு விழா - 2018

**கல்லடி நிருபர்**

மட்டக்களப்பு மாவட்டத்தின் விழுமியங்களையும், தொன்மைகளையும், கலாசார பண்புகள் மற்றும் மட்டக்களப்பிற்கே உரித்தான கலைகள் அவற்றின்பாலெழுந்த படைப்புக்களையும் முழு உலகிற்கு அறியச் செய்வதற்கான அர்த்தமிகு நிகழ்வாக 2018ம் வருடத்திற்கான மாவட்ட இலக்கிய, பண்பாட்டு விழா மாவட்ட கலாசார பேரவை மற்றும் மாவட்ட கலாசார அதிகார சபையுடன் இணைந்து மாவட்டச் செயலக நெறியாள்கையில் பிரதேச செயலகங்களின் பங்களிப்புடன் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர்மா.உதயகுமார் தலைமையில் அண்மையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இலத்திரனியலை நோக்கிய ஓர் பயணம் என்ற தொனிப்பொருளில் மாவட்டத்தின் பாரம்பரியங்களையும், மண்ணிற்குரித்தான தன்னிறைவுச் சுவடுகளையும் பேணும் நோக்கில் இந் நிகழ்வுகள் இரண்டு நாட்களாக ( 22,23.12 .2018) மட்டக்களப்பு மஞ்செந்துடுவாய் தொழில்நுட்பக் கல்லூரி வளாகத்தில் இடம்பெற்றது.

முதல்நாள் நிகழ்வுகள் (22) சனிக்கிழமை காலை 8.00 மணிக்கு மூவினங்களின் பாரம்பரியம், தொன்மை மற்றும் பல்மத கலாசார வெளிப்பாடுகள், விழுமியங்களை வெளிப்படுத்தும் பண்பாட்டுப் பவணியானது அலங்கரிக்கப்பட்ட ஊர்திகளுடன் கல்லடி உப்போடையில் அமைந்துள்ள சுவாமி விபுலானந்தரது புனித சமாதியில் இருந்து ஆரம்பமாகி விழா நடைபெறும் பிரதான மண்டபத்தினை வந்தடைந்தது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் தனிப்பெருமையையும் அதன் சிறப்பையும் வெளிக்கொணரும் வகையில் பல்கலை அம்சங்களைத் தாங்கியதான இந்நிகழ்விலே மாவட்டத்தின் அடுத்த தலைமுறையினருக்கும், இளையசந்ததியினருக்கும் எம் விழுமியங்களை எடுத்துச் செல்லும் வகையில் ஒரு இலத்திரனியல் காட்சிக்கூடமொன்றும் இதில் அமைக்கப்பட்டிருந்தது.

நான்கு அரங்குகளாக நடைபெற்ற இந் நிகழ்வுகளில் முதல் நாள் நிகழ்வுகள் காலை 9.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்ட கண்காட்சி அரங்கு வி.சி.கந்தையா அரங்கிலும், பி.ப. 3.00 மணி முதல் 6.00 மணி வரை நாடக அரங்கானது புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அரங்கிலும் இடம்பெறது.

இரண்டாம் நாள் நிகழ்வில் முதல் நிகழ்வான ஆய்வரங்கானது பித்தன்ஷா அரங்கில் காலை 9..30 மணி முதல் பி.ப. 12..30 மணி வரை நடைபெற்றதுடன், பி.ப. 3.00 மணி முதல் 6.00 மணி வரை கலையரங்கானது வித்துவான் கமலநாதன் அரங்கிலும் நடைபெற்றது.

மாவட்டத்தின் 14 பிரதேச செயலாளர் பிரிவுகளிலுமிருந்து கலைஞர்கள், ஆர்வலர்கள், எழுத்தாளர்கள், இலக்கிய ஆர்வலர்களின் படைப்புக்கள் மற்றும் இலத்திரனியல் தொடர்பான அம்சங்கள் என்பன இங்கு காட்சிப்படுத்தப்பட்டிருந்ததுடன், இரண்டாம் நாள் நிகழ்வின்போது மூத்த கலைஞர்களுக்கான உயரிய கௌரவமும் அதிதிகளினால் இதன்போது வழங்கிவைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.


















## மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் இருந்த காணிகள் பொதுமக்களுக்கு கையளிப்பு



**பஹ்த் ஜுனைட்**

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களினால் ஆரம்பிக்கப்பட்ட ஜனாதிபதி செயலணியின் கட்டளைப்படி நாட்டின் தேசியப் பாதுகாப்பை பாதிக்காத வகையில் இராணுவத்தினால் பயன்படுத்தப்பட்டு வந்த காணிகளை வடக்கு மற்றும் கிழக்கு அபிவிருத்திற்காக குறித்த பகுதிக்குரிய மக்களுக்கு 2018 டிசம்பர் 31ம் திகதிற்கு முன்னர் விடுவிக்கும் நோக்கில் முதற்கட்டமாக இராணுவத்தினரால் சுமார் மூன்று தசாப்தங்களுக்கு மேல் பயண்படுத்தப்பட்டு வந்த மண்முனைபற்று பிரதேச செயலக பிரிவிற்குரிய கிரான்குளத்தில் 02.015 ஏக்கர் காணி, மண்முனை பற்று தெற்கு எருவில்பற்றில் உள்ள ஓந்தாச்சி மடத்தில் 0.5 ஏக்கர் காணி, மண்முனை தென்மேற்கு பிரதேச செயலக பிரிவிற்குரிய கொக்கட்டிச்சோலை 0.267 ஏக்கர் காணி மற்றும் வெலிகந்தை பிரதேச செயலகத்திற்குரிய மகாவலி அதிகார சபைக்கு உரித்தான தோணிதோட்டமடுவில் 05 ஏக்கர் காணி போன்றவற்றை மட்டக்களப்பு மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில் காணி விடுவிப்பு ஆவணங்களை கிழக்கு மாகாண இராணுவ பொறுப்பதிகாரி அருன் ஜயசேகரவால் 23 ஆம் கட்டளையிடும் அதிகாரி பிரிகேடியர் கபிலஉடுப்பொல மற்றும் 231 தலைமை அதிகாரி முன்னிலையில் கிழக்கு மாகாண ஆளுனர் ரோஹித போகல்லாகம அவர்களிடம் கையளிக்கப்பட்டது.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந் நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுனர் ரோஹித போகல்லாகம மற்றும் மட்டக்களப்பு மாநகர சபை மேயர் தி. சரவணபவன், பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.வியாழேந்திரன் (அமல்) மற்றும் அரச அதிகாரிகள்,இராணுவத்தினர், பொலிஸ் அதிகாரிகள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## இ.போ.ச பஸ் சேவைகளை நடாத்தக்கோரிக்கை

**தோப்பூர் திருபர்**

திருகோணமலை மாவட்ட மூதூர் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பள்ளிக்குடியிருப்பு கிராமத்திற்கு மூதூரிலிருந்து தோப்பூர் ஊடான இருவழி இரவு பகல் இ.போ.ச பஸ் சேவையொன்றை நடாத்துமாறு இங்குள்ள பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பள்ளிக்கடியிருப்புக்கு மூதூரிலிருந்து தோப்பூர் ஊடான இ.போ.ச பஸ் சேவைகள் இடம்பெறுவதில்லை இதனால் இங்குள்ள பொதுமக்கள் பள்ளிக்குடியிருப்பிலிருந்து நீண்டதூரம் தோப்பூர் வரை கால்நடையாகச்சென்றே மூதூருக்கு பயணிப்பதற்கான பஸ் போக்குவரத்து சேவைகளை பெறவேண்டிய அவலநிலையுள்ளது

இதனால் இப்பகுதி வாழ் மக்கள் வீண்செலவினத்தையும் பெரும் அசௌகரியங்களையும் எதிர்கொள்வதாக கூறுகின்றனர்.

இதெனால் இப்பகுதி மக்கள் வங்கிகள் பிரதேச செயலகம். வலயக் கல்வி அலுவலகம் மிருக வைத்தியசாலை உள்ளிட்ட அலுவலகங்களுக்கும் தூர இடங்களுக்கும் மற்றும் ஏனைய பகுதிகளுக்கும் சேவையின் நிமித்தம் சென்றுவருவதில் சீரான பஸ் சேவைகள் இரவு பகல் நேரங்களில் பள்ளிக்குடியிருப்பு பகுதிக்கு இன்மையால் தாம் பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுப்பதாக இப்பகுதிமக்கள் கூறுகின்றனர்.இதனால் வயோதிபர்கள் சிறுவர்கள் கற்பிணித் தாய்மார்களும் நோயாளர்களும் சிரமப்படுவதாக கூறுகின்றனர்

இதனால் இவர்கள் ஆயிரக் கணக்கான ரூபாய் பணத்தினை முச்சக்கரவண்டிகளுக்கு செலுத்தி பயணிக்கவேண்டிய அவல நிலை காணப்படுவதாகவும் குறிப்பிடுகின்றனர்.

முன்னய காலங்களில் மூதூரிலிருந்து தோப்பூர் ஊடாக பள்ளிக்குடியிருப்புக்கு நடைபெற்றுவந்த இ.போ.ச பஸ் சேவைகள் பின்னர் தடைப்பட்டதாகவும் பொதுமக்கள் குறிப்பிடுகிறார்கள். இவைகளையெல்லாம் கருத்திற்கொண்டு இ.போ.ச பஸ் சேவையொன்றை மூதூரிலிருந்து பள்ளிக்குடியிருப்பு வரை நடாத்தவேண்டுமென்பதே இங்குள்ள பொதுமக்களது உருக்கமான கோரிக்கையாகும்.




**கல்லாறு ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் கழகங்களினதும் பொது மக்களினதும் பங்களிப்புடன் பெரியகல்லாற்றில் சேகரிக்கப்பட்ட வெள்ள நிவாரணப் பொருட்களின் ஒரு தொகுதியை ஸ்ரார் விளையாட்டுக் கழக தலைவர் இ.சிவராஜா தலைமையிலான குழுவினர் உதயபுரம் சந்தியில் இருந்து முல்லைத்தீவில் பாதிக்கப்பட்ட பொதுமக்களிடம் நேரடியாக கையளிப்பதற்காக முல்லைத்தீவிற்கான பிரயாணத்தை ஆரம்பிப்பதைப் படங்களில் காணலாம்.**

**படம்: பெரியகல்லாறு நிருபர்**

# வவுனியா தர்மலிங்கம் வீதியில் வீதிக்கு வந்த கடைகளால் பயணிகள் அசௌகரியம்: நகரசபை அசமந்தம்




**வவுனியா நிருபர்**

வவுனியா தர்மலிங்கம் வீதியில் வியாபார நிலையங்களுக்கு முன்னால் கொட்டகை அமைத்து வியாபாரம் மேற்கொள்ளப்படுவதால் போக்குவரத்து செய்யும் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

வவுனியா, தர்மலிங்கம் வீதியில் அமைந்துள்ள வியாபார நிலையங்களுக்கு முன்னால் உள்ள வீதியானது இருவழிப் போக்குவரத்து வீதியாகும். தினமும் ஆயிரக்கணக்கான மக்கள் அவ் வீதி வழியாக பயணம் செய்து வருகின்றனர்.

இந்நிலையில் குறித்த வீதியின் இரு மருங்கிலும் உள்ள வியாபார நிலையங்கள் பலவற்றுக்கு முன்பாக வீதிகளுக்கு இடையூறை ஏற்படுத்தும் வகையில் கொட்டகைகள் அமைக்கப்பட்டு வியாபாரம் மேற்கொள்ளப்பட்டு வகின்றது.

இதன்காரணமாக அவ் வீதியில் விபத்துக்கள் ஏற்படக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளதடன், அவ் வீதியில் பயணிக்கும் பலரும் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர். குறித்த விடயம் தொடர்பில் வவுனியா நகரசபை எந்தவித நடவடிக்கையும் எடுக்காது அசமந்தமாக செயற்படுவதாகவும் நகர மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.




# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களிற்கு லைக்கா ஞானம் பவுண்டேசனால் உதவிகள் வழங்கப்பட்டன



வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களிற்கு லைக்கா ஞானம் பவுண்டேசனால் உதவிகள் வழங்கப்பட்டன.

கிளிநாச்சி மாவட்ட செயலகத்திற்கு சென்ற குழுவினர் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபருடன் கலந்துரையாடினர்.

தொடர்ந்து ஒரு தொகுதி உதவிகளை கிளிநாச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் அவர்களிடம் கையளித்தனர்.

இதேவேளை கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் உள்ள கல்லாறு பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களிற்கு உதவிகளை நேரடியாக செய்துள்ளமை குறிப்பிடதக்கதாகும்.

இதேபோன்று முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களிலும் பாதிக்கப்பட்ட மக்களிற்கு உதவிகளை மேற்கொள்ள உள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

# வவுனியாவில் அரச தொழில் பெற்றுதருவதாக 27 இலட்சம் பணமோசடி; நபர் ஒருவர் கைது

**வவுனியா நிருபர்**

வவுனியாவில் பல நாட்களாக பொதுமக்களை ஏமாற்றி அரச தொழில் வாய்ப்பு பெற்றுத்தருவதாகவும் மாவட்ட செலயகத்தின் புனர்வாழ்வு அமைச்சின் தொடர்புடன் கடமையாற்றி வருவதாகவும் தெரிவித்து பொதுமக்களிடமிருந்து சுமார் 27 இலட்சம் ரூபா பண மோசடி செய்த நபர் ஒருவரை கைது செய்துள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் குறித்து பொலிசார் மேலும் தெரிவிக்கும்போது, வவுனியா உக்கிளாங்குளம் பகுதியிலுள்ள நபர் ஒருவர் அதே பகுதியில் வசித்து வரும் வைத்தியசாலை தாதிய உத்தியோகத்தர் ஒருவருடன் நெருங்கிப் பழகி அவர் ஊடாக அவரின் கணவருக்கு வேலை இல்லை எனவே அவருக்கு புனர்வாழ்வு அமைச்சில் வேலை பெற்றுத் தருவதாகவும் பலருக்கு அரச தொழில் வாய்ப்பு வெற்றிடம் இருப்பதாகவும் தெரிவித்துள்ளதுடன் தன்னை மாவட்ட செயலகத்தில் புனர்வாழ்வு அமைச்சில் பணியாற்றும் உத்தியோகத்தர் என்று அறிமுகம் செய்து நீண்டகாலமாக பழகி வந்துள்ளதுடன் தாதிய உத்தியோகத்தரின் கணவருக்கு தொழில் பெற்றுத்தருவதாக தெரிவித்துள்ளதுடன் மோட்டார் சைக்கிள்கள் அரச சலுகை விலையில் பெற்றுக்கொடுப்பதாகவும் தெரிவித்து தாதிய உத்தியோகத்தரிடமிருந்து ஒரு இலட்சத்திற்கும் அதிகமான பணத்தினைப் பெற்றுள்ளார்.

இதையடுத்து தாதிய உத்தியோகத்தரும் தனக்கு நெருக்கமானவர்களிடம் இவ்விடயத்தினைத் தெரிவித்துள்ளார். இதனால் பலரிடமிருந்து அரச தொழில் பெற்றுக்கொள்வதற்கும் அரச சலுகையில் மோட்டார் சைக்கில் பெற்றுக்கொள்வதற்கும் பாரிய நிதிகள் பொதுமக்களிடமிருந்து மோசடி செய்யப்பட்டுள்ளது.

பொதுமக்களிடமிருந்து பணத்தினைப் பெற்றுக்கொள்ளும்போது மாவட்ட செயலகத்தில் வேலையிலிருப்பதாகவும் வெளியே வருகின்றேன் பணத்தினைத்தருமாறு தெரிவித்து மாவட்ட செயலகத்தின் வாசலில் வைத்து பலரிடம் பணத்தினைப் பெறுக்கொண்டுள்ளார். இதனிடையே குறித்த தாதிய உத்தியோகத்தரின் பாவனையற்ற வங்கிக்கணக்கின் புத்தம் குறித்த நபரினால் திருடப்பட்டு அந்த வங்கியின் இலக்கத்திற்கு பணம் அனைத்தும் வைப்பிடப்பட்டுள்ளது. இவ்விடயம் தாதிய உத்தியோகத்தருக்கு நீண்டகாலமாக தெரியவரவில்லை குறித்த தாதிய உத்தியோகத்தரை தனது சொந்த சகோதரி என்று தெரிவித்து அவரின் வங்கிக்கணக்கிற்கு பண வைப்புச் செய்யப்பட்டுள்ளது.

இதன் பின்னர் குறித்த தாதிய உத்தியோகத்தர் தனது பாவனையற்ற தனியார் வங்கிப் புத்தகம் உட்பட பணம் பெற்றுக்கொள்ளும் அட்டை என்பன தவறிவிட்டுள்ளதாக வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தின் கீழ் செயற்படும் விஷேட குற்றப் பிரிவின் அலுவலகத்தில் முறைப்பாடு ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த தனியார் வங்கி கணக்கிற்கு 6 தொடக்கம் 7 இலட்சம் ரூபா வரையில் வைப்பிட்டு பணம் மீளப் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது தெரிய வந்துள்ளது. இதைவிட தனி நபர்களிடம் அரச தொழில் பெற்றுத்தருவதாக 20இலட்சத்திற்கும் அதிகமான நிதி மோசடி இடம்பெற்றுள்ளது. சிலருக்கு மோட்டார் சைக்கிளின் மாதிரி சாவியை வழங்கிவிட்டு இது உங்களுக்கான மோட்டார் சைக்கிளின் சாவி, இதை வைத்திருக்கவும் மோட்டார் சைக்கிள் வந்ததும் பெற்றுக்கொள்ளவும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து குறித்த பண மோசடியில் ஈடுபட்டுள்ள உக்கிளாங்குளம் பகுதியைச் சேர்ந்த குணம் ரஞ்சபாலா 42 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தை கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் ஏற்கனவே குருமண்காடு பகுதியில் பெண் ஒருவரைத் திருமணம் செய்வதாக தெரிவித்து பெரும் தொகை பணம் மோசடி இடம்பெற்று பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டு பொலிசாரால் கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு பலரிடம் அரச தொழில் பெற்றுத்தருவதாகவும் அரச சலுகையில் மோட்டார் சைக்கிள் பெற்றுத்தருவதாகவும் தெரிவித்து சுமார் 27 இலட்சம் ரூபாவினை பல வழிகளிலிருந்து பொது மக்களிடம் வேலை பெற்றுத்தருவதாக நிதி மோசடி செய்துள்ளதாக விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது. இன்னும் பொதுமக்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைக்கலாம் என்று பொலிசார் எதிர்பார்க்கின்றனர்.

# கிளி.அரச அதிபர் தலைமையில் கூட்டம்

கிளிநொச்சி மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள அனர்த்த நிலமைகள் தொடர்பில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் விசேட கூட்டம் ஒன்றும் இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடலில் ஏற்பட்டுள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பிலும், மக்களை பாதுகாப்பது மற்றும் முகாம்களில் தங்கி உள்ளூார் தொடர்பிலும் விரிவாக ஆராயப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் இடம்பெற்ற குறித்த கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர் எஸ்சத்தியசீலன், பிரதேச செயலாளர்கள் உள்ளிட்ட திணைக்கள சார் அதிகாரிகள் பங்கு கொண்டனர். தொடர்ந்து அரசாங்க அதிபர் ஊடகங்களிற்கு அனர்த்த நிலமைகள் தொடர்பிலும், பாதிக்கப்பட்ட நிலை தொடர்பிலும் கருத்து தெரிவித்தார்.

# வவுனியா வடக்கில் மழையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருட்கள் வழங்கி வைப்பு

**வவுனியா நிருபர்**

நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற கால நிலையைத் தொடர்ந்து வவுனியாவில் பெய்து வரும் மழை காரணமாக 132 குடும்பங்களைச் சேர்ந்த 455 பேர் பாதிப்படைந்துள்ளனர். இதன்படி வவுனியா மாவட்டத்தில் மழை காரணமாக வவுனியா வடக்கு பகுதியே பாதிப்படைந்துள்ளது. வவுனியா வடக்கில் மழை காரணமாக பாதிப்படைந்த 132 குடும்பங்களைச் 455 பேருக்கும் நிவாரணப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன.

வவுனியா வடக்கு பிரதேச செயலகம் ஊடாக எழுகை என்ற தன்னார்வ தொண்டு அமைப்பு இந்த நிவாரணப் பொருட்களை வழங்கியது.

வவுனியாவில் பெய்த கடும் மழையால் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக 132 குடும்பங்களைச்சேர்ந்த 455 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். வவுனியா வடக்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட 8 கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த 132 குடும்பங்களே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளன.

இவர்களில், 17 குடும்பங்களை சேர்ந்த 46 அங்கத்தவர்கள் வவுனியா வடக்கு மருதோடை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மற்றும் பொது மண்டபத்தில் தங்க வைக்கபட்டுள்ளனர். முகாம்களில் தங்கியுள்ள மற்றும் பாதிக்கப்பட்ட மக்களுக்கே இவ்வாறு நிவாரண உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.




வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பரந்தாமன் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், எழுகை அமைப்பினர் இந்த நிவாரணப் பொருட்களை வழங்கி வைத்தனர்.

அத்துடன் பாதிக்கப்பட்ட மக்களை மாவட்ட அரச அதிபர் எம்.கனீபா, அனர்த்த முகாமைத்துவ நிலைய உதவிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா உள்ளிட்டவர்களும் சென்று பார்வையிட்டு நிலமைகளை ஆராய்ந்தனர்.

# வவுனியா ஆடையகங்களில் பெண்களின் ஆடைகளை விற்பனை செய்ய பெண் ஊழியர்களை நியமிக்க நடவடிக்கை



**வவுனியா நிருபர்**

வவுனியாவில் அமைந்துள்ள ஆடைவிற்பனை நிலையங்களில் பெண்களின் உடைகளை விற்பனை செய்யும் பகுதிகளிற்கு பெண் ஊழியர்களை நியமிப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க உள்ளதாக வவுனியா நகரசபையின் உப தவிசாளர் சு.குமாரசாமி தெரிவித்தார்.

வவுனியாவில் உள்ள ஆடைவிற்பனை நிலையங்களில் பெண்கள் தொடர்பான ஆடைகளை விற்பனைசெய்யும் பகுதிக்கு பெண் ஊழியர்களயே நியமிக்கவேண்டும் என ஊடகங்களில் செய்திகள்வெளிவந்திருந்ததுடன் நகரசபையிடமும் சிலர் வேண்டு கோள் முன்வைத்திருந்தனர்.

அதற்கமைவாக கலாசாரத்தை பெணிப் பாதுகாப்பதற்கும்,பெண்கள் சந்திக்கும் பிரச்சினைகளை தவிர்த்துகொள்வதற்கும் ஆடை விற்பனை நிலையங்களில் பெண்களின் ஆடைகளை விற்பனை செய்யும் பிரிவிற்கு பெண் ஊழியர்களை நியமிப்பதே சிறந்தது என நாம் தீர்மானித்துள்ளோம்.

இச்செயற்பாட்டால் பெண்கள் சந்திக்கும் சில அசௌகரியங்களில் இருந்து தம்மை பாதுகாத்து கொள்ளமுடியும்.அத்துடன் கலாசாரத்தை பாதுகாப்பதும் பெண்களின் பாதுகாப்பை உறுதிசெய்வதுமே இதன் பிரதான நோக்கம். எனவே மிகவிரைவாக உரிய தரப்புகளுடன் இவ்விடயம் தொடர்பாக கலந்துரையாடவிருப்பதாக தெரிவித்தார். அத்துடன் வர்த்தகர்கள்ளினதும் ஒத்துழைப்புகளும் பெறப்படவுள்ளதுடன் இவ்விடயம் தொடர்பாக மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வண்ணம் வவுனியா வர்த்தகசங்கம், வர்த்தகர்நலன்புரிசங்கம் ஆகியவற்றுடன் பேச்சுவார்தைகளை முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சுனாமி பேரலை அனர்த்தம் வவுனியா மாவட்ட செயலகத்தில் நினைவு கூரப்பட்டது!




**வவுனியா நிருபர்**

இலங்கையில் 14 ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்ட சுனாமி பேரலை அனர்த்தம் காரணமாக உயிரிழந்த மக்களை நினைவு கூறும் நிகழ்வு வவுனியா மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் ஐ.எம்.ஹனீபா தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் உரையாற்றிய அரசாங்க அதிபர்;

சுனாமி அனர்த்தத்தின் போது கடற்கரைக்கு அலைகளை பார்வையிடச் சென்ற அதிகமானவர்கள் உயிரிழந்த நிலையிலேயே மரணமானவர்களின் தொகை அதிகரித்திருந்தது.

சுனாமி பேரலை குறித்த விழிப்புணர்வு மக்களிடம் காணப்படவில்லை இதன் காரணமாக ஆற்றலுள்ளவர்கள் பலரை சுனாமி பேரனத்தத்தில் நாங்கள் இழந்துள்ளோம் என குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் வவுனியா மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார், அனர்த்த முகாமைத்துவ பணிப்பாளர் ரி.சூரியராஜா, மற்றும் மாவட்ட செயலகத்தின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

# பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்தார் விஜித ஹேரத்



கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயத்தில் தங்கியுள்ள பாதிக்கப்பட்ட மக்களை ஜேவிபி பாராளுமன்ற உறுப்பினர் விஜித கேரத், மு.பா ம உறுப்பினர் சந்திரசேகர் உள்ளிட்டோர் சந்தித்தனர். மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வெள்ள நிலமைகள் தொடர்பில் கேட்டறிந்த அவர்கள், அங்குள்ள மக்களின் குறை நிறைகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டனர்.

இதன்போது தாம் பட்ட இன்னல்கள் தொடர்பில் அவர்களிடம் தெரிவித்தனர். தொடர்ந்து ஊடகங்களிற்கு கருத்து தெரிவித்தனர்.

# வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தொடர்ந்தும் உதவிகள்




கிளிநொச்சியில் வெள்ள அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்கு தொடர்ந்தும் உதவிகள் கிடைத்து வருகின்றன.

அந்த வகையில் சமத்துவம் சமூக நீதிக்கான மக்கள் அமைப்பின் ஏற்பாட்டில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர். முருகேசு சந்திரகுமார் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களை சென்று பார்வையிட்டுள்ளதோடு, அவர்களுக்கு தேவையான அத்தியாவசிப் பொருட்களையும் வழங்கி வைத்துள்ளார்.

திருமுறிகண்டி, பாரதிபுரம், மயில்வாகனபுரம், பிரமந்தனாறு, நாகேந்திரபுரம், தம்பிராசபுரம், ஆகிய நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்குஅத்தியாவசிய பொருட்கள் வழங்கியள்ளதோடு ஏனைய நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்கும் தொடர்ந்தும் உதவிப் பொருட்களை வழங்கி வைப்பதற்குரிய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அத்தோடு பாதிக்கப்பட்டுள்ள மக்கள் தொழில் வாய்ப்பை இழந்துள்ளமையால் அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே அவர்களுக்கான ஒரு மாத்திற்கு தேவையான உலருணவுப் பொருட்களை வழங்க வேண்டும் என்று வடக்கு மாகாண அளுநரிடம் மு.சந்திரகுமார் கோரிக்கை ஒன்றையும் விடுத்துள்ளார்.




## மின்கசிவு காரணமாக உயிரிழந்தவரின் குடும்பத்தில் ஒருவருக்கு வேலைவாய்ப்பினைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை



அனர்த்தத்தின் போது பாதிக்கப்பட்ட மின்;கசிவு காரணமாக உயிரிழந்த குடும்பத்தின் ஒருவருக்கு வேலைவாய்ப்பினைப் பெற்றுக்கொடு க்க நடவடிக்கை எடுப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் அவர்கள்தெரிவித்துளளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் வெள்ளத்தினால்பாதிக்கப்பட்டபகுதிகளையும் பாதிககப்பட்ட மக்களையும் சென்று பார்வையிட்ட அங்கஜன் அவர்கள், கிளிநொச்சி கண்டாவளை பெரியகுளம் பகுதியில் இவ்வெள்ள அனர்தத்தின் போது ஏற்பட்ட மின்ஒழுக்கினால் உயிரிழந்த குடும்பஸ்தரின் வீட்டிற்குசசென்ற ஆறுதல் கூறிய அவர், ஊடகங்களுக்கு கருத்துத்தெரிவிக்கும்போது, குறித்த குடும்பஸ்தரின் இழப்பால் இக்குடும்பத்தின் நிலை மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது.

இக்குடும்பத்தின் வருமானத்திற்காக ஒருவருக்கு தொழில் வாய்ப்பை பெற்றுக்கொடுப்பதற்கு தான் முழுமுயற்சிகளை எடுப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேற்படி மின்ஒழுக்கினால் பெரியகுளம் கண்டாவளையைச் சேர்ந்த 56 வயதுடைய நல்லதம்பி திருச்செல்வம் இவ்வாறு உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஈ.பி.டி.பி கட்சியின் உறுப்பினரை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை

### காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் தலைவி கா.ஜெயவனிதா தெரிவிப்பு

ஈ.பி.டி.பி கட்சியின் உறுப்பினராக இணைந்து கடந்த உள்ளுராட்சி சபைத் தேர்தலில் களமிறங்கிய வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சங்கத்தலைவியை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என தமிழர் தாயகத்தில் கையளிக்கப்பட்டு கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடிக்கண்டறியும் சங்கத்தின் தலைவி காசிப்பிளை ஜெயவனிதா தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் 673ஆவது நாட்களாக சுழற்சி முறையில் உணவு தவிர்ப்புப் போராட்டம் மேற்கொண்டு வரும் தமிழர் தாயகத்தில் கையளிக்கப்பட்டு கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடிக்கண்டறியும் சங்கத்தின் தலைவி காசிப்பிளை ஜெயவதனியினால் அவர்களது போராட்டக்களத்தில் ஊடக சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இதன்போது வவுனியாவில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சங்கத்தினரால் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் முன்வைக்கப்பட்டு கருத்துக்களுக்கு இவ்வாறு பதிலளித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கும்போது,

இடம்பெற்ற ஊடக சந்திப்பினை நாங்கள் முழுமையாக நிராகரிக்கின்றோம். அவர்கள் யார் என்ற விடயம் இன்று வரையில் எமக்குத் தெரியவில்லை. எமது போராட்டம் மிகவும் ஆதாரத்துடன் மேற்கொண்டு வருகின்றோம். கடந்த காலங்களில் எம்மால் இடம்பெற்ற அனைத்துப் போராட்டங்களின் போதும் ஆதாரங்களுடனேயே மேற்கொண்டு வந்துள்ளோம். ஜனாதிபதியுடன் எமது பிள்ளைகள் நின்றிருந்த ஒரு ஆதாரத்தினை முன்வைத்தும் எமக்கு இன்று வரையில் சரியான ஒரு தீர்வு கிடைக்கவில்லை எங்களுடைய போராட்டங்களை வெளிநாடுகள் அனைத்தும் அவதானித்துக்கொண்டிருக்கின்றது.

24மணி நேரமாக இரவு பகலாக மழையிலும் இப்போராட்டத்தினை மேற்கொண்டு வருகின்றோம். இவ்வாறு எம்மால் மேற்கொள்ளப்பட்டு வரும் வேளையில் இவர்கள் யார்?

எமது போராட்டம் இரண்டு வருடங்களை கடக்கவுள்ளது இந்த அரசாங்கத்துடன் ஒத்துப்பேசிக்கொண்டு போகின்றார்கள். குறித்த தலைவி என்று சொல்லிக்கொள்பவர் இரண்டு ஒரு போராட்டங்களின்போது கலந்து கொண்டிருந்தவர் எனவே இவர்களின் நோக்கங்கள் மற்றும் இரகசியத்தகவல்கள் வெளியே வழங்கி வரப்பட்டுள்ளதால் நாங்கள் அவரை கொஞ்சம் ஒதுக்கி வைத்திருந்தோம். இவர்களை முன்னிறுத்தி எதனையும் மேற்கொள்ளவில்லை. சில பல பிரச்சினைகளள் ஏற்படுத்தி தானாகவே விலத்திக்கொண்டார்.

அவரின் காணாமல் போன பிள்ளையின் புகைப்படம் எமது பந்தலில் உள்ள பதாதையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இவர் அவரின் பிள்ளைக்குத் துரோகம் இளைத்துள்ளார். இவர் கடந்த காலங்களில் ஈ.பி.டி.பி கட்சியில் உள்ளுராட்சி தேர்தல் கேட்ட ஒருவர் ஒரு அரசியல் கட்சி சார்ந்து செயறப்பட்டுள்ளார். அதில் தோல்வி அடைந்துள்ள நிலையில் தற்போது வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சங்கத்தின் தலைவி என்று சொல்லிக்கொள்கின்றார். எமக்குத் தெரியாது இவருக்கு தலைவிப்பதவி யார் வழங்கியது என்று வேறு யார் இவருக்கு ஒத்தாசையாக இருக்கின்றார்கள் என்று எனக்குத் தெரியாது.

இவர் அரசாங்கத்துடன் ஒத்து இணங்கிச் செல்லப்போகின்றார். எமக்கு ஒரு தீர்வு கிடைக்கின்ற நேரத்தில் இவரின் செயற்பாட்டினால் எமது போராட்டத்திற்கு தீர்வு கிடைக்காமலும் போகலாம். பல மாற்று இயக்கங்கள் எல்லாம் எமது பிள்ளைகள் உறவினர்கள் காணாமல்போவதற்கு ஆதாரமாகவே இருந்தது.

தற்போது இவரும் அக்கட்சியின் இணைந்துள்ளார். அவர்களின் ஜனவரி மாதம் இடம்பெறவுள்ள பேரணியில் சிலவேளைகளில் குழப்பங்கள் ஏற்படும் நேர்மையாக இருக்கின்ற தமிழ் மக்கள் எவரும் இப்பேரணியில் கலந்து கொள்ளமாட்டார்கள்.

இதேவேளை அவர்களின் கலந்துரையாடலுக்கு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் சென்றுள்ளது குறித்து உங்களது கருத்து என்ன என வினவியபோது,

அவர்களும் அரசாங்கத்துடன் ஒத்து இணங்கி செயற்படவேண்டும் என்று அவர் சார்பாக நிற்கின்றார்கள். சிவசக்தி ஆனந்தன் கடந்த வருடம் எங்களிடம் வந்து கேட்டார் இவ்வாறு இருந்து வேலையில்லை நாங்கள் பிரதான ஏ 9 வீதியை வழிமறித்துப் போராட்டம் மேற்கொள்வோம் என்று. அதற்கு நாங்கள் சொன்னோம் நீங்கள் சென்று மறியுங்கள் நாங்கள் உதவி செய்கின்றோம். என்று நீங்கள் அரசியல்வாதிகள் பாராளுமன்ற உறுப்பினர்கள் என்ற ரீதியில் இருக்கின்றீர்கள். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் நீங்கள் தானே நீங்கள் 500, ஆயிரம் பேரை அழைத்துச் சென்று நொச்சிமோட்டைப்பாலத்திலிருந்து மறியுங்கள். நீங்கள் மறித்து போராட்டத்தினை செய்யுங்கள். ஒரு மணிநேரத்தின் பின்னர் நான் எமது தாய்மாரையும் அழைத்துக்கொண்டு நாங்கள் அங்கு வருகின்றோம். ஆனால் அதற்கு முதல் நான் எமது தாய்மாரை அழைத்துக் கொண்டு அங்கு செல்ல மாட்டேன். நீங்கள் அரசியல்வாதிகள் எப்பக்கம் வந்தும் கதை சொல்லுவீர்கள். நாங்கள் அவ்வாறில்லை. உங்களால் அதனை மறித்து போராட்டம் மேற்கொள்ளத் தகுதி இல்லை. எவ்வாறு அங்கு செல்கின்றார். சரி நாங்கள் அவரிடம் பல உதவிகள் பெற்றிருக்கலாம். ஆனால் அது அவர் செய்யவேண்டிய கடமை. அதனால் அவரை நாங்கள் ஒதுக்கி வைக்கவில்லை. அவரே எங்களிடம் வராமல் விட்டுவிட்டுள்ளார். அரசியல்வாதிகள் இதற்குள் வருவதை நாங்கள் விரும்பவில்லை என்று தெரிவித்ததும் அவராகவே ஒதுக்கிக்கொண்டுள்ளார். அரசியலில் தேர்தல் கேட்டவர்கள் என்ற ரீதியில் அவர்களுக்கு அவர்கள் ஒத்துழைப்பு வழங்குவார்கள் என்று மேலும் தெரிவித்துள்ளார்.

## வவுனியாவில் எம். ஜி. ஆரின் 31 ஆவது நினைவு தினம் அனுஸ்டிப்பு

**வவனியா நிருபர்**



தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சரும் நடிகருமான எம். ஜி. ஆரின் 31 ஆவது நினைவு தின நிகழ்வகள் வவுனியால் அனுஸ்டிக்கப்பட்டது.வ

வவுனியா எம்.ஜி.ஆர் நற்பணி மன்றத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந் நிகழ்வில் எம்.ஜி. ஆரின் திருவுருவப்படத்திற்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டதுடன் மலரஞ்சலியும் இடம்பெற்றது.

மன்றத்தின் தலைவர் கே. ஸ்ரீஸ்கந்தராஜா புலேந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் எஸ். மயூரன், வவுனியா நகரசபை உப தலைவர் தேசமான்ய சு. குமாரசாமி, வவுனியா வடக்கு ஆசியார் வள முகாமையாளர் சு. ஜெயச்சந்திரன், சமூக ஆர்வலர் ஆரிப் ஆகியோ அஞ்சலி உரைகளை ஆற்றியிருந்ததுடன் இன்தமிழ் இனியன் எஸ். ஏஸ். வாசன் சிறப்புரையாற்றியிருந்தார்.

இதேவேளை வறுமைக்கோட்டின் கீழ் வாழும் 10 குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகளும் பண உதவியும் தமிழ் விருட்சம் சமூக ஆர்வலர் அமைப்பின் அனுசரணையில் வழங்கி வைக்கப்பட்டிருந்தது

## போலியாக நடித்து வீதியில் யாசகம் செய்த விசித்திரமான பெண்

**வவுனியா நிருபர்**

வவுனியா, மன்னார் வீதியில் மனதை நெகிழச் செய்யும் வகையில் போலியாக நடித்து வீதியில் சென்றவர்களிடம் யாசகம் செய்த பெண் ஒருவர் ஊடகவியலாளர் மற்றும் சமூக சேவைகள் திணைக்களத்தால் அடையாளம் காணப்பட்டு ஆலோசனைகள் வழங்கி விடுவிக்கப்பட்டுள்ளார்.

வவுனியா, மன்னார் வீதி, வேப்பங்குளம் பகுதியில் இருந்து பெண் ஒருவர் நடக்க முடியாதவராகவும், வாய் பேச முயாதவராகவும் தன்னை உருமாற்றம் செய்து வீதியில் இருந்து அரக்கிக் கொண்டு யாசகம் செய்துள்ளார்.



இதனை அவதானித்த பலரது மனம் நெகிழ்ந்துள்ளதுடன், குறித்த பெண் மீது இரக்கப்பட்டு உதவியாக சிறு தொகை பணங்களை வழங்கியதுடன், வாகனங்களில் சென்றோரும், வாகனங்களை நிறுத்தி பணம் வழங்கினர். குறித்த பெண் வீதியில் அரக்கிக் கொண்டு சென்றதாலும், வாகனங்கள் குறித்த பெண் மீது இரக்கம் கொண்டு திடீரென நிறுத்தி உதவிகள் வழங்கியதாலும், விபத்துக்கள் ஏற்படக் கூடிய நிலை உருவாக்கியிருந்தது.

குறித்த பெண் அவ்வாறு அரக்கிக் கொண்டு சுமார் 2 கிலோமற்றர் தூரம் சென்று குருமன்காடு சந்தியை அடைந்த போது பெண்ணின் அவல நிலை கண்டும், விபத்துக்கள் ஏற்படும் வாய்ப்பு இருப்பதை அவதானித்தும் தமிழ் விருட்சம் சமூக ஆர்வலர் அமைப்பின் தலைவர் செ.சந்திரகுமார் என்பவர் குறித்த விடயத்தை ஊடகவியலாளர்களின் கவனத்திற்கு கொண்டு வந்தார். சம்பவ இடத்திற்கு சென்ற ஊடகவியலாளர்களான கே.வசந்தரூபன் மற்றும் பா.சதீஸன் ஆகியோர் குறித்த பெண்ணுடன் சைகையில் உரையாடி அப் பெண்ணின் நிலை குறித்து மாவட்ட சமூக சேவை திணைக்களத்திற்கு தெரியப்படுத்தினர்.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு வந்த சமூக சேவை உத்தியோகத்தர் எஸ்.எஸ். வாசன், சமூக சேவை அபிவிருத்தி உத்தியோகத்தர் கி.வசந்தரூபன் ஆகியோர் குறித்த பெண்ணுக்கு சக்கர நாற்காலியை வழங்கினர். ஆனால் குறித்த பெண் தனக்கு அது வேண்டாம் எனவும், காசு தான் வேண்டும் எனவும் அடம் பிடித்ததுடன், அவ்வாறு அரக்கிச் செல்லவே முயன்றார். இதனையடுத்து குறித்த பெண்ணின் நடவடிக்கையில் சந்தேகம் அடைந்த சமூக சேவைத் திணக்கள உத்தியோகத்தர்களும், ஊடகவியாளர்களும் குறித்த விடயம் தொடர்பில் வவுனியா பொலிசாருக்கு தெரியப்படுத்தியதுடன், வீதியால் சென்ற சுகாதார அமைச்சின் வாகனம் ஒன்றில் குறித்த பெண்ணை வவுனியா வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர்.

வைத்தியசாலைக்கு சென்ற அவர்கள் குறித்த பெண்ணுக்கு மருத்துப பரிசோதனை மேற்கொள்ளப்போவதாக தெரிவித்ததையடுத்து அந்தப் பெண் உண்மைகளை கூறியுள்ளார். தான் மட்டக்களப்பைச் சேர்ந்தவர் எனவும், யாசகம் செய்வதற்காக பஸ்சில் வவுனியா வந்ததாகவும் தெரிவித்துடன், ஒரு காலில் பிறப்பில் இருந்து சிறு குறைப்பாடு உள்ள போதும் நடந்து திரியக் கூடியவர் எனவும் வாய்பேசுபவர் எனவும் தெரிவித்தார்.

தனது கணவர் கடல் தொழில் செய்பவர். அவர் இறந்து 6 வருடங்கள் சென்று விட்டது எனவும், தனக்கு 5 பிள்ளைகள் உள்ளனர். ஒரு பிள்ளை திருமணம் செய்து விட்டார். ஏனைய பிள்ளைகளுக்காகவே தான் உருமாற்றம் செய்து இயலாதவர் போல் நடித்து யாசகம் செய்வதாகவும் கூறிய பெண் தான் இனி அவ்வாறு செய்ய மாட்டேன் எனத் தெவித்திருந்தார்.

இதன்போது குறித்த பெண் வாழ்வதற்கான ஆலோசனைகளை வழங்கிய சமூக சேவைத் திணைக்களமும், ஊடகவியலாளர்களும் குறித்த பெண்ணை மட்டக்களப்புக்கு அனுப்பி வைத்தனர்.

## விஷேட தேவைக்குட்பட்ட குடும்பப்பெண்ணிற்கு உதவி வழங்கிவைப்பு



வவுனியாவில் விஷேட தேவைக் குட்பட்ட குடும்பப் பெண்ணின் வர்த்தக நிலையத்திற்கு இன்று முற்பகல் தமிழ் விருட்சம் அமைப்பினூடாக உணவுப் பொருட்கள் வழங்கி வைக்கப் பட்டுள்ளது.

வவுனியா இலுப்பையடிப்பகுதியிலுள்ள தினச்சந்தைக்கு முன்பாக காத்தார்சின்னக்குளம் பகுதியில் வசித்து வரும் எஸ்.சாரதா விஷேட தேவைக்குட்பட்ட வலுவிழந்த குடும்பப்பெண்ணிற்கு வவுனியா பிரதேச செலயகத்தினால் வியாபார நிலையம் அமைத்து கொடுக்கப் பட்டிருந்தது.

இந்நிலையில் கிறிஸ்மஸ் புதுவருடத்தை முன்னிட்டு அவ்விபாபார நிலையத்திற்கு விற்பனை செய்வதற்காக வவுனியா தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் எஸ்.சந்திரகுமாரினால் ஒரு தொகை உணவுப் பொருட்கள் வழங்கிவைக்கப்பட்டுள்ளது.

## வவுனியாவில் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை தடுப்பதற்கான அலுவலகம்

**வவுனியா நிருபர்**

வவுனியாவை மையமாகக்கொண்டு வடமாகாணத்திலுள்ள பெண்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு குரல் கொடுப்பதற்கான வடமாகாண மகளிர் முன்னேற்றக்கழகம் அமைப்பு ஒன்றின் உருவாக்கமும் அலுவலகத்திறப்பும் நேற்று காலை 9.30 மணியளவில் தாண்டிக்குளம் பிரதான கண்டி வீதியில் விவசாயக்கல்லூரிக்கு முன்பாக அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ளது.

பெண்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுக்கவும் அதற்கு எதிராக குரல் கொடுக்கவும் வடமாகாண மகளிர் முன்னேற்றக் கழகத்தில் வடக்கிலிருந்தும் 36 கிராமங்களிலுள்ள பெண்களை இணைத்தும், வசதியற்ற மாணவர்களுக்கு உதவிகள், போதைப்பாவனை, பெண்கள் சிறுவர் துஸ்பிரயோகம், பாலியல் இறுவட்டு, போன்றவற்றிற்கு எதிராகவும் ஒவ்வொரு கிராமங்களிலிருந்தும் இரண்டு பெண்களை உள்ளடக்கிய செயற்பாடுகளுடன் ஆரம்பிக்கப்பட்டு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் வடமாகாண மகளிர் முன்னேற்றக்கழகத்தின் தலைவி காமராஜ் இராஜகுமாரி, ஈச்சங்குளம் பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி, வவுனியா தமிழ் தெற்கு பிரதேச சபை உறுப்பினர் பத்மநாதன் சத்தியநாதன், வவுனியா பிரதேச செயலகப் பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சிவதர்சன் சுபாஜினி மற்றும் பெண்கள் அமைப்புக்கள், பொதுமக்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

## கிளிநொச்சி மாவட்டத்தில் நத்தார் கொண்டாட்டங்கள் அமைதியாக இடம்பெற்றன







கிளிநொச்சி மாவட்டத்தில் நத்தார் கொண்டாட்டங்கள் அமைதியாக இடம்பெற்றன. மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வெள்ள அனர்த்தம் காரணமாக மக்கள் முகாம்களிலும், உறவினர் இல்லங்களிலும் தங்கியுள்ள நிலையில் இவ்வருட நத்தார் கொண்டாட்டங்கள் அமைதியாக கொண்டாடப்பட்டன.

தேவாலயங்களில் விசேட வழிபாடுகள், திருப்பலிகள் இடம்பெற்றன. குறித்த வழிபாட்டில் மக்கள் கலந்துகொண்டு நத்தார் தினத்தை அமைதியாக கொண்டாடினர்.

கிளிநாச்சி குழந்தை இயேசு ஆலயத்தில் நள்ளிரவு ஆராதனை இடம்பெற்றது.அருட்தந்த இயேசுதாசன் குறித்த வழிபாட்டில் திருப்பலியை ஒப்புக்கொடுத்தார். இயேசு பாலகனாக அவதரித்தமையின் அடையாளமாக பாலகன் இயேசுவின் சுருவம் விசேடமாக அமைக்கப்பட்ட இடத்தில் வைக்கப்பட்டது. தொடர்ந்து திருப்பலி ஒப்புகொக்கப்பட்டது.

கிளிநாச்சியில் உள்ள அங்கிலிக்கன் திருச்சபையிலும் நத்தார் நள்ளிரவு ஆராதனைகள் இடம்பெற்றன. வண பிதா டானியேல் அவர்களால் திருப்பலி ஒப்பு கொடுக்கப்பட்டு விசேட வழிபாடு இடம்பெற்றது.

முறிகண்டி தென்னிந்திய திருச்சபையில் விசேட நத்தார் வழிபாடு அமைதியாக திருப்பலி ஒப்பு கொடுத்தலுடன் இடம்பெற்றது. வண பிதா அசோகன் அவர்களால் திருப்பலி ஒப்பு கொடுக்கப்பட்டது. தேவாலயங்களில் இடம்பெற்ற வழிபாடுகளில் மக்கள் அமைதியான முறையில் கலந்து கொண்டமை குறிப்பிடதக்கதாகும்.

# மரபு இலக்கியம் சார்ந்த நூல்களின் வாசிப்பே என் தமிழ் இலக்கியத்தின் மீதான ஆர்வத்தைத் தூண்டியது

## வில்லூரானுடன் ஒரு சந்திப்பு

மரபு இலக்கியம் சார்ந்த நூல்களின் வாசிப்பும் தேடலும் பாரதியின் கவிதைகள், பாடல்கள் மீதான ஈர்ப்புமே தமிழ் இலக்கியத்தின் மீதான ஆர்வத்தை ஏற்படுத்தியது என கூறுகின்றார்.

புதுக்கவிதைகளை கல்வியறிவு இல்லாதவர்களும் எழுதிவிடமுடியும். அதனாலேயே கவிஞர்களும் கவிதைகளும் புற்றீசலாய் வெளிவந்துகொண்டிருக்கின்றன. இவற்றின் தரம் எவ்வாறானதென்பதை காலமே தீர்மானிக்கும் என்கிறார்.

**கேள்வி:- உங்களுடைய சிறுவர் பாடல் நூலுக்கு அரச இலக்கிய விருது அண்மையில் (11.09.2018) கிடைத்துள்ளதாக அறிய முடிந்தது.அவ்வகையில் உங்களின் சிறுவர் பாடல் கவிதையா, கதையா, பாடல் சார்ந்ததா ?**



**பதில் :-** என்னுடைய சிறுவர் பாடல்கள் எனும் நூலிலுள்ள அறுபது பாடல்களும் பாடும் வகையில் சந்தத்துடன் அமைந்தவாறான பாடல் சார்ந்த இலக்கிய வகையினுள் உள்ளடக்க முடியும் எனினும் கவிதையாகவும் படிக்கலாம்.கதைப்பாடல்கள் அமைப்பிலும் சில பாடல்கள் எனது தொகுப்பிலுள்ளன. புதிய நரியும் புரிந்துணர்வுள்ள காக்கையும்,முல்லைக்குத் தேர் கொடுத்த மன்னன்,புத்திமான் பலவான் ஆகியன இத்தகையன.

**கேள்வி :- பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியராகவும் தற்பொழுது அதிபராகவும் பணியாற்றும் உங்களுக்கு இலக்கியத் துறையில் எவ்வாறு நாட்டம் ஏற்பட்டது?**

**பதில் :-** பாடசாலை கல்வி பயிலும் காலங்களிலிருந்தே இயல்பாக கவியெழுதும் ஆற்றல் இருந்தபோதிலும் சாதாரணதரம் படிக்கும் போது தினகரன்,தினமுரசு ஆகியவற்றுக்கு எழுதினேன். தினமுரசு செய்தித்தாளில் பிரசுரமான எனது கவிதைகளை ஆவணப்படுத்திய போது அதனை வாசித்துவிட்டு தருவதாக பெற்றுச் சென்ற ஒரு விரிவுரையாளர் அதனை தவறவிட்டுவிட்டார்.எனது எழுத்துலக ஆரம்ப கால கவிதைகள் அவை என்பதால் எனக்கு மிகுந்த வேதனையாக இருந்தது. ஒளி மஞ்சரி போன்ற வானொலி நிகழ்ச்சியிலும் சில கவிதைகளை எழுதினேன்.அதன் பின் ஆசிரியர் பணியில் விஞ்ஞானப் பாடத்தை அர்ப்பணிப்புடன் கற்பித்து வரும் நிலையில் 2015 களில் முகநூலில் கவிதை எழுத தொடங்கிய பின்னரே எனது கவிதை இலக்கிய உலகம் விரிவுபடத் துவங்கியது. அதன் மூலம் உலகளாவிய ரீதியில் ஒரு மரபுக்கவிஞனாக இனங்காணப்பட்டு நாட்டிலும் கடல் கடந்தும் பல விருதுகளையும் சான்றிதழ்களையும் பெற்று கவிஞனாக தன்னை நிலைநிறுத்தியுள்ளேன். சிறுவர் பாடல்கள் எனும் நூலை கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் 2016 இல் வெளியீடும் செய்துள்ளது.

மரபு இலக்கியத்தை முகநூலினூடாக கற்று அதில் தேர்ச்சிபெற தேடல்களை மேற்க்கொண்டு மிகை வாசிப்பினூடாகவுமே இலக்கிய பயணம் ஆரம்பமானது.தலைப்பையுள்வாங்கி எழுதுகோலை எடுத்தால் தாமாகவே தமிழ்ச்சொற்கள் தாளில் தவழுகின்றன.அதனாலேயே கடவுளின் கொடையென கருதுகின்றேன்.மரபு இலக்கியம் சார்ந்த நூல்களின் வாசிப்பும் தேடலும் பாரதியின் கவிதைகள்,பாடல்கள் மீதான ஈர்ப்புமே தமிழ் இலக்கியத்தின் மீதான ஆர்வத்தை ஏற்படுத்தியது.

**கேள்வி :- இன்றைய காலப்பகுதியில் மரபுக் கவிதைகளின் வரவு மிக கணிசமாக குறைந்துள்ளது.அவ்வகையில் மரபுக் கவிதைகளை முறையாக புலவர்களிடம், நூல்களில் கற்காமல் முகநூலூடாக கற்று மரபுக் கவிதை படைக்க முடியும் என கருதுகின்றீர்கள் ?**

**பதில் :-** மரபு என்றுமே வாழும்.நவீனம் மரபிலிருந்தே தோன்ற முடியும்.மரபுசார்ந்த செய்யுள்களின் கட்டுப்பாடுகளிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்ட கவிதைகளே நவீன கவிதை என்று கூறப்படுகிறது.

மரபு என்பது கட்டுப்பாடுகளையும் இலக்கண வரம்புகளையும் கொண்டிருப்பதனால் எல்லோராலும் இலகுவில் எழுதமுடியாது. நவீன பின்நவீனத்துவக் கவிதைகளை எவராலும் இலகுவில் எழுதிவிடமுடியும் ஆனால் நன்கு கற்றுத் தேர்ந்தவர்களாலேயே மரபுக் கவிதைகளை எழுத முடியும்.

தரமான கவிதை படைக்க இலக்கண இலக்கியங்களில் புலமை கொண்டிருக்க வேண்டும் என்பது கருத்தேயன்றி கவிதையெழுதுவதற்கான தடைகளல்ல.மரபுக் கவிதைகளை யாப்பிலக்கணத்தின் படி உறுப்பியலில்எழுத்து,அசை,சீர்,தளை,அடி,தொடை முதலியவற்றையும் ஆசிரியப்பா,வெண்பா,கலிப்பா,வஞ்சிப்பா,மருட்பா ஆகிய பா வகைகளையும் அடிப்படையாக கொண்டே எழுதவேண்டும்.

புதுக்கவிதைகளை கல்வியறிவு இல்லாதவர்களும் எழுதிவிடமுடியும்.அதனாலேயே கவிஞர்களும் கவிதைகளும் புற்றீசலாய் வெளிவந்துகொண்டிருக்கின்றன.இவற்றின் தரம் எவ்வாறானதென்பதை காலமே தீர்மானிக்கும்.

காவியங்கள், கூத்துப்பாடல்கள், கும்மி, சிந்து, சினிமாப் பாடல்கள் மரபு தெரிந்த ஒருவராலேயே சிறப்பாக எழுதமுடியும். புதுக்கவிதையாளர்களால் எழுதிவிட முடியாது. பாரதி போன்று பல கவிஞர்கள் மரபில் எழுதி பின்னர் புதுக்கவிதைக்குள் நுழைந்தவர்களே கவிதை தளத்தில் இடம்பிடித்துள்ளனர்.எனவே மரபைக் கற்று அன்றைய ஆரம்பகால வடிவங்களில் உள்ளது போன்றல்லாது எளிமை மிகுந்ததாக மாற்றி படைப்புகளை கொண்டுவரமுடியும்.ஆதலால் இன்றைய தலைமுறையினர் மரபினையும் கற்று புதிய கவிதைக்குள் பிரவேசிப்பது அவசியம்.

எளிமை,அழகான சொல்லாடல் அணி,விரிந்த கருத்தை சுருங்கச் சொல்லி வாசகனின் உள்ளத்தில் தூண்டுதலையும் மாறுதலையும் உருவாக்க வேண்டும்.கவிதை கவிஞனுக்கானதல்ல சமூகத்திற்கானது என்பதையுணர்ந்து கவிதை படைக்க வேண்டும்.புரியாத சொற்களையும் படிமங்களும் நிறைந்த எளிமையற்ற கவிதைகளை கவிதையென்று கூறமுடியாது.கவிதை எதுவானாலும் யாருக்காக எழுதுகிறோம் என்பதில் கவிஞர்கள் கவனம் செலுத்த வேண்டும்.

**கேள்வி :- சிறுவர் படைப்புகள் சார்ந்து எழுதுபவர்கள் எவற்றை கவனத்தில் கொள்ள வேண்டும்?**

**பதில் :-** சிறுவர்களின் மொழிவளம்,கற்பனைத்திறன்,கிரகிக்கும் திறன்,அலசி ஆராயும் திறன்,மதிப்பிடும் திறன் என்பன சிறுவர் இலக்கியம் மூலம் வளரும். சந்தம்,எளிய சொற்கள்,தெளிவான பொருள்,நல்ல கற்பனை,சிறந்த உணர்ச்சி இவைகளைக் கொண்ட பாடல்களே சிறுவர் பாடல்களாகும்.

எழுதுகின்ற பலரும் சிறுவர் உளவியலின்றி எழுதுவதனாலேயே நவீனகால இலக்கிய படைப்புளுள் கடினமானதாக சிறுவர் இலக்கியம் விளங்குகின்றது.

சிறுவர் இலக்கியப் படைப்பாளி சிறுவர் உளவியலை முழுமையாக அறிந்து தன்னை ஒரு சிறுவராக கருதி பொருத்தமான பிடித்த பொருள்கள் சார்ந்ததாக அவர்களது வட்டத்திற்குள் இருந்து எழுத வேண்டும்.

**கேள்வி :- நீங்கள் சிறுவர் பாடல் எழுதுவதற்கான அடிப்படை பின்னணி ?**

**பதில் :-** ஆரம்பக் கல்வி மாணவரிடையே ஒழுக்க விழுமியங்களையும் தமிழ் இலக்கியத்தின் செழுமையினையும் ஆடல் பாடலினூடாக மகிழ்ச்சிகரமான கற்பித்தலை கொண்டுவர வேண்டுமென்ற அடிப்படையிலேயே நிறைவான பாடல்களை எழுதியுள்ளேன் என்றார்.

**நேர்கண்டவர்: பாக்கியராஜா மோகனதாஸ்**

**கேள்வி :- மரபினை இணையம் வழி பயின்று சிறுவர் படைப்புகளை எழுதியுள்ளதாக அறியமுடிகிறது. அவ்வகையில் இணையத்தினூடாக கற்று காத்திரமான ஆக்கபூர்வமான பாடல்களை உங்களால் படைக்க முடிகிறதா?**

**பதில் :-** பொறுமையும் நேரமும் தேடலும் வாசிப்பும் எமது குறிக்கோளின் மீதான தன்னம்பிக்கையும் தொடர் முயற்சியும் இருந்தால் எவர் துணையுமின்றி இணையவழி தமிழை கற்று பிற எழுத்தாளர்களின் நூல்களை வாசிக்கவும் அவர்கள் கையாண்ட நுட்பங்களை அறியவும் முடியும்.

முயற்சியிருந்தால் முடியாதது எதுவுமில்லை.இணைய வழி வாசிப்பே என்னை உயர்த்தி படைப்பாளனாக இனங்காட்டியுள்ளது. எண்ணமே வாழ்வு, நல்ல எண்ணங்கள் நல்லனவற்றையே தேடும் வளரும்.

**கேள்வி :- சிறுவர்களை சிறுவர் இலக்கியம் மற்றும் கலையிலக்கிய ஆற்றுகைகள் சார்ந்து ஈடுபடுத்துவதில் பெற்றோர் கசப்புணர்வுகளையே கொண்டுள்ளனர்.இந்நிலையினை முறையாக நெறிப்படுத்த பெற்றோர்,உறவினர்களின் பங்கு எவ்வாறு இருக்க வேண்டும்?**

**பதில் :-** பரீட்சை மற்றும் தொழிலையடைவதை அடிப்படை நோக்கமாக கொண்ட கல்வி, மாணவர்கள் மத்தியில் மன அழுத்தத்தை ஏற்படுத்தி பிறழ்வான நடத்தையுட்பட பல்வேறு தீமையான செயல்களுக்கும் தற்கொலைக்கும் இட்டுச் செல்கிறது.



இயந்திரமயமான வாழ்வியல் சூழலில் பெற்றோர்களுக்கான விழிப்புணர்வை பாடசாலைகள்,கல்வி அமைப்புகள் மற்றும் சமூக மட்ட அமைப்புகள் ஏற்படுத்த வேண்டும். பெற்றோர்களுக்கு மிகச்சிறந்த வாழ்வியலின் அவசியத்தையும் அன்பு காப்பு கணிப்பு போன்ற உளவியல் சார் விழிப்புணர்வையும் ஏற்படுத்தி இலக்கிய கலையாற்றுகைகள் ஊடாக ஒரு சிறந்த ஆளுமையை உருவாக்க முடியும் என்ற நம்பிக்கையை பெற்றோர்கள் மத்தியில் ஏற்படுத்த வேண்டும்.இலக்கியமும் ஒரு வகையில் ஆன்மீகமே என்பதை பெற்றோர் உட்பட பலர் உணர வேண்டும்.

**கேள்வி :- குழந்தைப் பாடல்களில் எப்பாடலின் தேவை உணரப்படுகிறது**

**பதில் :-** குழந்தையை நோக்கிப் பாடுவதும் குழந்தையை நோக்கிப் பாடப்படுவதும் என இரு முறைகளில் எழுதப்படுகின்றன.குழந்தை தானே பாடும் பாடல்களில் புத்திமதி இருக்காது. மொழியையும் உலகத்தையும் கற்றுக்கொள்ள இசையோடு பாடும் பாடல்களே அவர்களுக்கு உதவுகின்றன.

**கேள்வி :- சிறுவர் படைப்புகளை படைக்கும் போது நீங்கள் எதிர்கொள்ளும் சவால்கள் ?**

**பதில் :-** சிறுவர்கள் பழக்கப்பட்ட சூழலின் காட்சிகள்,விலங்குகள்,நடத்தைகள் என்பவற்றோடு நாமும் குழந்தையாக மாறி உளவியலை அறிந்து அன்றாட வாழ்வில் பழக்கப்பட்ட எளிமையான சொற்களினூடாக எழுத வேண்டிய தேவையுள்ளது.

இதுவரை வெளிவந்த சிறுவர் இலக்கிய வகைகளை தேடி அவற்றை வாசித்து எத்தகைய நுட்பங்களை கையாண்டுள்ளனர்.தற்காலத்துக்குப் பொருத்தமான வகையில் தற்போது எத்தகைய தலைப்புகளை பயன்படுத்த வேண்டும் என்பது குறித்து சிந்திக்க வேண்டியுள்ளது.

**கேள்வி :- கலையிலக்கிய படைப்புத் துறையில் இளைஞர் யுவதிகளின் பங்களிப்பு அத்தி பூத்தாற் போல ஒரு சிலரே தலை காட்டுகின்றனர்.இவ்வாறு இருப்பது ஆரோக்கியமானதா ?**

**பதில் :-** பொருளாதாரத்தோடு போட்டியிட்டு வாழவேண்டிய இயந்திரமயமான வாழ்வியல் சூழலில் பொருளாதாரத்தை தேடிக்கொள்வதிலும், தொழிநுட்பயுகத்தினால் ஈர்க்கப்பட்டமையினாலும் ஆர்வமின்மையுமே நேரமின்மையுமே காரணமாக அமைகிறது.

# தூண்டில் கலை!

இரண்டாவது தளத்தில் இருந்த, 'ஏசி' அறையில், தன் எதிரே இருந்த, 'சி சி டிவி' கேமராக்களைப் பார்த்துக் கொண்டிருந்தார், நாதன். 'அடிமட்டத்திலிருந்து எவ்வளவு உயர்ந்திருக்கிறோம்...' என்று யோசித்தபோது, அவருக்குப் பெருமையாக இருந்தது. இவ்வளவு பெரிய, 'சூப்பர் மார்க்கெட்'டுக்கு இன்று, அதிபதி.

சட்டென்று அவர் கவனம், அந்த சூப்பர் மார்க்கெட்டின் தரை தளத்தில் நின்றிருந்த, ஓர் இளைஞன் மீது பதிந்தது.

வாங்கும் பொருட்களை போட்டுக் கொள்வதற்காக, கடையில் இருந்த கூடையை, அவன் எடுத்து வரவில்லை. அப்படியானால், மிகக்குறைவான பொருட்களைத் தான் வாங்குவான்.

ஆனால், அவன் ஆங்காங்கே நின்றதையும், சந்தேகத்துடன் சில பொருட்களைப் பார்த்ததையும், எதையோ ஒத்துக் கொள்ளாததுபோல் அதிருப்தியுடன் தலையசைத்ததையும் கேமராவில் பார்த்த போது, நாதனின் மனதில் ஒரு நெருடல் ஏற்பட்டது.

'இவனது உடல் மொழி வித்தியாசமாக இருக்கிறதே...'

அந்த இளைஞன், ஒரு, 'ஷேவிங் பிளேடை' மட்டுமே எடுத்து, கடை மேனேஜரை அணுகி, எதையோ கேட்டான். மேனேஜர் மறுப்பதும், அந்த இளைஞன் ஆக்ரோஷத்துடன் பேசுவதும் புலப்பட்டது.

தரை தளத்துக்கு வந்த நாதன், மேனேஜரை கேள்விக்குறியுடன் பார்த்தார்.

'ஒண்ணுமில்லை சார்... இவன், உங்களைப் பார்க்கணும்ன்னு சொன்னான்... அதெல்லாம் இப்போ முடியாதுன்னு சொல்லிக்கிட்டிருந்தேன்' என்றார். அந்த இளைஞனின் முகத்தில் கடுமை அதிகமானது.

'சொல்லுங்க சார்... நான் எந்தவிதத்தில் உங்களுக்கு உதவலாம்?' என, கேட்டார் நாதன்.

'நீங்க உதவ வேண்டாம்... நான்தான் உங்களுக்கு உதவியாக சில ஆலோசனைகளைச் சொல்லலாம்ன்னு நினைத்தேன்... முதலில் உங்கள் மேனேஜரை மாற்றுங்கள் அல்லது அவரது நடவடிக்கையை மாத்திக்கச் சொல்லுங்கள்...

'நீங்கள் இருக்கும்போதே,'இல்லை' என்று சொல்கிறார்... நீங்கள் மரியாதையாக, 'சார்...' என்று என்னைக் கூப்பிட்டீர்கள்... வாடிக்கையாளர் எந்த வயது கொண்டவராக இருந்தாலும், மரியாதையாகக் கூப்பிட வேண்டும் என்று உங்களுக்குத் தெரிந்திருக்கிறது. ஆனால், உங்கள் மேனேஜர், என்னை, 'இவன்' என்று குறிப்பிடுகிறார்,'என்றான்.

நாதனுக்குக் கோபம் வரவில்லை. அந்த இளைஞனிடம், ஏதோ விஷயம் இருப்பதாக, அவரது வியாபார மூளைக்கு பட்டது.

'உங்க ஆலோசனைகள சொல்லுங்க,'என்றார், புன்னகையுடன்.

'குழந்தைகளுக்கான சாக்லெட்களையும், மிட்டாய்களையும் எதற்காக மேல் பகுதியில் வைத்திருக்கிறீர்கள்?'

'அப்போதுதான் குழந்தைகள், அவற்றை எடுத்து சாப்பிட மாட்டார்கள். கடைக்குள்ளேயே தின்று விட்டால், பெற்றோர் அதற்கான தொகையை, 'பில்'லில் சேர்க்காமல் போகலாம்,' என்றார், மேனேஜர் கர்வமாக.

'முட்டாள்தனம்...'என்ற அந்த இளைஞன், பின், 'பொதுவாக சாக்லெட்களை பெற்றோர் தாமாகவே வாங்கிக் கொடுக்க மாட்டார்கள். குழந்தைகள் அவை வேண்டுமென்று கேட்கும் போது தான் வாங்கித் தருவர்.

'எனவே, குழந்தைகளின் பார்வையில் படும்படி கீழ்பகுதியில்தான் அவையெல்லாம் இருக்க வேண்டும். பணம் செலுத்தும் பகுதிக்கு அருகில் இவற்றையெல்லாம் வைத்தால், குழந்தைகள் அவற்றை எடுத்து சாப்பிட்டால், தெரிந்து விடும்... கணக்கில் சேர்க்கலாம்!' என்றான், இளைஞன்.


நாதனுக்கு அந்த இளைஞனின் புத்திசாலித்தனம் பிடித்திருந்தது.

'சார்... இன்றைக்கு, கடையில் ஏன் கூட்டம் இல்லை?' 'உனக்கெதற்கு இந்தவேண்டாத வேலை...' என்பது போல், மேனேஜரின் முகம் கடுமை காட்ட, நாதன் பொறுமையாக பதிலளித்தார்... 'தம்பி... பொதுவாக, செவ்வாய், புதன் ஆகிய நாட்களில் இங்கே அதிகம் பேர் வருவதில்லை.'

'அதாவது, அவர்களை அந்த நாட்களில் இங்கே வரவழைக்க, நீங்கள் எந்த முயற்சியும் எடுத்துக் கொண்டதில்லையோ,'என்றான், அந்த இளைஞன்.

'என்ன முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும்... அந்த நாட்களில் வந்தால், நிதானமாக பொருட்களை வாங்கிச் செல்லலாம் என்று அறிவிக்க வேண்டுமா?' என்று கேட்டார் நாதன்.

'அந்த இரண்டு நாட்களில் வந்தால், எல்லா பொருட்களுக்கும், 5 சதவீதம் தள்ளுபடி என்று அறிவிக்கலாமே... 'பீட்ஸா'விற்கும் கடைகளில் கூட, இப்படியெல்லாம் செய்கின்றனரே... நம் மக்களுக்கு தள்ளுபடி என்றால் தனிப் பிரியம்.




'ஆடி மாதம் ஆகாதது. துணிமணிகளை அப்போது வாங்கவே கூடாது என்று இருந்த நிலைமை மாறி, ஆடி தள்ளுபடியில் வாங்கலாம் என்று காத்திருக்கும் நிலை வந்திருப்பதை எல்லாம், நீங்கள் யோசிக்கவே மாட்டீங்களா?'

'தம்பி... என்ன பண்றீங்க?'

'வேலை தேடிக்கிட்டிருக்கேன். ஆனால், அதுக்காக எந்த சம்பளத்துக்கும் நான் ஒத்துக்குவேன்னு நினைக்காதீங்க... நாணயமா நடந்துக்குவேன்... ஆறே மாசத்தில், உங்க வியாபாரத்தை இரட்டிப்பாக்கும் அளவுக்கு யோசனைகளை என்னால் செய்ல முடியும்!'

'சாமர்த்தியம்தான்... முயற்சிக்கலாமே...'என்று தோன்றியது நாதனுக்கு. இளைஞனின் குரலில் முழு நம்பிக்கை தெரிந்தது. அது, கர்வமாகப் படவில்லை.

ஆறு மாதங்களில் இல்லையென்றாலும், 10 மாதங்களில் வியாபாரம் இரட்டிப்பானது. கஜா என்ற அந்த இளைஞனின் ஆலோசனைகள், இதற்கு முக்கிய காரணமாக அமைந்தன என்பது, நாதனுக்குப் புரிந்தது.

உண்மையாகவே உழைத்துக் கொண்டிருந்தான், மேனேஜர், கஜா.

'சார்... வாஸ்துப்படி, பணம் வாங்குமிடத்தை வடகிழக்கிலே வைப்பது நல்லது. இன்றைய ரொட்டியை எல்லாம் நேற்று வந்த, ரொட்டிக்கு பின்னாலே வையுங்க.

'ஒண்ணு வாங்கினா இன்னொண்ணுன்ற மாதிரி அறிவிப்புகளை, கடைக்குள்ளே வச்சா போதாது... வாசலிலே வைக்கணும்! மழைக்காலம் சார்... குடைகளைப் பாதுகாப்பாக வாங்கி வைக்க, வாசலிலே ஒருத்தரைப் போட்டுடலாம்... 'டோக்கன்' கொடுக்கட்டும்...' என, பல மாற்றங்களை செய்தான்.

இந்நிலையில் ஒருநாள், 'முதலாளி... ரெண்டு தெரு தள்ளி, நானே ஒரு, 'சூப்பர் மார்க்கெட்' துவங்கலாம்ன்னு இருக்கேன்... வங்கியில், கடன் கொடுப்பதாக கூறினர்... நல்லா வருவேன்னு நம்பிக்கை இருக்கு... உடனே இல்லே, நாலு மாசம் கழிச்சுதான் துவங்கப் போறேன்... அதுக்குள்ளே, நீங்க வேற மேனேஜரை பார்த்துக்குங்க!'

கஜாவை உற்றுப் பார்த்தார், நாதன்.

'இந்த வியாபாரத்திலேயே, நீ கூட்டு சேரலாமே... லாபத்தில், 20 சதவீத பங்கை நீ எடுத்துக்கலாம்!'

கஜா, யோசிப்பது தெரிந்தது.

'என்னப்பா... மனசில்லையா... அதுக்கு மேலே உன் இஷ்டம். சரி, நம்ம கடையிலே வாடிக்கையாளர்கள் பொருட்களை எடுத்துப் போட்டுக்க, 'டிராலி' வச்சிருக்கோமில்லையா... அது இங்கே அதிகமாகவே இருக்கு... நீ வேணா உன் புதிய கடைக்கு,10 'டிராலி'யை எடுத்துக்க... என் அன்பளிப்பு,' என்றார்.

அப்போதும் கஜா, பதில் பேசாததால், நாதன் வேறொரு சந்தேகத்தை எழுப்பினார்.

'உன் அத்தனை, யோசனைகளையும் என்னிடம் சொல்லி, இந்த, 'சூப்பர் மார்க்கெட்'டை மிக நல்ல நிலைக்கு மாற்றியிருக்கே... அப்ப எப்படி என்னை விட அதிகமாக நீ, 'பிசினஸ்' செய்ய முடியும்?'

'நான் புதுசா ஆரம்பிக்கிற, 'சூப்பர் மார்க்கெட்'டில் நீங்களும் பங்கு வகிக்கலாம் சார்... 60 -- 40. அதாவது, லாபத்திலே, 40 சதவீதம் உங்களுக்கு. ஆனால், 60 சதவீதம் முதல் போடுவது, நீங்களாகத்தான் இருக்க வேண்டும். அப்புறம் சார், நீங்க, 'டிராலி'யைப் பற்றிச் சொல்லும்போது, எனக்கு ஒரு யோசனை தோணிச்சு...

'புதுக்கடையிலே பெரிய அளவிலான, 'டிராலி'க்களைத்தான் பயன்படுத்துவேன்... அப்போதான் வாடிக்கையாளர்கள் அதிகப் பொருட்களை வாங்கு வாங்க... இல்லேன்னா, 'டிராலி நிரம்பிடுச்சு'ன்னு வேறெதையும் வாங்க மாட்டாங்க... ஏற்கனவே எடுத்து வச்சதில், கொஞ்சத்தை எடுத்து, வேறு பொருளை வைப்பாங்க... சார், நான் சொன்ன, 60 - 40 ஏற்பாடு, உங்களுக்கு, ஓ.கே.,வாங்கறதை, இன்னும் ஒருவாரத்திலே சொல்ல முடியுமா?' என்றான், கஜா நிறுத்தி நிதானமாக.

நாதனுக்கு கொஞ்சம் திகைப்பும், அதிக வியப்பும் ஒரு சேர எழுந்தன. தான் முன்னுக்கு வந்த கதையை யோசித்தார். இவன், 'இவன், என்னை மாதிரியே தான்; ஆனா, புதுவிதமா யோசிக்கிறான்...'

கஜாவின் கையைக் குலுக்கியபடி தலையசைத்தார். அந்த தலையசைப்பு, அவர் ஏற்றுக் கொண்டதை அறிவித்தது.

**அருண் சரண்யா**



## 23 நாட்களில் உருவான படம்

திரைப்பட தயாரிப்பு செலவு அதிகரித்துள்ள நிலையில் குறுகிய காலத்தில் படங்களை எடுத்து முடிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. உண்மை சம்பவத்தை மையமாக வைத்து 23 நாட்களில் உருவாகியிருக்கிறது 'என் காதலி சீன் போடுறா'. ராம் சேவா எழுதி இயக்குகிறார். இவர் ஏற்கனவே ராமகிருஷ்ணன் நடித்த டீக்கடை பெஞ்ச் படத்தை இயக்கியவர். 'என் காதலி சீன் போடுறா' படம் பற்றி இயக்குனர் கூறியதாவது:

எப்போதும் சந்தோஷமாக வாழ வேண்டும், அப்படி வாழும் நேரத்தில் ஜாக்கிரதையாகவும் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் அதனால் ஏற்படும் பிரச்னைகள் வாழ்க்கையையே திருப்பிபோட்டுவிடும் என்ற கருத்துடன் படம் உருவாகி உள்ளது. உண்மை சம்பவத்தை மையமாக வைத்து காமெடி களத்தில் உருவாகியிருக்கும் இப்படத்தில் அங்காடி தெரு மகேஷ் ஹீரோ. புதுமுகம் ஷாலு ஹீரோயின்.

இவர்களுடன் ஆடுகளம் நரேன், மனோபாலா, அம்பானி சங்கர், தென்னவன், வையாபுரி, கோகுல், தியா, நிஷா நடித்துள்ளனர். அம்ரிஷ் இசை. ஜோசப் பேபி தயாரிப்பு. சென்னை, புதுச்சேரியில் படப்பிடிப்பு நடந்தது. ஒளிப்பதிவாளர் வெங்கட், படக்குழுவினர் பக்க பலமாக இருந்ததால் இப்படத்தின் படப்பிடிப்பு முழுவதையும் 23 நாட்களில் நடத்தி முடித்து விட்டோம். இவ்வாறு ராம்சேவா கூறினார்.

## அஜித்துடன் ஸ்ரத்தா?

'விக்ரம் வேதா' படத்தில் மாதவன் ஜோடியாக நடித்தவர் ஸ்ரத்தா ஸ்ரீநாத், 'ரிச்சி', 'இவன் தந்திரன்', 'காற்று வெளியிடை' படங்களிலும் நடித்துள்ளார். கன்னட நடிகையான இவர், அந்த மொழியிலும் பிசியாக நடித்து வருகிறார்.

இந்நிலையில் பிங்க் இந்தி படத்தின் ரீமேக்கில் அஜித் நடிக்கும் படத்தில் நடிக்க அவரிடம் பேசியுள்ளனர்.

இதில் 3 ஹீரோயின்கள். ஒரு வேடத்தில் நஸ்ரியா, மற்றொரு வேடத்தில் பிரியதர்ஷன் மகள் கல்யாணி நடிக்கிறார்கள் என கூறப்படுகிறது.

3வது கேரக்டரில் நடிக்க ஸ்ரத்தா ஸ்ரீநாத்திடம் பேசியுள்ளனர்.



## ஜெயம் ரவியின் ஆசை

2001ல் கமல்ஹாசன் நடித்த படம், 'ஆளவந்தான்'. இதில் இயக்குனர் சுரேஷ் கிருஷ்ணாவிடம் உதவி இயக்குனராக பணியாற்றியவர், ஜெயம் ரவி. தற்போது நடிப்பில் மட்டுமே கவனம் செலுத்தி வரும் அவர், படம் இயக்க வேண்டும் என்பதை தனது நீண்ட நாள் கனவாக வைத்திருக்கிறார். இது குறித்து அவர் கூறுகையில், 'இப்போது அல்ல, இன்னும் சில வருடங்கள் கழித்த பிறகுதான் படம் இயக்குவது பற்றி யோசிப்பேன். என் முதல் கதையை எல்லா தரப்பு ரசிகர்களுக்கும் பிடிக்கும் வகையில், காமெடி படமாக இயக்க ஆசை. அந்த கதைக்கு யோகி பாபு பொருத்தமாக இருந்தால் அவரை இயக்குவேன்' என்றார்.





## பிரபுதேவா பாராட்டிய பாடகர்

தமிழ் சினிமாவில் தற்போது வைரல் ஆகியிருக்கிறது, பாடகர் ஜெகதீஷின் குரல். அவர் கூறுகையில், 'சொன்னா புரியாது', 'காஞ்சனா 2', 'கொடிவீரன்', 'ஜுங்கா', 'காளி' உள்பட பல படங்களில் பாடினேன். இப்போது 'சார்லி சாப்ளின் 2' படத்துக்காக, அம்ரீஷ் இசையில் பாடிய 'ஐ வான்ட் டு மேரி மாமா' என்ற பாடல் ஹிட்டாகியுள்ளது.

இது தனது பேவரைட் பாடல் என்று, பிரபுதேவா என்னை பாராட்டினார். மெலடி மற்றும் குத்துப்பாடல் பாட ஆர்வத்துடன் காத்திருக்கிறேன். ஏ.ஆர்.ரஹ்மானின் கே.எம். இசைப்பள்ளியில் பயின்ற நான், அவரது இசையில் பாட ஆசைப்படுகிறேன் என்றார்.

## அமிதாப்பின் 'தி கிரேட் மேன்'

பாலிவுட் சூப்பர் ஸ்டார் அமிதாப் பச்சன் முதல்முறையாக தமிழில் நடிக்கும் படம், உயர்ந்த மனிதன். அமிதாப்புடன் இணைந்து எஸ்.ஜே.சூர்யா நடிக்கிறார்.



அவரை வைத்து கள்வனின் காதலி மற்றும் ஜீவன் நடித்த மச்சக்காரன், அகில் நடித்த நந்தி ஆகிய படங்களை இயக்கிய தமிழ்வாணன் இயக்குகிறார். வரும் மார்ச் மாதம் படப்பிடிப்பு தொடங்குகிறது.

இதற்கிடையே நாக்பூரில் அமிதாப் பச்சனை எஸ்.ஜே.சூர்யா, தமிழ்வாணன் சந்தித்து பேசினர். இப்படம் இந்தியில் தி கிரேட் மேன் என்ற பெயரில் உருவாகிறது. ஜார்கண்ட், நைனிடால் உள்பட பல இடங்களில் படப்பிடிப்பு நடக்கிறது. இதர விவரங்கள் குறித்து விரைவில் அறிவிக்கப்படும் என்று தெரிவித்துள்ளார், எஸ்.ஜே.சூர்யா.

## ராணாவுடன் திரிஷாவை இணைத்து வைப்பேன்

ராஜமவுலி இயக்கிய பாகுபலி படத்தில் பிரபாஸ், ராணா நடித்திருந்தனர். இரண்டு பாகங்களில் உருவான இப்படம் திரையுலகில் வசூல் சாதனை படைத்தது. சமீபத்தில் பிரபாஸ், ராணா, ராஜமவுலி மூவரும் இந்தி பட இயக்குனர் கரண்ஜோஹர் நடத்திய நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர். அப்போது பல்வேறு கேள்விகளை அவர்களிடம் கேட்டார் கரண். மாஜி கேர்ள்பிரண்ட் திரிஷாவுடனான உறவுபற்றி கரண் கேட்டதற்கு பதில் அளித்த ராணா,10 வருடமாக நாங்கள் நண்பர்களாக இருந்தோம்.

நீண்ட நாட்கள் நண்பர்களாக இருந்தாலும் குறைந்த நாட்கள்தான் டேட்டிங்கில் ஈடுபட்டோம். ஆனால் அது எங்களுக்குள் சரியாக ஒர்க்அவுட் ஆகவில்லை என்றார். அனுஷ்காவுடன் காதலா? என்று பிரபாஸிடம் கேட்டபோது, அனுஷ்கா மிகவும் கவர்ச்சிகரமான நடிகை. நாங்கள் நண்பர்கள்தான். காஜல் அகர்வால், தமன்னாவும் எனக்கு மிகவும் பிடிக்கும்.

ராணாவுடன் அவரது மாஜி கேர்ள் பிரண்ட் திரிஷாவை நான் இணைத்து வைப்பேன் என்றார். இந்தியில் பாகுபலி ரீமேக் செய்தால் பிரபாஸ், ராணா, அனுஷ்கா கதாபாத்திரத்தில் யாரை நடிக்க வைக்கலாம்? என்று ராஜமவுலியிடம் கேட்டபோது, அனுஷ்கா கதாபாத்திரத்தில் தீபிகா படுகோனை நடிக்க வைக்கலாம். அந்த கதாபாத்திரத்துக்கு அவர் பொருத்தமாக இருப்பார். பிரபாஸ். ராணா கதாபாத்திரங்களுக்கு அவர் இருவரை தவிர வேறு எந்த நடிகரையும் என்னால் யூகிக்க முடியவில்லை என்றார்.



## நிர்வாணமாக நடிக்கத் தயார்

'கஜேந்திரா', 'சாரி எனக்கு கல்யாணமாயிடுச்சி', 'குஷி', 'குசேலன்', 'திண்டுக்கல் சாரதி', 'நானே என்னுள் இல்லை' போன்ற படங்களில் நடித்திருப்பதுடன் தெலுங்கு, இந்தி படங்களில் நடித்திருப்பவர் ஆஷா சைனி. தற்போது வெப் சீரியலிலும் நடிக்கிறார். திரைப்படங்களை காட்டிலும் வெப் சீரியல்களில் ஆடை குறைப்பு காட்சிகளுக்கு எந்த தடையும் இல்லாததால் சில நடிகைகள் தாராளமாக நடிக்க சம்மதிக்கின்றனர். ஆஷா சைனியும் நிர்வாணமாக நடிக்க தயார் என அறிவித்திருக்கிறார்.

இதுகுறித்து அவர் கூறும்போது, திரைப்படங்களில் ஒருபக்கம் நடித்தாலும் வெப்சீரியல்களிலும் நடிப்பதில் மிகவும் சந்தோஷம். தற்போது இந்தி வெப் சீரியல் ஒன்றில் நடிக்கிறேன். இதில் உடல் அழகை வெளிப்படுத்தி நடிப்பதற்கு அதிக வாய்ப்புள்ள கதாபாத்திரமாக எனக்கு அமைந்திருக்கிறது. நெருக்கமான சில காட்சிகளை இயக்குனர் சூடுபறக்க படமாக்கியிருக்கிறார். என்னைப்பொறுத்தவரை இதுவொரு சவாலான கதாபாத்திரம். காட்சிக்கு தேவைப்பட்டால் நிர்வாணமாக நடிக்கக்கூட நான் தயாராக இருக்கிறேன் என்றார்.

## தன்ஷிகாவுடன் மோதும் கபீர் சிங்



தமிழில் அஜீத்துக்கு வில்லனாக 'வேதாளம்' படத்தில் நடித்தவர், பாலிவுட் நடிகர் கபீர் சிங். தற்போது 'காஞ்சனா 3', 'யோகிடா' ஆகிய படங்களில் நடிக்கிறார். அவர் கூறுகையில், இந்தியை தொடர்ந்து தென்னிந்திய மொழிகளான தமிழ், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளில் சில படங்களில் நடித்துள்ளேன். இங்கு பணியாற்றுவது எனக்கு அதிக மகிழ்ச்சி அளிக்கிறது. தமிழில் என் முதல் படத்தில் அஜீத்துடன் மோதினேன்.

இப்போது தன்ஷிகாவுக்கு வில்லனாக, சேகர் பாபு என்ற கேரக்டரில் நடிக்கிறேன். அவருடன் சண்டை காட்சியிலும் நடித்துள்ளேன். ஹீரோயினுக்கு அதிக முக்கியத்துவம் கொண்ட கதை என்றாலும், என் கேரக்டருக்கும் நிறைய முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. என் பாடிலாங்குவேஜை மாற்றி நடித்து வருகிறேன். இந்த கேரக்டர் ரசிகர்கள் மத்தியில் பேசப்படும் என்றார்.

## வாய்ப்பை நிராகரித்த விஜய்



பாலிவுட்டில் நடிக்க வந்த வாய்ப்பை ஏற்க மறுத்துள்ளார் விஜய் தேவரகொண்டா.

அர்ஜுன் ரெட்டி தெலுங்கு படம் மூலம் பிரபலமானார் விஜய் தேவரகொண்டா. தொடர்ந்து பெல்லி சுப்புலு, கீதா கோவிந்தம், டாக்ஸிவாலா என அடுத்தடுத்து ஹிட் படங்களை கொடுத்தார். தமிழில் நோட்டா படத்தில் இவர் நடித்தார்.

இந்நிலையில் பாலிவுட்டிலிருந்தும் இவருக்கு பட வாய்ப்புகள் வந்த வண்ணம் இருந்தன. 1983ல் இந்திய கிரிக்கெட் அணி உலக கோப்பையை வென்றது.

இந்த சம்பவத்தை வைத்து 83 என்ற படம் உருவாகிறது.

கபீர்கான் இயக்கும் இந்த படத்தில் கபில்தேவ் வேடத்தில் ரன்வீர் சிங் நடிக்கிறார். கிரிக்கெட் வீரர் ஸ்ரீகாந்த் வேடத்தில் நடிக்க விஜய் தேவரகொண்டாவை கேட்டனர். அவர் நடிக்க மறுத்துவிட்டார். அவருக்கு பெரிதாக நடிக்க வாய்ப்பு இல்லாத வேடமாக இது இருந்ததாம். இதனால் அவர் நடிக்கவில்லை என கூறப்படுகிறது. அதே சமயம், அவரை இந்தியில் பெரிய அளவில் அறிமுகப்படுத்த இயக்குனரும் தயாரிப்பாளருமான கரண் ஜோஹர் திட்டமிட்டுள்ளாராம்.

## திருநங்கையாவது சாபமல்ல


ஐயா கேரக்டருக்காக தயாரானவுடனே, என் மனைவி குழந்தைகளுக்கு போன் பண்ணி 'எல்லாரும் தயாராகி வாங்க. பேமிலி போட்டோ எடுப்போம்' என்று கூப்பிட்டேன். ஏனென்றால், தன்னோட அப்பா வயதானவராக இருக்கும்போது போட்டோ எடுக்குற கொடுப்பினை எத்தனை பேருக்கு கிடைக்கும்னு தெரியல. என்னைப் பார்த்தவுடனே 'சூப்பரா இருக்குப்பா' என்று குழந்தைககளும் ரொம்ப சந்தோஷப்பட்டாங்க' என்று தன் குடும்பத்தினர் அடைந்த சந்தோஷத்தை பகிர்ந்தபடி பேசத் தொடங்கினார் விஜய் சேதுபதி.

**'சீதக்காதி' படத்தின் ட்ரெய்லரை பார்க்கும்போது இது வேறு வகை என்று தோன்றுகிறதே?**

இப்படம் கலைக்கு சமர்ப்பணம். அது எந்தக் கலையாக இருந்தாலும் சரி. ஐயா கதாபாத்திரத்தில் முதலில் நடிக்க முடியுமா என்று ரொம்பவே சந்தேகப்பட்டேன். படமாகப் பார்த்தவுடன் ஓரளவு பண்ணிருக்கிறோம் என்ற நம்பிக்கை வந்துருக்கு. ஒரு நடிகனாக நம்பிக்கை சற்று அதிகமாகியிருக்கு.

**ரஜினியுடன் நடித்ததை ஒவ்வொரு காட்சி படமாக்கப் பட்ட பின்னரும் எப்படி உணர்ந்தீர்கள்?**

'மேற்குத்தொடர்ச்சி மலை', '96' போன்ற படங்களைப் பார்த்துவிட்டு பேசினார், பாராட்டினார். அதையெல்லாம் தாண்டி அவரோடு வேலை பார்த்ததைத் தான் பெரிதாக நினைக்கிறேன். 'பேட்ட' படத்தில் இரண்டு பேருக்குமான காட்சிகளில், என் வசனத்தை எல்லாம் படித்துவிட்டு, இப்படி நடிக்கலாம் என்று போவேன். ஆனால், ரஜினி சார் ஒவ்வொரு முறையும் ஆச்சர்யப்படுத்திக் கொண்டே இருந்தார். அவர் நடிப்புக்கு முன், நான் நினைத்ததைத் தாண்டி வேறொன்றைக் கொடுப்பது மாதிரி ஆகிவிட்டது.



**'பேட்ட' ஆடியோ விழாவில் ரஜினி உங்களை 'மகா நடிகன்' என்று புகழ்ந்தார். அதைப் பற்றி?**

அது எனக்குக் கிடைத்த பொக்கிஷம். ரஜினி சார் உதிர்த்த அந்த வார்த்தைகள் என்னுடைய சொந்தம். எங்களைப் போன்றவர்களுக்கு ரஜினி சார், கமல் சார் தான் வழிகாட்டிகள். அவர்களின் பாதிப்பு இல்லாமல் நாங்கள் யாரும் சினிமாவுக்குள் வந்திருக்கவே முடியாது. 40 ஆண்டுகளுக்கும் மேலாக மக்கள் அன்பு செலுத்தும் ஒருவரிடம் இருந்து வரும் இதுபோன்ற வார்த்தைகளை மிகப் பெரியதாக நான் பார்க்கிறேன்.

**'சூப்பர் டீலக்ஸ்' படத்தில் உங்களுடைய தோற்றத்துக்குக் கிடைத் திருக்கும் வரவேற்பு பற்றிக் கூறுங்கள். அந்தப் படத்தின் இயக்குநர் பற்றியும்..**

வரவேற்பை எல்லாம் விடுங்க. முதலில் இயக்குநர் தியாகராஜன் குமாரராஜாவை ரொம்பவே நேசிக்கிறேன். அந்த மனுஷன் படத்தில் நடித்தால் நம்மை வைச்சு செய்வார். அதற்குக் காரணம் அவருக்கு சினிமா மீதிருக்கும் காதல் தான். எத்தனை வருடங்கள் கழித்து அந்தப் படத்தைப் பார்த்தாலும், எவ்வளவு கஷ்டப்பட்டு நடிச்சுருக்காங்கப்பா என்று சொல்வார்கள். அப்படியிருக்கிறது அவரது மெனக்கெடலும் உழைப்பும். ஆனால் இந்தப் படம் பண்ணினால் நமக்கு இந்த விருதுகள் எல்லாம் கிடைக்கும் என எண்ணி அவர் படம் பண்ணுவதில்லை என்பது மட்டும் நிச்சயம்.

**ஒரு முன்னணிக் கதாநாயகன் திடு திப்பென்று திருநங்கையாக நடித்துவிட முடியுமா?**

திருநங்கையாக ஒருவர் மாறுவது சாபம் கிடையாது. இந்தச் சமூகம் அதைச் சாபமாக பார்க்கிறது. திருநங்கையாக நடிப்பதற்கு நான் போய் யாரையும் சந்திக்கவில்லை. நான் திருநங்கையாக உணர்ந்து தான் அந்தப் படத்தில் நடித்தேன்.

**தற்போது வெப்சீரிஸ் காலம் தொடங்கி யிருக்கிறது. உங்களுக்கு அதில் நடிக்கும் எண்ணம் ஏதேனும் உள்ளதா?**

அதுவொரு வகை. அதில் நடித்தால் மக்களிடம் போய் சேரமுடியும் என்றால் நடித்துதான் ஆக வேண்டும். அனைவரது கையிலும் போன் வந்துவிட்டது. ஆகையால், பயணிக்கும் போது பார்த்துக் கொண்டே போகிறார்கள். இது வரைக்கும் டிஜிட்டல் பிளாட்ஃபார்மில் ஒன்றுகூடப் பார்த்ததில்லை. நேரமில்லை. பொதுமக்களோடு சிரித்துப் பழகி மகிழ்விப்பவன் கலைஞன். ஆகையால், சினிமாவைத் தாண்டி மிகக் குறைந்த தொகையில் பொழுது போக்கு எதுவுமே இல்லை. என்ன வந்தாலும் அதற்கு அழிவு கிடையாது.

# சமூகத்தை கட்டியெழுப்புவதில் கல்வியின் பங்கு

ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவற்கு எழுமையும் ஏமாப்புடைத்து எனும் திருக்குறளிற்கு இணங்க கல்வியானது மனித சமூகத்துடன் ஒன்றிணைந்து காணப்படுகின்றது. ஆதிகாலமிருந்து கல்வியானது மனித குலத்தில் பின்னிப்பிணைந்து வளர்ச்சி கண்டு வருகின்றது. கிரேக்கத்தில் பிளேட்டோ, அரிஸ்ரோட்டில் போன்ற கல்வி மேதைகள் தொடக்கம் நியூட்டன், ரூசோ, புரோபல் வரையான உலக கல்வியாளர்கள் எம் சமூகத்திலும் உலகிலும் தோன்றி கல்வியையும் சமூகத்தினையும் ஒன்றிணைத்துள்ளனர். சமூகத்திலுள்ள மனிதனது கூட்டு வாழ்க்கைஇ வளர்ச்சிஇ அமைப்பு செயன்முறை ஆகிய அனைத்தையும் கல்வி உட்கொண்டு விளங்குகின்றது. சமூகத்தில் காணப்படும் உயிரியல், புவியியல், மனவியல் அனைத்திலும் கல்வி செல்வாக்கு செலுத்துகின்றது.

சமூகத்தின் நிலைகளை 03 வகைகளாக பிரிக்கலாம். அவை ஆதார நிலை, (குடும்பம், உறவினர் கூட்டாளிகள்) நடுநிலை, (பாடசாலை, சூழ்நிலை, புத்தகங்கள்) வழிநிலை, (வானொலி, தொலைக்காட்சி) என்பனவாகும். இவற்றின் அனைத்திலும் கல்வியின் பங்கு அளப்பரியதாக அமைகின்றது.

பினை செய்ய வைப்பதிலும் கல்வி முதன்மை இடத்தினைப்பெறுகினறது. இதனை ஜி.கே.செஸ் தெர்டோன் எனும் தத்துவ அறிஞரும் உறுதிப்படுத்துகின்றார்.

மனிதனின் நாகரீக வளர்ச்சிக்கு கல்வித்துறையானது அவசியமாகின்றது. விஞ்ஞான ரீதியான கல்வியின் உச்ச நிலையே தற்போதைய நவீன வசதிகள் கொண்ட உலகமாகும். அதன் இயல்புக்கேற்ப சமூகத்தேவைகளை நிறைவு செய்வதற்கு அனைத்து மனிதர்களுக்கும் கல்வி கருவியாக உள்ளது. நவீன கல்வி வளர்ச்சியில் ஊடகம், கணக்கியல், தொழில்நுட்பம் ஆகிய துறைகள் சமூகவேலை வாய்ப்புக்களை ஏற்படுத்திக்கொடுக்கின்றன. இவற்றினை அடித்தளமாகக் கொண்டு சமூகத்தேவைகளுக்கும் கல்வியினை பெற்றுக்கொள்வது முதன்மையாகின்றது.

அந்தவகையில் கல்வியானது சமூகத்தில் பலமாற்றங்களையும் ஏற்படுத்திக்கொண்டிருக்கின்றது. என்பதனை அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டியதாக உள்ளது. கல்வியானது சமூக அறியாமை இருளினை நீக்குகின்றது. சமூகத்திலுள்ள மூடநம்பிக்கைகளையும் நீக்கி அறிவினை வழங்கும் சாதனமாக கல்வி காணப்படுகின்றது. சமூக மனிதர்கள் வாழ்



செயற்பாட்டில் கல்வி பெரும் பங்கினை பெறுகின்றது என்பதனை அனைவரும் அறிந்த உண்மையாகும். சமூகமயமாக்கலினை ஏற்படுத்தும் தலைசிறந்த நிறுவனம்; பாடசாலை ஆகும். பாடசாலை சமூகமயமாக்கலினை வினைத்திறனாக மேற்கொள்கின்றது. பாடசாலையானது பல்வேறு வளங்களை கொண்டுள்ளது. மனிதவளம் இ பௌதீகவளம் நிறுவனவளம் இ தொழில்நுட்பவளம் என அனைத்தையும் பாடநூல் உள்ளடக்கியுள்ளது. இவ்வாறான வளங்கள் அனைத்தும் மாணவர்களின் ஆளுமை விருத்திஇ சமூகத் தொடர்புகளுக்கான இயலுமை உள்ளவர்களாக உருவாக்குவதனை மையமாக கொண்டிருப்பதனை இனங்காண முடியும். பாடசாலையானது குடும்பத்திற்கு அடுத்தபடியாக மாணவர்களின் சமூகம ய மாக்கல் செயற்பாட்டில் பிரதான நிறுவனமாக அமைகின்றது. ஏனெனில் எங்களில் அதிகமானவர்க

வாக்கும் ச க்கி பாடசாலைக்கு உண்டு. ஆகவே கல்வியும் சமூகமும் ஒன்றில் ஒன்று தங்கியுள்ளது. இதற்கு பாடசாலை பெரும் பங்காற்றுகின்றது. மனிதன் சமூகத்துடன் இணைந்து செயற்படுவதன் மூலமே ஊரணத்துவம் அடைகின்

அவ்வாறே இன்று உலக அரங்கில் பழைமையில் பெருமளவு ஊறியிருந்து நவீனமாக்கிக் கொள்ளும் செயன்முறைக்கு கல்வியானது பெருமளவு செல்வாக்கினை ஏற்படுத்துகின்றது. இவை அனைத்தும் கல்வியின் சமூக செயலாகவே அமைகின்றது. சமூகத்தில் பல பிரச்சினைகளுக்கும் கல்வி விடைகாணும் தன்மை கொண்டது. அதன்படி கல்வியில் மாணாக்கரை முழுமையான இயல்புடையவர்களாக உருவாக்குவதே கல்வியின் தலையாய நோக்கமாகும்.



கல்வியும் சமூகமும் ஒன்றுடன்றுடன் ஒன்று தொடர்புடையது. என்பதனை ஜே.எம்.கில்டர் என்பவர் முதன் முதலில் வெளிப்படுத்தினார். கல்வியின் சமூக நோக்கமாக கல்வி அனைவருக்குமானது கல்வி குடிமக்களுக்கானது என கூறுகின்றது. இதனை மையமாகக்கொண்டு தற்கால கல்வித்திட்டங்கள் அமைந்துள்ளன.

கல்வியினால்சமுதாயத்தினை சிறப்பாக உருவாக்கமுடியும். கல்வி மனித சமூகத்தினை பக்குவப்படுத்தும் கருவியாகும். இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள் என்பதனை சமூகத்தில் உருவாக்குவது கல்வியே ஆகும். இளைய தலைமுறையினரை வழி நடத்துவதிலும் சமுதாயத்தில் தன்னுடைய பங்களிப்பில் முன்னேற்றம் அடைந்து கொள்ள வாய்ப்பினை பெறுகின்றமைஇ சிந்திக்கும் ஆற்றல் விரிவடைவதுடன் புதிய கண்டுபிடிப்புக்கள் விண்வெளி சாதனங்கள் சமூகத்தில் சிறந்த தலைமைத்துவத்தினை இக்கல்வி ஏற்படுத்துகின்றது. இவ்வாறான மாற்றங்கள் கல்வியினுடாக இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. உலகில் மனிதன் தனியாகப்பிறப்பதுமில்லை தனியான வாழ்வதுமில்லை அனைவரும் ஒன்றிணைந்து சமூகமாகவே வாழ்கின்றனர். எமது சமுதாயத்தினை நோக்கினால் இந்து, கிறிஸ்தவம், இஸ்லாம், சிங்களவர் என பன்மைச்சமூகமாக வாழ்கின்றோம் இப் பன்மைச்சமூகம் முறிவின்றி சுமுகமாக இயங்குவதற்கு கல்வி அவசியமாகின்றது. கற்பதனால் மிருகமான மனிதன் பண்பாடடைகின்றான். சாதி, மதபேதமின்றி ஒன்றிணையத்தூண்டுவது கல்வி. கல்வியினை பெறுவதனால் மட்டும் மனிதன் மனிதனாவதில்லை சந்தர்ப்பம், சூழ்நிலைகளுக்க ஏற்ப அதனைப்பயன்படுத்துவதிலே கல்வியின் வெற்றி தங்கியுள்ளது. ஆகவே எத்தகைய சமூகமாயினும் சமூக ஒற்றுமையினை வலுப்படுத்துவதாக அமைவது கல்வியாகும்.

சமூகத்தினையும் மனிதனையும் இணைக்கும் ளுக்கு வீட்டுவாழ்க்கைகுப் பின்னர் மிகத் தாரளமான சமூகமயமாக்கல் முகவராக ஆசிரியர்கள் இருக்கின்றனர். புதிய புதிய விடயங்களை மாணவர்களுக்கு கல்வியினூடாக வழங்குகின்றனர். (உ-ம்) சமூகச் சூழலின் தன்மைஇ தொடர்புகொள்ளும் முறைஇ சமூகச் சிக்கல்கள் இ பாதுகாப்பு முறைஇ சமூக மேம்பாடுகள் பற்றிய கல்வியினை ஆசிரியர் வழங்குவதன் மூலம் கல்வியனூடாக மாணவர்கள் சமூகத்தினுள் இலகுவாக பிரவேசிக்க முடிகின்றது.

பிள்ளையானது பாடசாலைக் கற்றலில் தான் பெற்ற அறிவினைக் கொண்டு சூழலில் நடத்தை மாற்றத்தினை ஏற்படுத்துகின்றது. (உ-ம்) (பவ்லோஇ தோண்டைக் போன்ற விஞ்ஞானிகளின் கோட்பாடுகள்) நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் செல்வாக்குச் செலுத்தும் பிரதான காரணியாக கல்வியே காணப்படுகின்றது. பாடசாலைக்கற்றலில் மாணவர்கள் அரசியல் தொடர்பான விடயங்களை கற்கும் போது அது தொடர்பான தெளிவு சமூகத்திற்கு சென்றடைகின்றது. (உ-ம்) அரசியல் விஞ்ஞானம.;; இது போன்று பாடசாலையில் விவசாயம் இ வாழ்க்கைத் தேர்ச்சி இ தொழில்நுட்பவியல் என அனைத்து பாடங்களும் கற்பிக்கப்படுகின்றது. இவை அனைத்தினதும் இறுதி எல்லை சமூகமாகவே உள்ளது. இனம் இ நிறம்; இ சமூக நிலமைகளை கவனத்தில் கொண்டுள்ளது. வயதுஇ திறமைஇ நுண்ணறிவு என்பவற்றில் சமவளவான கல்வியை வழங்குதலே ஜனநாயக்கல்வி ஆகும். (உ-ம்) இலங்கையில் இலவசச் சீருடை இலவசப் புத்தகம் இலவச மதிய உணவு புலமைப்பரிசில் என கல்வியானது எல்லோருக்கும் உரித்துடையதாக வழங்கப்பட்டு இறுதியில் சமூகத் தேவையினை ஊர்த்தி செய்வதாக அமைகின்றது.

ஒருவரை தனிமனித உணர்வு உள்ளவராகவும் சமூக வாழ்க்கைக்கு உரியவனாகவும் மாற்றுகின்ற பணியினை சமூக மயமாக்கல் செய்கின்றது. இந்த பணியை செய்கின்ற நிறுவனங்களில் கல்விச் செயற்பாட்டின் முன்னணியான பாடசாலை தீவிரமாக மேற்கொள்கின்றது. பெற்றோர் இ குடும்பம் வீட்டுச் சூழலுக்கு அப்பால் சமூகத் தொடர்பினை உரு றார். (உ-ம்) றேமன்ட் எனும் அறிஞர் மனிதனை சமூகத்தில் இருந்து பிரிக்க முடியாது அவ்வாறு பிரித்தால் மனிதன் யதார்த்த நிலையினை இழந்து விடுவான் என கூறுகிறார்.

சமூகமும் கல்வியும் இரட்டைப் பிறவிகளாகும். இரண்டும் ஒன்றுடன் ஒன்று தொடர்பினைக் கொண்டு காணப்படுகின்றது. சமூகத்தில் காணப்படும் உறுப்பினர்களின் நடத்தைஇ எண்ணம் இலக்கு என்பன கல்வியின் மூலமே தீர்மானிக்கப்படுகின்றது. ஒருவர் பெறும் கல்வியே அவரது நிகழ்காலம்இ எதிர்காலம் அனைத்தினையும் வழிப்படுத்துவதாக அமையும். சமூகத்திலுள்ள மனிதர்களின் நடத்தைஇ எண்ணம் போன்றவை உரிய சிந்தனை பண்பினை கொண்டிருக்க வேண்டும். (உ-ம்) சமூகத்தில் வாழும் சாதாரண மனிதனே ஓர் நாட்டின் ஜனாதிபதி ஆகும் எல்லைக்கும் செல்கின்றார்.(ஆபிரகாம் லிங்கன்இ அப்துல்கலாம்) அம் மனிதன் மூலம் அச் சமூகமே நன்மை அடையும். எனினும் கல்வி அறிவற்றவர்களிடம் அரசியல், மக்கள், நாடு என்பவற்றினை ஒப்படைக்கும் வேளையில் சமூக வளர்ச்சி கேள்விக்குறியாகின்றது. ஆகையால் தலைவராக இருப்பவராயினும், சாதாரண மனிதராக இருப்பவராயினும் கல்வியினை பெறுவது அத்தியாவசியமாகும். முறையான கல்வி கல்விச் சமூகத்தில் மனிதனை உயர்வடைய செய்யும் என்பது ஐயமில்லை.

ஆகவே கல்வியும் சமூகமும் ஒன்றில் ஒன்று தங்கி செயல்படுவதனை அனைவரும் உணர்ந்து செயற்பட வேண்டும். மாற்றமடையும் சமூகத்திற்கு ஏற்ப மாறுவதற்கும் எம்மை அதற்கேற்ப இசைவாக்கம் கொண்டவர்களாக முகாமைத்துவம் செய்வதற்கும் கல்வியானது அடிப்படையான எண்ணக் கரு ஆகும். ஆகவே கல்வியினை முழுமையாக பெறுவோம் சமூகத்தினை கட்டியெழுப்புவோம்.

**யோ.அகல்யா**
**கல்வியில் சிறப்புக்கற்கை**
**கல்வி பிள்ளை நலத்துறை**
**கிழக்குப்பல்கலைக்கழகம், வந்தாறுமூலை**

# இயற்பியல் மெய்ஞான விஞ்ஞான அஞ்ஞானம்

மீப்பொருள், மீச்சிறுபொருள், புலம் என்பதனை சைவசித்தாந்தம் பதி, பசு, பாசம் என்ற சித்தாந்தத்தில் நோக்குகின்றது. மெஞ்ஞானிகள் இயற்கையைக் காணும் வடிவு சித்தத்தில் உதிக்கின்றது. சாதாரண வாழ்வில் ஒருவருக்கு காலம், வெளியினை உணராத தன்மையினைப் பித்துநிலை சித்தசுவாதீனம் என்பதுபோல் காலம், வெளியினை முற்றாக உணர்ந்தவர்கள் ஞானிகளாகின்றனர்.

அவ்வாறே விஞ்ஞானிகள் இயற்கையைக் காணும் வடிவும் சித்தவெளியிலேயே உள்ளது. இதனை உய்த்தறிதல் என்கின்றோம். சமச்சீர் அச்சுக்களை நோக்குகின்றோம். சைவசித்தாந்தத்தில் இவை அளவையியல் ரீதியாக காட்சிக்கப்படுகின்றது. தொழில்நுட்ப வளர்ச்சி, விஞ்ஞானத்தின் எல்லைக்கு எல்லை இட்டுக்கொண்டு செல்கின்றது.

பிளந்த மனத்தின் தோற்றப்பாடுகள் விஞ்ஞானத்தையும் உருவாக்கும், மெய்ஞானத்தையும் உருவாக்கும். இரண்டினதும் முடிவு அமைதி அல்லது சாந்தம் அடைதலே ஆகும். நேரடியான சிந்தனைகளும், காரண காரிய சிந்தனைகளும் பொது வாழ்விற்கு எம்மை இட்டுச் செல்கின்றது. மையப்படுத்திய சிந்தனை எம்மை தியானநிலைக்கு இட்டுச் செல்லும்.

மனப்பிரமையினால் இன்ப துன்பங்களுக்கு அப்பால் நிலைநிறுத்தும் ஆற்றல் சித்தநிலை ஆகும். இது பொதுவாழ்வுடன் மோதும் நிலையே சித்தசுவாதீனம் ஆகும். சித்தநிலையில் இறைசிந்தனையுடன் மட்டும் வாழ்தல் ஆன்மீக அனுபவமாகும். மனப்பிரமையின் காரணகாரிய வடிவங்களாக கணித வடிவங்களும், இறைவடிவங்களும் அமைகின்றன. சூழல்சார்ந்த இவற்றின் விரிவுகளே இயற்பியல் ஆகும். இயற்பியலும் இறையியலும் ஆழ்ந்த சிந்தனையில் ஒன்றிக்கின்றன. இயற்பியல் இதனைக் கோட்பாடுகள் என வரையறுக்கின்றது. இறையியல் ஆன்மீகநிலை தியானநிலை, முத்திநிலை என உணர்த்துகின்றது. வெளியும் காலமும் மனித மனத்தின் உருவாக்கங்களே. இதனைச் சைவசித்தாந்தத்தில் ஆழமாகக் காணலாம். சிவநடனம், ஆறுமுக சுவாமிகளின் திருக்கோலம் இவற்றின் ஆன்மீக உள்ளுணர்வாக வெளிப்பட்டவையே. இதே கருத்துக்கள் பௌத்தசமயத்திலும் சீனர்களின் சமயத்திலும் உள்ளது. பகவத்கீதையில் கிருஸ்ணபகவானின் பிரபஞ்ச சார்புத் தன்மைக்கான எளிய வடிவமே சக்கரம் ஆகும்.

வெளி எனப்படுவது ஒரு வகையான தனிப்படுத்திக் குறிப்பிட்டு பார்க்கும் உளப்பாங்கு அன்றி வேறல்ல என்பதையும் தனக்கெனத் தனிநிலையைக் கொண்டதல்ல. காலமும் ஒரு வகை தனிப்படுத்திப் பார்க்கும் உளப்பாங்கே ஆகும். இவை ஒன்றின் சார்பாக இன்னொன்றை நோக்குவதாக அமைகின்றது. இதனையே விஞ்ஞானத்தின் சார்புக் கோட்பாடுகள் விளக்குகின்றது. நவீன சார்பியல் கோட்பாடுகள் ஆழ்மனதில் தோன்றும் இத்தகைய இயற்பியல் சிந்தனைகளுக்கே வடிவம் கொடுக்கின்



றது.

வெளி, காலம் தொடர்பான அளவைகள் புறச்சூழ்நிலையை விபரிப்பதற்கு ஒரு பார்வையாளன் பயன்படுத்துகின்ற மொழியின் கூறுகளே ஆகும் என்பதைச் சார்பியல் கொள்கைகள் வலியுறுத்துகின்றது.

இதனையே சைவசித்தாந்தம் சார்ந்ததன் வண்ணமாக இருப்பான் இறைவன் என்கின்றது. பதி, பசு, பாசம் பற்றிய முப்பொருள் உண்மை இதனைக் கூறுகின்றது.

சார்பியல் கொள்கை நிறைவு செய்யப்படுகிறதா என்பதை. அதாவது ஒரு கொள்கையின் சமன்பாடுகள், அளவை, அமைப்புக்கள் அனைத்திலும் ஒரே மாதிரியாகத் தோன்றுகின்றதா என்பதனை பரிசோதித்து அறிய வெளி, காலம் இவற்றின் அளவைகள் ஓர் அளவையிலிருந்து மற்றொன்றிற்கு மாற்றி அமைக்கக்கூடியதாக அமைய வேண்டும். இதனை மரபுவழி இயற்பியலான சைவசித்தாந்தத்தில் ஆழமாகக் காணலாம். முக்காலமும் உணர்ந்த தவஞானிகள் என்போர் இத்தகையவர்கள். இவர்களின் ஆழ்மனதில் பல்வேறு புலங்களை அல்லது அதிர்வுகளை உணரும் தன்மை உள்ளது. இவர்கள் சாதாரண புலன்களைப் பொருட்படுத்தாது ஆழ்தியானத்தில் இருப்பர்.

நவீன சார்பியல் கோட்பாடுகளின்படி ஒளி அலைகளைவிட வேகமான துணிக்கைகளை (Nano quantum waves) மீசிறிய குவாண்டம் அலைகள் மூலம் அவற்றின் துமிநிலைகள் மூலம் அண்டத்தில் நிகழ்ந்த கடந்தகால நிகழ்வாக தற்கணத்தில் காட்சிப்படுத்த முடியும். அதாவது முன்னே நிகழ்ந்தவற்றை தற்போது காணலாம். ஒளியைவிட வேகமான துணிக்கையை கையகப்படுத்தின் கடந்த காலத்தைக் காட்சிப்படுத்த முடியும். இவற்றிற்கு உரிய தொழில்நுட்பவிருத்தி எமக்கு வெகு அருகில் இல்லை. ஆனால் மெஞ்ஞானத்தில் ஆன்மீகநிலையில், முத்திநிலையில் இது கைவரும். இதனை உணரும் ஞானிகள் அரிது. அவ்வாறு உணரினும் அதனை சாதாரண மக்களுக்கு உணர்த்த மாட்டார்கள். மாறாகச் சாதாரண மக்களைப் பக்குவப்படுத்தவே முனைவர். சோடியம், பொட்டாசியம் அயன்கள் பூவுலகில் எவ்வாறு உயிர்களின் இயக்கத்தில் பங்கு கொள்கிறதோ அவ்வாறு புராண உலகிற்கு நுண்துமிகள் அடிப்படையாக அமையும்.

காலம், வெளி, இவற்றிற்கு இடையிலுள்ள பதார்த்தமான மீச்சிறுபொருள் அதன் இயக்கத் தன்மையும், உயிர்த்தன்மையும், அவற்றிற்கான சக்தியை வழங்கும் அல்லது மீப்பெரும்பொருளின் தன்மை, இவற்றிற்கு இடையிலான புலன்கள் என்பவற்றை இயற்பியலில் பௌதிக விஞ்ஞானிகள் ஆராய்கின்றனர். காலம், வெளி, இதன் வடிவம் கணனிக்கோப்புக்கள் அடங்குவதுபோல் ஒரு தளத்தில் ஒரு புள்ளியில் அடங்கலாம். காலம், வெளி இனை வெல்ல உருள்தொழில்நுட்பம் துணை செய்யும். (Wrap up technology).

இதன் ஆழ்ந்த மனிதச் சிந்தனையாகவே சைவசித்தாந்தத்தின் முப்பொருள் உண்மை விளங்குகின்றது. மீபெரும்பொருளை பதியாகவும், மீச்சிறுபொருளை பசுவாகவும் இவற்றிற்கு இடையிலுள்ள புலன்களைப் பாசமாகவும் சைவசித்தாந்திகள் தமது மெய்யுணர்வை வெளிப்படுத்தி உள்ளனர்.

கணித வடிவமைப்போடு நல்ல பரீட்சயமடையும் பௌதீக விஞ்ஞானிகள், காலம், வெளி தொடர்பான பரிமாணங்களை அளவிடக் கருத்தாக்கங்கள் செய்யும்போது சார்பியல்ரீதியான புலனுணர்வையே பெறுகின்றனர். ஆனால் புலனுணர்வாக, அனுபவமாக முன்வைக்க முடியவில்லை. ஆனால் சைவசித்தாந்தத்தில் இவை மிகவும் எளிமையாக அமைக்கப்பட்டு உள்ளது.

சங்கத்தமிழ் இலக்கியங்களில் கூட சார்பியில் கருத்துக்கள் மிகவும் நயமாகப் பொதிந்து உள்ளது. வெண்டிரை முந்நீர் வளை இய உலகத்து என்று பதிற்றுப்பத்தின் நான்காவது பத்தில் உலகம் கடலால் சூழப்பட்டு நிலைத்திருப்பது அதன்கண் வாழ்வார் இசைநடுகற் பொருட்டே என்கின்றது. இங்கு வெண்டிரை என்பது கடல் அலைகளின் காலம் சார்ந்த தன்மையை இலக்கியநயமாக உணர்த்துகின்றது. வளை இய உலகத்து என்பது வெளிசார்ந்த தன்மையை இலக்கியமாக உணர்த்துகின்றது. இசை என்பது ஆயகலைகள் அறுபத்துநான்கின் சார்புத் தன்மையை எமக்கு உணர்த்துகின்றது.

வாழ்வின் சக்கரத்தை சார்பியலாக இலக்கியத்தில் முரசொலியுடன் ஒன்றிப்பதைச் சங்கத் தமிழ் இலக்கியத்தில் ஆழமாகக் காணலாம். நிலனதிர் பிரங்கலவாகி வலனேர்பு முழங்கும் என மண்முரசு, மணமுரசு, போர்முரசு, நீத்தார்முரசு என்று வாழ்வின் இயற்பியல் வடிவங்கள் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

சங்கத்தமிழ் இலக்கியங்களிலும் மரபுவழிச் சார்புக் கோட்பாடுகள் பொதிந்து காணப்படுகின்றது. இவை காலம், வெளி, நிகழ்வு என்பவற்றை மொழியால் உணர்த்தி நிற்கின்றன.

சங்கத்தமிழ் இலக்கியங்களில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் பற்றிய படைப்புக்களுக்கு அப்பால் இயற்பியலின் சார்புக் கோட்பாட்டிற்கான மரபுவழிப் படைப்புக்கள் ஆழமாகப் பொதிந்து உள்ளன.

**டாக்டர் சி.யமுனாநந்தா**

# ஆரஞ்சின் அற்புதம்



குளிர் காலத்தில் அவசியம் ஆரஞ்சு பழம் சாப்பிட வேண்டும். ஏனெனில் குளிர் காலத்தில் நோய் எதிர்ப்பு சக்தி குறையும். சரும ஆரோக்கியமும் பாதிப்புக்குள்ளாகும். அவற்றை சீராக பராமரிக்க ஆரஞ்சு பழம் உதவும்.

குளிர்காலத்தில் செரிமான செயல்பாடுகளும் மந்தமாக இருக்கும். அதனை துரிதப்படுத்துவதிலும் ஆரஞ்சு பழத்தின் பங்களிப்பு இருக்கிறது. உடல் எடையை குறைக்க விரும்புபவர்களும் குளிர்காலத்தில் தவறாமல் ஆரஞ்சு பழம் சாப்பிட வேண்டும். அதில் இருக்கும் நார்ச்சத்து பசியை கட்டுப்படுத்தும். கலோரியும் செலவாகும். ஆரஞ்சு பழத்தை ஜூஸாக பருக விரும்புபவர்கள் தோலையும் சேர்த்து ஜூஸாக்க வேண்டும். அதில்தான் அதிக நார்ச்சத்து இருக்கிறது. குளிர் காலத்தில் சளி பிரச்சினை அதிகமாக இருக்கும். ஆரஞ்சு பழம் சளி தொல்லையில் இருந்து தற்காத்து கொள்ளவும் உதவும்.

ஆரஞ்சு பழத்தில் இருக்கும் வைட்டமின் சி சளிக்கு நிவாரணம் தரும் என்பது ஆய்வில் உறுதி செய்யப்பட்டுள்ளது. அமெரிக்க இதய நோய்த்துறை அமைப்பு ஒன்று நடத்திய ஆய்வின் படி, பக்கவாத பாதிப்புக்கு ஆளாகாமல் தற்காத்து கொள்ளவும் ஆரஞ்சு பழம் சாப்பிட வேண்டியது அவசியமாகிறது. அதில் இருக்கும் பிளாவனாய்டுகள் இதய நோய்கள் வராமலும் காக்க உதவுகிறது.

ரத்த நாளங்களின் செயல்பாடுகளை மேம்படுத்தவும் துணைபுரிகிறது. சிட்ரேட் குறைபாடு இருப்பதுதான் சிறுநீரக கல் பிரச்சினைக்கு காரணம். ஆரஞ்சு பழத்தில் இயற்கையாகவே சிட்ரேட் அமிலம் நிறைந்திருக்கிறது.

ஆரஞ்சு பழத்தை ஜூஸாக பருகுவதன் மூலம் சிறுநீர கல் படிவதை கட்டுப்படுத்தலாம். சிறுநீரக கல் பிரச்சினையால் அவதிப்படுபவர்களும் டாக்டர்களின் ஆலோசனையின் பேரில் ஆரஞ்சு ஜூஸ் பருகி வரலாம்.

# சோர்வை போக்கும் எளிய வழிமுறைகள்

பல நேரங்களில் காரணமின்றி தூங்கி எழுந்தவுடன் நாம் சற்று சோர்வாக உணர்வோம். ஒரு கப் காபி கிடைத்தால் சுறுசுறுப்பாக இருப்போமே என்று தோன்றும். ஆனால் நம்மை சுறுசுறுப்பாக்க காபிதான் அவசியம் என்பதல்ல. நம்மை சுறுசுறுப்பாக்கிக் கொள்ள பல எளிய முறைகள் உள்ளன.

★ சிறிது நேரம் சூரிய ஒளி உடலில் படும்படி நில்லுங்கள். இது உங்ள் வைட்டமின் டி சத்தினை கூட்டும். மனநிலையினை உற்சாக மாக்கும். உடலையும், மனதினையும் சுறுசுறுப்பாக ஆக்கிவிடும். அது மட்டுமல்ல இவ்வாறு செய்வது இரவு தரமான தூக்கத்தினை அளிக்குமாம். காலை இளம் சூரிய ஒளிக்கதிர் சில நிமிடங்கள் நம் மீது படுவது நாள் முழுவதும் நம்மை சுறுசுறுப்பாக வைக்கும்.



★ அறையின் சீதோஷ்ண நிலையில் இருக்கும் நீரில் குளியுங்கள். இது ஒரு மின் அதிர்வுகளை மூளைக்குக் கொடுக்கும். முகத்தினை குளிர்ந்த நீரினால் கழுவுவதும் சிறந்த ரத்த ஓட்டத்தினை ஊக்குவிக்கும். உடலில் சுறுசுறுப்பு ஏற்படும்.

★ சிரிப்பு போன்ற சிறந்த மருந்து கிடையாது. சிரிப்பு உங்கள் உடலில் ஆக்ஸிசன் அளவினைக் கூட்டும். இருதயம், நுரையீரல் நன்கு இயங்கும். ஸ்ட்ரெஸ் நீங்கும். காப்பியினை விட மிகச்சிறந்தது. நல்ல நகைச்சுவை உணர்வு உள்ளவர்களோடு இருங்கள்.

★ சோர்வுக்கு ஒரு காரணம் உடலில் நீர் சத்து குறைதல் ஆகும். அதுவும் இரவு தூக்கத்தில் தொண்டை வறண்டு இருக்கும். எனவே பல் துலக்கிய பின் ஒரு கிளாஸ் நீர் பருகுங்கள்.

★ சிறிது நேரம் நடங்கள். துரித நடை இல்லாவிடினும் இயற்கையான முறையில் திறந்த வெளியில் சிறிது நேரம் நடங்கள். இது ரத்த ஓட்டத்தினை சீராக்கும்.

★ தியானம் தினம் 20 நிமிடங்கள் செய்யுங்கள். இது உங்கள் சக்தி அளவினைக் கூட்டும்.

ஆக இயற்கை வழியில் சக்தியினைக் கூட்டுவது மிக எளிதானதே. செயல்படுத்துவோம்.

# மகத்துவம் மிக்க வாழை இலைக்குளியல்

இன்றைய சூழ்நிலையில் வேகமாக ஓடிக்கொண்டிருக்கும் மக்கள் மத்தியில் நாகரிகம் என்ற பேரில் இயற்கைக்கு மாறாக ஒருபுறம் பல்வேறு செயல்கள் நடந்து கொண்டு இருக்கின்றன. இருந்தாலும் மறுபுறம் இயற்கை சார்ந்த விவசாயம், பாரம்பரிய உணவு முறைகள், பாரம்பரிய வைத்திய முறைகள் என நமது முன்னோர்கள் சொல்லி தந்த பல்வேறு பழக்க, வழக்கங்கள் இன்னும் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. அந்த வகையில் ஒன்றுதான் வாழை இலை குளியல். அது என்ன வாழை குளியல் என்கிறீர்களா? நமது சித்தர்களின் வழிகாட்டுதலின் பேரில் பல ஆயிரம் ஆண்டுகளாக தொடர்ந்து நடந்து வந்த இந்த வாழை இலை குளியல் தற்போது மக்கள் மத்தியில் வேகமாக பரவி வருகிறது.

வாழை மரம், மக்களை வாழ வைக்கும் மரம் என்று கூறுவது உண்டு. வாழை மரத்தில் உள்ள அத்தனை பொருட்களுமே மனிதர்களுக்கு மிகுந்த பயன் அளித்து வருகிறது.



வாழை கிழங்கு செயலிழந்த சிறுநீரகத்தை செயல்பட வைக்கும். சிறுநீரக கற்களை எளிதில் கரைக்கும். சிறுநீர் தாரையில் ஏற்படும் எரிச்சல், அரிப்பு, நீர்குத்தல், விட்டு விட்டு வரும் சிறுநீர், சிறுநீர் அடைப்பு, சிறுநீர் தாரையில் ஏற்படும் சதை அடைப்பு, சிறுநீரக பிரச்சினைகளால் ஏற்படும் இரண்டு கால் வீக்கம் போன்ற பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கிறது.

வாழை தண்டு, வாழைப்பூவில் செய்யப்படும் பல்வேறு பாரம்பரிய உணவுகள் நம்மோடு இணைந்து வருகிறது. வாழை இலையில் சாப்பிடுவது என்பது ஒரு தனி சுவையாக இருக்கும். வாழை இலையில் தொடர்ந்து உணவு சாப்பிடுவர்களுக்கு முகம் பிரகாசமாக இருக்கும் என்பது பல பேருக்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லை. மேலும் வாழை சருகுகள், வாழை இலை நார் ஆகியவை பூ கட்ட உதவுகிறது.

சரி...இனிமேல் வாழை இலைக் குளியலின் மருத்துவத்தையும், மகத்துவத்தையும் பார்ப்போம்.

இயற்கை மருத்துவ ஆர்வலர்கள் இந்த வாழை இலைக் குளியலை தொடர்ந்து செய்து வருகிறார்கள். உடல் முழுவதும் நீளமான 2 வாழை இலைகளை கீழே நீளவாக்கில் போட்டு அதன்மேலே வாழை இலை குளியல் செய்ய உள்ள நபரை படுக்க வைக்க வேண்டும். பின்னர் அவர் உடல் மேல் மேலும் மூன்று நீளமான வாழை இலைகளை வைத்து உடல் முழுவதும் மூன்று தொந்தரவு இல்லை என்றால் குறித்த நேரம் வரை வைத்திருக்கலாம். சரியாக வைத்து அவிழ்த்து பார்க்கும்போது உடலில் இருக்கும் கெட்ட நீர்களை அதிக அளவில் வெளியேற்றிவிடும். இதுபோல தொடர்ந்து செய்யும்போது உடலில் உள்ள பல்வேறு வகையான பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கும். இந்த வாழை இலை குளியலை தொடர்ந்து மூன்று நாட்கள் செய்யலாம். மேலும் இந்த வாழை இலை குளியலோடு புற்றுமண் குளியல், மூலிகை தைல குளியல், மூலிகை வெந்நீர் குளியல், மூலிகை பற்று போன்ற பலவகையான சிகிச்சையை சேர்த்தும் செய்யலாம்.

வாழை இலை குளியலின் மூலம் மூட்டுவலி, கழுத்து வலி, தோள்பட்டை வலி, மணிக்கட்டு வலி, தலைவலி, ஒரு பக்க தலைவலி, மூக்கடைப்பு, நுரையீரல் பிரச்சினை, முதுகுவலி, தொடைவலி, தோல் வியாதி, ரத்தக் கொதிப்பு, சர்க்கரைவியாதி, பாத எரிச்சல், தூக்கமின்மை உடலில் ஏற்படும் கெட்ட வாடை, உடல் பருமன் போன்ற பிரச்சினைகள், நோய்களை விரட்டி அடிக்கலாம்.




மேலும், காளஞ்சகபடை(அவசியம் தொடர்ந்து போட வேண்டும்), முழங்காலுக்கு கீழே ஏற்படும் கால் நரம்புவலி, உடல் சோர்வு, சிறுநீரக செயலிழப்பு, சுவாச மண்டலம் நன்கு செயல்பட்டு மூச்சு நன்கு இழுத்துவிட உதவுவது போன்ற நோய்களை தீர்க்கும் அருமருந்தாகவும் வாழை இழை குளியல் அமைகிறது.

உடலுக்கு புத்துணர்ச்சியையும், புதுப்பொலிவையும் தரும். உடலில் உள்ளுறுப்புகளுக்கும், வெளிஉறுப்புகளுக்கும் மகத்துவம் தரும் ஒரு இயற்கை மருத்துவம் இது ஆகும்.

வாழை இலை குளியல் செய்யும் முன்பு கவனிக்க வேண்டியவை:- வாழை இலை குளியலுக்கு முன்பு சிறுநீர் கழித்துவிட வேண்டும். எளிய உணவுகள் சாப்பிட்டிருக்கலாம். எளிமையான கதர் துணி அணிந்திருந்தால் நல்லது. நெற்றி பகுதியில் கைக்குட்டை அளவு ஈரத்துணியை கட்டியிருக்க வேண்டும். தேவையான அளவிற்கு தண்ணீர் குடித்து இருக்க வேண்டும். அவரின் உறவினர்கள் ஒருவர் உடன் இருப்பது நல்லது. வாழை இலை குளியல் முடிந்து இலைகளை அவிழ்த்த பிறகு அந்த இலைகளை கால்நடைகள் சாப்பிடாத வகையில் ஒதுக்குபுறமாக போட்டுவிட வேண்டும். உடலில் உப்புநீர் மேலே படிந்திருக்கும் சூழல் இருப்பதால் சற்று நேரம் கழித்து ஒரு சிறு குளியலை போட்டுக் கொள்ளலாம்.

# இரத்தம் உறையா நோய்

உடல் உள்ளே இருக்கும்போது உறையாமலும், வெளியே வரும்போது உறைதலும் ரத்தத்தின் இயல்பு. உயிர் காக்கும் இந்த நிலை இயற்கை தந்த பரிசு. சிலருக்கு ரத்தம் வெளியே வந்தாலும் உறையாது. இது உயிரை பறிக்கும் பிரச்சினை. அதுவே ஹீமோபீலியா என்ற ரத்தம் உறையாமை நோய் ஆகும்.

உடலுக்குள் ரத்த குழாய்க்குள் ஓடிக்கொண்டிருக்கும் ரத்தம், எப்போதும் உறையக்கூடாது. அது முழு திரவ நிலையில் இருந்தால் மட்டுமே ஆரோக்கியமான ஓட்டத்துடன் இருக்கும். ஆனால் இதே ரத்தம் உடலைவிட்டு வெளியேறும் போது, வெளிக்காற்று பட்டவுடன் உறைய வேண்டும். அப்போதுதான் ரத்தப்போக்கு நிற்கும். இதன் மூலம் ரத்தம் வீணாகாமல் உயிர் காக்கப்படும். அப்படி இல்லாமல், ரத்தம் உறையாமலே இருக்கும் பிரச்சினைதான் ஹீமோபீலியா. பத்தாயிரத்தில் ஒருவருக்கு வரும் இந்த நோய், பரம்பரை சம்பந்தப்பட்டது.

பொதுவாக அடிபட்டு மூன்று நிமிடங்களில் ரத்தம் உறையத் தொடங்கும். ஆனால், இந்த நோய் உள்ளவர்களுக்கு 30 நிமிடங்கள் ஆனாலும் உறையாது. பல் பிடுங்குதல் மற்றும் அறுவை சிகிச்சை போன்ற நேரங்களில் இந்த நோய் உள்ளவர்கள் மருத்துவர்களிடம் முன்கூட்டியே தெரிவித்துவிட வேண்டும். இதனால் ஆபத்தில் இருந்து தப்பிவிடலாம். மேலும் இந்த நோய் உள்ளவர்கள் வலி நிவாரண மருந்துகளை சாப்பிடக்கூடாது. ஏனெனில் வயிற்றுக்குள் ரத்தப் போக்கு ஏற்பட்டு உயிருக்கே ஆபத்தாகிவிடும்.

இந்த நோய் எப்படி ஏற்படுகிறது என்பதை அறிவியல் பூர்வமாக புரிந்து கொள்ள முடியும். பாலினத்தை நிர்ணயிப்பவை குரோமோசோம்கள். இது ஆண்கள் உடலில் xy குரோமோசோம் களாகவும், பெண்கள் உடலில் xx குரோமோசோம்களாகவும் இருக்கும். x குரோமோசோமில் ஏற்படும் குறைபாடே இந்த நோய்க்கு முதன்மை காரணம். ஒரு x கொண்ட ஆண்களுக்கு, இந்த பாதிப்பு ஏற்பட்டால் சமாளிக்க முடியாது. இரண்டு xx கொண்ட பெண்களுக்கு ஒன்றில் குறை ஏற்பட்டால், மற்றொரு x உள்ள மரபு பண்புகளைக் கொண்டு ரத்தம் உறையும் தன்மையை உடல் பெற்றுவிடும்.

# வெண்டைக்காயின் மருத்துவ குணங்கள்

★ வெண்டைக்காய் அதிக வழுவழுப்புடையதாகையால் இது உணவாகும் குழம்பு வகைகளில் பயன்படுத்தப்படும். வெண்டைக்காயின் விதையினின்று பெறப்படும் ஒரு வகை வழவழப்பான கொழுப்பு சத்துவம் புற்றுநோய்க்குக் காரணமான செல்களை அழிக்கும் வல்லமை உடையது.

★ வெண்டை விதைகள் எப்படிப்பட்ட கட்டிகளையும் (Tumour) கரைக்கும் தன்மையது. வெண்டைக்காயின் விதையினின்று பெறப்படும் சத்துவம் நுண் கிருமிகளை அழிக்க வல்லது.

★ வெண்டைக்காய் விதைகள் முற்றிய நிலையில் எண்ணெய் சத்துவம் மிக்கதாக விளங்குகிறது. இதனின்று வடிக்கப்படும் எண்ணெய் சற்று மஞ்சள் நிறம் கலந்த

★ முற்றிய வெண்டைக்காய் விதைகளைச் சேகரித்து உலர்த்தி சற்று கருகும்படி கடாயில் இட்டு வறுத்து எடுத்து நன்கு பொடித்து வைத்துக் கொண்டு காபித் தூளுக்கு பதிலாக இந்த தூளைப் பயன்படுத்தலாம். காஃபின் எனப் பெறும் ஒரு நச்சுப் பொருள் கலவாத ஒரு பானத்துக்கு அல்லது தீநீருக்கு இது உதவும்.

★ வெண்டைக்காயில் உள்ள நார்ச்சத்துவம் நாம் உண்ட உணவினின்று குடல் பகுதி அதிக சர்க்கரை சத்துவத்தை உறிஞ்சாத வண்ணம் தடுத்து நிறுத்துகிறது. இதனால் ரத்தத்தில் சர்க்கரை அளவு மிகாத வண்ணம் நிலைப்படுத்தப்படுகிறது.



# உணவுக்குழாய் புற்றுநோய்...சில உண்மைகள்!

மனிதர்களை அதிகம் பாதிக்கக்கூடிய புற்றுநோய்களில் முதல் ஐந்து இடங்களில் இருக்கிறது உணவுக்குழாய்ப் புற்றுநோய்.

**உப்பால் வரலாம் புற்று**

உணவுக் குழாய் அழற்சிக்கு (ரிஃப்ளக்ஸ்) அடுத்தபடியாக உணவுக்குழாயில் ஏற்படும் மற்றொரு முக்கியமான பிரச்சினை, உணவுக் குழாய்ப் புற்றுநோய். 'ரிஃப்ளக்ஸ்' பிரச்சினையில் வரக்கூடிய பாதிப் பிரச்சினைகள் இதிலும் உள்ளன. இது வம்சாவளியாக வரக்கூடிய பிரச்சினை அல்ல. மிகவும் குறைந்த அளவில்தான் வம்சாவளியாக உணவுக்குழாய்ப் புற்றுநோய் வருகிறது. பிறகு எந்த வகையில் இந்தப் புற்று நோய் ஏற்படுகிறது?

மனிதனின் பழக்கவழக்க மாற்றங்களால் தாம் இந்தப் புற்றுநோய் அதிகம் வருகிறது. இரைப்பையிலும் உணவுக்குழாயிலும் புற்றுநோய் வருவதற்கு முக்கியக் காரணமே, ஒருமுறை பயன்படுத்திய எண்ணெய்யைத் திரும்பத் திரும்பப் பயன்படுத்தித் தயாரிக்கப்படும் உணவு வகைகளை உண்பதுதான்.

இது ஆராய்ச்சியின் மூலம் நிரூபிக்கப்பட்ட உண்மை. அதுமட்டுமல்ல; பழங்களே சாப்பிடாதவர்களுக்கும் உப்பு உணவுகளை அதிகமாகப் பயன்படுத்துபவர்களுக்கும் இந்தப் புற்றுநோய் வருவதற்கான வாய்ப்புகள் அதிகம். ஊறுகாய், கருவாடு, உப்புக்கண்டம் போன்ற உணவுப் பொருட்களை இதற்கு உதாரணமாகச் சொல்லலாம்.

புகைப் பழக்கம், மதுப் பழக்கமும் உணவுக் குழாய்ப் புற்றுநோய்க்கான காரணிகளின் ஒன்று.

இந்த உணவுப் பழக்கம் இல்லாதவர்களுக்கும்கூட உணவுக்குழாய்ப் புற்றுநோய் ஏற்படுவதற்கான சாத்தியங்கள் உண்டு. ஆனால், இந்த உணவு வகைகளைச் சாப்பிடுபவர்களுக்குப் புற்றுநோய் வருவதற்கான சாத்தியங்கள் பல மடங்கு அதிகம். இதுவும் ஆராய்ச்சி மூலம் நிரூபிக்கப் பட்டிருக்கிறது.

**உணவை விழுங்குவதில் சிரமமா?**

'ரிஃப்ளக்ஸ்'இருப்பவர்களுக்கு எப்படி நெஞ்செரிச்சல் இருக்கிறதோ அதுபோலவே உணவுக்குழாய்ப் புற்றுநோய் ஒருவருக்கு வந்திருக்கிறது என்பதை உணர்த்துவது விழுங்குதலில் உள்ள பிரச்சினைதான். புற்று வளர்வதால் உணவுக்குழாய் சுருங்கிவிடுகிறது.

இந்தப் பாதிப்பு ஏற்பட்டவர்களுக்குக் கடின உணவான சப்பாத்தியோ பரோட்டாவையோ சாப்பிடும்போது அது இரைப்பைக்குச் செல்லாது. தண்ணீர் குடித்தால்தான் உள்ளே செல்லும். இல்லையென்றால் அப்படியே உணவுக் குழாயிலேயே தங்கியிருக்கும். இதுபோன்ற ஒரு நிலை ஏற்படும்போது என்ன செய்ய வேண்டும்?

உணவை விழுங்குவதில் சிரமம் ஏற்பட்டால் உடனே மருத்துவரை அணுகிவிட வேண்டும். எண்டாஸ்கோப்பி மூலம் நோயைக் கண்டுபிடித்துவிடலாம். ஆனால், என்னுடைய அனுபவத்தில் சப்பாத்தி, பரோட்டாவைச் சாப்பிடக் கஷ்டமாக இருந்தால், எளிய உணவான இட்லி, தோசைக்கு மாறிவிடுபவர்கள் ஏராளம். இட்லி, தோசையும் சாப்பிட முடியாமல் போனால், கஞ்சிக்கு மாறிவிடுவார்கள். கஞ்சியும் குடிக்க முடியாமல் போனால், நீராகாரத்துக்கு மாறிவிடுவார்கள். மருத்துவரையே பார்க்காமல் தவிர்த்துவிடுவார்கள். இந்த அறிகுறிகளைத் தொடர்ந்து புறக்கணிக்கும்போது இடைப்பட்ட காலத்தில் புற்று நன்றாக வளர்ந்துவிடும்.

அதனால்தான் நம் ஊரில் ஆரம்ப காலத்திலேயே உணவுக்குழாய்ப் புற்றுநோயைக் கண்டுபிடிப்பதில் சிரமம் ஏற்படுகிறது. உணவு விழுங்கக் கஷ்டப்படத் தொடங்கிய பிறகு நான்கு மாதங்கள் கழித்து மருத்துவமனைக்கு வரும் நோயாளிகளே அதிகம். இதையும் ஆய்வின் மூலம் உறுதிப்படுத்தியிருக்கிறோம். இது இரைப்பை, உணவுக் குழாய் இரண்டுக்குமே பொருந்தக்கூடியது தான்.

**அறிகுறிகள்**

அலட்சியத்தால் மருத்துவரைச் சந்திக்காமல் தள்ளிப்போடுவதால் புற்று இதர உறுப்புகளுக்கும் பரவிவிடும். புற்றை ஆரம்ப காலத்தில் கண்டுபிடிக்க முடியாமல் போவதால், சிகிச்சை முறையும் சிக்கலாகிவிடுகிறது. எப்போதும் மருத்துவத்தில் புற்றுநோய் வந்தவர்களுக்குக் குறைந்தபட்சம் 5 ஆண்டுகள் வாழ்வதற்கான வழிமுறைகளை மருத்துவர்கள் ஆராய்வது வழக்கம். ஆனால், பரவிய நிலையில் புற்றுநோயைக் கண்டுபிடிக்கும்போது அதற்கான வாய்ப்பு முற்றிலும் குறைந்துவிடுகிறது. ஆரம்ப கட்டத்தில் இருந்தால், எளிய சிகிச்சையின் மூலம் உணவுக்குழாய்ப் புற்றுநோயைக் குணப்படுத்த வழி இருக்கிறது.

உணவுக்குழாய்ப் புற்றுநோய்க்கு விழுங்குவதில் ஏற்படும் தொந்தரவு மட்டுமே அறிகுறி அல்ல. புளித்த ஏப்பம், பசிக்குறைவு, நெஞ்சில் அடைப்பது போன்ற உணர்வு, அஜீரணம், உடல் எடை குறைதல் போன்ற அறிகுறிகளும் இருக்கும்.

இந்த அறிகுறிகள் உணவுக்குழாய், இரைப்பைப் புண்ணிலும் காணப்படும் பொதுவான அறிகுறிகள்தாம். எனவே, உடனடியாக மருத்துவரை அணுகும்போதுதான் உணவுக்குழாயில் புற்றுநோய் உள்ளதா அல்லது வேறு பிரச்சினை இருக்கிறதா என்பதை உறுதிப்படுத்த முடியும்.

பொரித்த உணவு வகைகள், உப்பு அதிகம் கலந்த உணவுப் பொருட்கள், துரித உணவு வகைகள், மது, புகை ஆகியவற்றைக் கைவிட்டால், உணவுக்குழாயில் புற்றுநோய் வராமல் தடுத்துக்கொள்ளலாம்.

# வருகிறது புதிய ஐபேட் மினி

அப்பிள் நிறுவனம் அடுத்த ஆண்டு அறிமுகம் செய்ய புதிய ஐபேட் மினி மற்றும் 9.7 இன்ச் ஐபேட் சாதனங்களை உருவாக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

அப்பிள் நிறுவனம் ஐந்தாம் தலைமுறை ஐபேட் மினி சாதனத்தை அடுத்த ஆண்டின் முதல் அரையாண்டிற்குள் அறிமுகம் செய்ய திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இதைத் தொடர்ந்து இரண்டு என்ட்ரி-லெவல் ஐபேட் மாடல்கள் இருவித வெர்ஷன்களில் அறிமுகமாகலாம் என தெரிகிறது.

ஐபேட்களின் விற்பனையை அதிகப்படுத்தும் நோக்கில், அப்பிள் நிறுவனம் குறைந்த விலையில் ஐபேட் மினி 5 சாதனத்தை அடுத்த ஆண்டின் முதல் அரையாண்டிற்குள் அறிமுகம் செய்யலாம் என கூறப்படுகிறது.

அப்பிள் நிறுவனம் செப்டம்பர் 2015 ஆம் ஆண்டில் இருந்து இதுவரை தனது சிறிய ஐபேட் மாடலை அறிமுகம் செய்யவில்லை. அப்பிள் வல்லுநரான மிங் சி கியோ அக்டோபர் மாதத்தில் வெளியிட்டிருந்த தகவல்களில் மேம்படுத்தப்பட்ட அம்சங்களுடன் புதிய ஐபேட் மினி, குறைந்த விலை டிஸ்ப்ளே பேனலுடன் அடுத்த ஆண்டு அறிமுகம் செய்யப்படலாம் என தெரிவித்திருந்தார்.

ஆறாம் தலைமுறை 9.7 இன்ச் ஐபேட் மாடலுக்கு மாற்றாக அப்பிள் புதிய என்ட்ரி லெவல் ஐபேட் மாடலை அறிமுகம் செய்யலாம். இந்த ஐபேட் மாடலில் 10-இன்ச் டிஸ்ப்ளே மெல்லிய ஃபிரேம் கொண்டிருக்கும் என கூறப்படுகிறது. அப்பிள் நிறுவனம் ஐபேட் சாதனங்களின் விற்பனையை ஊக்குவிக்கும் வகையில், இரு விலை குறைந்த ஐபேட் மாடல்களை அடுத்த ஆண்டு வெளியிடலாம்.

அந்த வகையில் தற்சமயம் கிடைத்திருக்கும் தகவல்களின்படி ஆப்பிள் நிறுவனம் இரண்டு ஐபேட்களின் உற்பத்தி கட்டணத்தை குறைக்கும் நோக்கில் அந்நிறுவனம் கொரியாவில் தயாரிக்கப்படும் எல்.இ.டி. டிஸ்ப்ளேக்களை புதிய சாதனங்களில் வழங்கலாம் என கூறப்படுகிறது.

## சிறிய பிரிண்டர்

மிக எளிதாக அச்சு எடுக்கும் கருவி. கணினி, ஸ்மார்ட்போன், ஸ்மார்ட்வாட்ச் போன்றவற்றிலிருந்தும் பிரிண்ட் கொடுக்கலாம். பேப்பர் தனியாக வைக்க வேண்டியதில்லை. பேப்பர் சுருளிலிருந்து பிரிண்டின் அளவுக்கு ஏற்ப அதுவாகவே கட் செய்துவிடும்.

## கண்ணாடி பேனல்

சோலார் பேனல் தயாரிப்பில் புதிய தொழில்நுட்பமாக கண்ணாடி வகையிலான பேனல் இது. இதன் மூலம் கம்ப்யூட்டர் மற்றும் ஸ்மார்ட் போன்களின் தொடுதிரையேயே பேனலாக வைத்து சார்ஜர் ஏற்றிக் கொள்ள முடியும்.

## யோசிக்கப் புதிய வழி

தினந்தோறும் நாம் பல விஷயங்களில் முடிவெடுக்க வேண்டியிருக்கிறது. இவற்றில் பல முக்கியமில்லாதவை. சில மிகவும் முக்கியமானவை. ஒரு சில முடிவுகள் வாழ்க்கை மீது தாக்கம் செலுத்தக்கூடியவை. எனவே தவறான முடிவாக அமைந்துவிடக் கூடாது என் நாம் அதிகம் யோசிப்பதுண்டு. அதிகம் குழம்பித் தவிப்பது உண்டு. ஆனால், எந்தப் பிரச்சினையிலும், குழப்பமும் தயக்கமும் இல்லாமல் தெளிவாக முடிவெடுப்பதற்கான வழியாக க்ரிட்டிக்கல் திங்கிங்' எனப்படும் பகுப்பாய்வுச் சிந்தனைமுறை பற்றி டெட்' அமைப்பின் வீடியோ விளக்குகிறது.

வீடியோவை காண: https://youtu.be/dItUGF8GdTw


# புகைப்படத் தேடலில் புதுமைகள்!

இணையத்தில் எண்ணற்ற முறை நீங்கள் புகைப்படங்களை அல்லது உருவப்படங்களை தேடியிருக்கலாம். பெரும்பாலான முறை நீங்கள் எதிர்பார்த்த படங்கள் கிடைத்திருக்கலாம். படங்களை தேட கூகுள் உள்ளிட்ட பொது தேடியந்திரங்களையே பயன்படுத்தலாம். தேடல் முடிவுகளை பட்டியலிடும்போது அவற்றின் வகைகளில் படங்களும் தனியே இடம்பெற்றிருக்கும்.

ஆனால், சில நேரங்களில் படங்களை தேட இன்னும் சிறந்த வழி இருக்கலாம் என்ற எண்ணம் உங்களுக்குத் தோன்றியிருக்கலாம். அதாவது, வழக்கமான முறையில் முன்வைக்கப்படும் படங்களின் பட்டியல் ஏமாற்றம் அளிக்கும்போது இவ்வாறு தோன்றலாம்.

தலைகீழ் தேடல்

இதுபோன்ற நேரங்களில் நீங்கள் நாட வேண்டியது தலைகீழ் பட தேடியந்திரங்களை தான்! புகைப்படங்களை புகைப்படங்களை கொண்டே தேடித்தரும் தேடியந்திரங்களே இவ்வாறு குறிப்பிடப்படுகின்றன. ஆங்கிலத்தில் இது ரிவர்ஸ் இமேஜ் சர்ச் என குறிப்பிடப்படுகிறது. இந்த தேடியந்திரங்களில் தேட குறிச்சொற்களை டைப் செய்ய வேண்டியதில்லை. அதற்கு பதிலாக ஒரு படத்தை உள்ளீடு செய்து, அந்தப் படத்தின் வேறு வடிவங்களை அல்லது அதேபோன்ற படங்களை தேடிக்கொள்ளலாம். இந்த வசதி அளிக்க கூடிய சாத்தியங்களும் பலன்களும் வியக்க வைப்பவை!




படங்களை தேட இப்படி ஒரு வசதி இருப்பது பெரும்பாலானவர்கள் அறியாமலே இருக்கின்றனர். கூகுள் தேடியந்திரத்திலேயே தலைகீழ் பட தேடல் வசதி இருந்தும் கூட, இதை கணிசமானவர்கள் அறியாமல் இருப்பது ஆச்சரியம்தான். இதற்கு முக்கிய காரணம், தலைகீழ் பட தேடல் என்பது கொஞ்சம் பிரத்யேகமானது. அதற்கான தேவையை நீங்கள் உணர வேண்டும். உதாரணமாக, சச்சின் டெண்டுல்கர் படம் தேவை எனில், தேடியந்திரத்தில் சச்சின் என டைப் செய்துவிட்டு, உருவங்கள் வகையில் கிளிக் செய்தால் போதும் சச்சின் தொடர்பாக ஆயிரக்கணக்கான படங்கள் வந்து நிற்கும். அவற்றில் சச்சினுக்கு தொடர்பில்லாத படங்களும் இருக்கலாம் என்றாலும், பொருத்தமானதை தேர்வு செய்து கொள்ளலாம். படங்களின் அளவு மற்றும் துல்லியம் போன்ற அம்சங்களை குறிப்பிட்டு தேடலை தீவிரமாக்கி கொள்ளும் வாய்ப்புகளும் இருக்கின்றன.

இது வழக்கமான தேடல். இப்போது, சச்சினின் குறிப்பிட்ட ஒரு தோற்றம் உங்களுக்கு தேவை என வைத்துக்கொள்வோம். அதே படத்தை தேடுவது எப்படி? அந்த படம் கூட உங்களிடம் இருக்கிறது, ஆனால் அதன் மூல வடிவம் அல்லது அந்த படம் முதலில் வெளியான இடம் எது என்பதை அறிய வேண்டிய தேவை இருக்கிறது எனும் சூழலில், இணையத்தில் தேடிப்பாருங்கள், எத்தனை ஏமாற்றம் ஏற்படுகிறது என புரியும். அந்தப் படத்தை விவரிக்க கூடிய குறிச்சொற்களை மாறி மாறி டைப் செய்து தேடினாலும், பலன் இருக்காது. விதவிதமான சச்சின் படங்கள் வந்து நிற்குமே தவிர நீங்கள் வைத்துள்ள அந்த படம் வந்து நிற்காமல் போகலாம்.

### டிஜிட்டல் குறிப்புகள்

குறிச்சொற்கள் சார்ந்த தேடலின் போதாமை இது. பொதுவாக தேடலின்போது டைப் செய்யப்படும் குறிச்சொற்கள் கொண்ட இணைய பக்கங்களை எல்லாம் பட்டியலிட்டு, அவற்றில் பொருத்தமான பக்கங்களை வரிசைப்படுத்தி தேடியந்திரங்கள் முன்வைக்கின்றன. புகைப்படங்கள் அல்லது உருவங்களை தேடும் போதும் அவை தொடர்பான விவரங்களை கொண்டே தேடியந்திரங்கள் செயல்படுகின்றன. படத்தின் தலைப்பு, அவற்றுக்கான பட குறிப்பு, தொடர்புடைய சொற்கள் போன்றவற்றை எல்லாம் கொண்டே படங்களை தேடி கொண்டு வந்து கொட்டுகின்றன. இவை மெட்டா டேட்டா என சொல்லப்படுகின்றன. பல நேரங்களில் இந்த மெட்டா டேட்டா போதுமானதாக இல்லாமல் போகலாம். உதாரணத்திற்கு தலைப்பிடப்படாத படம் அல்லது படக்குறிப்பு இல்லாத படம் தேடியந்திர சிலந்தியின் பார்வைக்கு படாமலே போய்விடலாம். எனவே தான் படங்களையும், உருவங்களையும் தேட குறிச்சொற்கள் எப்போதும் போதுமானதல்ல.

ஆனால் படங்களை வேறு எப்படி தேடுவது? இந்த கேள்விக்கான பதில் தான் தலைகீழ் பட தேடல்! அதாவது, குறிச்சொற்களை கொண்டு தேடாமல், படங்களை அவற்றின் டிஜிட்டல் கைரேகைகளை கொண்டே தேடுவது.

கூகுளில் இந்த தேடல் வசதி இருக்கிறது என்றாலும் கவனிக்க வேண்டிய விஷயம் என்னவெனில், தலைகீழ் பட தேடல் வசதியை முதலில் அறிமுகம் செய்தது கூகுள் அல்ல: இந்த பிரிவில் சிறந்தது என்று சொல்லக்கூடியதும் அல்ல - இரண்டுக்கும் சொந்தம் கொண்டாடக்கூடியது 'டைனிஐ' தேடியந்திரம். இதுவே 2008-ம் ஆண்டில் தலைகீழ் தேடல் வசதியை முதலில் அறிமுகம் செய்தது. உருவப்படங்களை இப்படி தான் தேட வேண்டும் என 'டைனிஐ' உணர்த்தி இணைய உலகை வியக்க வைத்து, இந்த வகை தேடலை ஓரளவு பிரபலமாக்கிய பிறகே கூகுள் 2011-ல் இந்த வசதியை அறிமுகம் செய்தது.

### டைனிஐ மாயம்

இணையத்தில் குறிச்சொல் அல்லது துணை தகவல்களை சாராமல், உருவங்களை அடையாளம் காணும் நுட்பம் கொண்டு செயல்படும் முதல் உருவங்களை உணரும் தேடியந்திரம் என்று வர்ணித்துக்கொள்ளும், 'டைனிஐ' கனடா நாட்டில் இருந்து அறிமுகமானது. இதில் குறிப்பிட்ட ஒரு படத்தை பதிவேற்றி அல்லது அந்த படத்தின் இணைய முகவரியை குறிப்பிட்டு அதே படத்தின் பிற தோற்றங்களை தேடலாம். இந்த வசதி மூலம், தேடப்படும் படம் இணையத்தில் வேறு எங்கெல்லாம் வெளியாகி இருக்கிறது என்பதில் துவங்கி, அது முதலில் வெளியான இடம், அதன் மாறுபட்ட தோற்றங்கள், துல்லியமான வடிவம் ஆகியவற்றுக்கான படங்களை பெறலாம்.

உருவங்களை உணரும் நுட்பத்தை கொண்டு செயல்படுகிறது. ஒரு படத்துக்கான டிஜிட்டல் கையெழுத்தை உருவாக்கி கொண்டு அந்த கையெழுத்தின் அசம்ங்களை கொண்ட படங்களை எல்லாம் பட்டியலிடுகிறது. ஆய்வு நோக்கில் அணுகும்போது இந்த வசதி அற்புதமாக இருக்கும். அதேபோல புகைப்பட கலைஞர்கள் தங்கள் படங்கள் இணையத்தில் எங்கெல்லாம் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதையும் தெரிந்து கொள்ளலாம். இது காப்புரிமை மீறலை கண்டறிவது சாத்தியம்.

சிறிய அளவில் துவங்கிய டைனிஐ படிப்படியான தன்னை மேம்படுத்திக்கொண்டே வந்திருக்கிறது. ஆரம்பத்தில் அதன் வசம் பெரிய அளவில் ஒப்பீட்டிற்கான படங்களின் அட்டவணை இல்லை. ஆனால், அதைத் தொடர்ந்து அதிகரிக்கச் செய்து, ஒரு கட்டத்தில் 200 கோடி படங்களின் பட்டியலை கொண்டிருப்பதாக பெருமைப்படும் நிலையை எட்டி, தற்போது 1620 கோடிக்கும் அதிகமான படங்களை அட்டவணையில் இருந்து தேடித் தருவதாக சொல்கிறது. வெளியான காலத்தின் அடைப்படையிலும் படங்களின் தேடலை கூர்மையாக்கலாம். சமீபத்தில் வெளியான படம், மிகவும் பழைய படம் என்றெல்லாம் தேடலாம். அளவில் பெரிய படம், அதிக மாறுதலுக்கு உள்ளான படம் என்றும் தேடலாம். இவைத் தவிர, படங்களில் உள்ள வண்ணங்கள் சார்ந்தும் தேட முடியும். குறிப்பிட்ட படம் எங்கே பயன்படுத்தப்படுகிறது எனும் எச்சரிக்கை தகவலை பெறும் வசதியும் இருக்கிறது. பயனர்களிடம் உள்ள பட்டியலில் இருந்தும் படங்களை தேடலாம். தொடர்ந்து புதுப்புது அம்சங்களை அறிமுகம் செய்து வளர்ந்து வரும் தேடியந்திரமாக இருக்கிறது. இதன் அடிப்படை தேடல் இலவசமானது. ஆனால் வர்த்தக் நோக்கில் பயன்படுத்த கட்டணம் உண்டு.

### கூகுள் தேடல்

கூகுள் இந்த பிரிவில் சற்று தாமதமான வரவு என்றாலும், அதன் தலைகீழ் பட தேடல் வசதி விரிவானதாகவே இருக்கிறது. அதன் வசம் உள்ள படங்களின் பட்டியல் டைனிஐயை விட பெரியது. டைனிஐ, குறிப்பிட்ட படத்தின் மூல படம் மற்றும் வேறு வடிவங்களை மட்டுமே தேடித்தருகிறது. பெரும்பாலும் அதேபோன்ற படங்களை தேடித்தருவதில்லை. கூகுள் குறிப்பிட்ட படம் போலவே இருக்கும் படங்களையும் முன்வைக்கிறது. அந்தப் படம் தொடர்பான துணை தகவல்களையும் கூகுளில் அறியலாம்.

கூகுள் இமேஜஸ் வசதியை கிளிக் செய்து அதன் தேடல் கட்டத்தில் உள்ள கேமரா ஐகானை கிளிக் செய்து புகைப்படத்தை பதிவேற்றி தேடலில் ஈடுபடலாம். டைனிஐயுடன் ஒப்பிடும்போது கூகுள் தேடலில் கூடுதல் அம்சங்களும் உண்டு, போதாமைகளும் உண்டு. டைனிஐயில் படங்கள் கொஞ்சம் பழமையானதாக இருக்கலாம். ஆனால் கூகுள் தேடலில் பழைய படம், புதிய படம் என்றெல்லாம் தேட முடியாது.

இரண்டு தேடியந்திரங்களின் வசதியையும் பிரவுசர் நீட்டிப்பாக பயன்படுத்தலாம். மொபைல் போனிலும் பயன்படுத்தலாம். இந்த இரண்டு தேடியந்திரங்கள் தவிர மைக்ரோசாப்ட்டின் பிங் தேடியந்திரமும் தலைகீழ் பட தேடலை வழங்குகிறது. ஆனால் இதற்கான பிங்கின் நுட்பம் அத்தனை சிறப்பானதல்ல என்ற கருத்து இருக்கிறது. ரஷ்ய தேடியந்திரமான யாண்டெக்சும் இந்த வசதியை வழங்குகிறது. செயற்கை நுண்ணறிவு நுட்பத்தில் சிறந்து விளங்குவதால் யாண்டெக்சின் தேடல் நுப்டம் சிறந்ததாக இருப்பதாக கருதப்படுகிறது. வோல்பிராம் ஆல்பாவிலும் இதற்கு நிகரான வசதி இருக்கிறது.

### இன்னும் இருக்கு!

இவைத் தவிர ரெவ்ஐஎம்ஜி, இமேஜ்பிரீப், இமேஜ் ரைடர், பிக்ஸி உள்ளிட்ட தேடியந்திரங்களும் இந்த வசதியை அளிக்கின்றன. இவற்றில் இமேஜ்ரைடரிடம் சொந்த தேடல் நுட்பம் கிடையாது. கூகுள், பிங் மற்றும் யாண்டெக்ஸ் தேடல் முடிவுகளை தொகுத்து தருகிறது. ரெவ்ஐஎம்ஜி தனக்கென சொந்தமான தேடல் நுட்பம் கொண்டிருக்கிறது. உருவங்களை தேடுவது தொடர்பான பல்வேறு அம்சங்களை அளிக்கிறது. இதன் மூலம் படங்களை தேடுவதோடு, குறிப்பிட்ட படம் எடுக்கப்பட்ட இருப்பிடத்தையும் அறியலாம். பிக்ஸி தேடியந்திரத்தை பெரும்பாலும் புகைப்பட பயன்பாட்டு திருட்டை கண்டறிய பயன்படுத்தலாம். இமேஜ்பிரீப் புகைப்படங்களை விற்பது மற்றும் வாங்குவதற்கான மேடையாக இருக்கிறது. கர்மாடிகே புகழ் பெற்ற ரெட்டிட் தளத்தில் உள்ள படங்களை தேடுவதற்கான தேடியந்திரமாக இருக்கிறது. புகைப்படங்களை அவற்றின் டிஜிட்டல் கைரேகை அம்சங்களை மையமாக கொண்டு தேடுவது வளர்ந்து வரும் நுட்பமாக இருக்கிறது. இந்த நுட்பத்தின் அடுத்த கட்டமாக முகம் உணர் தொழில்நுட்பம் அமைகிறது. இந்த திசையில் தீவிர ஆய்வுகளு நடைபெற்று வருகின்றன.

### பயன்கள் பலவிதம்!

நிற்க, இந்த வகை தேடல் வசதி பிரதானமாக புகைப்பட ஆய்வாளர்கள் மற்றும் புகைப்பட கலைஞர்களுக்கு அதிகம் பயன்படக்கூடியது போல தோன்றினாலும் சாமானிய இணையவாசிகளும் இதை பலவிதமாக பயன்படுத்தலாம். முதலில் குறிப்பிட்ட படத்தின் துல்லியமான வடிவை தேடிக்கொள்ளலாம். அதன் மூலத்தை அறிந்து காப்புரிமை பெற்று பயன்படுத்தலாம். அதைவிட முக்கியாக இணையத்தில் சர்ச்சைக்குரி படங்கள் உலாவரும் போது, தலைகீழ் தேடலுக்கு உட்படுத்தி அவற்றின் மூலத்தை அறிந்துகொள்ளலாம். சூறாவளி அல்லது கலவரங்களின்போது திடிரென தலைகாட்டும் படங்கள் உண்மையில் எப்போது எங்கே எடுக்கப்பட்டவை என அறிந்து கொண்டு, புகைப்பட வதந்தி வலையில் சிக்காமல் தப்பிக்கலாம்.

இதுபோலவே டேட்டிங் அல்லது சமூக வலைத்தளங்களில் சமர்பிக்கப்படும் ஒரு நபரின் படம் அவருடையது தானா அல்லது இணையத்தில் திருடப்பட்டு பயன்படுத்தப்படுகிறதா என தெளிவு பெறலாம். காட்சி ரீதியிலான தளங்களில் பார்க்கும் புகைப்படம் தொடர்பான விவரங்களை அறியவும், உணவு படத்தை கொண்டு சமையல் குறிப்புகளை தேடவும் பயன்படுத்தலாம்.

# மதிய உணவு நேர வழிகாட்டி




அலுவலகத்தில் மதிய உணவு நேரத்தை நீங்கள் எப்படிச் செலவிடுகிறீர்கள்? சாப்பிட்டு முடித்த பிறகு, நண்பர்களுடன் அரட்டை அடிப்பது, சமூக ஊடகங்களில் நேரத்தைச் செலவிடுவது என்பது போல உங்கள் பழக்கம் அமைந்திருந்தால் அதை மாற்றிக் கொள்வது நல்லது.

மதிய உணவுப் பழக்கத்தை எதற்காக மாற்றிக் கொள்ள வேண்டும், எப்படி மாற்றிக்கொள்ள வேண்டும் எனும் கேள்விகள் இருந்தால், நோட்டீஸ் போர்டு நிறுவனம் உருவாக்கியுள்ள தகவல் வரைபடம் உங்களுக்கு வழிகாட்டியாக அமையும்.

இந்தத் தகவல் வரைபடம், வெற்றிகரமான மனிதர்கள் தங்கள் மதிய உணவு நேரத்தை எப்படிச் செலவிடுகின்றனர் என்பதை விளக்குகிறது.

ஆரோக்கியமான முறையில் சாப்பிடுவது, சற்று கண் அயர்வது ஆகியவற்றில் தொடங்கி, கடந்த வாரச் செயல்பாடுகளை ஆய்வு செய்வது, சிறிய இலக்குகளை நிர்ணயித்துக்கொள்வது, புதியவர்களுடன் பழகுவது, உடற்பயிற்சி செய்வது, சொந்த வேலைகளை முடித்துக்கொள்வது என இந்தப் பழக்கங்கள் விரிகின்றன. அலுவலகத்தை விட்டு வெளியே சென்று வருவது, பிடித்தமானவற்றைச் செய்வது மற்றும் புத்தகத்தை எடுத்துப் படிப்பது ஆகிய செயல்களிலும் வெற்றிகரமான மனிதர்கள் மதிய உணவு நேரத்தில் ஈடுபடுவதை இந்தத் தகவல் வரைபடம் விவரிக்கிறது.

உங்கள் மதிய உணவு நேரத்தை உற்சாகமாக்கிக் கொள்ள இதில் உள்ள வழிகளை முயன்று பார்க்கலாம்.

தகவல் வரைபடத்தை காண: http://bit.ly/2dHIeCq




# சுற்றுலா வழிகாட்டி!

இந்திய நகரங்களில் சுற்றுலா மேற்கொள்பவர்களுக்கு வழிகாட்டும் வகையில் ஆடியோ காம்பஸ் எனும் செயலி உருவாக்கப்பட்டுள்ளது. இந்தச் செயலி ஒலி வடிவிலான கதைகள் மூலம் உள்ளூர் சிறப்புகளை அறிமுகம் செய்கிறது.

சுற்றுலாப் பயணிகள் பொதுவாகத் தாங்கள் பார்க்க விரும்பும் இடங்கள் பற்றி இணையத்தில் தகவல்களைச் சேகரிக்கின்றனர்.

இவர்களுக்கு இன்னும் சிறப்பான சுற்றுலா அனுபவத்தை வழங்கும் வகையில் இந்தச் செயலி உருவாக்கப்பட்டுள்ளது. இந்தச் செயலி முக்கிய சுற்றுலா நகரங்களின் சிறப்புகளை உள்ளூர் மக்களின் பார்வையில் ஒலி வடிவத்தில் அளிக்கிறது. மேலும் இருப்பிடத்தை உணர்ந்து கொண்டு அதற்கேற்ப கதைகளை இது கூறுகிறது.

உள்ளூர் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியம் தொடர்பான தகவல்களைத் தெரிந்துகொள்ளலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது. இந்திய சுற்றுலாத்துறையின் அதிகாரபூர்வ ஒலி வழிகாட்டியாக இருப்பதாகத் தெரிவிக்கும் இந்தச் செயலி மூலம் 1200-க்கும் மேற்பட்ட சுற்றுலா இடங்கள் பற்றிய தகவல்களை இதில் தெரிந்துகொள்ளலாம். அடிப்படை சேவை இலவசமானது. ஆனால் கூடுதல் சேவைக்குக் கட்டணம் செலுத்த வேண்டும்.

மேலும் விவரங்களுக்கு: http://www.audiocompass.in/#About

# பாதுகாப்பான சின்ன முகவரி




நீளமான இணைய முகவரிகளைச் சுருக்கமான வடிவில் பகிர்ந்துகொள்ள உதவும் முகவரி சுருக்கச் சேவைகள் பல இருப்பதை நீங்கள் அறிந்திருக்கலாம். இந்த வரிசையில் புதிதாக தின்ஃபி.காம் அறிமுகமாகியுள்ளது.

இந்தச் சேவை மூலம் இணைய முகவரிகளைச் சுருக்கும் போது அதற்கான பாஸ்வேர்டையும் உருவாக்கிக் கொள்ளலாம். அதன் பிறகு சுருக்கப்பட்ட முகவரியுடன் பாஸ்வேர்டையும் சேர்த்துப் பகிர்ந்துகொள்ள வேண்டும். இந்த பாஸ்வேர்டு உள்ளவர்கள் மட்டுமே சுருக்கத்தின் பின்னே உள்ள இணையப் பக்கத்தை அணுக முடியும். குழுவாகச் செயல்படும்போது, புதிய திட்டங்கள் தொடர்பான இணையத் தகவல்களை இப்படி பாஸ்வேர்டு பாதுகாப்புடன் பகிர்ந்து கொள்ளலாம். இணையதள முகவரி: http://thinfi.com/

## நைட் க்ரீம்

இரவில் முகத்தில் எந்த மேக்கப்பும் இருக்கக் கூடாது... சருமம் சுவாசிக்க ஏதுவாக அதை சுத்தமாக விட வேண்டும் என்கிறார்கள். இன்னொரு பக்கமோ, 30 பிளஸ்சில் அடியெடுத்து வைக்கும் போதே பெண்கள் நைட் க்ரீம் உபயோகிக்க வேண்டும் என்கிறார்கள். இதில் எது சரி?

இளமையான சருமத்தில் இயற்கையான எண்ணெய் சுரப்பு இருக்கும். அதுவே சருமத்தை பாதுகாக்கும். இவர்கள் சருமத்தை சுத்தப்படுத்திவிட்டு அப்படியே தூங்கச்செல்லலாம். 30 வயதுக்கு மேல் அந்த சுரப்பு குறைய ஆரம்பிக்கும். சருமம் வறண்டு போகும். நம் சருமத்தில் பி.ஹெச். பேலன்ஸ் என ஒன்று உண்டு. அது 5.6ல் தக்கவைக்கப்பட வேண்டும்.

இளவயதினருக்கு அது 5.6க்கு மேல் இருக்கலாம். இந்த அளவு குறையும்போது சருமம் வறளத்தொடங்கும். எனவேதான், இதை ஈடுகட்ட நைட் க்ரீம் உபயோகிக்க சொல்கிறோம். யாருக்கு எந்தவித நைட் க்ரீம் பொருத்தமானது என்பதை சரும நிபுணரிடம் கேட்டு தெரிந்து கொள்ளலாம்






## உடையும் நகங்களா? கவலையை விடுங்கள்!

முகத்திற்கு ஏற்ப நகங்களை வளர்க்க பெரும்பாலான பெண்ககள் ஆசைபடுவார்கள் ஆனால் முகத்திற்கு தரும் பராமரிப்பை நகங்களுக்கு தருவதில்லை தரமான நெயில் பொலிஷ்களை மட்டுமே உபயோகிக்க வேண்டும். அப்போது தான் நகத்திற்கு எவ்வித பாதிப்பும் வராது. நெயில் பொலீஷ் வாங்கும் போது உங்கள் நிறத்திற்கு ஏற்ற நிறமாக பார்த்து தேர்ந்தெடுங்கள். சிலருக்கு நகம் கடினத் தன்மையுடன் இருப்பதால், நகத்தை



வெட்டுவதற்கு கஷ்டமாக இருக்கும். அப்படிப்பட்டவர்கள் குளித்தவுடன் நகம் வெட்டினால், நகம் ஈரத் தன்மையுடன் இருப்பதால், எளிதாக வெட்ட முடியும். அதே போல், தேங்காய் எண்ணெய் தடவி சிறிது நேரம் கழித்து வெட்டினாலும் எளிதாக வெட்டலாம்.

சிலப் பெண்கள் ஆசை ஆசையாக வளர்க்கும் நகங்கள் உடைந்து விடுகின்றது. நகங்கள் அடிக்கடி உடைந்து போகிறவர்கள், சிறிதளவு பேபி ஓயிலில் நகங்களை மூழ்கும் படி வைத்தால், நகங்கள் உறுதியாகும். நெயில் பொலீஷ் ரிமூவரை அடிக்கடி பயன்படுத்துவது நகத்திற்கு தீங்கு விளைவிக்கும். எனவே, அவற்றை அடிக்கடி பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும். நெயில் பொலீஷ் ரிமூவருடன், சிறிது கிளிசரின் கலந்து பயன்படுத்துவது நல்லது.

தண்ணீரை மிதமாக சூடுபடுத்தி, சிறிது உப்பு கலந்து, அதில் விரல்களை சிறிது நேரம் வைத்திருந்தால், விரல்கள் புத்துணர்ச்சியுடன் காணப்படும்.தினமும் நெயில் பொலீஷ் உபயோகிப்பதால் நகங்களின் நிறம் மங்கி காணப்படும். எனவே வாரத்திற்கு ஒன்று அல்லது இரண்டு நாட்கள் நெயில் பொலீஷ் உபயோகிக்காமல், இருப்பது நல்லது.


ஈரமாக இருக்கும் போது ஷேப் செய்தால், நகங்கள் உடைவதற்கான வாய்ப்பு உள்ளது. எனவே, நகங்கள் ஈரமாக இருக்கும்போது ஷேப் செய்வதை தவிருங்கள். கிளிசரின் மற்றும் எலுமிச்சை சாறு கலந்து, அதை நகத்தில் தடவி சிறிது நேரம் கழித்து கழுவினால், நகங்கள் பளபளப்பாக இருக்கும்.

அதே போல், பாதாம் எண்ணெயை நகங்களில் பூசி சிறிது நேரம் கழித்து, கடலை மாவினால் கழுவினாலும் நகம் பளபளப்படையும். மாதத்திற்கு ஒரு முறை இப்படி செய்ய நல்ல பலன் கிடைக்கும்.

ஆலிவ் எண்ணெயை மிதமாக சூடுபடுத்தி அதை விரல்களில் தேய்த்து சிறிது நேரம் கழித்து கழுவ வேண்டும். இவ்வாறு தினமும் செய்து வந்தால் நகங்கள் நன்றாக வளரும். மிதமான சூடுள்ள பாலில் பஞ்சை நனைத்து அதை வைத்து நகங்களை தேய்த்து சுத்தப்படுத்தினால், நகங்களில், காணப்படும் அழுக்குகள் நீங்கி நகங்கள் பளபளப்பாகும்.

நகங்கள் உறுதியற்று உடைவதற்கு இரும்பு மற்றும் கல்சியம் போன்ற சத்துக்குறைபாடுகளே காரணம்.

எனவே நகங்கள் ஆரோக்கியமாக வளர ஊட்டச்சத்து நிறைந்த காய்கறிகள் மற்றும் உணவு வகைகளை சாப்பிட வேண்டும். நெயில் பொலீஷ் போடும் போது, பிரஷினால், நகத்தின் அடிப்பகுதியில் நுனி வரை ஒரே தடவையாக போட வேண்டும். அப்போது தான் அவை பளபளப்பாக எவ்வித திட்டுக்களும் இன்றி அழகாக காட்சியளிக்கும்.



## இது தான் அழகு!

முகத்துக்கு போடும் மேக்கப்பை, கழுத்து, கைகளுக்கு ஒரே சீராக போட வேண்டும். இல்லாவிட்டால் முகம் ஒரு நிறம், கழுத்து ஒரு நிறமாகத் தெரிந்து இவ்வளவு தூரம் கஷ்டப்பட்டதற்கு பலன் இல்லாமல் போய் விடும்.

சப்பையான மூக்கை எடுப்பாகவும், சற்று பெரிதான மூக்கை சிறியதாகவும் காட்ட சரிப்படுத்தும் மேக்-அப் மூலம் லைன்கள் வரைந்து சரி செய்து விடுவோம். கன்னத்தில் போடும் சிவப்பழகு மேக்கப் என்பது தனியாக சிவப்பாக தெரியக் கூடாது. முகத்தின் மேக்கப் போடு ஒன்றி வர வேண்டும். இதை சரியான முறையில் போடுவதால் பள்ளம் விழுந்த கன்னங்களாக இருந்தால் கூட அவற்றை உயர்த்திக் காட்ட முடியும்.

இறுதியாக நெற்றியில் வைக்கும் பொட்டு மெரூன் அல்லது பிரவுண் நிறத்தில் வைப்பது நல்லது. அதைச் சுற்றி டிசைன்கள் போட்டுக் கொள்ளலாம். அதிகமாக கல் அல்லது ஜரிகை வைத்த பொட்டுகள், வீடியோ வெளிச்சத்தில் பட்டு மினுங்கினால் நெற்றியில் பொட்டே இல்லாத தோற்றத்தை அளித்துவிடும். முன் நெற்றியிலும், கண்களின் ஓரங்களிலும் சிறிய கற்களை வைத்துக்கொள்வது தற்போது பேஷன் ஆகி வருகிறது. இது பொட்டு இல்லாத இடங்களில் வைப்பதில் மேலும் அழகு சேர்க்கிறது.

## என் சமையலறையில்...

ரசம், சாம்பார், கீரை மசியலை இறக்கிய பின், பெருங்காயத்தூள் போட்டால் மணம் ஊரைத்தூக்கும். கொத்துமல்லி, புதினா துவையல்கள் அரைக்கும் போது, தண்ணீருக்குப் பதில் சிறிது தயிர் சேர்த்தால் சுவை தரும். கத்தரிக்காய் கூட்டு, பொரியல் செய்யும் போது கொஞ்சம் கடலை மாவைத் தூவிப்பாருங்கள். கூட்டு,பொரியல் சுவையாக இருக்கும். மைக்ரோவேவ் ஓவனில் உட்புறப்பகுதியைச் சுத்தப்படுத்த ஒரு கண்ணாடிப் பாத்திரத்தில் அரைமூடி எலுமிச்சம் பழத்தைப் பிழிந்து ஓவனில் இரண்டு நிமிடங்கள் வைத்து எடுத்துத் துடைக்கபளிச்சென்று இருக்கும்.



பீட்ரூட் நறுக்கும் போது கைகளில் கறை ஒட்டுவதைத் தடுக்க, பீட்ரூட்டை முழுதாக குக்கரில் வேகவைத்துக் கொள்ளுங்கள். பின்பு தோலை எடுத்து விட்டு துண்டுகளாக்கினால் கறை ஒட்டாமல் இருப்பதோடு, காய் நறுக்குவதற்கும் எளிதாக இருக்கும்.அடுப்பு, சமையல் மேடை, அடுப்பின் பின்புறம் என எல்லா இடங்களிலும் எண்ணெய் அப்பிக்கொண்டிருக்கிறதா? கவலை வேண்டாம். டைல்சை சாதாரணத் துணியாலோ அல்லது டிஷ்யூ பேப்பராலோ துடைத்து எடுங்கள்.

பின்னர் வெதுவெதுப்பான நீரில் கொஞ்சம் சலவைச் சோடாவைக் கலந்து பிசுக்கு பிடித்த இடங்களில் பூசிவிட்டு, உலர்ந்த துணியால் துடைத்துப்பாருங்களேன். பளிச்சென்று ஆகிவிடும்.கண்ணாடி பாட்டில் துர்நாற்றம் வீசுகிறதா? கொஞ்சம் கடுகைப் போட்டு வெந்நீர் ஊற்றி சிறிது நேரம் கழித்துக் கழுவுங்கள். துர்நாற்றம் போய்விடும். கேரட் அல்வா செய்யும் போது கேரட்டைக் கொதிக்கும் தண்ணீரில் போட்டு பின்பு குளிர்ந்த தண்ணீரில் சிறிது நேரம் வைத்துத் தோலைச் சீவினால் மிகச் சுலபமாகத் தோலை நீக்கி விடலாம். வடைக்கு அரைக்கும் போது மாவில் தண்ணீர் அதிகமாகி விட்டால் ஒரு தேக்கரண்டி நெய் விட்டால் மாவு இறுகிவிடும்.




### பட்டர் நாண்

**தேவையான பொருட்கள்**

மைதா மாவு - 2 கப்,
பால் - அரை கப்
தயிர் - கால் கப்
ஈஸ்ட் - ஒன்றரை டீஸ்பூன் (பொரி கடையில் கிடைக்கும்) சர்க்கரை - ஒரு டீஸ்பூன்
வெண்ணெய், உப்பு, எண்ணெய் - தேவைக்கேற்ப.

**எப்படிச் செய்வது?**

பாலை வெதுவெதுப்பாக சூடாக்கி அதில் சிறிது ஈஸ்ட், சர்க்கரை சேர்த்து கலந்து மூடி வைக்கவும். 5 நிமிடம் கழித்து சிறிது பொங்கி வரும் போது தயிரை சேர்த்து கலக்கி மீண்டும் 10 நிமிடம் கழித்து நுரைத்து பொங்கி வரும்போது ஈஸ்ட், மைதா கலவை சேர்த்து இறக்கவும். அத்துடன் வெண்ணெய், உப்பு சேர்த்து மிருதுவாகப் பிசையவும். இந்தக் கலவையை ஒரு பாத்திரத்தில் போட்டு கதகதப்பாக உள்ள இடத்தில் மூடி வைக்கவும்.

பின் அதைப் பார்க்கும்போது இரண்டு மடங்காக உப்பி இருக்க வேண்டும். அப்போத சிறிதளவு மாவை எடுத்து நாண் போல் (ரொட்டி மாதிரி) தேய்க்கவும். ஒரு தோசைக்கல்லில் தண்ணீர் தெளித்து நாணை போட்டு இருபுறமும் திருப்பி போட்டு பின் ரொட்டி வலையில் நேரடியாக மிதமான தீயில் காட்டவும். அதேபோல் இருபுறமும் செய்து எடுத்து வெண்ணெய் தடவி சூடாகப் பரிமாறவும்.

## செரமிக் பாத்திரங்களில் சமைக்கலாமா?

நம் அம்மாக்கள் விறகு அடுப்பில் சமைத்தார்கள். அதற்கேற்றவாறு மண்பாண்டங்கள், இரும்பு, தாமிரம் என்று பலவகை பாத்திரங்கள் இருந்தன. இன்று கேஸ் அடுப்பு, இண்டக்'ஷன் அடுப்பு என்று சமைக்கும் முறையே பெரிதும் மாறிவிட்டது. சமைக்கும் பாத்திரங்களும் மாறிவருகின்றன. இவற்றில் சமீபகாலமாக செராமிக் பாத்திரங்கள் பிரபலமாக ஆரம்பித்திருக்கின்றன.

அமெரிக்கா போன்ற நாடுகளில் முன்பு நான்ஸ்டிக் பாத்திரங்கள் பிரபலமானதைத் தொடர்ந்து இந்தியாவுக்கும் வந்தது. இப்போது நான்ஸ்டிக்கின் அடுத்த வெர்ஷனாக செராமிக் பாத்திரங்களை வெளிநாடுகளில் அதிகம் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே பயன்படுத்தி வரும் பீங்கான் பாத்திரத்தைத்தான் ஆங்கிலத்தில் செராமிக் பாத்திரம் என்கிறார்கள்.

செராமிக் பாத்திரத்தில் பல சாதகமான விஷயங்கள் இருக்கின்றன. பார்ப்பதற்குக் கவர்ச்சிகரமாக இருக்கும். அலுமினியப் பாத்திரம், இரும்பு போன்ற உலோகங்களைப் போல அல்லாமல், செராமிக் பாத்திரங்களில் சமைக்கும்போது பாத்திரத்தின் வெப்பம் சீராக இருக்கும். நீண்ட நேரமாக, அதிக வெப்பத்தில் அசைவ உணவு போன்றவற்றை சமைப்பதற்கும் செராமிக் பொருத்தமானது. Molten glass powder என்ற கண்ணாடி மூலப்பொருளை வைத்துத்தான் செராமிக் பாத்திரங்கள் தயாரிக்கப்படுகின்றன.

அதிக வெப்பத்தைத் தாங்கிக் கொள்வதற்குக் காரணம் இந்த Molten glass powderதான். செராமிக் பாத்திரம் துருப்பிடிக்காது என்பதும் மற்றொரு பிளஸ். பாலீஷ் செய்யப்பட்டிருப்பதால் சமைத்த பிறகு சுத்தம் செய்வதும் எளிது. நான்ஸ்டிக் பாத்திரங்களில் புற்றுநோய் அபாயம் கொண்ட Teflon, PFOA போன்ற வேதிப்பொருட்கள் இருப்பதால், அவற்றைத் தவிர்த்துவிட்டு செராமிக் பாத்திரங்களை சமீபத்தில் அதிகமாக வெளிநாடுகளில் பயன்படுத்துகிறார்கள். அதற்காக, செராமிக் பாத்திரத்தில் பிரச்னையே இல்லை என்று சொல்லிவிட முடியாது.

செராமிக்பாத்திரத்தின்பளபளப்புக்காக லெட், காட்மியம் போன்ற ஹெவி மெட்டல்கள் பயன்படுத்தப்படுகின்றன. நீண்ட நாட்களாக செராமிக் பாத்திரத்தில் சமைத்து சாப்பிட்டு வந்தால், உணவில் இந்த ஹெவி மெட்டல்கள் கலப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. இந்த கோட்டிங் இல்லாத செராமிக் பாத்திரங்களும் வர ஆரம்பித்திருக்கின்றன. கிடைத்தால் அதையும் பயன்படுத்தலாம். நான்ஸ்டிக் பாத்திரங்களில் எண்ணெய் சேர்க்கக் கூடாது என்று சொல்வார்கள். அதற்கு எதிராக, செராமிக் பாத்திரத்தில் எண்ணெய் சேர்க்காமல் சமைக்கக் கூடாது என்கிறார்கள்.

ஆனால், எண்ணெய் இல்லாமல் சமைப்பதற்காகத்தான் செராமிக் பாத்திரங்களையே உருவாக்கி இருக்கிறார்கள். ஒருவேளை பாத்திரம் நீண்ட நாட்களுக்கு உழைக்க வேண்டும் என்பதற்காக சொல்வார்கள் என்று நினைக்கிறேன். நாம் கவனமாகப் பயன்படுத்தும்போது எண்ணெய் சேர்க்க வேண்டும் என்று அவசியம் இல்லை. நம்மைப் பொறுத்தவரை எவர்சில்வர் பாத்திரங்கள் ஓரளவு பாதுகாப்பானவை. நிக்கல், குரோமியம் போன்ற வேதிப்பொருட்களின் கலப்பு இருந்தாலும், அவை மிகவும் குறைவான அளவிலேயே இருக்கின்றன. அதனால் எவர்சில்வர் பாத்திரங்கள் அவ்வளவு தீங்கு இல்லை.

## தொடைகள் மேலும் அழகாக...

அழகான தொடை பெற வேண்டுமென்ற ஆசை எல்லோருக்கும் இருக்கும். குறிப்பாக பெண்களுக்கு தான் இதன் மீது அதிக நாட்டம் இருக்கும். வயிற்று கொழுப்பிற்கு அடுத்தபடியாக தொடையில் உள்ள கொழுப்பை கரைப்பதுதான் மிகவும் கடினமானது. தொடையில் உள்ள கொழுப்பை கரைக்க சில தகவல்கள்:

ஒருசில டயட் மற்றும் உடற்பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக தொடையில் உள்ள கொழுப்பை கரைக்கும்படியான உடற்பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அதற்காக ஒரே உடற்பயிற்சியை மட்டும் செய்து கொண்டிருக்கக் கூடாது. மாறாக வாழ்க்கை முறையில் சிறு மாற்றங்களை கொண்டு வந்தால்தான், தொடையில் உள்ள கொழுப்புக்களை கரைக்க முடியும்.

தினமும் காலையில் எழுந்து வாக்கிங் மேற்கொள்வதன் மூலம், தொடையில் உள்ள கொழுப்புக்களை எளிதில் கரைக்கலாம். மேலும் அலுவலகம் அருகில் இருந்தால், ஆட்டோ, வேன் போன்றவற்றில் செல்லாமல், நடந்து சென்றால், தொடையில் உள்ள கொழுப்பு குறைவதுடன், கால்களும் வலுவுடன் இருக்கும். எப்போதும் லிப்ட், எலிவேட்டர் போன்றவற்றை பயன்படுத்துவதற்கு பதிலாக, படிக்கட்டுகளை பயன்படுத்த வேண்டும். இதன் மூலமும் தொடையில் உள்ள கொழுப்புக்கள் குறைய ஆரம்பிக்கும்.

மேலும் நவீன உலகத்தின் அடையாளமாக தற்போது இருசக்கர வாகனங்கள் பல்வேறு வகையில், வண்ணங்களில் வந்து விட்டது. இவை லோன் மூலமும் கிடைக்கிறது. இதனால் தற்போது டூவீலர் பயன்படுத்தாதவர்களே இல்லை என்ற நிலை காணப்படுகிறது. இதனால் சைக்கிள் ஓட்டுவோரின் எண்ணிக்கை குறைந்தது. இதனால் தொடைகளில் கொழுப்புக்கள் தங்க ஆரம்பித்துவிட்டது. எனவே பைக்கை அதிகம் பயன்படுத்தாமல், அவ்வப்போது சைக்கிளையும் பயன்படுத்த வேண்டும்.

தொடையில் உள்ள கொழுப்பை கரைக்க உதவும் உடற்பயிற்சிகளில் ஒன்றுதான் ஓடுவது. இத்தகைய ஓட்டத்தை வெளியே காற்றோட்டமாக சுத்தமான காற்றினை சுவாசித்தவாறே மேற்கொள்வது சிறந்தது. யோகாசனத்தில் தொடையை குறைப்பதற்கு என்று ஒருசில ஆசனங்கள் உள்ளன. சூரிய நமஸ்காரம் கூட தொடையில் உள்ள கொழுப்புக்களை கரைக்க பெரிதும் உதவியாக இருக்கும். சிறுவயதில் விளையாடிய ஸ்கிப்பிங் கூட தொடையில் உள்ள கொழுப்புக்களை கரைப்பதற்கு உதவி புரியும். தண்ணீர் அதிகம் குடித்தால், உண்ணும் உணவில் அளவு குறைந்து கொழுப்புக்கள் அதிகரிப்பது குறைவதுடன், உடலில் தங்கியுள்ள டாக்ஸின்களும் குறையும்.



## வர்ணம் தீட்டுவோம்



## உலகில் மிகவும் சிறிய குட்டி நாடு!



உலகில் உள்ள இரண்டாவது குட்டி நாடு மொனாக்கோ. கத்தோலிக்க கிறிஸ்தவ தலைமையகம் உள்ள வாட்டிகனுக்கு அடுத்து உலகில் உள்ள குட்டி நாடு இது.

மொத்தமே 499.2 ஏக்கர்தான் இந்த நாட்டின் பரப்பளவு. நம்ம ஊரில் உள்ள ஒரு கிராமத்தைவிட சிறிய நாடு.

மொத்த சாலை தூரம் - 4.4 கிலோமீட்டர்தான். கடலோரப் பகுதி - 4.1 கிலோ மீட்டர்.

நிலப்பரப்பு பட்டியலில் உலக அளவில் மொனாக்கோவுக்கு 248வது இடம். (110 ஏக்கர் பரப்புக் கொண்ட வாட்டிகன் 249 வது இடம்)

ஐரோப்பா கண்டத்தில் பிரான்ஸ் நாட்டுக்கு அருகே மொனாக்கோ உள்ளது.

இந்த நாட்டின் மக்கள் தொகை தற்போது 36, 371.

மக்கள்தொகை குறைவாக இருப்பதாலோ என்னவோ, இந்த நாட்டில் வாழும் மக்களுக்கு ஆயுள் கொஞ்சம் அதிகம். இங்கு சராசரியாக மக்கள் 90 வயதுவரை வாழ்கிறார்கள்.

பிரான்ஸுடன் இணைந்து இருந்த இந்த நாடு 1861-ம் ஆண்டில் தனி நாடானது.

இங்கு மக்கள்தொகை குறைவாக இருப்பதால் வெளிநாட்டு மக்கள் குடியேற முன்பு அதிகம் அனுமதிக்கப்பட்டார்கள்.

மக்கள் தொகை இருமடங்காகி விட்டதால் நாட்டின் பரப்பளவை அதிகரிக்கத் தொடங்கியுள்ளார்கள். எப்படித் தெரியுமா? கடலிலேயே பிரம்மாண்டமான கட்டிடங்களைக் கட்டி வருகிறார்கள்.

உச்சக்கட்டமாக கடலுக்குள் பாதாளம் அமைத்து அங்கு ஒரு நகரை உருவாக்கவும் மொனாக்கோவில் திட்டமிட்டுவருகிறார்கள்.




## ஏமாறிய மரங்கொத்தி

மரகதபுரி எல்லையில் அடர்ந்த காடு. மரங்கொத்தி ஒன்று உயரமான மரத்தில் அமர்ந்து எச்சமிட்டுக்கொண்டிருந்தது. அந்த வழியே வந்த நரியின் தலையில் எச்சம் விழுந்துவிட்டது.



உடனே நரிக்குக் கோபம் தலைக் கேறியது. யார்டா அவன்? என் மேல எச்சம் கழித்தது? என்று சத்தமாக ஊளையிட்டுக் காட்டையே அதிரவைத்தது.

மரங்கொத்திக்குப் பயம் வந்துவிட்டது. நரியே, தவறுதலாகப் பட்டுவிட்டது. மன்னித்துக்கொள் என்று வருத்தத்துடன் கூறியது.

மன்னிப்பெல்லாம் கிடக்கட்டும். நீ மரக்கிளையில் இருப்பதால் தானே எச்சத்தைக் கீழே கழிக்க வேண்டியிருக்கிறது? அது அந்த வழியே வருகிறவர்களின் தலை மீதும் விழுகிறது. அதனால் உனக்குப் பாதுகாப்பான, விசாலமான ஒரு இருப்பிடத்தைக் காட்டுகிறேன். அங்கே போய் சந்தோஷமாக நீ வசிக்கலாம் என்று ஆசை காட்டியது நரி.

அப்படியா? எத்தனை நாளைக்குத்தான் நானும் மழையிலும் குளிரிலும் நடுங்குவது? நீ சொல்லும் இடத்துக்கு நான் வரத் தயாராக இருக்கிறேன் என்றது மரங்கொத்தி.

சற்று நேரத்தில் திரும்பி வந்து உன்னை அழைத்துச் செல்கிறேன். இங்கேயே இரு என்று சொல்லிவிட்டு, நரி ஓடிவிட்டது.

மரங்கொத்தியின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. புது இடத்துக்குச் செல்லத் தயாரானது. அப்போது காகம் அங்கே வந்தது. நடந்த சம்பவத்தைக் காகத்திடம் விளக்கியது மரங்கொத்தி.

மரங்கொத்தியே, நரியிடம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் இப்படித்தான் ஒரு நாள் நான் வடையை வாயில் வைத்திருக்கும்போது நீ அழகாக இருக்கிறாய், உன் குரலும் இனிமையாக இருக்கிறது. ஒரு பாட்டுப் பாடு என்றது. நானும் பாட்டுப் பாட, வடை கீழே விழ, அதைத் தூக்கிக்கொண்டு சென்றுவிட்டது. அதனால் நரியிடம் உஷாராக இரு என்று சொல்லிவிட்டுச் சென்றது காகம்.

இந்தப் பொல்லாத காகத்துக்கு எனக்கு ஒரு நல்ல இடம் கிடைப்பதில் விருப்பம் இல்லை போலிருக்கு. இதை எல்லாம் கண்டுகொள்ளக் கூடாது என்று தனக்குத் தானே சொல்லிக்கொண்டது மரங்கொத்தி.

அப்போது ஜோடி புறாக்கள் மரத்தில் வந்து அமர்ந்தன. மரங்கொத்தியே, எங்கேயோ கிளம்பற மாதிரி இருக்கே? என்று கேட்டன.

நரி, எனக்கு ஒரு புது இடம் காட்டுவதாகச் சொல்லியிருக்கு. அதான் காத்துக்கிட்டிருக்கேன்.

மரங்கொத்தியே, இந்தக் காட்டில் உள்ள எல்லா விலங்குகளும் நேரடியாகச் செயலில் இறங்கும். ஆனால் நரி மட்டும் தந்திரமாகத்தான் ஒரு செயலைச் செய்யும். எங்கள் அனுபவத்தில் நரி மீது நல்ல அபிப்பிராயம் இல்லை. அதனால் யோசித்து முடிவெடு. நாங்கள் வருகிறோம் என்று சொல்லிவிட்டுப் பறந்து சென்றன.

இந்தக் காட்டில் எல்லோருக்கும் ஏன் இவ்வளவு பொறாமை? இவங்களும் நல்லது செய்ய மாட்டாங்க. செய்கிறவர்களையும் தப்பு சொல்வாங்க. என்ன உலகமப்பா என்று அலுத்துக் கொண்டது மரங்கொத்தி.

அப்போது அங்கு வந்த நரி, தயாரா, போகலாமா? என்று கேட்டது.

மகிழ்ச்சியோடு கிளம்பியது மரங்கொத்தி. அரை மணி நேரப் பயணத்தில் ஓர் குகை அருகே வந்த நரி, இதுதான் அந்த வசதியான இருப்பிடம். உனக்கு எந்தத் தொந்தரவும் இருக்காது. உன்னுடைய எச்சத்தை மேலிருந்து கழித்தாலும் யாரும் கேட்க மாட்டார்கள் என்று சொல்லிவிட்டுச் சென்றுவிட்டது.

குகைக்குள் நுழைந்த மரங்கொத்திக்கு அதிர்ச்சி. எங்கும் இருள். ஓர் ஓரமாக ஒதுங்கிக் கொண்டது. குகை சற்று வெதுவெதுப்பாக இருந்தது. ‘அட, நரி நமக்கு நல்ல இடத்தைத் தான் காண்பித்திருக்கிறது, நன்றி சொல்லணும்’ என்று நினைத்துக்கொண்டது.

திடீரென்று ஏதோ சத்தம். மரங்கொத்திக்கு வயிறு கலங்கியது. சட்டென்று எச்சம் இட்டுவிட்டது. அவ்வளவுதான், யாரது? எவ்வளவு தைரியம்? என்ற குரல் கேட்டது.

‘ஐயோ எங்கு எச்சம் கழித்தா லும் பிரச்சினையாக இருக்கிறேதே’ என்று வருத்தத்துடன் கண்களை மூடிக்கொண்டது மரங்கொத்தி.

அதிகாலை பறவைகளின் சத்தம் கேட்டுக் கண் விழித்தது மரங்கொத்தி. அங்கே கண்ட காட்சியால் மரங்கொத்தியின் உடல் நடுங்கியது. சிங்கராஜா கர்ஜனையோடு நடை போட, அருகே அதன் குட்டிகளும் மனைவியும் அமர்ந்திருந்தன.

‘ஐயோ, நரி என்னை ஏமாற்றிவிட்டது. காகமும் புறாக்களும் சொன்னதை நான் கண்டுகொள்ளவில்லை. இப்போது வசமாக மாட்டிக் கொண்டேனே’ என்று வருத்தப்பட்டது மரங்கொத்தி.

சற்று நேரத்தில் சிங்கராஜாவின் குடும்பம் வெளியே சென்றது. ‘எனக்கு எதுக்கு இவ்வளவு பெரிய குகை? மரத்தில் ஒரு கூடு போதும்’ என்று நினைத்துக்கொண்டு, வேகமாக வெளியே பறந்து சென்றது மரங்கொத்தி.

## முட்டைகள் ஏன் கோள வடிவத்தில் இருக்கின்றன?



பறவைகளின் முட்டைகள் அனைத்தும் ஒரே வடிவத்தில் இல்லை. சில முட்டைகள் கோள வடிவத்திலும் சில முட்டைகள் நீள் உருளை வடிவத்திலும் காணப்படுகின்றன. முட்டை உருண்டையாக இருந்தால் உயரமான இடங்களிலும் கூடுகளிலும் இடும்போது, வேகமாக உருண்டு கீழே விழுந்துவிடலாம்.

அதனால் உருளும் வேகம் குறைவாக இருக்கும் கோளம், நீள் உருளை வடிவங்களில் முட்டைகள் பரிணாம வளர்ச்சியில் உருவாகிவிட்டன என்றும், இந்த வடிவங்களில் பறவைகள் முட்டை இடுவதும் எளிதாக இருக்கும் என்றும் சொல்லப்பட்டுவந்தது.

ஆனால், 2017-ம் ஆண்டு வெளியிடப்பட்ட அறிவியல் ஆய்வு இதழில் 50 ஆயிரம் முட்டைகளின் தகவல்களைத் திரட்டி வடிவம் பற்றிய கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள். அதாவது பறவைகளின் பறக்கும் திறனைப் பொருத்தே முட்டைகளின் வடிவம் கோளம் அல்லது நீள் உருளை வடிவத்தில் அமைவதாகவும், கூட்டுக்கும் முட்டையிடுவதற்கும் தொடர்பில்லை என்றும் தெரிவித்திருக்கிறார்கள்.

நீண்ட தூரம் பறக்கும் பறவைகளின் முட்டைகள் நீள் உருளை வடிவத்திலும் கோழி போன்று அதிகம் பறக்காத பறவைகளின் முட்டைகள் கிட்டத்தட்ட கோள வடிவத்திலும் இருக்கின்றன. அதாவது பறவைகளின் உடலமைப்புக்கு ஏற்றவாறு முட்டைகளின் வடிவம் அமைகிறது.

## விடுகதைகளும் விடைகளும்

1. என்னைப் பார்க்க முடியும், ஆனால் எனக்கு எடை கிடையாது. என்னை ஒரு பாத்திரத்தில் போட்டால் அதன் அளவை குறைத்திடுவேன். நான் யார்?

2. நான்தான் சகலமும். என்னைப் பார்க்க முடியாது, பிடிக்கவும் முடியாது. எனக்கு வாயில்லை, ஆனால் நான் ஓசை எழுப்புவேன். நான் யார்?

3. என்னுடைய நிறம் கருப்பு. மிகுந்த தேடலுக்குப் பின் நான் கிடைப்பேன். என்னை கண்டறிந்த பிறகு என்னுடைய கவசத்திடமிருந்து பிரித்தெடுப்பார்கள். நான் யார்?

4. நான் மயிலிறகைவிட மென்மையானவன். ஆனால் மனிதர்கள் அதிக நேரம் என்னை பிடித்து வைக்க முடியாது. நான் யார்?

5. எனக்கு உயிரில்லை. ஆனால் நான் வளர்வேன். எனக்கு நுரையீரல் கிடையாது. ஆனால் எனக்கு காற்று மிகவும் அவசியம். எனக்கு வாயில்லை ஆனால் பல கைகள் உண்டு. நான் யார்?

6. இருட்டறைக்குள் என்னை அழைத்துச் சென்று என் மேல் தீயை வைப்பார்கள். நான் அழுவேன். பிறகு என்னுடைய தலை துண்டிக்கப்படும். நான் யார்?

7. ஒரே இடத்தில் இருப்பேன். எனக்குத் தொண்டை கிடையாது. ஆனால் நான் ஓசை எழுப்புவேன். நான் யார்?

8. நான் சூரியனைக் கடந்து சென்றால் கூட எனக்கு நிழல் ஏற்படாது. நான் யார்?

9. பேசாத வரை நான் இருப்பேன். பேசினால் நான் உடைந்துவிடுவேன். நான் யார்?

10. இது பேசினால் கேட்கமுடியும். ஏனென்றால், இதற்குப் பெரிய வாயுள்ளது. ஆனால் இதனால் சுவாசிக்க முடியாது. அது என்ன?

**விடைகள்:**

1. துவாரம்
2. காற்று
3. நிலக்கரி
4. சுவாசம்
5. தீ
6. மெழுகுவர்த்தி
7. நீர்வீழ்ச்சி
8. தென்றல்
9. அமைதி
10. கோவில் மணி

## காற்றில் பல வாயுக்கள் இருந்தாலும் நாம் ஒக்சிஜனை மட்டும் எப்படி சுவாசிக்கின்றோம்

காற்றில் நைட்ரஜன் 78.08 சதவீதமும், ஆக்சிஜன் 20.95 சதவீதமும் உள்ளன. இவை தவிர ஆர்கான், கார்பன் டை ஆக்சைடு, நியான், ஹீலியம், மீத்தேன், கிரிப்டான், நைட்ரஜன் ஆக்சைடு, ஹைட்ரஜன், ஜெனான், ஓசோன் ஆகிய வாயுக்களும் காற்றில் கலந்திருக்கின்றன.

அதுமட்டுமல்ல, நீராவியும், தூசு தும்புகளும், மாசுபாடுகளும் கலந்திருக்கின்றன. இவை மட்டும் இடத்துக்கு இடம் மாறுபடும். நாம் காற்றை மூக்கு வழியே சுவாசித்ததும், அது மூச்சுக் குழாய் வழியே நுரையீரலை அடைகிறது. நுரையீரலில் மரங்களின் வேர் போல விரிந்திருக்கும் மிக, மிக நுண்ணிய குழாய்களை காற்று அடைந்ததும், அங்கு வேதியியல் மாற்றத்தால் ஆக்சிஜன் மட்டும் சிறிதளவு நம் ரத்தத்திலுள்ள ஹீமோகுளோபினுடன் கலக்கிறது. பிறகு, ஆக்சிஜன் தோய்ந்த ரத்தம் உடலெங்கும் உள்ள செல்களுக்கு அனுப்பப்படுகிறது.

காற்றில் அதிகமாக உள்ள நைட்ரஜன், உடலில் எதனுடனும் வினை புரியாத தன்மை உள்ளது. எனவே, எந்த அளவுக்கு நைட்ரஜன் நம் சுவாசத்தில் உள்ளே போகிறதோ, அதே அளவு வெளிமூச்சு வழியே வெளியேறுகிறது. இதைத் தவிர கார்பன் டை ஆக்சைடும் வெளியேற்றப்படுகிறது.

## வெற்றி பெற சிறந்த வழிகள்

★ காலந்தவறாதீர்கள். குறைந்த வேலையாயினும் நேரத்தோடு பூர்த்தி செய்யுங்கள்.

★ வேலையைச் சுறுசுறுப்புடன் ஆரம்பித்து விடுங்கள்.

★ முகத்தில் கவலைக்குறி இல்லாமல் மகிழ்ச்சியான உற்சாகமான தோற்றத்தோடு இருங்கள்.

★ சக்தியை மற்றவர்களோடு பேசி விரயமாக்காதீர்கள். தேவையின்றிப் பேசுவதைத் தவிர்க்க முயலுங்கள்.

★ வேலையைச் சுத்தமாகச் செய்யுங்கள். முழுமையாகச் செய்யுங்கள். திருப்தியாகச் செய்யுங்கள்.

## உலகப் பழமொழிகள்

★ இரு பொருட்கள் உலகை ஆளுகின்றன. அவை ரட்சிப்பும், சிட்சிப்பும்.

★ கூனின் முதுகு கல்லறையில் தான் நிமிர்த்தப்படும்.

★ குழந்தையைத் தூக்கி வைத்துக்கொள்ளும்போது கை நோகிறது. அதைக் கீழே விட்டால் மனம் நோகிறது.

★நீ ஒரு பாம்பைக் கொல்வதனால் அதனுடைய வாயைக்கூட அழித்துவிடு.

★ எது அடிக்கடி பார்க்கப்படவில்லையோ அது ஒதுக்கப்பட்டது.

★முள்ளின் மேலே பிறந்தவன் முள்ளின் மேலேயே சாவைத் தேர்ந்தெடுப்பான்.

★ நல்ல மணியின் ஓசை தூரத்திலும் கேட்கும். கெட்ட மணியின் ஓசை அதைவிட அதிக தூரத்தில் கேட்கும்

★ துளை அளவிற்கு ஆணியும் துயர் அடைகிறது.

★ கப்பல் முழுவதையும் இழப்பதைவிட நங்கூரத்தை இழப்பது மேல்.

★ இரவும் இருளும் எண்ணங்களின் அன்னையர்.

★நீண்ட நேரமாக உண்பது, சுருக்கமாக வழிபாடு செய்வதை போலவே மிகவும் விரும்பப்படுகிறது.

★ உண்மை கடவுளின் முத்திரை.

★ சேதம் ஏதும் இல்லாமல் எல்லா ஆதாயங்களுடன் உண்மை தோற்றமளிக்கிறது.

★ எண்ணெய் ஆரம்பத்தில் சிறந்தது. தேன் முடிவில் சிறந்தது. மது நடுவில் சிறந்தது.

★ வாலின் அறிவுரையை ஏற்றுக் கொண்டால் தலை தன் தலையை இழக்கிறது.

★ தங்கத்தில் நட்டத்தைவிட தவிட்டில் வரும் ஆதாயம் மேல்.

★ தூப கலசத்திலிருந்து வரும் புகையும் வாசனையும் பிரிக்க இயலாதவை.

★ பொருளாசையே உலக அமைதியைக் கெடுக்கிறது.

★சமாதான காலத்தில் போர் சிப்பாய்கள் வெயில் காலத்தில் தீப் போல.

★ மிகப்பெரும் அதிர்;டம் ஒரு நல்ல கணவன். அதற்கடுத்து நன்றியுள்ள வேலைக்காரன்.

## ஒன்றே கடவுள்...

ஒரு ஊரில் துணிகளுக்கு சாயம் பூசும் ஒருவன் இருந்தான்.

அவனிடம் பாத்திரம் நிறைய வண்ணக்கலவை இருந்தது. அந்த ஊர் மக்கள் தங்கள் ஆடைக்கு எந்த நிறம் கேட்டு வருகின்றார்களோ அந்த வண்ணப்பாத்திரத்தில் தோய்த்தெடுத்து அவர்கள் கேட்கும் நிறத்தைக் கொடுத்து அனுப்புவான்.

ஒரு முறை ஒருவன் வந்தான்.’ என் துணிக்கு என்ன நிறம் வேண்டும் எனக் கேட்கத் தெரியவில்லை. தங்கள் பாத்திரத்தில் என்ன நிறம் வைத்திருக்கிறீர்களோ அந்த நிறத்தைத் தோய்த்து தாருங்கள் என்றான்.

அந்த சாயக்காரனைப் போலத்தான் பரம்பொருளும்.

சாயக்காரனிடம் நாம் எந்த சாயத்தைக் கேட்டாலும் அதையே அவன் மக்களுக்கு தருவது போல், பரம்பொருளிடம் தத்தம் தேவைகளை எவ்வெள;வாறு கேட்கிறாரோ அவ்வவ்வாறே அவர்களுக்கு உதவுகின்றார்.

அவருக்கு பாரபட்சம் கிடையாது. சாயப்பாத்திரம் போல கடவுள் ஒருவரே ஆவார். அவர் பல வழிகளிலும், பல நிறங்களிலும். பல வடிவங்களிலும் மாறி மாறி அருள் பொழிகின்றார்.

## கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்



கீழே உள்ள குறிப்புகளின் உதவியுடன் அவை உணர்த்தும் நாடு எது என்பதைக் கண்டுபிடியுங்கள்.

1. மேற்கு ஆப்பிரிக்காவில் உள்ள நாடு.

2. இதன் தலைநகர் பமாகோ. நைஜர் நதிக்கரையில் அமைந்துள்ளது.

3. பிரான்ஸ் கட்டுப்பாட்டில் இருந்தவரை ‘பிரெஞ்சு சூடான்’ என்று அழைக்கப்பட்டது.

4. 1960, செப்டம்பர் 22 அன்று விடுதலை பெற்றது.

5. முக்கியத் தொழில் விவசாயம். பருத்தி ஏற்றுமதி செய்யப்படுகிறது.

6. இந்த நாட்டின் பெரும்பான்மையான பகுதி சஹாரா பாலைவனத்தில் அமைந்திருக்கிறது.

7. ஆப்பிரிக்காவில் அதிகமாகத் தங்கம் ஏற்றுமதி செய்யும் மூன்றாவது நாடு, இது.

8. மண்ணால் கட்டப்பட்ட மிகப் பெரிய மசூதி இங்கு இருக்கிறது. 13-ம் நூற்றாண்டில் கட்டப்பட்டு, 1834-ம் ஆண்டு இடிக்கப்பட்டது. மீண்டும் 1907-ம் ஆண்டு புதிதாகக் கட்டி முடிக்கப்பட்டது.

9. மிகப் பிரபலமான விளையாட்டு கால்பந்து.

10. ஒட்டகச்சிவிங்கி, சிங்கம், யானை, சிறுத்தைப் போன்ற விலங்கினங்கள் இங்கே இருக்கின்றன.

விடை: மாலி

# இவ்வார இராசி பலன்கள்

ஜோதிடர் த.சத்தியதாஸன்




இவ்வாரம் சப்தம பாவத்தில் வெள்ளி ஆட்சி பெறுவதால் கணவன்-மனைவி ஐக்கியம், பிள்ளைகளுடன் பாசம், அன்பு நிலவும். உத்தியோகத்தர்கள் ஏற்றம் காண்பர். கன்னிப் பெண்களின் காதல் விவகாரம் ஜெயமளித்து திருமணப் பேச்சுக்கள் நிலவும். வங்கி வசதிகள் உண்டாகும். ஜென்மராசி அதிபதி தனுசு இராசியில் பலமாக இருப்பதால் தேக சுகம், மனோ தைரியம் மிகும்.





இவ்வாரம் இலாப பாவத்தில் குஜன் சஞ்சரிப்பதால் செய்தொழில் இலாபம், விருத்தி ஈடுபடும் கரும காரியங்கள் யாவும் ஜெயம் பெறும். உத்தியோகத்தருக்கு வேலைச்சுமை குறைவடையும். வியாபாரிகள் இவ்வாரம் கூட்டு வாணிபத்தையும் புதிய முதலீடுகளையும் தொடங்கலாம். விவசாயிகள் நவீன முறைகளைக் கையாண்டு பூச்சி, புழுக்களின் தொல்லைகளிலிருந்து பயிர் பாதுகாப்புக்களை மேற்கொள்ளலாம்.




சப்தம பாவத்தில் சூரியன், சனி சஞ்சரிப்பதால் இல்லத்தில் கணவன், மனைவியருக்கிடையே கருத்து மோதல் அவ்வப்போது தோன்றி மறையும். நிதானத்துடன் செயற்பட்டால் நன்மையுண்டு. உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு குறைவடையும். சக உத்தியோகத்தர்களை அனுசரித்து நடந்தால் நன்மை பயக்கும். வியாபாரிகளுக்கு இவ்வாரம் வாடிக்கையாளர்களின் வருகை அதிகரிக்கும். புதிய கொள்முதல் தொடங்கலாம்.




இவ்வாரம் மாதுரு பாவத்தில் வெள்ளி ஆட்சி பெறுவதால் மாதா நலம், கல்வி விருத்தி, வாகன சுகம், மனை நலம், குடும்ப க்ஷேமம் உண்டாகும். ஜீவன பாவத்தை வெள்ளி நோக்குவதால் தொழில் உயர்வு, விருத்தி, வங்கி வசதிகள் உண்டாகும். உத்தியோகத்தர் அதிகாரிகளின் பாராட்டையும் ஊக்குவிப்பையும் பெறுவர். வியாபாரிகளுக்கு கூட்டு வாணிபம் நல்ல இலாபத்தை தரும். விவசாயிகளுக்கு அரச மானியங்கள் உரிய வேளையில் வந்து சேரும்.




இவ்வாரம் தன பாவத்தைக் குஜன் நோக்குவதால் தனலாபம், பொருள் விருத்தி, மனை, வாகன, குடும்பம் அபிவிருத்தி அடையும். வெளிநாட்டு நிதி வந்து சேரும். நற்செய்திகளால் நன்மை உண்டாகும். மாதுரு ஸ்தானத்தில் சனி இருப்பதால் இடையிடையே மாதா நலம் பாதிக்கப்படும். உத்தியோகத்தருக்கு வேலைச்சுமையும் மேலக வேலையும் கிடைக்கும். வியாபாரிகளுக்கு வாடிக்கையாளர்களின் வருகை திருப்தி தரும்.




இவ்வாரம் தன பாவத்தில் வெள்ளி ஆட்சி பெறுவதால் தனம், பொருள், மனை, வாகன, குடும்ப விருத்திகள் உண்டாகும். கணவன்-மனைவி ஐக்கியம், பிள்ளைகளுடன் அன்பு பாசம் நிலவும். செய்தொழில் விருத்தி, இலாபம், சேமிப்பு கிட்டும். உத்தியோகத்தர் பதவிச் சிறப்பு, உத்தியோகத்தர் அதிகாரம் கொள்வர். உத்தியோகப் பெண்களும் தம் பணிகளில் ஏற்றம் காண்பர்.




இவ்வாரம் ஜென்மத்தில் வெள்ளி ஆட்சி, தன ஸ்தானத்தில் குரு சஞ்சரிப்பதால் குடும்பத்தில் அமைதி, நிம்மதி நிலவும். குடும்ப க்ஷேமம் நன்மை தரும். வெளிநாட்டு நிதி வந்து சேரும். உத்தியோக பெண்களும் தம் பணிகளில் ஏற்றம் காண்பர். வியாபாரிகள் புதிய கொள்முதல்களை தொடங்கலாம். பழைய நிலுவைகள் வந்து சேரும். குடும்பப் பெண்களுக்கு இல்லத்தில் பிள்ளைகளுடன் உறவு சீரான நிலையில் இருக்கும்.




இவ்வாரம் செய்தொழில் விருத்தி, இலாபம், சேமிப்பு, வங்கி வசதிகள் மன நிறைவைத் தரும். ஈடுபடும் கரும, காரியங்கள் யாவும் ஜெயமளிக்கும். உத்தியோகத்தருக்கு கணிசமான அளவு வேலைச்சுமையும் மேலதிக வேலையும் கிட்டும். வியாபாரிகளுக்கு புதிய முதலீடுகளை மட்டுப்படுத்தல் வேண்டும். குடும்ப பெண்களின் நிர்வாகம் சிறப்பாக நடைபெறும்.




ஜென்மத்தில் சூரியன், சனி சஞ்சரிப்பதால் உஷ்ண ரோகத்திற்கு இடமுண்டு. தேகாபிமானம் அவசியம். இலாப பாவத்தில் இவ்வாரம் குரு சஞ்சரிப்பதால் செய்யும் தொழிலால் இலாபம், சேமிப்பு, நிதிவரவு, வங்கி வசதிகள் மன நிறைவைத் தரும். கர்ம பாவத்தில் சுபர் நோக்குவதால் உத்தியோகத்தருக்கு பதவிச் சிறப்பு உத்தியோக அதிகாரம் வரும். புத்திரர்களால் பெண்களுக்கு மிகுந்த நன்மையுண்டு.




இவ்வாரம் ஜீவன பாவத்தில் வெள்ளி உச்சயோகம் பெறுவதால் செய்தொழில் விருத்தியுண்டு. ஈடுபடும் கரும காரியங்கள் ஜெயமளிக்கும். குடும்பத்தில் இல்லறம் நல்லறமாக அமையும். விவேக வீரிய பாவத்தில் சுபர் சஞ்சரிப்பதால் மனோ தைரியம் தரும். நோய்கள் அகலும். தேகம் புதுப்பொலிவு பெறும். உத்தியோகத்தருக்கு பதவி உயர்வு ஏற்படும். இல்லறத்தில் பெண்களுக்கு மிகுந்த மரியாதை ஏற்படும்.




இவ்வாரம் செய்தொழில் விருத்தி, தொழில் இலாபம், சேமிப்பு, வங்கி வசதிகள், மன நிறைவைத் தரும். உத்தியோகத்தருக்கு வேலைச்சுமையும் மேலதிக வேலையும் கிடைக்கும். வியாபாரிகள் கூட்டு வாணிபத்தால் நல்ல இலாப முன்னேற்றம் காண்பர். விவசாயிகள் நவீன முறைகளைக் கையாண்டு பயிர்ச்செய்கைகளை மேற்கொள்ள முடியும். பெண்களுக்கு சௌபாக்கிய யோகம் ஏற்படும்.




ஜென்மத்தில் குஜன் சஞ்சரிப்பதால் உஷ்ண ரோகத்திற்கு இடமுண்டு. தேகாபிமானம் முக்கியம். அஷ்டமத்தில் வெள்ளி இருக்க தனபாவத்தை நோக்குவதால் தனம், பொருள், மனை, வாகன, குடும்பம் அபிவிருத்தி ஏற்படும். வியாபாரிகள் புதிய கொள்முதலை தொடங்கலாம். உத்தியோகத்தருக்கு மேலதிகாரிகளின் அழுத்தமும் வேலைச்சுமையும் குறையும். பெண்களின் குடும்ப நிர்வாகம் புத்திரர்களின் உதவியுடன் நன்கு இடம்பெறும்.

# துல்லியமாக பலன் சொல்லும் பிரசன்ன ஜோதிடம்

பிரசன்னம் என்பது ஜோதிடத்தில் ஓர் அங்கமாகும். ஒரு குறிப்பிட்ட விஷயம் சம்பந்தமாக கேட்கப்படும் கேள்விக்கு, ஜனன கால ஜாதகத்தை கருத்தில் கொள்ளாமல், வாடிக்கையாளர் கேள்வி கேட்ட நேரத்தின்போது வான்மண்டலத்தில் உண்டான கிரக நிலைகளை கொண்டு பதில் கூறுவதே 'பிரசன்னம்' ஆகும்.



பொதுவாக ஜனன கால ஜாதகம் என்பது, ஒரு குழந்தை பிறந்த நேரத்தின் போது வான்மண்டலத்தில் உள்ள நவக்கிரகங்களின் நிலையைக் கொண்டு கணிதம் செய்யப்படுவது ஆகும். இந்த ஜனன கால ஜாதகத்தில் உள்ள விதி என்கிற கொடுப்பினை மூலமாக, அந்த ஜாதகர் தன் வாழ்நாளில் அனுபவிக்க கூடிய நல்ல, தீய பலன்களைப் பற்றியும், மதி என்கிற தசாபுத்திகள் மூலமாக அந்த நல்ல தீய பலன்கள் எப்போது நடைபெறும் என்பது பற்றியும் தெரிந்து கொள்ளலாம்.

ஜனன கால ஜாதகமே இல்லாதவர்களுக்கும், பிறந்த நேர குறிப்புகளில் குழப்பம் உள்ளவர்களுக்கும், பிரசன்னம் என்பது ஒரு மிகப்பெரிய வரப்பிரசாதம் என்றே கூற வேண்டும். ஜாதகமே இல்லை என்றாலும் வாழ்க்கையில் எழும் பல வகையான பிரச்சினைகளுக்கும், சில முக்கிய முடிவுகள் எடுப்பது சம்பந்தமான கேள்விகளுக்கும் ஜோதிட ரீதியில் இந்த பிரசன்ன முறை மூலமாக மிக எளிதாக தீர்வு காண முடியும்.

ஏன் சில நேரங்களில் ஜாதகம் உள்ளவர்களுக்கும் கூட இந்த பிரசன்ன முறை என்பது இன்றியமையாததாக ஆகின்றது.

அது எப்படி என்று பார்ப்போம்.. உத்தியோகத்தில் இருக்கும் ஒருவர் ஜோதிடரிடம் சென்று, தான் இருக்கும் வேலையை விட்டு சொந்த தொழிலில் இறங்கலாமா? என்று கேட்பதாக வைத்துக் கொள்வோம்.

ஜோதிடத்தில் 6-ம் பாவம் என்பது உத்தியோகத்தையும், 7-ம் பாவம் என்பது சொந்தத் தொழிலையும் குறிக்கும். இவ்விரு பாவங்களில் ஏது 2, 4, 6, 10 போன்ற புறம் சார்ந்த பாவங்களை அல்லது புறத்தை கெடுக்காத பாவங்களை தொடர்பு கொண்டு வலுவான அமைப்பில் இருக்கின்றதோ அது சம்பந்தப்பட்ட துறையில் இருப்பதே சிறந்ததாகும்.

ஒரு வேளை விதியின் படி இவ்விரு பாவங்களும் சம வலுவுடன் இருந்து, மதி என்கிற நடப்பு தசாநாதன் இவ்விரு பாவங்களில் ஏதாவது ஒன்றை பார்க்கவில்லை எனில், இவ்விரண்டில் எதை செய்தாலும் பெரிய வித்தியாசம் வராது என்பதே இங்கு அர்த்தமாகும். ஆனால் ஜோதிடர் இதை ஆதாரமாகக் கொண்டு உத்தியோகம் அல்லது சொந்தத் தொழில் இவற்றில் எதை செய்தாலும் உனக்கு நன்மையே என்று கூறும் பொழுது, ஜாதகர் மேலும் குழப்பமடையக்கூடும். ஆதலால் இவ்விரண்டில் எதை செய்யலாம் என்று உறுதியாக கூறினால் தான் ஜாதகரின் சந்தேகம் தீரும்படியாக இருக்கும்.

இவ்வாறு இருக்கும் பட்சத்தில் பிரசன்னம் மூலமாக, மேற்கூறிய இரண்டில் எதை செய்தால் அதிக நன்மை என்பதை, உறுதியாக கூறிவிடலாம். ஆக ஜாதகம் உள்ளவர்களுக்கும் இது போன்ற சமயங்களில் பிரசன்னம் அவசியமாகின்றது.

மிக மிக குறுகிய கால இடைவெளியில் அரங்கேறும் சம்பவங்களையும், ஒரே நாளில் அரங்கேறும் சம்பவங்களையும் ஜனன ஜாதகத்தில் உள்ள விதி மற்றும் மதியை கொண்டு நிர்ணயம் செய்வது என்பது சற்று கடினமான காரியம் ஆகும்.

ஒரு சில வினாடி இடைவெளியில் பிறந்த இரட்டை குழந்தைகளின் ஜாதகங்களை கூட, உப நட்சத்திர கோட்பாட்டின் மூலம் மிக அழகாக வேறுபடுத்தி, பின் அதற்கான பலனை தனித்தன்மையுடன் கூறுவதே உயர் கணித சார ஜோதிடத்தின் சிறப்பம்சமாகும். இதே உப நட்சத்திர கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு தான் பிரசன்ன ஜாதகமும் கணிக்கப் படுகிறது.

கிரக நிலைகளையும், பன்னிரு பாவ நிலை களையும் பற்றி தெரிவிப்பது ஜாதகம். ஜோதிடரிடம், பிரசன்னம் பார்ப்பதற்காக வருபவரின் மனதில் இருந்து கேள்வி எப்போது உதயமாகின்றதோ; அந்த குறிப்பிட்ட நேரத்தின் போது வான்மண்டலத்தில் உள்ள கிரக நிலைகளே பிரசன்ன ஜாதகத்தில் இடம்பெறும். ஆனால் லக்னப் புள்ளியை பொறுத்து வேறுபடும் பாவ நிலைகள் என்பது, கேள்வி உதயமான நேரத்தை கருத்தில் கொள்ளாமல் வாடிக்கையாளர் குறிப்பிடும் எண்ணை (1 - 249) பொறுத்து கணக்கிடப்படுகின்றது.

வான்மண்டலத்தில் உள்ள 27 நட்சத்திரங்களும், மொத்தம் 249 உபபிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. ஆக 360 பாகையைக் கொண்ட வான்மண்டலம் என்பது 249 உப நட்சத்திரங்களை கொண்டது ஆகும். இந்த 249 உபநட்சத்திர பிரிவுகளையும், 1 முதல் 249 வரை உள்ள வரிசை எண்களில் தொகுக்கப்பட்டுள்ளது.

பிரசன்ன ஜோதிடர், வாடிக்கையாளரிடம் 1 முதல் 249 உள்ள எண்களில் ஏதாவது ஒரு எண்ணை குறிப்பிடுமாறு கூறுவார். வாடிக்கையாளர் எந்த எண்ணை குறிப்பிடுகின்றாரோ அந்த எண்ணிற்குரிய உபநட்சத்திரமே லக்ன பாவ உபநட்சத்திரமாக அமையும். அதாவது அந்த எண்ணின் வரிசைக்குரிய உபநட்சத்திரத்தின் பாகையே, லக்ன ஆரம்ப முனையின் பாகையாக நிர்ணயம் செய்யப்படும். பின்னர் அந்த லக்ன புள்ளியை மையமாகக் கொண்டு, மற்ற பதினொரு பாவங்களின் ஆரம்ப முனைகள் கணக்கிடப்பட்டு பிரசன்ன ஜாதகம் கணிதம் செய்யப்படுகிறது.

இவ்வாறு வாடிக்கையாளரிடம் இருந்து ஒரு எண்ணை பெற்று, பிரசன்ன ஜாதகத்தின் லக்னத்தை தீர்மானிப்பதில் ஒரு சூட்சுமம் உள்ளது. பொதுவாக ஜோதிடத்தில் லக்ன பாவம் என்பது ஜாதகர் ஒரு செயலில் ஈடுபடும் தன்மையையும், ஜாதகரின் எண்ண ஓட்டங்களையும் (சிந்தனை) குறிக்கும். ஆக பிரசன்ன ஜோதிடத்தில் ஜாதகர் தெரிவிக்கும் எண்ணானது, அவர் நினைத்த அந்த செயலைக் குறிக்கும். மேலும் அந்த செயல் நிறைவேறுமா.. நிறைவேறாதா? அப்படி நிறைவேறும் எனில் எப்போது நிறைவேறும்? என்று தெரிவிப்பது, ஜோதிடரிடம் வாடிக்கையாளர் கேட்ட கேள்வி நேரத்தின் போது உள்ள கிரக நிலைகளே ஆகும்.

## வரைமுறைகள்

பிரசன்ன ஜோதிடத்திற்கு என்று ஒரு சில வரைமுறைகள் இருக்கின்றன. அவற்றை இங்கே பார்ப்போம்.

★ பிரசன்னத்தின் மூலமாக நாம் ஒரே ஒரு கேள்விக்கு மட்டுமே விடை காண முடியும். ஒன்றுக்கு மேற்பட்ட கேள்விகள் இருந்தால் அத்தனை முறை பிரசன்னம் பார்க்கப்பட வேண்டும்.

★ பிரசன்னத்தில் கேட்கப்படும் கேள்விகள் யாவும் நியாயமானதாகவும், உண்மையானதாகவும் இருக்க வேண்டும். அதாவது இந்தியா-ஆஸ்திரேலியா கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி வெற்றி பெறுமா?, வீராட் கோலி சதமடிப்பாரா? போன்ற பொதுவான கேள்விகளுக்கு பிரசன்னத்தின் மூலமாக தீர்வு காண முடியாது.

★ பிரசன்னத்தில் ஜாதகர் நேரிடையாக தமக்கோ, தன் குடும்ப உறுப்பினர்களின் சார்பாகவோ, நெருங்கிய நண்பர்களின் சார்பாக கேள்விகளை முன் வைக்கலாம். அப்போது தான் பிரசன்னம் பலிதம் ஆகும்.

# இஸ்லாம் கூறும் நற்பண்புகள்

இஸ்லாம் கூறும் நற்பண்புகளுள் சக மனிதர்களுடனான உறவு மிகவும் முக்கியமானதாகும். சக மனிதர்கள் நம் உறவினர்களாக இருக்கலாம் அல்லது அண்டை வீட்டினராக இருக்கலாம், அல்லது நம்முடன் பணி புரிபவர்களாக இருக்கலாம். இன்னும் நம்முடன் பயணம் செய்பவர்களாகவோ, அல்லது வழிப்போக்கர்களாகவோ இருக்கலாம். யாராக இருந்தாலும் அவர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ள வேண்டும் என்பதை இஸ்லாம் வலியுறுத்துகிறது.

'உங்களில் எனக்கு மிகப் பிரியமானவரை, மறுமை நாளில் எனக்கு மிக நெருக்கமானவரை நான் உங்களுக்கு அறிவிக்கட்டுமா?' என்று நபி (ஸல்) அவர்கள் கேட்டார்கள். நபித்தோழர்கள் 'ஆம்' என்றதும், 'உங்களில் நற்குணமுடையவரே' என்று அருளினார்கள்.

'மறுமையில் ஒரு அடியானின் தராசில் நற்குணத்தை விடவும் கனமானது எதுவும் கிடையாது' என்றும் பெருமான் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

பிறருக்கு உதவி செய்வது மட்டுமல்ல, இன்முகத்துடன் இருப்பது, அடுத்தவர்கள் வார்த்தைகளால் புண்படுத்தாமல் இருப்பது, கோபம் வரும் பொழுது அதை அடக்குதல் என்று நற்குணங்களை சொல்லிக் கொண்டே போகலாம்.

'நற்குணங்களை நிறைவு செய்வதற்காகவே நான் அனுப்பப்பட்டுள்ளேன்' என்று நபி (ஸல்) அவர்கள் நவின்றுள்ளார்கள்.


'ஒரு முறை அபூஹுரைரா (ரலி) அவர்களுக்கு, அறிவுரை வழங்கும் பொழுது, உன்னைத் துண்டித்து வாழ்பவருடன் நீ சேர்ந்து வாழ், உனக்கு அநீதம் செய்தவரை மன்னித்து விடு, உனக்குத் தர மறுத்தவருக்கு நீ கொடு, இவையே நற்குணங்களாகும்' என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

'இன்னும் இரவெல்லாம் நின்று வணங்குபவர்களுக்கும், பகலெல்லாம் நோன்பு வைத்து வருபவர்களுக்கும் கொடுக்கப்படும் அந்தஸ்து இப்படிப்பட்ட அழகிய நற்குணங்களைப் பெற்றவர்களுக்கும் கொடுக்கப்படும்' என்றும் மொழிந்துள்ளார்கள்.

'எந்தக் காரணமாக இருந்தாலும் மற்றவர்களுடனான நம் உறவைத் துண்டித்துக் கொள்ளக்கூடாது' என்பதை இறைவன் மட்டுமல்லாது, நபி (ஸல்) அவர்களும் விரும்புகிறார்கள்.

இன்று எத்தனையோ பேர் பெரிதாக எந்தக் காரணமும் இன்றி உறவுகளைத் துண்டித்து வாழ்கிறார்கள். பிள்ளைகள் தங்கள் பெற்றோர்களிடம் கொண்ட பிணக்கு காரணமாக, அவர்களைப் பிரிந்து வாழ்வது மிகவும் வருத்தம் தரும் விஷயமாகும். இன்னும் உடன்பிறப்புகளிடம் சண்டை போட்டு எதிர் எதிரே சந்தித்துக் கொண்டாலும் ஒருவரையொருவர் அறியாத மனிதர்கள் போன்று பொது இடங்களிலும், திருமணம் போன்ற வைபவங்களிலும் நடந்து கொள்கிறார்கள்.

ஒருவருக்கொருவர் குறைந்த பட்சம் 'ஸலாம்' கூட சொல்வதில்லை. 'தான்'என்னும் அகங்காரம் மக்களைப் பாடாய்ப் படுத்துவதே இதற்குக் காரணம். நபி (ஸல்) அவர்கள் 'மக்களே ஸலாம் சொல்லும் பழக்கத்தை உங்களுக்குள் பரவலாக்குங்கள், உணவளியுங்கள், உறவினர்களுடன் சேர்ந்து வாழுங்கள், இரவில் மக்கள் உறங்கும்பொழுது நீங்கள் எழுந்து தொழுங்கள், நீங்கள் நிம்மதியாக சுவனம் செல்வீர்கள்' என்று உபதேசம் செய்துள்ளார்கள்.



உறவினர்களுள் வறுமையில் வாடுபவர்களைக் கண்டால் எங்கே நம்மிடம் பண உதவி கேட்டு விடுவார்களோ என்று எண்ணி ஒதுங்கிச் செல்லும் மனப்பான்மை மிகவும் மோசமானது. விருந்து, உபசாரங்களில் கூட வறிய நிலையில் உள்ள உறவினர்களைத் தவிர்த்து, செல்வ நிலையில் உள்ள உறவினர்கள் அழைக்கப்படும் வழக்கத்தைக் காண்கிறோம்.

நற்குணம் உடையவர்கள், சக மனிதர்களை பாரபட்சமின்றி நடத்துவர். செல்வச் செழிப்புடன் வாழ்பவர்கள் வறுமையில் வாடும் உறவினர்களுக்கு, தொழில் கற்றுக் கொடுத்து, தொழில் தொடங்குவதற்கு உதவி செய்தால் அவர்களும் வாழ்க்கையில் உயர்ந்து தங்களைப் போன்றவர்களுக்கும் உதவும் நிலை ஏற்படும்.

நம்முடன் அலுவலகத்தில் சேர்ந்து பணி புரிபவர்களுடன், அனுசரணையுடன் நடந்து கொள்ள வேண்டும். அவர்களுடன் அடிக்கடி வாதம் செய்வது அல்லது தர்க்கம் செய்வதைத் தவிர்க்க வேண்டும்.

அது போலவே மற்றவர்கள் பேசும் பொழுது ஆர்வத்துடன் கவனிப்பதுடன், அவர்கள் சொல்வது சரியாக இருந்தால் ஆமோதிக்கவும் வேண்டும். ஒவ்வொரு பேச்சுக்கும் எதிர் வாதம் செய்வதால் நம்முடன் பேசுவதற்கு மற்றவர்கள் தயங்குவார்கள். நம்முடன் பேசுவதையே குறைத்தும் கொள்ளலாம்.

அவ்வாறு இல்லாமல், பிற மனிதர்களுடனான நட்பை நாம் மேம்படுத்திக் கொள்வதால், நம்மை நாடி வரும் மனிதர்களின் முகத்தில் மலர்ச்சியும், நிம்மதியும் தெரியும். கேலிப்பேச்சுகளும், ஏளனப் பார்வையும் சக மனிதர்களை நம்மை விட்டு விலக்கி விடும்.

நம்முடைய அருகாமை மற்றவர்களுக்கு மகிழ்ச்சியையும், பாதுகாப்பு உணர்வையும் கொடுக்கும் விதத்தில் நம்முடைய நடைமுறைகளை மாற்றுதல், அவர்களுக்கு மட்டுமல்லாமல் நமக்கும் நன்மைகளை அள்ளித் தரும். சக மனிதர்களிடம் நம்முடைய இனிமையான வார்த்தைகள் நரகத்தை விட்டும் நம்மைப் பாதுகாக்கும். இன்னும் நல்ல வார்த்தைகள் தர்மம் செய்வதற்கு சமம்.

'அண்டை வீட்டினர் பசியோடு இருக்கும் பொழுது யார் வயிறு நிரம்பச் சாப்பிடுகிறாரோ அவர் இறை நம்பிக்கை உடையவராக இருக்க மாட்டார்' என்றும், 'அண்டை வீட்டினரை நிம்மதியற்று இருக்கச் செய்பவர்கள் சுவனம் செல்ல மாட்டார்கள்' என்றும் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

அதுபோலவே உங்களுடன் பயணம் செய்பவர்களுடன் அன்புடன் உரையாடுங்கள், உணவினை அவர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள். உங்களுடன் பணி புரிபவர்கள் ஏதாவது நெருக்கடியில் இருந்தால் அவர்களுக்கு உதவுவதற்கு முயற்சி செய்யுங்கள், இல்லையென்றால் ஆறுதல் வார்த்தைகள் கூறி, அவர்களுக்காக இறைவனிடம் கையேந்துங்கள்.

இப்படிப்பட்ட பண்புகள் சக மனிதர்களை உங்களின் பக்கம் ஈர்க்கும். அவர்களின் சுக, துக்கங்களில் பங்கு பெறுவதால் உங்களின் மீதும் அவர்கள் அன்பு கொள்வார்கள். இதனால் மற்ற மக்களுடனான சகோதரத்துவமும், உறவும் பலப்படும். இன்ஷா அல்லாஹ் இவற்றை நாம் வாழ்க்கையில் கடைபிடிக்கும்பொழுது நம்முடைய வாழ்வும் மகிழ்ச்சியாக அமையும்.

# பட்டாளப்புழு பீடைத்தாக்கம்

நஞ்சற்ற புரத உணவு என்று சொன்னால் முதலில் நமக்கு ஞாபகத்திற்கு வருவது சோளம். ஆனால் அதற்கும் தற்போது பாரிய பிரச்சனை ஏற்பட்டு விட்டது. அதுவும் இனி இரசாய சோளனாக மாற்றமடைகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் விவசாயத்தின் மறுவயற் பயிராக சோளம் பயிர்ச் செய்கை முக்கிய இடம் பிடித்து வருகின்றது. மட்டக்களப்பு மாவட்டத்தில் சோளம் விவசாயத்தினை ஏழு செயகப் பிரிவில் மேற்கொண்டு வருகின்றனர்.



அந்தவகையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் வெல்லாவெளி, பட்டிப்பளை, வவுணதீவு, செங்கலடி, கிரான், கோறளைப்பற்று மத்தி, வாகரை ஆகிய ஏழு பிரதேச செயலகப் பிரிவிவுகளில் சோளம் பயரிடப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 643 கெஹ்டேயர் நிலப்பரப்பில் தற்போது சோளம் பயிர்செய்கை செய்யப்பட்டுள்ளது. இவற்றில் 40 வீதமான சோளம் பயிர்களில் பட்டாளப்புழு பீடை தாக்கியுள்ளது. மேலும் இன்னும் 75 வீதம் வரை தாக்கக் கூடிய சந்தர்ப்பம் நிலவி வருகின்றது.

அதாவது பட்டாளப்புழுவானது பசி அடங்காத ஆக்கிரமிப்பு புழுக்கள் ஆபிரிக்காவில் இருந்து இலங்கைக்கு வந்து விட்டன. இதனை Fall Armyworm என அழைக்கப்படும் புழுக்கள் Spodoptera Frugiperda என்னும் அந்துவின் குடம்பிப் பருவம் ஆகும்.

ஆனால் சோளம் பயிர்ச் செய்கையை தாக்கி பெருமளவில் பாதிப்பை ஏற்படுத்தும் வெளிநாட்டில் இருந்து இலங்கைக்குள் உள் நுழைந்த அந்நிய நாட்டுப் பீடையான படைப்புழுவினுடைய தாக்கத்தில் இருந்து உடனடியாக விவசாயிகளை மீட்டெடுக்கும் நோக்கோடும், விவசாயிகளின் பொருளாதாரம் பாதிப்படையாது பாதுகாக்கவும், படைப்புழுவின் தாக்கம் சம்பந்தமாகவும் மட்டக்களப்பு மாவட்ட விவசாய திணைக்களம் பல்வேறு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

விவசாயிகளை காப்பாற்றும் நோக்கில் விழிப்புணர்வு கருத்தரங்கில் மட்டக்களப்பு மாவட்ட விவசாய திணைக்கள அதிகாரிகள் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு துண்டுப் பிரசுரங்களை வழங்கி விளக்கங்களை வழங்கியதுடன், விவசாய செய்கை செய்யும் இடங்களில் விவசாயிகளுக்கு பட்டாளப்புழு இனங்காண்பது எவ்வாறு என்பது பற்றியும் விளங்கங்களை வழங்கி வருகின்றனர்.

பட்டாளப்புழு எனும் பீடை தாக்கம் அம்பாறை மாவட்டத்தில் முதலில் காணப்பட்டது. அதன் பிற்பாடு தற்போது மட்டக்களப்பு மாவட்டத்தின் சோளம் பயிர் செய்யப்பட்டுள்ள பிரதேசத்தில் இனங்காணப்பட்டுள்ளதுடன், முல்லைத்தீவு பகுதிகளிலும் காணப்படுவதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதன் காரணமாக சோளம் விவசாயிகள் பெரிதும் பாதிப்படைந்து வருகின்ற நிலையில் விவசாயிகளின் பிரச்சினைகளை ஆரம்பத்திலே இங்கண்டு தீர்க்கும் வகையில் மட்டக்களப்பு மாவட்ட விவசாய திணைக்களம் விவசாயிகளுக்கு விழிப்பூட்டும் கருத்தரங்கினை பல இடங்களில் நடாத்தி வருகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சோளம் பயிர்களில் பட்டாளப்புழு பீடை தாக்கியுள்ளதால் இதனை இரசாயண மருந்தால் மாத்திரமே கட்டுப்படுத்த முடியும் என்று மட்டக்களப்பு மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர் ப.பேரின்பராசா தெரிவித்தார்.

இலங்கையில் முன்னதான காலங்களில் இலங்கை சோளம் விதைகள் பயரிடப்பட்ட போது எந்தவித பீடை தாக்கங்களும் இல்லாமல் சோளம் செய்கை பாரிய விளைச்சலையும், இலாபத்தினையும் ஈட்டித் தந்துள்ளது. ஆனால் தற்கால அரசாங்கத்தினால் வெளிநாட்டில் இருந்து விதைகள் இறக்குமதி செய்யப்பட்டு வருகின்றது.

வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்படும் களப்பு விதை மூலம் பட்டாளப்புழு பீடை தாக்கம் தற்போது இலங்கையில் காணப்பட்டுள்ளது. வெளிநாட்டு பீடையாகவே பட்டாளப் புழு பீடை காணப்படுகின்றது. இது சோளம் உட்பட மேலும் நெல், கரும்பு அடங்களாக நூறுக்கு மேற்பட்ட பயிர்களை அழிக்கக் கூடிய வல்லமை பட்டாளப்புழு விடம் காணப்படுகின்றது.

இதனை தடுக்கும் வகையில் மட்டக்களப்பு மாவட்ட பிரதி விவசாயப் விரிவாக்கல் பணிப்பாளர் அலுவலகத்தின் ஏற்பாட்டில் உப உணவுப் பயிர்களின் நோய் தாக்கம் தொடர்பில் தெளிவூட்டும் கருத்தரங்குகள் மட்டக்களப்பு மாவட்டத்தில் விவசாயிகளுக்கு நடைபெற்று வருகின்றது.

தற்போது மழை காலம் ஆரம்பித்துள்ளதால் மட்டக்களப்பு மாவட்டத்தில் உப உணவுப் பயிர் செய்கை, சேனைப் பயிர் செய்கை ஆரம்பமாகியுள்ளது. இந்த பயிர் செய்கையில் பிரதானமாக சோளம் செய்கை பாரியளவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இச் சோளம் செய்கையில் கடந்த ஆண்டுகளில் இல்லாத பட்டாளப்புழு எனும் பீடை தாக்கம் தற்போது மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்டூர் மலையார்கட்டு, பாலையடிவட்டை, வாகரை புதுமண்டபத்தடி, ஆயித்தியமலை, தாந்தாமலை, பன்சேனை, கொக்கட்டிச்சோலை உட்பட சில பிரதேசத்தில் பரவியுள்ளதனை கண்டுபிடித்துள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் ப.பேரின்பராசா தெரிவித்தார்.

பட்டாளப்புழு எனும் பீடை மட்டக்

**ந.குகதர்சன்**



களப்பு மாவட்டத்தில் ஏனைய பிரதேசத்திற்கும் பரவாதிருக்கும் வகையில் விவசாயிகளுக்கு மாவட்ட ரீதியில் தெளிவுபடுத்தும் நிகழ்வுகள் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள அனைத்து விவசாய வலயங்களிலும் நடைபெற்று வருகின்றது.

இதன்படி மலையார்கட்டு, பாலையடிவட்டை பிரதேசத்திலும், வாகரை வடக்கு வலயத்திலுள்ள வெருகல், ஈரளக்குளம் பிரதேசத்திலும், மட்டக்களப்பு மத்தி வலயத்திலுள்ள சில்லிக்கொடியாறு, ஒளிமடு, பெரிய புல்லுமலை பிரதேசத்திலும் ஆரம்பக்கட்டமாக நடைபெற்றது எனவும் பிரதி விவசாயப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

தற்போது தென் இந்தியாவில் பயிர்களை உண்டு இப்புழுக்களின் தாக்கம் தீவிரமாகப் பரவி வருகின்றது. இரு வருடங்களிற்கு முன்னர் (2016) நைஜீரியாவில் கண்டுபிடிக்கப்பட்ட அந்நிய ஆக்கிரமிப்பு புழுவானது தற்போது ஆபிரிக்காவில் 44 நாடுகளில் பரவியுள்ளது. 2018 மே இந்தியாவிற்கும் பரவியது.

அனுமதியில்லாது கொண்டுவரப்படும் செடிகள் மூலம் இலகுவாக இப்புழு நம் நாட்டிற்குள் வரலாம். இதன் அந்துவானது ஒரே நாளில் 100 கிலோ மீற்றர் வரை பறக்கும் வல்லமையை கொண்டுள்ளதால் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு காற்றின் மூலம் வருவதற்கு அதிகளவான வாய்ப்புக்கள் உள்ளன.

**புழுவை இணங்காண்பது எவ்வாறு?**

பட்டாளப்புழுவின் தலையில் தலைகீழான லு வை எழுத்து போன்ற வடிவம் காணப்படும் அதனை கொண்டு பூவை இணங்காண முடியும். மேலும் உடலெங்கிலும் கொப்புளங்கள் போன்று வீங்கிக் காணப்படும்.

மேலே இருந்து பார்க்கும் போது ஒவ்வொரு துண்டத்திலும் இவ்வாறு நான்கு கொப்புளங்களை காணலாம். கடைசி உடல் துண்டத்திற்கு முன்னால் உள்ள துண்டத்தில் இக்கொப்பளங்கள் நான்கு மூலைகளில் அமைந்திருக்கும்.

**பயிரில் தாக்கம் எவ்வாறு காணப் படும்?**

சோளத்தின் இலைகளில் துளைகளை ஏற்படுத்தி முதலில் உண்டு, பின்னர் அது கிளை பிரிந்தது போன்ற நீண்ட துளை வரும் வரை உண்ணும். இளம் பொத்திகளின் மத்தியிலும் உண்டிருப்பதைக் காணலாம்.

**பட்டாளப்புழுக்கள் விரும்பும் உண வுகள் எவை?**

சோளம், கரும்பு, நெல், மரக்கறிப் பயிர்கள் உட்பட நூறுக்கும் அதிகமான தாவரங்களை உண்ணும்.

**பட்டாளப்புழுக்களின் தாக்கத்தை எவ்வாறு கட்டுத்துவது?**

உலகெங்கிலும் தற்போதே இதனைக் கட்டுத்துவது பற்றி ஆராயப்படுகின்றது. நிச்சயமான முறை இல்லை. பூச்சிநாசினிகளிற்கு எதிராக விரைவாக விருத்தி அடையும், உயிரியல் கட்டுப்பாட்டில் பலன் கிட்டும் வரை பாதுகாப்பாக இருப்பது முக்கியமாகும். கண்டவுடன் கையால் பிடித்து அழிக்கவும்.

பட்டாளப்புழுவின் நடமாட்டமானது மாலை ஆறு மணி தொடக்கம் இரவு பத்து மணிவரை இடம்பெறும். அந்த வேளையில் மாத்திரம் இரசாயண பூச்சிநாசினிகளை தெளிப்பதன் மூலம் புழுவினைக் கட்டுப்படுத்த முடியும். இல்லையேல் கட்டுப்படுத்த முடியாது போய்விடும்.

எனவே சோளம் விவசாயிகளின் பட்டாளப்புழுவின் தாக்கத்தில் இருந்து மீண்டால் மாத்திரமே தங்களுடைய வறுமானத்தை ஈட்டிக் கொள்ள முடியும். இல்லையேல் வேளான்மை மூலம் பல விவசாயிகள் நஷ்டத்தை எதிர் கொண்ட நிலமை நேரிடும்.



சோளம் விவசாயத்தை நம்பி வாழும் மக்களின் வாழ்வில் இருளை கொண்டு வரும் செயலாகவே பட்டாளப்புழுவின் வரவு பதிவாகியுள்ளது. நமது நாட்டு விதைகளை பயிரிட்டு வெளிநாட்டு புழுக்களின் தாக்கத்தில் இருந்து காப்பாற்றிக் கொள்வதற்கு அனைத்து விவசாயிகளும் முன்வரவேண்டும்.

மெரும்பாலும் வாகரைப் பிரதேச மக்கள் தங்களுடைய வறுமையை போக்கும் வகையில் அதிகமானோர் செய்யும் விவசாயம் சோளம். அதற்கும் தற்போது கடை விதிக்கும் வகையில் பீடை ஏற்பட்டுள்ளது. இதனை கட்டுப் படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும்.

பட்டாளப்புழுவின் தாக்கத்தினை ஆரம்ப கட்டத்திலேயே அழித்து விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தினை



உயர்த்துவதற்கு ஒரு நிலையான அரசாங்கம் முன்வருவதுடன், இதனை இவ்வருடத்திலே அடியோடு அழிப்பதற்கு விவசாய திணைக்களம் உரிய வகைகளை கையாண்டு விவசாயிகளை காப்பாற்றுமாறு சோளம் விவசாயிகள் கோருகின்றனர்.

மேலும் பட்டாளப்புழுவின் தாக்கம் எங்களுடைய வேளான்மையையும் தாக்கிவிடும் என்ற அச்சத்தில் தற்போது விவசாயிகள் உள்ளனர். அதனை கருத்தில் கொண்டு செயற்பட அரசாங்கம் மற்றும் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க முன்வாருங்கள்.

# மாணவர்களின் கல்வியில் இடைவிலகல் ஏற்படுவதற்கான காரணங்கள்

இன்றைய நவீன கால உலகலாவிய ரீதியில் ஒரு மனிதனின் அறிவினை விருத்தி செய்கின்ற தளமாக அமைவது கல்வியாகும். இக் கல்வி என்னும் சொல்லானது பரந்து பட்ட பொருளினை உடையதாகக் விளங்குகின்றது. ‘கல்’ என்ற வினையடியோடு ‘வி’ என்ற தொழிற்பெயர் விகுதி சேர்ந்து கல்வி ஆகிறது. கல்வி என்பது மாணவனின் உள்ளே இருப்பதனை அகழ்ந்து வெளிக்கொணர்க என்ற கருத்தும் அமையும். ஆகவே குழந்தையின் உள்ளே இருக்கும் அறிவாற்றல் முதலியவற்றை மலரச்செய்வதே கல்வியாகும்.

மாணவர்களுக்கு கல்விதான் முதன்மைச்சாதனமாகக் காணப்படுகின்றது. ஒரு நாட்டின் வளம் அந்த நாட்டின் கல்வித் தரத்தைப் பொறுத்தே அமைகின்றது. எமது முன்னோர் காலத்து கல்வியை விட இன்றைய மாணவர்களின் கல்வியானது பல்வேறு பிரச்சினைகளை மையப்படுத்தியதாகக் காணப்படுகின்றது. அதாவது மாணவர்களின் கல்வியில் இடைவிலகல் ஏற்படுவது இங்கு குறிப்பிடத்தக்கது. எமது முன்னோர்கள் அனைவரும் அவர்களது கல்வியை முழுமை பெறக்கற்கவில்லை என்பது நம் அனைவருக்கும் தெரிந்த விடயமாகும். அதற்குக் காரணம் கல்வி கற்பதற்கு போதிய வசதியின்மை, யுத்த சூழ்நிலைகள் இது போன்ற காரணங்களைக் குறிப்பிடலாம்



ஆனால் இன்றைய மாணவர்களின் கல்வியில் இடைவிலகல் என்பது அதிகமாகவே காணப்படுகின்றது. எமது நாட்டில் அனைவருக்கும் இலவசக்கல்வி வழங்கப்படுகின்ற போதும் அதனை மாணவர்கள் பெற்றுக் கொள்ளும் அளவு என்பது மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. பாலர் பாடசாலை முதல் பல்கலைக்கழகம் வரை மாணவர்களுக்கு கற்றலோடு தொடர்புபட்ட அனைத்து விடயங்களும் இலவசமாகவும் குறைந்த செலவிலும் வழங்கப்படுகின்றது. அதாவது இலவச பாடநூல் விநியோகம், இலவச பாடசாலை சீருடை, போசாக்கான காலை உணவு, கஷ்ரப் பிரதேச மாணவர்களுக்கான பாதணிகள் வழங்குதல் அத்துடன் குறைந்த செலவிலான பணத்தொகையுடன் கூடிய பருவகாலச் சீட்டு என்பன மாணவர்களின் கல்வி சீராக அமைய வேண்டும் என்ற நோக்கத்துடனே இவை அனைத்தும் இலவசமாக வழங்கப்படுகின்றது.

இவ்வாறாக மாணவர்களுக்கு பல்வேறு நிலைகளிலும் சலுகைகள் அள்ளிக் கொடுக்கப்படும் நிலையில் அதனை மாணவர்களும், பெற்றோர்களும் மற்றும் பாதுகாவலர்களும் சரியாகப் பயன்படுத்துகின்றார்களா? என்பது கேள்விக்குறியாகவே காணப்படுகின்றது. அதாவது இப்படிப்பட்ட பல நல்ல விடயங்களை அவர்களுக்கு செய்தும் கூட மாணவர்கள் இடைவிலகலை மேற்கொண்ட வண்ணமாகவே இருக்கின்றனர். இடைவிலகல் என்பது பாடசாலையில் சேரும் பிள்ளைகள் தங்களது கல்வியை முழுமையான அளவில் பெற்றுக் கொள்ளாது இடையில் விட்டு விலகிச் செல்லுதல் இடைவிலகல் எனப்படுகின்றது. மாணவர்கள் ஒவ்வொருவரும் தங்களது கல்வியை முழுமையான முறையில் பேணாதிருப்பது நாட்டின் வளத்தை வீண் விரயம் செய்வதுடன் அவர்களது வாழ்க்கையும் வீண் விரயம் செய்யப்படுகின்றது. அத்துடன் இவர்களது வாழ்க்கையில் கிடைக்கும் பல நல்ல சந்தர்ப்பங்கள் கிடைக்காமல் விடுவதும் இளம் வயதில் கிடைக்கக் கூடிய அனுபவங்கள் வெற்றி தோல்விகள் புரிந்துணர்வுகள் விட்டுக் கொடுப்புக்கள் பழக்கவழக்கங்கள் என்பனவும் இல்லாமால் போகின்றன.

பொதுவாக இலங்கையின் எல்லா மாவட்டங்களிலும் இடைவிலகல் என்னும் செயற்பாடானது இடம் பெற்றுக் கொண்டிருக்கின்றது. 1979ஆம் ஆண்டு யுனிசெப் நிறுவனத்தின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றில் மாணவர்கள் விலகுவதற்குரிய காரணங்கள் கண்டறியப்பட்டன. எனவே மாணவர்களின் இடைவிலகலுக்கான காரணங்களை நோக்குவது அவசியமானதாகும்.

★ பொருளாதாரக் கஷ்ரம் காரணமாக மாணவர்கள் தங்களது தேவைகளை நிறைவேற்ற முடியாத நிலைமை ஏற்படுகின்றது. இதனூடாக வறுமை என்பது அவர்கள் மத்தியில் நிலைத்து நிற்கின்றமை.

★ பெற்றோர்களின் தொழிலுக்கு உதவ வேண்டும் என்ற உணர்வு மாணவர்கள் மத்தியில் ஏற்படுகின்றமை.

★ இயற்கை அனர்த்தங்களான் (சுனாமி, மண்சரிவு, வெள்ளப்பெருக்கு என்பன ஏற்படுகின்றமை.)

★ பிறப்பில் உள்ள குறைபாடு.

★ பிள்ளைகளுக்கு பாடசாலை மீது வெறுப்பு ஏற்படல்.

★ நோயிற்றிருத்தல(உடல் உள ரீதியாக)

★ பெற்றோர்களுக்கு பாடசாலை மீது நம்பிக்கை இல்லாது இருத்தல்.

★ சமவயதுப் பிரிவினரிடையே உள்ள செல்வாக்குக் காரணமாக கல்வி மீது வெறுப்படைதல்.

★ சாதிப்பாகுபாடு.

★ ஒழுக்கக் கட்டுப்பாடு காரணமாக பாடசாலையில் இருந்து வெளியேறுதல்

★ பெற்றோர்களின் கவலையீனம் பரம்பரைத் தொழிலில் அதிக ஆர்வம் காட்டுகின்றமை.

★ பாலியல் குற்றவாளியாக இருப்பதினால் பாடசாலையை விட்டு வெளியேற்றப்படல்.

★ சில வேளைகளில் பாடசாலையிலோ அல்லது ஆசிரியர் மீதோ வெறுப்படைந்து பாடசாலையை விட்டு வெளியேற வேண்டிய நிலைமை ஏற்படுகின்றமை.

★ பாடசாலையிலும், பாடசாலைக்கு வெளியிலும் மாணவர்களுக்கு ஏற்படுகின்ற துஸ்பிரயோகங்கள்.

★ பாடசாலைகள் மாணவர்களை ஊக்குவிக்காமை.

★ இளவயதில் திருமணம் செய்தல்.

★ பாரபட்சம் காட்டுதல்.

கடந்த காலங்களில் போர் சூழலினால் கடந்த மூன்று தசாப்த காலமாக பல இலட்சக்கணக்கான மாணவர்கள் இடை விலகியுள்ளனர். மலையகத்தில் ஆண் பிள்ளைகளை விட பெண் பிள்ளைகளே கல்வியில் அதிகம் பாதிப்படைகின்றனர். காரணம் மற்றவர்களின் சுகயீனம், தாய்மார்களின் பிள்ளைப் பேறு, விருந்தினர் வருகை இவை போன்ற பல்வேறு காரணங்களைக் குறிப்பிடலாம். இவ்வாறு இடைவிலகலுக்கு பல்வேறு காரணங்கள் கூறப்பட்ட போதிலும் அவற்றுக்கான தீர்வுகளும் முன்வைக்கப்பட்டன அவையாவன;

பெற்றோர்கள் மத்தியில் கல்வி கற்பதிலுள்ள நன்மைகளை எடுத்துக் கூறுவதன் மூலம் பெற்றோர்களின் மேலதிக செலவைக் கட்டுப்படுத்தவும் இதனால் கல்விக்கு கூடிய தொகையை செலவிடவும்,; பெற்றோர்கள் பிள்ளைகளுக்கான நல்லுறவை ஏற்படுத்தி பெற்றோர்களை பிள்ளைகளில் அக்கறை உள்ளவராக மாற்றுதல் மற்றும் பெற்றோர்கள் முடிந்தளவிற்கு பிள்ளைகளைக் கல்வி பயிலும் வயதில் வருமானம் பெறும் நோக்கத்திற்காக உழைக்கும் தொழில்களை நாடிச்செல்வதில் ஆர்வத்தைக் குறைத்து இவர்களின் நலனில் தம்மை அர்ப்பணிப்பவராக மாற்றுதல் போன்றவற்றுக்கான விழிப்புணர்வு கருத்தரங்குகளை நடாத்துவதன் மூலமாக மாணவர்களின் கல்வியில் இடைவிலகலைக் குறைத்துக் கொள்ளலாம்.

அத்துடன் பாடசாலையிலுள்ள பற்றாக்குறையினையும் நிவர்த்தி செய்ய வழிகோலுதல் வேண்டும். உதாரணமாக சில பாடசாலைகளில் ஆய்வுகூட கருவிகள் உள்ளன. ஆனால் ஆய்வுகூடமோ விஞ்ஞான அறிவோ இல்லை. விஞ்ஞானம் கற்பிக்க ஆசிரியர்களும் இல்லை. சில பாடசாலைகளில் பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியர்கள் இருந்தும் விஞ்ஞான ஆய்வு கூட கருவிகள் இல்லை. இதே போன்று முக்கியமான பாடங்களில் ஒன்றான கணித பாடத்திற்கும் இவ்வாறான பிரச்சினையே ஏற்படுகின்றது. சில பாடசாலைகளில் வாசிப்பதற்கு புத்தகங்களோ வாசிகசாலையோ இல்லாமல் இருக்கும். ஆனால் மாணவர்கள் வாசிப்பதற்கு ஆர்வம் உள்ளவர்களாக இருப்பார்கள். எனவே இவை போன்ற பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதன் மூலமாக மாணவர்களின் கல்வியில் இடைவிலகல் ஏற்படுவதனை நிவர்த்தி செய்யலாம்.

மேலும் பாடசாலைகளில் ஆசிரியர் வளப்பற்றாக் குறையை தீர்க்க தொண்டர் ஆசிரியர் அடிப்படையில் பாடசாலை வசதிக் கட்டுப்பணத்தில் ஊக்குவிப்புக்களை வழங்கி பொருத்தமானவர்களை அல்லது ஓய்வு பெற்றவர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கலாம். மற்றும் கணித விஞ்ஞான பட்டதாரி ஆசிரியர்களை நியமித்தல் வேண்டும். அத்துடன் இடைவிலகலை மேற்கொண்டோரை இனங்கண்டு அவர்களுக்குத் தேவையான வழிகாட்டுதல்களையும் ஆலோசனைகளையும் வழங்குதல் வேண்டும்.

பாடசாலையை விட்டு இடைவிலகுவோருக்கு முறைசாராக் கல்வியை வழங்க வேண்டும். இதற்காக சிறுகைத் தொழில் திணைக்களம், தொழிநுட்பக் கல்லூரிகள் என்பன இம் மாணவர்கள் மீது கூடிய கவனம் செலுத்துதல் வேண்டும். அத்துடன் மாணவர்கள் அதிகம் நாடிச் செல்லும் சினிமா, முகநூல் என்பவற்றில் இருந்து நீக்கும் முகமாக கிராமங்களில் நூலகம், விளையாட்டு மைதானம், என்பவற்றை அமைத்தல் வேணடும். மாணவர்கள் மத்தியில் பாரபட்சம் காட்டுவதை தவிர்த்தல் வேண்டும். அதாவது ஏழை பணக்காரர், மீத்திறன் கூடிய பிள்ளைகள், மீத்திறன் குறைந்த பிள்ளைகள் என்ற பாகுபாடு பார்க்காது அனைவருக்கும் ஒரே வகையில் கவனித்தல் வேண்டும்.

எனவே பாடசாலைக்கும், சமூகத்திற்கும், நாட்டிற்கும் நற்பிரஜைகளாக வரவேண்டிய மாணவர்களின் தேவைகளை முறையான வகையில் நிறைவேற்றும் போது பாடசாலை இடைவிலகல்களைக் குறைத்து மாணவர்கள் இலவசக் கல்வியையும் அதன் பயனையும் பெற்றுக் கொள்ளக் கூடிய வாய்ப்பு அவர்கள் மத்தியில் அதிகமாகவே காணப்படும். எனவே இந்த விடயத்தில் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்துதல் அவசியமாகும்.

**மு.ரஜனி**
**2ம் வருடம் கல்வியியல் சிறப்புக்கற்கை**
**கலைகலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம்**



வவுனியா வர்த்தகர் சங்கத்தலைவர் எஸ்.சுஜன் தலைமையில் வவுனியா நகரசபை பழைய மண்டபத்தில் மாவட்டத்திலுள்ள 216 வசதியற்ற மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி அனைவருக்கும் கல்வி என்ற செயற்றிட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. வவுனியா மாவட்ட செயலகத்தினூடாக தெரிவு செய்யப்பட்ட வவுனியா மாவட்டத்திலுள்ள பின் தங்கிய கிராமப்புறங்களிலுள்ள வசதியற்ற மாணவர்களின் விபரங்கள் மாவட்ட செயலகத்திலிருந்து பெறப்பட்டு அவர்களுடன் தொடர்புகொண்டு அவர்களின் கற்றல் நிலைமைகளை அறிந்து அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு 216 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வவுனியா வர்த்தகர் சங்கத்தினால் வழங்கிவைக்கப்பட்டுள்ளது.

படம்: வவுனியா நிருபர்




பாலர் நிலைய மாணவர்களின் வருடாந்த விடுகை விழா நிந்தவூர் சி.ஆ.சி.முன்பள்ளி பாலர்நிலைய பணிப்பாளர் எம்.எச்.றியாஸ் மௌலவி தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம அதிதியாக முன்னை நாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் சட்டத்தரணி ஆரீப் சம்சுடீன் மற்றும் பாடசாலை பிரதிஅதிபர் ஆகியோச்னூ மாலை அணிவித்து அழைத்துவரப்படுவதையும், மாணவர்களின் கலை நிகழ்வினையும் மாணவர்களுக்கான பரிசில்களை அதிதிகள் வழங்கிவைப்பதையும் படங்களில் காணலாம்.

படம்: காரைதீவு நிருபர்



மலையகத்தில் நத்தார் பண்டிகையை மிக விமர்சையாக கொண்டாடப்பட்டது. மலையகத்தில் உள்ள கிறிஸ்தவ தேவாலயங்களில் விசேட ஆராதனைகள், கலை விழாகள் என்பன இடம்பெற்றன. அட்டன் நகரத்தில் உள்ள திருச்சிலுவை தேவாலயத்தில் நள்ளிரவு 12 மணிக்கு விசேட ஆராதனைகள் இடம்பெற்று அருட் தந்தை நியூமன் பீரிஸினால் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

படம்: க.கிஷாந்தன்




அட்டன் தொண்டு நிறுவனத்தால் நடாத்தப்பட்ட முன்பள்ளி பாடசாலைகளின் பரிசளிப்பு விழா அண்மையில் தொண்டு நிறுவன இயக்குநர் எஸ்.மோகன் தலைமையில் சாமிமலை கதிர் வேலாயுத சுவாமி ஆலய மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தொண்டு நிறுவன உத்தியோகத்தர்கள் மற்றும் முன்பள்ளி ஆசிரியர்கள் கலந்து கொண்டதுடன் சிறார்களின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றது.

படம்: மஸ்கெலியா நிருபர்



கேகாலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கனக ஹேரத்தின் ஆலோசனைக்கு அமைய கேகாலை மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட தருநோதய வேலைத்திட்டத்தின் கீழ் கேகாலை மாவட்டத்தில் வருமை கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கு மேலும் பல சுயத்தொழில் ஊக்குவிப்பு திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டள்ளது. இதன் அடிப்படையில் யட்டியாந்தோட்டை பிரதேச செயலகத்தின் கீழ் வாழும் வருமை குடும்பங்களுக்கு காளான் உற்பத்தி குறித்து பயிற்சிகள் வழங்கப்பட்டது.

படம்: இரத்தினபுரி நிருபர்

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் (தனியார்) நிறுவனத்தின் ஜாஎல, மினுவான்கொட வீதி, 302/1/A இலக்கத்தில் அமைந்துள்ள அச்சகத்தில் அச்சிடப்பட்டு 30.12.2018 ஞாயிற்றுக்கிழமை அன்று வெளியிடப்பட்டது.